# ஆற்றங்கரையினிலே



பழனியப்பா பிரதர்ஸ்

# ஆற்றங்கரையினிலே

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்., டி.லிட்.

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

*கிளைகள் :*

திருச்சி - 620 002    சேலம் - 636 001
கோயமுத்தூர் - 641 001    மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதற்பதிப்பு : ஏப்ரல், 13, 1961.
மூன்றாம் பதிப்பு : 1983.
நான்காம் பதிப்பு : 1999.

விலை : ரூ. 50-00

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
## உயர்திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை,
எம்.ஏ., பி.எல். அவர்கள்

## அணிந்துரை

சொல்லின் செல்வர் - பேராசிரியர் - டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களை யான் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாக நன்கறிவேன். அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டின் பண்பையும் பயனையும் தமிழுலகம் நன்கறியும்.

முதன்முதலாகப் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களை நான் எங்கள் ஊராகிய திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள பூவாளூரில்தான் கண்டேன். அப்போது அவர்கள் திருக்குறள் பற்றிச் செய்த சொற்பொழிவு ஒன்றையும் கேட்டேன். பி.ஏ., பி.எல். பட்டம் பெற்ற ஒருவர் அந்த நாளில் கேட்பவர் கிளர்ச்சி பெறும் வகையில் தமிழைப்பற்றிப் பேசுதல் மிக அருமை. அந்த நிலையில் சேதுப்பிள்ளை அவர்களின் உணர்ச்சி நிறைந்த பேச்சைக் கேட்ட நான் அவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொள்ளலானேன். முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இவ்வாறு முகிழ்த்த எங்கள் நட்பு மேலும் மேலும் வளர்ந்தது. அதற்குக் காரணம் சேதுப்பிள்ளை அவர்களின் சென்னைப் பல்கலைக் கழக வாழ்க்கையே. அவர்கள் சென்னை மாநகர் வந்தபின் ஒய். எம். சி. ஏ. யிலும் ஒய்.எம்.ஐ.ஏ. யிலும், கந்தகோட்டத்திலும் முறையே சிலப்பதிகாரம், கம்பராமாயணம், கந்த புராணம் ஆகிய

நூல்களை அனைவரும் சுவைத்துப் பயன்பெறும் வகையில் வாரந்தோறும் நிகழ்த்திய பேச்சுகளை நேரில் கேட்கும் பேறு பெற்றேன். அதன் காரணமாகப் பிள்ளை அவர்களிடம் நான் கொண்டிருந்த ஈடுபாடு மேலும் பன்மடங்காகப் பெருகியது. பின்னர், கடந்த பல ஆண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பாடப் புத்தகக் குழுவில் நான் தலைவனாக இருந்த காலத்தில் அவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்து என் கடமையைச் செய்யப் பேருதவி செய்தார்கள்.

நமது மதிப்பிற்குரிய டாக்டர் சர். ஏ. எல். முதலியார் அவர்கள் சீரிய தலைமையில் சிறப்புடன் இயங்கும் சென்னைப் பல்கலைக் கழகம் தனது நூற்றாண்டு விழாவில் பேராசிரியர் அவர்கட்கு ‘ இலக்கியப் பேரறிஞர் ’ (Doctor of Letters) பட்டம் வழங்கியபோது நான் பெற்ற இன்பம் அளவிடற்கரியது.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே தமிழ்மொழிக்குச் சிறப்பளித்த சான்றோர்களுள் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். அதற்குக் காரணங்கள் இரண்டு; ஒன்று, அவர்களது மொழித் தொண்டு; மற்றொன்று, அவர்களது அருட்கொடை.

பேராசிரியரின் மொழித்தொண்டு தமிழின் சிறப்பை நாடெல்லாம் அறிந்து போற்றச் செய்தது. அவர்களின் அருட்கொடையோ, சென்னைப் பல்கலைக் கழகத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் சிறப்புறச் செய்து, ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் இப்பல்கலைக் கழகங்களில் நிகழ வழிகண்டது.

பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியதைப் போற்றுவதற்காக இவ்விழாக் கொண்டாடப்பெறுகின்றது. இந்த வெள்ளி விழா மலராக

**'ஆற்றங்கரையினிலே'** என்னும் இவ்வழகிய அரிய நூல் வெளியிடப்பெறுவது மிக்க மகிழ்ச்சிக்குரியது. ஆறுகளே பல்வேறு நாகரிகங்கட்கும் உறைவிடமாய் அமைந்துள்ள பான்மையை உலக வரலாறு உணர்த்தும். இவ்வுண்மையை விளக்குவது இந்நூல்.

**'ஆற்றங்கரையினிலே'** என்னும் கட்டுரைகள் தமிழ் நாட்டின் புகழ்பெற்ற வார இதழாகிய 'கல்கி'யில் முறையாக வெளிவந்த போது தொடர்ந்து படித்து இன்புற்ற தமிழ்மக்கள் பன்னூறாயிரவர். வார இதழ்களில் தொடர்நிலைக் கதைகளைப் படிப்பவர் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் **'ஆற்றங்கரையினிலே'** என்னும் கட்டுரைகளை வாரந்தோறும் ஆர்வமுடன் படித்துச் சுவைத்த உண்மையினை நான் அறிவேன். சிறப்பு வாய்ந்த அக் கட்டுரைகள் இப்போது நூல் வடிவில் வெளிவருவது தமிழ்மொழி பெற்ற பெரும்பேறே ஆகும்.

**'ஆற்றங்கரையினிலே'** என்னும் கட்டுரைகள் பேராசிரியர் அவர்களின் உரைநடையின் இனிமையைச் சிறப்பாகக் காட்டுகின்றன. இலக்கியச் சுவையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த இக்கட்டுரைகள் தொண்டை நாட்டின் பழந்தலைநகராகிய காஞ்சி மாநகரம் முதலாக ஈழ நாட்டின் புகழ்பெற்ற தலமாகிய கதிர்காமம் ஈறாக நாற்பத்தெட்டு ஊர்களின் பெருமையைப் பேசும் அருமை உடையன. சிறப்பாக உறையூர், திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், திருவானைக்கா பற்றிப் பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் அவ்வூர்களோடு நெருங்கிய் தொடர்புடைய எனக்குப் பேரின்பம் பயப்பனவாகும். மேலும், **'ஆற்றங்கரையினிலே'** வடநாட்டுப் பதிகளும் ஈழநாட்டுப் பதிகளும் தக்க இடம் பெறுவது தமிழ்ப் பண்பாட்டின் நீர்மைக்கு ஏற்றம் அளிப்பதாகும்.

முத்தமிழின் முழக்கத்தை நாடு முழுவதும் பரப்பும் இந்நூல் தமிழ்த்தாய்க்குச் சிறந்ததோர் அணியாகும். பேராசிரியர் அவர்கள் நூலின் இறுதியில் தொகுத்துக் கொடுத்துள்ள மேற்கோள் பாடல்கள் சுவையறிவார்க்குப் பெருவிருந்தாகும்.

எழுத்திலும் பேச்சிலும் இனிமையைக் குழைத் தூட்டும் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ்த் தாய்க்கு **'ஆற்றங்கரையினிலே'** என்னும் இப்பெறலரும் அணியை உளமுவந்து ஆக்கி அணிவித்ததுபோன்றே இன்னும் பல பணிகளைத் தமது ஒய்வுக் காலத்தில் படைத்தளிக்க அருள் புரியுமாறு இறைவனை வேண்டுகின்றேன். பேராசிரியர் அவர்கள் இதுகாறும் வெளியிட்டுள்ள இருபத்தைந்து நூல்களாலும் தமிழ் மொழி பெற்றுள்ள பெருமை மேலும் அவர்கள் வெளியிடும் நூல்களால் மேன்மை பெறுவதாக ! ஆற்றங்கரை மணலிலும் பலவாக அவர்கள் வாழ்நாள்கள் அமையத் திருவருள் சுரப்பதாக !

**– தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை**

# உள்ளுறை


ஆறும் ஊரும் ... 1

## I. தொண்டை நாடு

1. காஞ்சி மாநகரம் ... 5
2. சென்னை மாநகரம் ... 23
3. திருக்காளத்தி ... 29
4. திருவேங்கடம் ... 34

## II. நடு நாடு

5. திருக்கோவலூர் ... 40
6. திருவெண்ணெய்நல்லூர் ... 48
7. திருப்பாதிரிப்புலியூர் ... 54
8. திருவதிகை ... 58

## III. சோழ நாடு

9. திருவாரூர் ... 66
10. புகார் நகரம் ... 78
11. உறையூர் ... 83
12. திருச்சிராப்பள்ளி ... 87
13. திருவரங்கம் ... 91
14. திரு ஆனைக்கா ... 99
15. தஞ்சை மாநகரம் ... 102
16. திருவையாறு ... 106
17. பழையாறை ... 109
18. கும்பகோணம் ... 113
19. சத்திமுற்றம் ... 117
20. திருநாகேச்சரம் ... 121
21. குரங்காடுதுறை ... 124
22. ஆதனூர் ... 130
23. திரு ஆப்பாடி ... 134
24. அடைக்கல மாதா ... 138

| | | | |
|---|---|---|---|
| 25. | கருவூர் | ... | 143 |
| 26. | காரைக்கால் | ... | 147 |
| 27. | புதுவை மாநகர் | ... | 151 |
| | **IV. பாண்டி நாடு** | | |
| 28. | மதுரை மாநகரம் | ... | 154 |
| 29. | அழகர் கோயில் | ... | 161 |
| 30. | பாவைப்பாட்டு | ... | 168 |
| 31. | திருநெல்வேலி | ... | 174 |
| 32. | திருக்குற்றாலம் | ... | 179 |
| 33. | தென்காசி | ... | 184 |
| 34. | பாவநாசம் | ... | 192 |
| 35. | ஆழ்வார் திருநகரி | ... | 197 |
| 36. | செப்பறை | ... | 202 |
| 37. | முக்கூடல் | ... | 206 |
| 38. | கொற்கை மாநகரம் | ... | 210 |
| 39. | காயல் மாநகரம் | ... | 217 |
| 40. | கயத்தாறு | ... | 223 |
| | **V. நாஞ்சில் நாடு** | | |
| 41. | கோட்டாறு | ... | 227 |
| 42. | பூதப்பாண்டி | ... | 232 |
| | **VI. சேரநாடு** | | |
| 43. | முசிறி | ... | 236 |
| | **VII. வடநாடு** | | |
| 44. | கோதாவரித் துறை | ... | 240 |
| 45. | காசி | ... | 245 |
| 46. | கங்கைத்துறை | ... | 250 |
| | **VIII. ஈழநாடு** | | |
| 47. | மாதோட்டம் | ... | 255 |
| 48. | கதிர்காமம் | ... | 259 |
| | “பின்னிணைப்பு” | ... | 264 |

# ஆற்றங்கரையினிலே

## ஆறும் ஊரும்

பாரத நாட்டிலே ஆறுகள் பல உண்டு. அவற்றுள் கங்கையும் காவிரியும் புலவர் பாடும் புகழுடையனவாகும். வடமலையிலே பிறப்பது கங்கை; குடமலையிலே பிறப்பது காவிரி. இவை இரண்டும் இறை மணம் கமழும் திருநதிகள். இத்தகைய ஆறுகளின் பண்பறிந்து பாட்டிசைப்பான் கவிஞன். பயனறிந்து வழிபடுவான் உழவன்.

காவிரி யாற்றின் கருணையால் சோழநாடு வளநாடாயிற்று; பசியென்னும் தீப்பிணியை மாற்றும் பழனத் திருநாடாயிற்று.

> " உழவர் ஓதை, மதகோதை
> உடைநீர் ஓதை, தண்பதம்கொள்
> விழவர் ஓதை சிறந்தார்ப்ப
> நடந்தாய், வாழி காவேரி "

என்று சிலம்பு பாடிற்று. காவிரிக் கரையிலே ஏர் அடிக்கும் உழவரது ஓசையும், மடையிற் பாய்ந்து, தடைகளை உடைத்து ஓடும் தண்ணீரின் ஓசையும், புது வெள்ளத்தில் நீராடி மகிழும் மாந்தரின் ஓசையும் கலந்தெழுந்த பேரோசையை அழகுறப் பாடினார் இளங்கோவடிகள். இத்தகைய முழக்கத்தின் இடையே அமைதியாகக் கண் வளர்கின்றார் திருமால்.

"காவிரித் திருநதியிலே, ஒரு
கருணைமா முகில் துயிலுமே"

என்று அக்காட்சியை அழகுறப் பாடினார் ஒரு கவிஞர்.

காவிரியின் இருமருங்கும் செழுஞ் சோலைகள். அச்சோலைகளிலே மயில் தோகையை விரித்து ஆடும்; குயில் மறைந்து நின்று கூவும். ஆற்றில் அன்பர் இட்ட மலரும் மாலையும் அலைகளிலே அமைந்து ஓடும்.

"பூவார் சோலை மயில்ஆல,
புரிந்து குயில்கள் இசைபாட,
காமர் மாலை அருகசைய
நடந்தாய். வாழி காவேரி"

என்று கடலை நோக்கி நடக்கும் காவிரி யாற்றின் அழகினைப் பாடுகின்றார் கவிஞர்; 'இன்று போலவே என்றும் வாழ்க' என்று வாழ்த்துகின்றார்.

காவிரிக் கரையில் மயில் ஆடும் அழகினைக் கண்ட பழந்தமிழ் மக்கள் அவ் ஆற்றங்கரையில் அமைந்த ஓர் ஊருக்கு 'மயிலாடுதுறை' என்றே பெயர் இட்டனர். காவிரியாற்றின் துறையில் தோகையை விரித்து ஆடும் மயிலின் கோலம் அப்பெயரிலே குறிக்கப்படுகின்றது. தேவாரம் எழுந்த காலத்தில் மயிலாடுதுறை என்று பெயர் பெற்றிருந்த ஊர், பிற்காலத்தில் மாயூரபுரம் ஆயிற்று;[1] அப்பெயர் மாயூரவரம் என மருவிற்று; அதுவே பின்னர் மாயவரம் ஆயிற்று.

பெற்ற பிள்ளையைப் பாலூட்டி வளர்க்கும் தாய் போல் நிலத்தில் வளரும் பயிர்களை நீரூட்டி வளர்ப்பது நதியாகும். வருபுனல் என்று வள்ளுவர் குறித்த நதிகளை அருமையாகப் போற்றினர் தமிழ் மக்கள்; சிறிய நதிகளுக்கும் சிறந்த பெயர் இட்டனர். தொண்டை நாட்டில் உள்ளது பாலாறு; பாண்டி நாட்டில் உள்ளது

தேனாறு; சேர நாட்டிலே நெய்யாறு உண்டு. பாலாறு என்று பெயர் பெற்ற ஆற்றிலே நீர் சுரக்கும்; தேனாற்றிலே நீர் சொட்டும்; நெய்யாற்றிலே நீர் துளிக்கும். பாலையும், தேனையும், நெய்யையும் அளவறிந்து ஊட்டிப் பிள்ளையைப் பேணி வளர்க்கும் தாய்போல், ஊற்றுப் பெருக்கால் நிலத்திற்கு நீரூட்டி நலம் பயக்கும் நதிகளை நல்ல பெயரிட்டு அழைத்தனர் நன்றி மிக்க தமிழ் நாட்டார்.

தமிழகத்தை வாழ்விக்கும் ஆறுகளில் சிலவற்றைப் புகழ்ந்து பாடினார் பாரதியார்.

“ காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி - என
மேவிய யாறு பலஓடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு ”

என்ற பாட்டில் ஐந்து ஆறுகள் குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் வையையும், பொருனையும் பாண்டி நாட்டில் உள்ள ஆறுகள். பொய்யறியாப் புலவர்களின் பாமாலை பெற்ற பாண்டியர் குலக் கொடியாகிய வைகையை,

“ புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி”

என்று போற்றினர்ர் இளங்கோவடிகள்.

தென்பாண்டி நாட்டின் உயிரெனத் திகழும் பொருனையாற்றை,

“ பொன்திணிந்த புனல்பெருகும்
பொருனைஎனும் திருநதி ”

என்று புகழ்ந்து பாடினார் கம்பர். முன்னாளில் ‘ பொன் ’ என்னும் சொல் பொதுவாக உலோகங்களுக்கெல்லாம் உரிய பெயராக வழங்கிற்று. பொருனையாற்று நீரில் கலந்துள்ள தாமிரச் சத்தினைத் தெரிந்து, “ பொன் திணிந்த

புனல் பெருகும் பொருனை" என்று கம்பர் பாடினார் போலும் !

இத்தகைய ஆற்றின் கரைகளில் ஊர்களும் நகரங்களும் எழுந்தன. "ஆறில்லா ஊருக்கு அழகில்லை" என்னும் பழமொழியும் பிறந்தது. சோழ நாட்டின் தலைநகரமாகிய உறையூர் காவிரியாற்றங்கரையில் வீற்றிருந்தது. பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரை வையை ஆற்றங் கரையில் வளர்ந்து சிறந்தது. சேர நாட்டின் தலைநகரமாகிய வஞ்சியும் ஓர் ஆற்றின் கரையில் இருந்ததாகக் கருதப்படுகின்றது. எனவே, ஆற்றங் கரையிலே பிறந்து வளர்ந்தது தமிழ் நாட்டின் பண்பாடு என்பதில் ஐயமுண்டோ?

## I. தொண்டை நாடு

“ பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலிஇசை பாட நீடும்
களிமயில்நின் றாடும்இயல் தொண்டை நாடு ”

சேக்கிழார் புராணம்

# 1. காஞ்சி மாநகரம்

**த**மிழ் நாட்டிலே பண்டைப் பெருமை வாய்ந்தது தொண்டை நன்னாடு. இந்நாட்டில் பாலாறு வளம் காக்கும்; பண்பாடு தலைசிறக்கும்.

சான்றோர் பலர் தொண்டை நாட்டிலே தோன்றினர். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட நாடு தொண்டை நன்னாடே ! முதல் ஆழ்வார்கள் மூவரையும் ஈன்ற பெருமை யுடையதும் இந்நாடே; தொண்டர்சீர் பரவிய குன்றை முனிவராகிய சேக்கிழாரைத் தந்ததும் இந்நாடே !

இவ்வாறு சான்றோர் பலரை ஈன்றெடுத்த தொண்டை நாட்டில் நெடியோன் குன்றமாகிய திருவேங்கடம் உண்டு; கண்ணப்பன் பணி செய்த காளத்தி மலை உண்டு; தமிழ் முருகன் அருள்புரியும் தணிகை மலை உண்டு; களிறும் பிடியும் வலஞ் செய்து வணங்கும் கழுக்குன்றம் உண்டு. மாநிலம் கண்டு மகிழும் கலைக் கோயில்களை உடைய

மாமல்லபுரம் உண்டு. வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வீரப் பெருமக்கள் வாழ்ந்த பழையனூரும் உண்டு. இன்னும் தென்னாட்டின் அணிகலனாய், தமிழகத்தின் தலைநகராய்த் திகழும் சென்னை மாநகரமும் உண்டு.

இத்தகைய நன்னாட்டில், வேகவதியாற்றின் கரையில் வீற்றிருக்கின்றது காஞ்சி மாநகரம். வடநாடும் தென்னாடும் வணங்கி ஏத்தும் இவ் வளநகரம் ஆதியில் தொண்டைமான் இளந்திரையன் என்னும் குறுநில மன்னனால் ஆளப்பட்டது என்று பழைய ஆற்றுப்படையொன்று அறிவிக்கின்றது. இளந்திரையன் வறியவரை ஆதரித்த வள்ளல்; புலவர்களைக் காத்த புரவலன்; வேளாண்மையைப் பேணி வளர்த்த வேந்தன்; காடுமேடுகளை வெட்டித் திருத்தி நாடு நகரங்கள் ஆக்கிய காவலன். தொண்டை நாட்டில் இன்றளவும் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகின்ற தென்னேரி என்னும் ஏரி இம்மன்னன் பெயர் தாங்கி நிற்கின்றது. திரையன் ஏரியே தென்னேரி என மருவிற்று. திரைய மங்கலம் என்ற ஊரும் காஞ்சி மாவட்டத்தில் உண்டு.

காஞ்சிபுரத்தைச் செப்பம் செய்து கடிநகர் ஆக்கினான் கரிகாற் சோழன் என்னும் திருமாவளவன். காஞ்சி நகரைச் சுற்றி நெடியதோர் மதில் எடுத்து, நன்மக்களை அங்குக் குடியேற்றிய பெருமை அம் மன்னனுக்கே உரியதாகும். *

காஞ்சி மாநகரை 'மாமதிற் கச்சி' என்று தேவாரம் பாடிற்று. மதில் சூழ்ந்த இம் மாநகரின் அழகினைக் கண்டார் ஒரு கவிஞர்; "மயில் போன்ற மணி நகர்" என்று பாடி மகிழ்ந்தார்.

---

*** "குன்று போலும்மா மதிற்புடை போக்கிக்
குடியி ருத்திய கொள்கையின் விளங்கும்"**

"ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவாச் - சீரிய
அத்தியூர் வாயா, அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு"

என்பது பெருஞ் சித்திரனார் வாக்கு. காஞ்சியம்பதி ஓர் அழகிய மயில் போன்றது. நெடியமதில் அம் மயிலின் உடல்; இருமருங்கும் அமைந்த ஏரி அதன் சிறகு; அத்தியூர் அதன் வாய்; அடவியே அதன் தோகை என்பது இப்பாட்டின் கருத்து.

இப்போது சின்னக் காஞ்சி என வழங்கும் பகுதியே அத்தியூர் என்று முன்னாளில் அழைக்கப் பெற்றது. அத்தியூரில் அமர்ந்த பெருமாளைப் பாடியுள்ளார் ஆதி ஆழ்வார்களுள் ஒருவர்.*

இந்நகரில் வாழ்ந்த ஆன்றோர்களில் ஒருவர் அறவண அடிகள். அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர்; மாசற்ற மனத்தினர்; மாதவ முனிவர். "அல்லவை கடிந்த அறவண அடிகள்" என்று மணிமேகலைக் காவியம் அவரைப் போற்றுகின்றது. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த இவ் அடிகள் முதுமையுற்ற நிலையில் காஞ்சி மாநகரம் போந்து தவம் புரிந்திருந்தார். அங்கு வந்தடைந்த மணிமேகலையின் தகுதியறிந்து புத்த சமயக் கொள்கையை ஐயந்திரிபற அறிவுறுத்தினார். இவ்வண்ணம் துறவுள்ளம் வாய்ந்த தூயோரைத் தவநெறியில் உய்த்த அடிகள் தங்கியிருந்த இடம் "அறவணன் சேரி" என்று பெயர் பெற்றது. காஞ்சிபுரத்தில் இன்று 'அறப்பணஞ் சேரி' என்று அப்பெயர் மருவி வழங்குகின்றது.

சீன நாட்டு நல்லறிஞர் ஒருவர் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே தொண்டை நாட்டுக்கு வந்தார்; காஞ்சிபுரத்தைக் கண்டார். மக்களின் வாழ்க்கையைப்

* "ஊழியான் ஊழி பெயர்த்தான்; உலகேத்தும்
ஆழியான் அத்தி யூரான்"

பற்றியும் மதங்களின் நிலைமையைப் பற்றியும் சில குறிப்புகள் எழுதிப் போந்தார். கல்வி கேள்விகளிற் சிறந்தவர் வாழும் நகரம் காஞ்சிபுரம் என்றும், வாய்மை நெறி வழுவாத மக்கள் அங்கு வாழ்பவர் என்றும் பாராட்டியுள்ளார் அவ் அறிஞர். இந் நகரிற் பிறந்த தருமபாலர் என்னும் தத்துவ ஞானியை வடநாட்டார் வருக என்று அழைத்து நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவ ராக்கிய செய்தியும் அவர் குறிப்பிலே காணப்படுகின்றது.

சைவமும் வைணவமும், சமணமும் சாக்கியமும் தங்கு தடையின்றிக் காஞ்சிமாநகரில் சிறந்து வளர்ந்தன. இந் நகரில் அரசு வீற்றிருந்த பல்லவ மன்னரிற் சிலர் சமண சமயத்தை ஆதரித்தனர். ஆயினும் நாளடைவில் சைவமும் வைணவமும் வளர்ந்து வலுப்பெற்றன; சமணமும் சாக்கியமும் தளர்ந்தன. இன்றும் சமண மதத்தின் குறிகளும் அடையாளமும் காஞ்சிமாநகரில் உண்டு. அந் நகரைச் சேர்ந்த திருப்பருத்திக் குன்றத்தில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கே பல்லவ மன்னனால் கட்டப்பட்ட பழைமையான திருக்கோவில்களும், சமண முனிவர்க்கு ஒளி நெறி காட்டிய குரவ மரமும், ஆன்றோர் ஐவரை அடக்கம் செய்துள்ள "அருணகிரி மேடு"ம் சென்ற காலத்தின் சிறப்பினை ஒருவாறு உணர்த்தும் சின்னங்க ளாகும்.

"சமண காஞ்சி" என்று பெயர் பெற்றுள்ள திருப்பருத்திக் குன்றத்தில் அகளங்கன் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் குரவ மரத்தின் கீழிருந்து கடுந்தவம் புரிந்து மாற்றாரை வாதில் வெல்லும் ஆற்றல் பெற்றார். பல்லவ மன்னனின் ஆதரவு பெற்றுச் சாக்கிய முனிவர்களை வாக்கு வாதத்திற்கு அறைகூவி அழைத்தார். விறுவிறுப்பாக நிகழ்ந்த வாதத்தில் சாக்கிய முனிவர்கள் தோற்றார்கள்; அகளங்கன் வெற்றி பெற்றார். அதனால் அரசன் ஆணைப்படி சாக்கிய மதத்தார் தமிழ் நாட்டை

விட்டு அகன்றனர். வெற்றி பெற்ற அகளங்க முனிவரை இன்றும் சமண காஞ்சியில் வாழும் மக்கள் பாராட்டிப் போற்றுகின்றார்கள்.

காஞ்சி மாநகரம் தெய்வம் மணக்கும் திருநகரம். எம் மருங்கும் கோயில்களும் கோட்டங்களும் நிறைந்து, இறையொளி வீசும் இந்நகரில் "கச்சி ஏகம்பா !" என்று கைகூப்பித் தொழுவாரும், "கஞ்சி வரதப்பா !" என்று கசிந்துருகி நிற்பாரும் எண்ணிறந்தவர். கண்ணுக்கினிய பூஞ்சோலையின் இடையே, ஒருமாவின் கீழ்க் கோயில் கொண்ட மங்கை பங்கனை, "ஏகம்பத்துறை எந்தாய் போற்றி !" என்று அருந்தமிழ் மலரால் அருச்சனை செய்தார் மாணிக்கவாசகர்.

இத்தகைய பெருமை வாய்ந்த கச்சி ஏகம்பத்தின் முன்னின்று கதறி அழுதார் ஒரு திருத் தொண்டர். "கருணையே உருவாய கச்சி ஏகம்பா ! உன் அருமைத் திருமேனியைக் காணக் கண் இல்லையே ! கண்கள் மூன்றுடைய கச்சியப்பா ! உன் அடியவனாகிய என்னைக் கண்ணறையன் என்று மண்ணுலகம் பழிக்கின்றதே ! தன் நிகரில்லாத் தலைவா ! இது உனக்குத் தகுமோ? பேதையேன் அறியாமல் செய்த பிழையெல்லாம் பொறுத்து அருள் புரிவாய் ! கண்ணொளி தந்து எளியோனைக் காத்தருள்வாய் !" என்று மனம் உருகித் தொழுது நின்றார். அந்நிலையில் இறைவன் அருளால் அவர் கண்ணில் ஒளி பிறந்தது. கச்சி ஏகம்பரது கருணைத் திருமேனி தெரிந்தது. மெய்யரும்பி, விதிர் விதிர்த்து ஆடினார். பாடினார் அத்திருத் தொண்டர்.

**"கால காலனைக் கம்பன்எம் மானைக்**
**காணக் கண்அடி யேன்பெற்ற வாறே"**

என்று கண் அளித்த பெருமானது கருணையை வியந்து பாடினார். இவ்வாறு கச்சி ஏகம்பத்தில் கண் பெற்றுப்

பாடியவர் தேவாரம் அருளிய மூவருள் ஒருவர்; அந்தமில் அழகர்; சுந்தரமூர்த்தி.

திரு ஏகம்பத்தின் அருகே முருகவேள் உறையும் குமரக் கோட்டமும், காமாட்சியம்மை அறம் வளர்க்கும் காமக் கோட்டமும் உண்டு. காசி விசாலாட்சியையும் மதுரை மீனாட்சியையும், காஞ்சிக் காமாட்சியையும் கருணையின் திருவுருவமாகக் கருதி, என்றும் வழிபடும் பெருமை சான்றது தமிழ் நாடு.

கச்சியம்பதியிலே திருமால் கோயில்கள் பல உண்டு. அப்பெருமான் நின்ற திருக்கோலமும், இருந்த திருக்கோலமும், பள்ளிகொண்ட கோலமும் கண்டு மகிழ்ந்த அடியார் ஒருவர்,

**“நின்றான் இருந்தான்**
**கிடந்தான் இதுவன்றோ**
**மன்றார் மதிற்கச்சி மாண்பு”**

என்று வியந்து பாடினார்.[1]

ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தென்னாட்டை ஆண்டனர் பல்லவ மன்னர்கள். அன்னார் ஆட்சி புரிந்தபோது கச்சி மாநகரம் உச்சநிலை அடைந்தது. கலைமகளும் திருமகளும் அங்குக் கலந்து உறைவாராயினர். இக் காட்சியைக் கண்ட திருநாவுக்கரசர் “கல்வியே கரையிலாத காஞ்சி மாநகரம்” என்று கட்டுரைத்தார். வள்ளன்மை வாய்ந்த தெள்ளியர் அத் திருநகரில் வாழ்ந்தனர் என்று புகழ்ந்துரைத்தார் திருஞான சம்பந்தர்.

செல்வம் நிறைந்த அத் தலைநகரில் திருக்கோயில்கள் பல எழுந்தன. கயிலாசநாதருக்கு ஒரு கற்கோயில் கட்டினான் ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னன்.[2] கயிலாய மலையில் இயற்கையாக அமைந்துள்ள

திருக்கோயிலின் அமைப்பும் அங்கமும் காடவர்கோன் எடுத்த கற்கோயிலில் காணப்படுகின்றன என்று அறிந்தோர் கூறுவர்.

பரமேசுரன் என்னும் பெயருடைய பல்லவ அரசன் கச்சியம்பதியில் திருமாலுக்கு ஓர் ஆலயம் எடுத்தான்; பரமேச்சுர விண்ணகரம் என்று அதற்குப் பெயர் இட்டான். அம் மன்னன் காலத்தில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் பரமேச்சுர விண்ணகரத்தைப் பாடியருளினார்.[3] இப்போது வைகுண்டப் பெருமாள் கோயில் என்று அவ்விண்ணகரம் வழங்கப் பெறுகின்றது. இவ்வாறு பல்லவ மன்னர் பல்லாற்றானும் காஞ்சிபுரத்தைப் பேணி வளர்த்தமையா லேயே, "பாரூர், பல்லவன் ஊர், மதிற் காஞ்சி மாநகர்" என்று தேவாரம் பாடிற்று.

பல்லவர் ஊராகிய காஞ்சியம்பதியில் ஒருநாள் போர் முரசம் அதிர்ந்தது. படைவீரர் பல்லாயிரவர் திரண்டு எழுந்தார்கள். போர்க்கோலம் பூண்டு அரண்மனையி னின்றும் புறப்பட்டான் பல்லவ மன்னனாகிய நந்திவர்மன். ஆலயம் எங்கும் ஆசிமணி ஒலித்தது. "வெற்றிவேல் நந்தி வாழ்க; நற்றமிழ் நந்தி வெல்க" என்று நகர மாந்தர் எழுப்பிய பேரோசை வானத்தைப் பிளந்தது.

கச்சி ஏகம்பத்தின் முன் நின்று மனம் உருகி வணங்கினான் மன்னவன். "இறைவா! கச்சி ஏகம்பா! மண்ணாசை பிடித்த பாண்டிய மன்னன் காவிரியாற்றைக் கடந்து, தொண்டை நாட்டின் மேலும் படையெடுக்கத் துணிந்தான். நின் அருளால் அவன் செருக்கை அறுப்பேன்; காஞ்சியின் புகழைக் காப்பேன்" என்று பணிந்து விடைபெற்றுப் பகைவரை நோக்கிச் சென்றான்.

பல்லவன் சேனைக்கும் பாண்டியன் சேனைக்கும் தெள்ளாறு என்னும் இடத்தில் பெரும்போர் மூண்டது. குருதி ஆறாகப் பெருகிற்று. இறுதியில் பாண்டியன்

தோற்றான்; பல்லவன் வென்றான். ஒற்றர் வாயிலாக வெற்றிச் செய்தி கேட்ட கச்சி மாநகரத்தார் பெருங் களிப்புற்றனர். அச்சம் தீர்த்தருளிய கச்சி ஏகம்பனை அகனமர்ந்து ஏத்தினர்; பல்லவ நந்திக்குப் பல்லாண்டு பாடினர்.[4]

தெள்ளாற்றுப் போரில் வெற்றி பெற்றவுடன் பல்லவன் தலைநகருக்குத் திரும்பி விடவில்லை; தோற்று ஓடிய பகைவர் சேனையைத் தொடர்ந்து முடுக்கினான்; ஒன்னார் படைத் திறத்தை ஒடுக்கினான்; வைகையாறு வரையும் அவரைத் துரத்தினான்.

காஞ்சி மாநகரில் மன்னன் இல்லாத மாளிகை பொலி விழந்து இருந்தது. நந்தியின் மனையாள் கணவன் சென்ற வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள். இளவேனில் வந்தது; மாஞ்சோலை தளிர்த்தது; பூங்குயில் கூவிற்று.

அந்நிலையில் கோயில் மணி அடித்தது; வெற்றி முழக்கம் வானில் வெடித்தது; கொற்றவன் வந்தான் என்று கட்டியம் எழுந்தது. கரை கடந்த வெள்ளம்போல் காஞ்சி நகர மாந்தர் திரண்டு போந்து மன்னன் திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

“மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி”

வாழ்க பல்லாண்டு என்று பூவேந்தனை வாழ்த்தினர் பாவேந்தர். இவ்வாறு பல்லோரும் பணிந்து போற்ற, எல்லாம் வல்ல இறைவன் திருவருளை மனமார வாழ்த்தி மாளிகையிற் சென்று சேர்ந்தான் பல்லவர் கோமான்.

நாட்டிலே போர் ஒடுங்கிற்று; நந்தியின் புகழ் ஓங்கிற்று. போர்க்களத்தில் வாகைமாலை சூடிய வேந்தன் கற்றோர் அவைக் களத்தில் தமிழ் மாலை பெற்று மகிழ்ந்தான். வில்லேருழவனாய் விளங்கிய வீரன் சொல்லேருழவனாய்

வீற்றிருந்தான். வேலேந்திய கையில் தமிழ் ஏடேந்திய நந்தி மன்னனை வியந்து பாடினர் பெருங் கவிஞர்.

நந்தி மன்னனின் கொடைத் திறத்தையும், படைத்திறத்தையும் செந்தமிழ்ப் புலவர்கள் பாராட்டக் கண்டு அழுக்காறு கொண்டனர் அவன் தம்பியர். தமிழே உயிர் எனக் கருதி வாழ்ந்த தலைவனைத் தமிழாலே கொல்வதற்கு வழி தேடினர். அன்னார் தீய கருத்திற்கு இசைந்தான் ஒரு கவிஞன்; நந்திக் கலம்பகம் என்னும் பெயரால் ஒரு பாமாலை புனைந்தான்; நல்ல சொற்களின் இடையே நச்சுப் பதங்களை அமைத்தான். நஞ்சு தோய்ந்த அமுதம் போன்ற அக் கலம்பகம் நந்தியின் நெஞ்சைக் கவர்ந்தது. தொடக்கத்தில் அமைந்த

" பருப்புரசை மதயானைப்
பல்லவர்கோன் நந்திக்குத்
திருப்பெருக அருளுகநின்
செழுமலர்ச்சே வடிதொழவே "

என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளில் உள்ள ' திருப்பெருக ' என்பது ' செல்வம் ஒழிக ' என்னும் பொருள்பட நிற்கின்றது. இன்னும் பல்லவ நந்தியைப் பார்த்துப் பாடும் பான்மையில் அமைத்த பாட்டிலும் அமங்கலச் சொல் விழுந்திருக்கின்றது.

" புலஅரசைப் புறங்கொண்ட
புகழ்சேர் கோவே !
பூவலயம் தனில்கரியாய்
நின்ற மன்னா !
சொலஅரிய திருநாமம்
உனக்கே அல்லால்
சொல்லொருவர்க் கிசையுமோ
தொண்டைக் கோவே "

என்ற பாட்டிலே ‘ கரியாய் நின்ற மன்னா ’ என்ற அமங்கலத் தொடர் காணப்படுகின்றது.

இத்தகைய கலம்பகத்தைக் கேட்டு இன்புற்றான் மன்னன். தமிழ்ச் சுவையுடைய பாட்டுக்கு உயிரைக் கொடுத்தலும் தகும் என்று கருதினான் அக் காவலன். பாட்டு முடிந்தது; பல்லவன் மாண்டான். கற்றோர் உள்ளம் மடிந்தது: காஞ்சியார் மனம் இடிந்தது. கலம்பகத்தால் உயிர் துறந்த நந்தியின் பெருமை நாடெங்கும் பரவிற்று.

**“ நந்தி கலம்பகத்தால்**
**மாண்டகதை நாடறியும் ”**

என்று பாடினார் மாதவச் சிவஞான முனிவர்.

# 2. சென்னை மாநகரம்

தமிழ் அன்னையின் திருமுகம் எனத் திகழ்வது சென்னை மாநகரம். அந்நகரின் கடற்கரையிலே அலைகள் அயராமல் இசை பாடும்; கானலஞ் சோலையிலே கலாப மயில் ஆர்த்து ஆடும். இவ்வாறு மயில் ஆர்க்கும் பாக்கமே மயிலாப்பூர் என்று பெயர் பெற்றது.

முதல் ஆழ்வார்களில் ஒருவர் அவ்வூரிலே தோன்றினார். " திருக் கண்டேன், பொன்மேனி கண்டேன் " என்று திருமாலின் வண்ணத்தை அழகொழுக எழுதிக் காட்டினார். அவ் ஆழ்வார் பிறந்ததனால் பெருஞ்சிறப்புற்ற மயிலையம்பதியை மனமார வாழ்த்தினார் ஒரு கவிஞர்.

> " திருக்கண்டேன் எனும் நூறும்
> செப்பினான் வாழியே
> மருக்கமழும் மயிலைநகர்
> வாழவந்தேன் வாழியே "

என்பது அவர் திருவாக்கு.

தன்னிகரில்லாத் தமிழ்ப் புலவராகிய திருவள்ளுவரும் மயிலையிலே பிறந்தவர் என்பர். தொன்று தொட்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று போற்றப்படும் அப்புலவர் பெருமானுக்கு மயிலையில் ஒரு திருக்கோயில் உண்டு.

பல்லவ மன்னர் காஞ்சியம்பதியைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்ட காலத்தில் மயிலை ஒரு

சிறந்த துறைமுகமா யிருந்தது. நந்திவர்மன் என்னும் பல்லவர் கோமானை "மல்லை வேந்தன், மயிலை காவலன்" என்று பாடிற்று நந்திக் கலம்பகம்.

அங்குள்ள பழமையான சிவாலயத்தைக் "கானமர் சோலைக் கபாலீச்சரம்" என்று புகழ்ந்து போற்றினார் திருஞான சம்பந்தர்; பூம்பாவைப் பாட்டிசைத்தார்.

மயிலைக் கடற்கரையின் அழகுக்கு அழகு செய்தது ஓர் அல்லிக் குளம். மண்ணீரும் ஆகாத முந்நீரின் அருகே நல்ல தண்ணீர் உதவி நின்ற அம்மணற் கேணியை அல்லிக்கேணி என்று மயிலையார் அழைத்தார்கள். அதைச் சுற்றி எழுந்தது ஒரு சிற்றூர். தொண்டை நாட்டு மன்னன் அதன் அண்டையில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுத்தான். அவர் அருளால் ஊர் சீராயிற்று; அல்லிக்கேணி திருவல்லிக்கேணி யாயிற்று. அல்லிக்கேணியின் அருகே அமைந்த திருக்கோயிலில் கடற் காற்றின் சுகத்தை நுகர்ந்து கண்வளர்ந்த இறைவனை மனங் கசிந்து பாடினார் திருமழிசையாழ்வார்.[1]

திருவல்லிக்கேணியின் செழுஞ் சோலையும், நறும் பொய்கையும், சிறந்த மாடமும், உயர்ந்த கோயிலும் திருமங்கை மன்னன் உள்ளத்தைக் கவர்ந்தன.[2] அவர் பாடிய தெள்ளிய தமிழ்ப் பாட்டில் பஞ்சவர்க்காகத் தூது சென்ற பரந்தாமன் பெருமை பேசப்படுகின்றது. கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துக் கொடுமழை தடுத்த கொற்றவன் பெருமை கூறப்படுகின்றது. செருக்குற்ற இரணியனைச் சீறிச் சிதைத்த சிங்கத்தின் செம்மையும் சொல்லப்படுகின்றது.

"பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்ப
பிறைஎயிற் றனல் விழி பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே"

என்ற பாட்டின் பயனாகத் ‘ தெள்ளிய சிங்கர் ’ என்ற பெயர் திருவல்லிக்கேணிப் பெருமாளுக்கு அமைந்தது.

தெள்ளிய சிங்கர் என்னும் திருப்பெயர் தெளி சிங்கர் எனக் குறுகி, துளசிங்கர் என மாறி இப்பொழுது வழங்குகின்றது. துளசிங்கப் பெருமாள் என்பது அவ்விறைவன் பெயராயிற்று.

இன்னும், பாரதப் பெரும் போரில் பார்த்தனது தேர்ப் பாகனாய்ப் பணிசெய்த திருமாலின் கருணையை வியந்து பாடினார் திருமங்கை மன்னன்.

**“ பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு**
**பார்த்தன்தன் தேர்முன் நின்றானை**
**சிற்றவை பணியால் முடிதுறந் தானை**
**திருவல்லிக் கேணி கண்டேனே ”**

என்ற பாட்டின் அடியாகப் பார்த்தசாரதி என்ற பெயரும் பெருமாளுக்கு அமைந்தது. திருவல்லிக்கேணியிற் கோயில் கொண்ட திருமாலைத் தேர்ப்பாகனாகக் கனவிலே கண்டு பாடினார் கவிஞர் பாரதியாரும்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே முளைத்தது சென்னப் பட்டினம். அங்கே வாணிபம் செய்யப் போந்த ஆங்கிலேயர் கூவம் நதிக்கரையிலே ஒரு கோட்டை கட்டினர். அக்கோட்டை நகரத்திற்கு ‘ வெள்ளை நகரம் ’ (White Town) என்று பெயர் இட்டனர். அருகே இருந்த நரிமேடு முதலிய வெளியிடங்களை நாளடைவில் வளைத்தனர்; வர்த்தக வளம்பெற்றுத் திளைத்தனர். முன்னாளில் பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தைக் குறித்தாற் போன்று இந் நாளில் சென்னப்பட்டினமே பட்டினம் என்னும் பெயருக்கு உரியதாயிற்று. சென்னையின் சீர்மைக்கு ஏற்ற முறையில் கூவம் நதியின் பெருமையும் உயர்ந்தது.

நாளடைவில் சென்னை சீராக விரிந்து வளர்ந்தது; பல பேட்டைகளையும் பாக்கங்களையும் ஊர்களையும் அங்கங்களாகக் கொண்டு அகன்று பரந்தது. அடையாறு முதலிய சிற்றாற்றங்கரைகளில் அழகிய மாடங்கள் எழுந்தன. எழுமூருக்கும் (எழும்பூர்) கோட்டைக்கும் இடையே கிடந்த நரிமேடு, பூங்கா நகரம் (Park Town) ஆயிற்று. அங்கே அமைந்தது கந்த கோட்டம். அதன் கருணையை வியந்து அருமையாகப் பாடினார் இராமலிங்க அடிகள்.

**" தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலம்ஓங்கு கந்த வேளே "**

என்று மனம் உருகிப் பாடினார்.

பன்னலம் திகழும் சென்னையம்பதியில் பல சமயங்களும் பாங்குற ஓங்கி வளர்கின்றன. ஈசன் அருள் பெற்ற திருஞானசம்பந்தர் போற்றிப் புகழ்ந்த மயிலாப்பூரில் யேசுநாதரின் பெருமையைப் பேசினார் செயின்ட் தாமஸ் என்னும் கிறிஸ்தவ சீலர். அவர் சேவைக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது, ' சாந்தோம் ' என்னும் கடற்கரைப்பாக்கம். தெள்ளிய சிங்கர்கோயில் கொண்டுள்ள திருவல்லிக்கேணியில் மகமதியர் வழிபடும் மகத்தான பள்ளிவாசல் ஒன்று உண்டு. அரனும் அரியும் அமர்ந்தருளும் அக நகரில் சமணர்கள் வணங்கும் பள்ளியும் அமைந்து அணி செய்கின்றது. பட்டினத்து அடிகளின் உள்ளங்கவர்ந்த திருஒற்றியூருக்கு அருகே கிறிஸ்தவத் தொண்டராகிய செயின்ட் பீட்டரின் பெயர் தாங்கிய ராயபுரம் நிலைபெற்றுள்ளது. பீட்டர், யேசுநாதரின் அணுக்கத் தொண்டர்; தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்கள் ராயப்பர் என்று அவரைப் போற்றுவர். வட சென்னைக் கடற்கரையில் வாழ்ந்த மீனவர் சிறப்பாக அவரை வழிபட்டனர்; ராயப்பபுரம் என்று அப்பாக்கத்திற்குப் பெயர் இட்டனர்; ராயப்பபுரம் நாளடைவில் ராயபுரம் என மருவிற்று.

தேவாரப் பாடல் பெற்ற திருஒற்றியூரைச் சிவலோக மாகவே கண்டார் பட்டினத்து அடிகள். இத்தகைய செம்மை வாய்ந்த திருஒற்றியூரில் தன் பெயரை நிலைநிறுத்த விரும்பினான் ஒரு வெள்ளைக் கவர்னர். மூன்று ஆண்டுகள் அவன் சென்னைக் கவர்னராகப் பணி செய்தான். காலட் என்பது அவன் பெயர். பேராசை பிடித்த அப்பெரு மகன் திருஒற்றியூரின் ஒரு பால் சென்னைச் சாலியர்களைக் குடியேற்றினான்; கோயிலும் கேணியும் அமைத்தான்; அக் குடியிருப்பைக் காலட் பேட்டை என்று அழைத்தான். அப் பெயர் பொது மக்கள் நாவில் காலாட்டுப் பேட்டை என்று சிதைந்தது; பின்பு காலாடிப் பேட்டை எனத் திரிந்தது. காலட்டைக் காலாடியாக்கிப் பேராசை கொண்ட பிற நாட்டவர்க்கு நல்லதொரு பாடம் கற்பித்தனர் ஒற்றியூர் மக்கள்.

இவ்வாறு சீரழிந்த இன்னொரு பெயரும் சென்னையிலே உண்டு. திருமயிலையைச் சார்ந்த வாராவதியொன்று ஹாமில்டன் என்னும் வெள்ளையர் பெயரைப் பெற்றது. மொழிக்கு முதலாக மூச்சொலி நிலைக்காது என்னும் தமிழின் நீர்மையை அவ் வெள்ளையர் உணர்ந்தாரில்லை. பேச்சு வழக்கில் ஹாமில்டன் வாராவதி ஆமிட்டன் வாராவதி ஆயிற்று; ஆமிட்டன் வாராவதி அம்பட்டன் வாராவதி எனத் திரிந்தது. அது ஆங்கிலத்தில் பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று மொழி பெயர்க்கப்பட்டு இன்றும் சென்னை மாநகரில் வழங்கி வருகின்றது. தமிழின் நீர்மை யறியாது பெயரிடுதல் தவறு என்பதைக் காலாடிப் பேட்டையும், அம்பட்டன் வாராவதியும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

சென்னை மாநகரின் அழகுக்கு அழகு செய்வது அதன் கடற்கரைக் காட்சி. மாநிலம் சுற்றிய மாந்தர் எல்லாம்

அதன் மாட்சியை மனமாரப் புகழ்ந்துள்ளனர். கடற்கரையை அகலாது அணுகாது நேர்மையாகச் செல்லும் நெடுஞ்சாலையின் அழகும், விரிந்த வெண் மணற் பரப்பில் வீசுகின்ற மெல்லிய பூங்காற்றின் இன்பமும், கருங்கடலில் தவழ்ந்து வரும் கப்பல்களை ஒளிக்கரம் விரித்துத் துறைமுகத்திற்கு அழைக்கும் கலங்கரை விளக்கின் ஒளியும் சென்னைக்கே உரிய தனிச் செல்வமாகும்.

# 3. திருக்காளத்தி

தமிழகத்தின் கண்ணெனத் திகழ்வது திருக்காளத்தி மலை. அம் மலையிலே பொன் முகலியாறு புனிதமாய்த் தவழும்; கல் அதிர ஓடிக் கருமந்தி விளையாடும். இத்தகைய செம்மையான மலையை நோக்கி முன்னொருகால் நடந்தார் திருநாவுக்கரசர். முகலியாற்றில் முறையாக நீராடினார்; தூய வெண்ணீறு துதைந்த மேனியராய் மலையின்மீது மெல்ல அடி வைத்து ஏறினார். "திண்ணன் என்னும் திருத்தொண்டனது கண்ணைக் கவர்ந்த அண்ணலார் அமர்ந்தருளும் அரும்பெருமலை இது வன்றோ" என்று எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தார். தென் கயிலாசம் என்று நன்மக்கள் போற்றும் காளத்தி மலையில் அமர்ந்தருளும் இறைவனை,

> **"கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்**
> **காளத்தியான் அவனென் கண்ணுளானே"**

என்று பண்ணார்ந்த பாட்டிசைத்துப் போற்றினார்.

இவ்வாறு காளத்திநாதற்குப் பாமாலை யணிந்த திருநாவுக்கரசர், திண்ணிய அன்பு வாய்ந்த கண்ணப்பரின் திருவுருவத்தை அம் மலையிலே கண்டார். வில்லை ஊன்றிய கோலத்தில் நின்ற அவ் வேடர்பெருமான் அடிகளில் வீழ்ந்தார்; எழுந்தார்; கண்ணீர் பொழிந்தார்; "விண்ணுலகும் மண்ணுலகும் வியந்து போற்றும் விமலனே! இறவாத பேரன்பின் எல்லை கண்ட

பெருமானே! கண்கள் மூன்றுடைய காளத்தி நாதனுக்குக் கண் உவந்து அளித்த அண்ணலே! என் அப்பனே! கண் அப்பனே! எல்லையற்ற உன் அன்பின் திறம் கண்ட ஈசன், போலியாகிய என்னையும் ஒரு பொருளாகக் கருதி அருள் செய்வானோ" என்று பொருமினார்; உள்ளம் உருகினார்.

கண்ணப்பன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற திண்ணன் வேடர் குலத்தில் பிறந்தவன்; மலையரசன் பெற்ற திருமகன். திண்ணிய மேனி வாய்ந்த மைந்தனுக்குத் திண்ணன் என்று பெயரிட்டான் அவ்வேடர் மன்னன். வீரக் கொழுந்தென வளர்ந்தான் திண்ணன். வேட்டைத் தொழிலுக்கு ஏற்ற பயிற்சியெல்லாம் பெற்று வேடர் குலமணியாய் விளங்கினான்.

ஒரு நாள் வேடருடன் கூடிக் காட்டிலே வேட்டை யாடப் போந்தான் அக்காளை. கானவர்கள் காட்டைக் கலைத்த பொழுது கறுத்துக் கொழுத்த விலங்கொன்று கதித்து எழுந்து ஓடிற்று; தோழர் இருவரோடு அவ் வலிய விலங்கைத் தொடர்ந்தான் திண்ணன். காட்டிலும் மேட்டிலும் காதவழி இழுத்து அடித்துக் காளத்தி மலையடிவாரத்தில் அவன் கை வாளால் வெட்டுண்டு விழுந்தது அவ்விலங்கு.

அம் மலை மீது சற்று இளைப்பாறச் சென்ற திண்ணன் அங்கே காளத்தி நாதனைக் கண்டான்; கரை காணாக் காதல் கொண்டான். பள்ளத்திற் பாயும் வெள்ளம் போல் விழுந்து அடித்து ஓடினான்; காளத்தியப்பனைக் கட்டித் தழுவினான்! உடன் வந்த தோழரை மறந்தான்; உற்ற பசியையும் மறந்தான். "அல்லும் பகலும் விலங்குகள் திரியும் இம் மலையில் தன்னந் தனியாக அமர்ந்து உள்ளானே எம்பெருமான்! இவரைக் காப்பவர் எவரையும் காணோமே! பொழுதறிந்து உணவளிப்பார் யாரும் இல்லையே!" என்று உளம் வருந்தி அழுதான். ஈசனது

பசியை ஆற்றுதலே முதற் கடமை எனத் துணிந்து எழுந்தான். வேட்டையாடினான். அடித்து வீழ்த்திய விலங்குகளைக் காட்டுத் தீயில் வதக்கினான்; கொழுவிய தசைகளைக் கோலிற்கோத்து, பதத்தில் காய்ச்சி, பல்லினால் அதுக்கி, நாவினால் சுவைத்து, கல்லையில் வைத்து, காளத்தி நாதனுக்குப் படைத்து மகிழ்ந்தான்.

அப்போது அந்திமாலை வந்தது. நாட்டையும் வீட்டையும் மறந்தான் திண்ணன்; காளத்தி நாதன் அருகே வில்லும் கையுமாய் நின்று விடியுமளவும் காவல் புரிந்தான். இவ்வண்ணம் பகலில் வேட்டையாடி இறைச்சி கொணர்வதும், இரவில் கண் துயிலாது காவல் செய்வதும் திண்ணன் பணியாய் அமைந்தன.

ஒருநாள் ஈசன் உண்ணுதற்கேற்ற இறைச்சியைத் திருத்தி எடுத்து வரும்பொழுது காளத்திநாதன் கண்ணில் குருதி வடியக் கண்டான் அத்தொண்டன்; திடுக்கிட்டான். மயங்கி மண்மேல் விழுந்தான். "இது வேடர் செய்த தீமையோ? விலங்கினம் செய்த கொடுமையோ?" என்று கதறினான். பச்சிலைகளின் சாற்றைப் பிழிந்து புண்ணுற்ற கண்ணில் வார்த்தான். பின்னும் குருதி நிற்கவில்லை. அந் நிலையில் "ஊனுக்கு ஊனிட்டால் உற்ற நோய் தீரும்" என்னும் பழமொழியை நினைந்தான்; உள்ளம் மகிழ்ந்தான்; துள்ளி எழுந்தான்; கூரிய அம்பை எடுத்தான்; தன் கண்களில் ஒன்றைப் பெயர்த்து எடுத்துக் குருதி வடிந்த ஈசன் கண்ணில் அப்பினான். புண்பட்ட கண் பண்பட்டது. செந்நீர் நின்றது; திண்ணன் சிந்தை குளிர்ந்தது. ஆடிப்பாடி ஆனந்த முற்றான்.[2]

நின்ற குருதியைக் கண்டு நெஞ்சம் தழைத்த திண்ணன் மனம் துளங்க இறைவனது மற்றொரு கண்ணினின்றும் செந்நீர் பெருகிற்று. "கண் நோய்க்குக் கைகண்ட மருந்து உண்டு" என்று கவலை தீர்ந்த திண்ணன் தன் கண்களில்

எஞ்சி நின்ற ஒன்றையும் இடந்து அப்பத் துணிந்து அம்பின் முனையைக் கண்ணில் ஊன்றினான். அது கண்டு தரியாத ஆண்டவன் திண்ணன் கையைப் பற்றி " நில்லு கண்ணப்ப " என்று திருவாய் மலர்ந்து பேரின்ப நிலையளித்தார் என்பது வரலாறு.

அன்று முதல் காளத்தி மலைக்குச் சென்றோர் எல்லாம் கண்ணப்பனது செயற்கரிய செய்கையை நினைந்து கண்ணீர் பெருக்கினர். சிவநெறியின் புண்ணியக் கண் என விளங்கிய திருஞானசம்பந்தர் திருக்காளத்தி நாதனை வழிபடச் சென்ற போது கண்ணப்பன் பெருமையை எண்ணிக் கசிந்துருகிப் பாடினார்.

**" வாய்கலச மாகவழி பாடுசெயும்**
**வேடன்மல ராகுநயனம்**
**காய்கணையி னால்இடந்து ஈசனடி**
**கூடுகா ளத்திமலையே "**

என்னும் திருப்பாட்டில், வாயாலே தூய நீராட்டி, கண் மலரால் வழிபட்ட கண்ணப்பன் பெருமை பேசப் படுகின்றது.

திருவாசகம் அருளிய மணிவாசகரும் காளத்தி மலையைத் திசைநோக்கித் தொழுதார்; " கண்ணப்பனுக்கு நிகரான அன்பன் ஒருவன் முன்னும் இல்லை, பின்னும் இல்லை. அன்பின் எல்லை கண்ட திருத்தொண்டன் கண்ணப்பன் " என்று வாயாரப் போற்றினார்.

**" கண்ணப்பன் ஒப்பதோர்**
**அன்பின்மை கண்டபின்**
**என்அப்பன் என்ஒப்பில்**
**என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை**
**வாஎன்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே**
**சென்றுஊதாய் கோத்தும்பீ "**

என்று பாடினார். கண்ணப்பனது அன்பின் சுவை கண்ட ஈசன் கடையவனாகிய என்னையும் ஆட்கொண்டானே ! அன்பற்ற என்னையும் 'வருக' என்று அருள் செய்தானே ! என்று வாயார வியந்து போற்றினார் மாணிக்கவாசகர். இவ்வாறு ஆன்றோர் புகழும் பேறு பெற்ற கண்ணப்பன் காளத்தியின் பெருமையெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டான்.

# 4. திருவேங்கடம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ் நாட்டின் எல்லைகளை வகுத்தாள் இயற்கை அன்னை; பெருங்கடலும் நெடுமலையும் அரண்செய்து நின்ற தென்னாடே தமிழகம் என்று வரையறுத்தாள். வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, கிழக்கே குண கடல், மேற்கே குட கடல். இந் நான்கு எல்லையுள் அமைந்த பண்டைத் தமிழ் நாட்டை,

**"வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்"**

எனத் தொல்காப்பியப் பாயிரம் பாடிற்று. இத்தகைய திருநாட்டில் தமிழ் வேந்தர் கொடி பறந்தது; அவர் ஆட்சி சிறந்தது. முத்தமிழும் செழித்து வளர்ந்தது.

கன்னித் தமிழின் சுவையறிந்த கருங் கடல் தென் புலத்தின் ஒரு பகுதியைக் கொள்ளை கொண்டது. இவ்வாறு கேடு விளைத்த கடலின் கொடுமை கண்டு குமுறினார் இளங்கோவடிகள். ஆயினும், தமிழகத்தின் வடக்கெல்லையேனும் வடுப்படாதிருக்கின்றதே என்று எண்ணி ஒருவாறு மனம் தேறினார்.

**"நெடியோன் குன்றமும்**
**தொடியோள் பௌவமும்**
**தமிழ்வரம் பறுத்த**
**தண்புனல் நாடு"**

என்று தாம் கண்ட தமிழ் நாட்டைப் பாட்டிலே படமெடுத்துக் காட்டினார்.

திருவேங்கடத்திற்கு வடபால் அமைந்த நாடும், அந் நாட்டில் வழங்கிய மொழியும் வடுகு என்று பெயர் பெற்றன. வடுகு என்னும் சொல் வடக்கு என்ற திசைப் பெயரின் அடியாகப் பிறந்ததாகும்.

**"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்**
**தென்திசை உள்ளிட்டு எஞ்சிய மூன்றும்"**

என்று பழம் புலவர் ஒருவர் பாடிய பாட்டால் வடதிசையில் வடுகும், ஏனைய மூன்று திசைகளிலும் நெடுங் கடலும் தமிழகத்தின் எல்லையாக நின்ற நிலைமை இனிது விளங்கும்.

வடுகு மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே திருவேங்கடம் ஒரு வரம்பாக நின்றது என்று திறம்படக் கூறினார் கவியரசராகிய கம்பர். செம்மை வாய்ந்த அம் மலையில் சிந்தையை ஒடுக்கிய சித்தரும், செற்றம் நீக்கிய சீலரும், நற்றவம் புரியும் முனிவரும் நாள் தோறும் நீராடி நலம் பெறுவர் என்று அழகுறப் பாடினார்.

இவ்வாறு தொல்காப்பியர் காலமுதல் நல்லிசைப் புலவர் எல்லோரும் நாட்டிய வடக்கெல்லையைத் தென்னிந்திய வரலாறும் வலியுறுத்துகின்றது. தமிழகத்தின் ஓர் அங்கமாக விளங்கிய தொண்டை மண்டலம் பண்டைக் காலந் தொட்டு இருபத்து நான்கு கோட்டங்களாக வகுக்கப்பட்டிருந்தது. அந் நாளில் கோட்டம் என்பது மாவட்டத்தின் பெயர். வேங்கடக் கோட்டம் தொண்டை மண்டலக் கோட்டங்களுள் ஒன்று; அக் கோட்டத்திலே சிறந்து நின்றது திருவேங்கடம் என்னும் திருப்பதி. பழம்பாட்டும் பட்டயங்களும் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

அப் பதியில் செஞ்சடைப் பெருமானாகிய சிவனும் அஞ்சன வண்ணனாகிய திருமாலும் ஒன்றாய்க் கலந்து நின்று காட்சி தரும் மாட்சியைக் கண்டு மகிழ்ந்தனர் முதல் ஆழ்வார்கள்.

**“ தாழ்சடையும் நீள்முடியும்**
**ஒண்மழுவும் சக்கரமும்**
**சூழ்அரவும் பொன்நாணும்**
**தோன்றுமால் - சூழும்**
**திரண்டுஅருவி பாயும்**
**திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டுஉருவும் ஒன்றாய் இயைந்து ”**

என்று அழகாகப் பாடினார், முதல் ஆழ்வார்களுள் ஒருவர். திருமலைப் பெருமானுடைய திரு உருவத்தில் சிவனுக்கு உரிய செஞ்சடையும் திருமாலுக்கு உரிய நெடுமுடியும் இலங்கக் கண்டார் அவ் ஆழ்வார்; மேலும் மணி கண்டனுக்கு உரிய மழுப்படையும் அஞ்சன வண்ணனுக்கு உரிய ஆழிப் படையும் அமைந்து ஒளி வீசக் கண்டார்; இன்னும், அரனுக்கு உரிய நாகமும் அரியினுக்கு உரிய அரைநாணும் அழகுறத் திகழக் கண்டார். ஈர் உருவும் ஓர் உருவாய் நின்ற திருக்கோலத்தைக் கண்குளிரக் கண்டு மனங் குளிரப் பாடினார்.

தமிழகத்தின் வட எல்லையில் நின்ற திருவேங்கடம் “ நெடியோன் குன்ற ” மாக இளங்கோவடிகளுக்குக் காட்சி அளித்தது. பொதுவாக ‘ நெடியோன் ’ என்ற சொல் ‘ உயர்ந்தோன் ’ என்ற பொருள் தருமாயினும் சிறப்பு வகையில் அஃது ஓங்கி உலகளந்த திருமாலையே குறிப்பதாகும். அந்த முறையில் திருவேங்கடத்தை நெடியோன் குன்றம் என்று பாடினார் அடிகள்; அம்மலையில் “ நீலமேனி நெடியோன் ” நின்று அருள் புரியும் நீர்மையை ஓர் அழகிய சொல்லோவியமாக எழுதிக்

காட்டினார்; விண் அளாவி நின்ற வேங்கட மலையில் எழுந்து பொங்கி வழிந்த அருவியின் அழகினைக் கண்டு ஆனந்தமுற்றார். அம்மலையின் உச்சியில் அருளுருவாக நின்ற கருமுகில் வண்ணனைக் கண்டு களிகூர்ந்தார்.[1]

இத்தகைய செம்மை வாய்ந்த திருவேங்கட மலையில் ஐயறிவுடைய மும்மத வேழமும் அன்பு நெறி காட்டும் அழகினைக் கண்டார் ஓர் ஆழ்வார். ஓங்கி வளர்ந்த ஒரு மூங்கிற் பண்ணையின் அருகே தன் காதல் மடப் பிடியை அழைத்துச் சென்றது ஒரு பெருங் களிறு. தழைத்த மூங்கிற் கொழுந்தை வளைத்து இழுத்துப் பறித்தது; அடுத்திருந்த தேன் கூட்டில் அத் தழையைத் தோய்த்தது; தேன் அளாவிய இளங்கொழுந்தைக் காதற் பிடியிடம் தின்னக் கொடுத்து மகிழ்ந்தது. இக்காட்சியைக் கண்டு இன்புற்றார் அவ் ஆழ்வார்.[2]

தமிழ் நாட்டில் திருமால் கோயில் கொண்டுள்ள தலங்கள் திருப்பதிகள் என்று போற்றப்படும். ஆயினும், திருப்பதி என்று பொதுப் பெயரைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டது திருவேங்கடம். திருப்பதியைத் திசை நோக்கி வணங்குவர் தமிழகத்தில் வாழும் மன்னரும் மக்களும்.

பழங்காலத்தில் வஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் செலுத்தினான் ஒரு சேர மன்னன். அவன் சிறந்த வீரமும் சீலமும் வாய்ந்தவன். மூன்று தமிழ் நாட்டையும் ஒரு குடைக் கீழ் அமைத்து ஆண்டவன். கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக் கோமான் என்று சிறப்பிக்கப் பெற்ற அம் மன்னர் மன்னனைக் குலசேகரப் பெருமாள் என்று இன்றும் இந்நாடு போற்றுகின்றது. திருவேங்கட மலையில் " ஓங்கி உலகளந்த உத்தமன்" நின்று அருளும் திருக்கோலம் அவர் நெஞ்சத்தை உருக்கிற்று. வெற்றரசாளும் உரிமையை வெறுத்தது அவர்

உள்ளம்; வீட்டரசு நல்கும் வேங்கடநாதன் திருவடியை நாடிற்று அவர் நெஞ்சம். " சீரும் வேண்டேன்; செல்வமும் வேண்டேன்; ஊரும் வேண்டேன்; பேரும் வேண்டேன்."

" தேனார் பூஞ்சோலைத்
திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
விதியுடையேன் ஆவேனே "

என்று பாடிப் பாடி மனம் குழைந்தார். வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் திருமலையில் ஒரு செண்பக மரமாய் நிற்கவும், ஆறாக ஓடிப் பாயவும், படியாய்க் கிடந்து பரம்பொருளின் பவளவாய் காணவும் ஆசைப்படுகின்றார் அவ் வரசர்.[3]

மூவுலகும் ஈரடியால் அளந்த நெடுமாலின் நின்ற திருக் கோலத்தைத் திருவேங்கட மலையிற் கண்டு வழிபட்டனர் ஆழ்வார்கள். அந்த முறையில் " நெடியோனே ! வேங்கடவா !" என்று ஆதரித்து அழைத்தார் குலசேகரப் பெருமாள். "தாள் பரப்பி மண் தாவிய ஈசனை "த் திருவேங்கடத்தில் கண்டு கை தொழுவார் வினை அறுவார், வீடு பெறுவார் என்று திருவாய்மொழி பாடிற்று.[4]

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற நம்மாழ்வார் தம் உயர்ந்த குறிக்கோளைத் தமிழறிஞர்க்கு உணர்த்துகின்றார். " சொன்னால் விரோதம்; ஆயினும் என் உள்ளத்தில் உள்ளதை உரைத்தே தீர்வேன். ஈசன் அருளால் இன்கவி பாடும் திறம் பெற்றேன். யான் பெற்ற கவிதை வளத்தைக் கசடருக்கு வழங்க மாட்டேன்; நரனைப் பாடமாட்டேன்; என் நாதனையே பாடுவேன். அற்பனை அணிந்துரையேன். திருவேங்கடத்து அப்பனையே பணிந்துரைப்பேன்."

" சொன்னால் விரோதம்இது
ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ

என்நாவில் இன்கவியான்
    ஒருவர்க் கும்கொடுக் கிலேன்
தென்னா தெனாஎன்று
    வண்டு முரல்திரு வேங்கடத்து
என்னானை என்அப்பன்
    எம்பெரு மான்உளன் ஆகவே"

என்ற திருவாய்மொழிப் பாட்டு நம்மாழ்வார் உள்ளத்தைச் செம்மையாக உணர்த்துகின்றது.

## II. நடு நாடு

" வெண்ணெய் உருகுமுன்னே
பெண்ணை பெருகும் " - பழமொழி

# 5. திருக்கோவலூர்

**தெ**ன் பெண்ணையாறு பாயும் திருநாடு நடு நாடாகும். அந் நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது திருக்கோவலூர் நகரம். மலையமான் என்னும் குறுநில மன்னர் குலத்தினரால் நெடுங்காலம் ஆளப்பட்டமையால் மலையமான் நாடு என்ற பெயரும் அந் நாட்டுக்கு அமைந்தது; மலாடு என்பது அப் பெயரின் குறுக்கம்.

முன்னாளில் அந் நாட்டை யாண்ட மன்னருள் தலைசிறந்து விளங்கினான் திருமுடிக்காரி. அவன் புலவர்க்குப் பேருபகாரி; போர்க்களத்தில் நிகரற்ற குதிரை வீரன். காரி என்னும் பெயர் பெற்ற குதிரையின்மீது அமர்ந்து, காற்றென விரைந்து, மாற்றாரை வென்று அடக்கிய மலையமான் திருமுடிக்காரியின் வீரத்தை வியந்து பாடினர் கபிலர் முதலாய தலைமைத் தமிழ்க் கவிஞர்கள். படைத் திறமும் கொடைத் திறமும் ஒருங்கே வாய்ந்த காரியைப் பறம்புமலை வள்ளலாகிய பாரியின் வரிசையில் வைத்துப் பாமாலை சூட்டினர்.[1]

இத்தகைய சிறப்பு வாய்ந்த மலையமான் குலத்திலே தோன்றினார் ஒரு சீலர். அவர் பகைவர்க்குக் கொடியவர்; பக்தர்க்கு அடியவர். அவரை வென்று பெண்ணை

நாட்டைக் கவர்ந்து கொள்ள ஆசைப்பட்டான் முத்தநாதன் என்ற சிற்றரசன். பலமுறை படை யெடுத்தான். ஆயினும் மலையமானை வெல்ல முடியவில்லை. நேர்முகமாகப் பெற முடியாத வெற்றியை மறைமுகமாக அடையத் துணிந்தான். குறுநில மன்னனுக்குரிய கோலத்தைக் களைந்தான். மேனியில் வெண்ணீற்றை அணிந்தான். தலையிலே சடையை முடித்துக் கட்டினான். ஏட்டுச் சுவடி யொன்றை எடுத்து அதனிடையே தீட்டிய கத்தியைப் பதனமாய் மறைத்து வைத்தான். பட்டப் பகலில் ஆசாரக் கள்ளனாய் வெளிப்பட்டு மலையமான் மாளிகை யின் உள்ளே புகுந்தான்.

> **“ மெய்யெலாம் நீறு பூசி**
> **வேணிகள் முடித்துக் கட்டி**
> **கையினில் படைக ரந்த**
> **புத்தகக் கவளி ஏந்தி**
> **மைபொதி விளக்கே என்ன**
> **மனத்தினுள் கறுப்பு வைத்து**
> **பொய்தவ வேடம் கொண்டு**
> **புகுந்தனன் முத்த நாதன் ”**

என்ற தவவேடம் புனைந்து போந்த கள்வனைத் திருத் தொண்டர் புராணம் காட்டுகின்றது.

தவ வேடத்தின் பெருமையால் தடையெல்லாம் கடந்து மலையமான் இருந்த இடம் போந்தான் முத்தநாதன். முழுநீறு பூசிய முனிவரைக் கண்டபோது இருக்கையை விட்டு எழுந்தான் மலையமான்; இரு கைகளையும் குவித்து வணங்கினான்; தக்கதோர் ஆதனத்தில் அமர்த்தினான்; பணிந்து ஒடுங்கி நின்றான்.

அப்போது முனிவன் அவனை நோக்கி, “ மன்னவா ! மாதொரு பாகன் அருளிய ஆகம நூல் ஒன்று எமக்குக் கிடைத்தது. இந்நூல் வேறு எங்கும் கிடையாது.

அருமையாகப் பெற்ற சுவடியை உன்னிடம் எடுத்து வந்துள்ளேன்" என்றான். சிவாகமம் என்ற சொல்லைக் கேட்டவுடன் மலையமான் மனம் மலர்ந்தது. முனிவரது அடியின்கீழ் அமர்ந்தான்; ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கி, "ஐயனே ! அச் சிவாகமத்தை அடியேனுக்குச் செவி யறிவுறுத்தல் வேண்டும்" என்று இறைஞ்சினான்.

முனிவன் ஏட்டை அவிழ்ப்பான் போல் கத்தியை எடுத்தான்; குத்தினான். 'ஐயோ' என்று அலறினான் அரசன். அது கேட்டு ஓடி வந்தான் தத்தன் என்ற காவலாளன். முனிவன்மீது பாயலுற்றான். அப்போது துடித்துக்கொண்டிருந்த மன்னன் அவனைத் தடுத்தான். "தத்தா ! இவர் நம்மவர்" என்று சொல்லித் தரையில் விழுந்தான்.

அரசன் ஆணைக்கு அடங்கி நின்ற தத்தன் கண்ணீர் சொரிந்தான்; மடிந்து விழுந்த மன்னனைத் தாங்கி மடிமேல் வைத்துக்கொண்டு "என் ஐயனே ! நான் என்ன செய்வேன் ?" என்று கதறினான்.

தத்தன் அழுகுரல் கேட்ட காவலாளர் எல்லாம் அங்கே ஓடிவந்தனர். முனிவர் கோலத்தில் நின்ற கள்வன்மீது சாடினர். அதுகண்ட அரசன் "தத்தா ! இவர் எம்பிரான் அடியார். எவரும் இவருக்குத் தீங்கு செய்யாமல் காத்து வெளியே கொண்டுபோய் விடு" என்று பணித்தான். மன்னனது கருணை மொழி கேட்ட காவலாள ரெல்லாம் கரைந்து உருகினர்.

**"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்"**

என்று தமிழ்மறை விதித்தவாறு ஒழுகிய மன்னனை உச்சிமேற் கைகூப்பி வணங்கினர். அவன் ஆணைப்படி தத்தன் காவலில் அரண்மனையை விட்டகன்ற ஆசாரக் கள்ளனை அருவருப்புடன் பார்த்து நின்றனர்.

ஊறு செய்த கொடியோனை ஊருக்கு வெளியே அனுப்பிவிட்டு வேகமாகத் திரும்பினான் தத்தன். அவன் வரும் வரை அரசன் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. மரணவேதனையைப் பொறுத்திருந்த மன்னனை நோக்கி "அரசே ! நின் ஆணைப்படி அவனைக் காத்து வெளியே கொண்டு விட்டேன்" என்று கூறினான் தத்தன். அப்போது மன்னன் மனம் மகிழ்ந்தது; அவன் திருமுகம் மலர்ந்தது. "இன்று என் ஐயனாகிய தத்தன் செய்த உதவியை வேறு யார் செய்ய வல்லார்" என்று புகழ்ந்தான்; ஆவி துறந்தான்.[2]

இம் மாநிலத்தில் கரவாடும் வன்னெஞ்சக் கள்வர் பலவகைப் படுவர். கன்னக்கோல் கொண்டு களவு செய்வார் ஒரு வகையார். கண்ணீர் வடித்து வஞ்சிப்பார் மற்றொரு வகையார். கையெடுத்துக் கும்பிட்டுக் கரவாடுவார் இன்னொரு வகையார். நெஞ்சகத்தில் வஞ்சகத்தை வைத்து அழுகின்ற கள்ளரையும் தொழுகின்ற கள்ளரையும் திருக்குறள் குறிக்கின்றது.

> "தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
> அழுத கண்ணீரும் அனைத்து"

என்ற திருக்குறள் குறிக்கும் இருவகைக் கள்வரையும் தொழு கள்ளர், அழு கள்ளர் என்று அழைப்பர் பொது மக்கள். இவர்களோடு வைத்து எண்ணத்தக்க இன்னொரு வகைக் கள்வரும் உண்டு. அன்னார் ஆசாரக் கள்ளர் எனப்படுவர். பாரத சமுதாயத்தின் தந்தையாகிய காந்தியடிகளின் உயிர் கவர்ந்தவன் ஓர் ஆசாரக் கள்ளன். பழங்காலத்தில் இத்தகைய கொடிய கள்ளனாகிய முத்தநாதனைக் கண்டது திருக்கோவலூர் நகரம்.

"மனவீதி உண்டானால் இடவீதி உண்டு" என்பது தமிழ் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. 'மனம் இடம் கொடுத்தால் மனை இடம் கொடுக்கும்' என்பது இதன் கருத்து. இந்த உண்மையை விளக்கிக் காட்டியது திருக் கோவலூர் நகரம்.

ஒருநாள் மாலைப் பொழுதில் அந் நகர வீதியிலே நடந்து கொண்டிருந்தார் ஒரு பெரியார். அப்போது வானம் இருண்டது; கருமேகம் திரண்டது. "அந்தி மழை அழுதாலும் விடாதே" என்று எண்ணி அருகே இருந்த வீட்டில் ஒதுங்கினார் அப்பெரியார். "இரவிலே படுத்துக் கொள்ள இடம் வேண்டும்" என்று வீட்டுக்கு உரியவரை நோக்கி விண்ணப்பம் செய்தார். அவர், அவ் வீட்டின் இடைகழியை ஒழித்துக் கொடுத்து, "இங்கே படுத்துக் கொள்ளலாம்" என்று சொல்லி உள்ளே சென்றுவிட்டார்.

மழை வலுத்தது; காற்றும் சேர்ந்து அடித்தது. இடை கழியில் இருள் செறிந்தது. அப்போது ஒருவர் வாசலில் ஓடி வந்து நின்றார். "இங்கே கொஞ்சம் ஒதுங்க இடம் கிடைக்குமா?" என்று கூவினார். அக் குரல் கேட்டவுடன் உள்ளே படுத்திருந்தவர் எழுந்திருந்து, "இங்கே ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" என்று சொல்லி வந்த வருக்கு இடம் கொடுத்தார்.

இருவரும் நனைந்த உடையோடு நடுங்கிக்கொண் டிருக்கையில் இன்னொருவர் ஓடி வந்து, "ஐயா! சிறிது இடம் வேண்டும்" என்று கேட்டார். அகன்ற மன முடையார் இருவரும் அவரையும் வருக என்று அழைத்து, "இங்கே ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்று சொல்லி, எழுந்து நின்று இடம் கொடுத்தார்கள்.

> **"இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**
> **கடனறி காட்சி யவர்"**

என்ற தமிழ் மறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக நின்ற அப்பெரியார்க்கு இறைவன் இடைகழியில் காட்சி யளித்தான் என்று பழைய வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு இடைகழியில் இறைவனைக் காணும் பேறு பெற்ற பெரியார்களில் ஒருவர் காஞ்சி நகரத்தார்;

மற்றொருவர் மாமல்லபுரத்தார்; இன்னொருவர் திருமயிலையார். முதல் ஆழ்வார்கள் என்று போற்றப் பெறுபவர் இவரே. ஒத்த உணர்ச்சியுடைய இம் மூவரும் மழைக்காக ஒதுங்கி நின்று பாடும் பெருமை பெற்ற திருக்கோவலூரையும் அவ்வூரைத் தலைநகராகவுடைய பெண்ணை நாட்டையும் புகழ்ந்து பாடினார் ஒரு கவிஞர்.

**" பாவரும் தமிழால் பேர்பெறு பனுவற்**
**பாவலர் பாதிநாள் இரவில்**
**மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி**
**முகுந்தனைத் தொழுதநன் னாடு "**

என்பது அவர் திருவாக்கு.

நல்லோர் பலர் திருக்கோவலூரை நாடி வந்தனர். அன்னவருள் ஒருவர் பொய்யறியாப் புலவர் பெருமானாகிய கபிலர். பாரி வள்ளலின் ஆருயிர்த் தோழராகிய இப் புலவர் அவனது பறம்பு மலையிலே பெரும்பாலும் தங்கி இருந்தார். குறுநில மன்னனாகிய பாரியின் கொடைத் திறம் அவர் உள்ளத்தை அள்ளிக் கொண்டது.

**" முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர் "**

என்று தனக்குரிய நாடு முழுவதையும் நன்கொடையாக வறியார்க்கு வழங்கிய பாரியின் பெருந்தகைமையை அவர் வியந்து பாடினார். இத்தகைய வள்ளலைத் தமிழ் மன்னர் மூவரும் சேர்ந்து வஞ்சித்துக் கொன்றபோது ஆறாத் துயரம் அடைந்தது கபிலரது நெஞ்சம். அந்நிலையில் பாரியின் பெண்மக்கள் இருவரும் அவரைத் தஞ்சம் அடைந்தனர். செஞ்சொற் கவி பாடும் திறம் படைத்த அந் நங்கையர் தாம் பன்னாள் வாழ்ந்த பறம்பு மலையை நோக்கி,

"வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

என்று பரிந்து பாடிய பொழுது கபிலர் கண்ணீர் வடித்துக் கரைந்து உருகினார். மனங் கலங்கி நின்ற மங்கையர் இருவரையும் தகைசான்ற தலைவர்க்கு மணஞ்செய்து கொடுத்தல் தம் கடன் என்று கருதி அவரை அழைத்துக் கொண்டு பறம்பு மலையினின்றும் புறப்பட்டார். குறுநில மன்னனாகிய விச்சிக்கோனிடம் போந்து, "கோவே ! இம் மங்கையர் முல்லைக்கொடி படர்வதற்குத் தேர் அளித்த பாரி வள்ளலின் மக்கள். இவரை மணந்துகொள்க" என்று வேண்டினார்.[3] ஆயினும் விச்சிக்கோன் அவர் கருத்திற்கு இசைந்தானில்லை. அதனால் ஊக்கம் குன்றாத புலவர் பெருமான் இருங்கோவேள் என்னும் சிற்றரசனிடம் இருவரையும் அழைத்துச் சென்றார். அம் மங்கையர் யார் என அறிய ஆவலுற்ற அம் மன்னனை நோக்கி, "இவர் தந்தை, பாரி. அவர் தோழன் யான். அந்த முறையில் இவர் என் மக்கள். இவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்க" என்று வேண்டினார். பெருங்குடிப் பிறந்த இருங்கோவேளும் அதற்கு இணங்கினானில்லை.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்னும் முதுமொழியை நம்பிய கபிலர் திருக்கோவலூரை நாடினார். வள்ளலாகிய திருமுடிக்காரியின் வழிவந்த குறுநில மன்னன் ஆட்சி புரிந்த அந் நகரில் தம் ஆசை நிறைவேறும் என்று எண்ணினார். அவர் எண்ணிய வண்ணமே பாரியின் பெண்களை ஏற்றுக்கொள்ள இசைந்தது காரியின் பெருங்குலம். அக் குலத்தைச் சேர்ந்த இருவர்க்குப் பாரி மகளிர் இருவரையும் மணம் செய்து கொடுத்தார் கபிலர்; கடமை தீர்ந்தது என்று கவலை துறந்தார்.

ஆயினும் பாரியின் தோழமையை அவர் மறந்தாரல்லர். பகலவன் இல்லாத வானம் போல் ஒளி மழுங்கி இருந்தது பாரியை இழந்த தமிழகம். ஒரு நாள் பெண்ணையாற்றின் கரையில் அமர்ந்து பாரி வள்ளல் செய்த நன்மை யெல்லாம் எண்ணினார் கபிலர்; பெருந்துயரில் மூழ்கினார்; என்றும் மறக்க முடியாத துயரத்தை மாற்றும் வழியொன்று கண்டார். புனிதமாய பெண்ணையாற்றில் நின்ற பாறை யொன்றில் நெருப்பை வளர்த்தார். வள்ளல் பாரியை உள்ளத்தில் வைத்து அந் நெருப்பிலே பாய்ந்து உயிர் நீத்தார். திருக்கோவலூரில் உள்ள கபிலக் கல்லும் இச் செய்தி சொல்லும்.[4] *

* பாரி மகளிரின் திருமணத்தைப்பற்றியும் கபிலரது மரணத்தைப்பற்றியும் வேறு விதமாகச் சொல்லும் நூல்களும் உண்டு.

# 6. திருவெண்ணெய்நல்லூர்

**தெ**ன் பெண்ணை யாறு பாயும் நன்னாட்டிலே திரு முனைப் பாடி என்ற நகரம் முன்னாளில் சிறப்புற்றிருந்தது. முனையர் என்னும் பெயருடைய பழந் தமிழ்க் குலத்தாரின் பெருமைக்கு ஒரு சான்றாக நின்றது அந் நகரம். நாளடைவில் அந் நகரத்தைத் தன்னகத்தே உடைய பெண்ணை நாடு திருமுனைப்பாடி நாடு என்னும் பெயர் பெற்றது.

தக்கோர் பலர் அந் நாட்டிலே தோன்றினர். தேவாரம் பாடிச் சிவ நெறியையும், செந்தமிழையும் பரப்பிய மூவருள் திருநாவுக்கரசரும், சுந்தரரும் திருமுனைப்பாடி நாட்டிலே பிறந்தருளினர்.[1]

அந் நாட்டில் உள்ள பழமையான ஊர்களில் ஒன்று திருவெண்ணெய் நல்லூர். பெண்ணை யாற்றின் தென் கரையில் பொருளும் அருளும் பொருந்தித் திகழ்ந்தது அவ்வூர். முந்தை நாளில் விந்தையான வழக்கு ஒன்று அங்கு நிகழ்ந்தது.

திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த நாவலூரில் ஆரூரன் என்னும் பெயருடைய அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் திருவெண்ணெய் நல்லூர்ப் பெரு முனிவனாகிய பித்தனுக்கு ஓர் அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்தார். 'நானும் என் குடி வழியில் வருவோரும் வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு அடிமை செய்யக்

கடமைப்பட்டுள்ளோம்' என்று அச் சீட்டிலே கண்டிருந்தது.

இவ்வாறு அடிமையோலை எழுதிக் கொடுத்த ஆரூரன் மரபிலே பிறந்தார் நம்பி ஆரூரன் என்னும் சுந்தரர். அழகின் கொழுந்தென விளங்கிய நம்பியை, திரு முனைப்பாடி நாட்டரசனாகிய நரசிங்க முனையர் ஆசை மகனாக எடுத்து வளர்க்க விரும்பினார். நம்பியின் பெற்றோரும் அரசன் கருத்திற்கு இசைந்தார்கள். அந்தணர்க்கு உரிய சீலமும், அரசர்க்கு உரிய சிறப்பும் பெற்றுத் திருந்தி வளர்ந்தார் சுந்தரர்.

மணப் பருவம் உற்றபொழுது புத்தூரில் வாழ்ந்த ஓர் அந்தணன் மகளை அவர்க்கு மணம் பேசி முடித்தார்கள். புத்தூர் புதுமணம் பெற்றது என்று புகழ்ந்தனர் மக்கள் எல்லாம். திருமணத்திற்குக் குறித்த நாளில் உற்றாரும், உறவினரும் அங்கு வந்து நிறைந்தனர். திருமண மேடையில் அமர்ந்திருந்த மணமக்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தனர்; மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கினர்.

அந்த வேளையில் அங்கு வந்தார் ஒரு விருத்த வேதியர். மணப் பந்தலின் நடுவே நின்றுகொண்டு "இந்த மண மகனுக்கும் எனக்கும் இடையே ஒரு வழக்கு உண்டு; அதை இப் பொழுதே தீர்த்து ஆகவேண்டும். இவன் என் அடியான்" என்று பேசினார்.

கிழவர் பேச்சைக் கேட்டுச் சிரித்தார் சிலர்; திகைத்தார் சிலர். வேதனை தந்த வேதியனை நோக்கி வெகுண்டார் சுந்தரர். "முதியோனே ! அந்தணன் ஒருவன் வேறோர் அந்தணனுக்கு அடிமையாதல் எங்கேனும் உண்டோ? பித்துப் பிடித்தவன் போல் பேசுகின்றாயே !" என்று மிடுக்காக மொழிந்தார். முதியவர் அதைப் பொறுமையாகக் கேட்டு "நான் பித்தன் ஆயினும் ஆகுக; பேயன் ஆயினும் ஆகுக; நீ வித்தகம் பேச வேண்டா; பணி செய்ய வேண்டும்" என்றார்.

அப்போது அங்கிருந்தவர்கள் சுந்தரருக்காகப் பரிந்து பேசத் தொடங்கினர். "விந்தையான வழக்கைக் கொண்டு வந்த ஐயரே ! உமது சொந்த ஊர் எது ?" என்று வினவினர்.

"என் ஊர் திருவெண்ணெய்நல்லூர். இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு இதோ என்னிடம் உள்ளது" என்று காட்டினார் கிழவர்.

சுந்தரர் உள்ளம் துடித்தது. துள்ளி எழுந்து கிழவர் கையில் இருந்த ஓலையைப் பறித்தார்; கிழித்தெறிந்தார்.

அது கண்ட முதியவர், "என் ஓலையை வலிந்து பற்றிக் கிழித்தானே இவன் ! இது முறையாகுமா? இச் செய்கையே இவன் அடிமை என்பதை மெய்ப்பிக்கும் அல்லவா ?" என்று முறையிட்டார்.

கிழவர் ஒரு "விடாக்கண்டர்" என்று உணர்ந்தார் சுந்தரர். 'பழைய மன்றாடி போலும் இவர்; வழக்குத் தீர்ந்தாலன்றித் திருமணம் நடைபெறுமாறில்லை' என்று தெளிந்தார். "வழக்கமில்லாத இந்த வழக்கை உமது ஊரிலே பேசலாம் வாரும்" என்று கிழவரை அழைத்தார். அவரும் அதற்கு இசைந்து திருவெண்ணெய்நல்லூரை நோக்கி நடந்தார்; சுந்தரர் அவரைப் பின் தொடர்ந்தார்.

திருவெண்ணெய்நல்லூரில் பஞ்சாயத்தார் சபை கூடிற்று. அச்சபையின் முன்னே நின்ற சுந்தரரைச் சுட்டிக் காட்டி "இவன் என் அடியான்; அதற்குச் சான்று உண்டு. இவன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமையோலையைக் காட்டினேன்; அதை வலிந்து பற்றிக் கிழித்துவிட்டான். இதுவே என் முறைப்பாடு" என்றார் முதியவர்.

அது கேட்ட சுந்தரர், "கல்வி கேள்விகளில் சிறந்த சபையோரே ! நான் அந்தணன் என்பதை அறிவீர் ! என்னை அடிமை என்று இம்மறையவன் சாதிக்கும் மாயம் அறியேன்" என்று மாற்றம் உரைத்தார்.

சபையோர் சிந்தித்தனர். "அந்தணர் அடிமையாகும் வழக்கம் இல்லை. ஆயினும் சுந்தரனுடைய பாட்டன் இசைந்து எழுதிக் கொடுத்த அடிமையோலையை ஆதரவாகக் கொண்டு முறைப்பாடு செய்கின்றார் இம் முதியவர். ஆட்சி, எழுத்து, காட்சி என்னும் மூன்றில் ஒன்றை இவர் ஆதாரமாகக் காட்டுதல் வேண்டும்" என்று கூறினர்.

**"ஆட்சியில் ஆவ ணத்தில்**
**அன்றிமற் றயலார் தங்கள்**
**காட்சியின் மூன்றில் ஒன்று**
**காட்டுவாய் என்ன முன்னே**
**மூட்சியிற் கிழித்த ஓலை**
**படியோலை மூல ஓலை**
**மாட்சியிற் காட்ட வைத்தேன்**
**என்றனன் மாயை வல்லான்"**

சான்று காட்டுக' எனப் பணித்த சபையோரை நோக்கி, "இரண்டு ஓலை எழுதித் தந்தான் இவன் பாட்டன். ஒன்று மூலவோலை; மற்றொன்று படியோலை. மூலவோலை இதோ இருக்கிறது" என்று காட்டினார் முதியவர்.

பஞ்சாயத்துச் சபையின் கரணத்தான் அவ் வோலையைப் பணிந்து வாங்கினான். சுருள் நீக்கி விரித்தான்; எழுதியிருந்த வாசகத்தைச் சபையிலே படித்தான்.[2]

"வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கு நானும் என் மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு இவ்வோலை எழுதிக் கொடுத்தேன்; நாவலூர் ஆதிசைவன் ஆரூரன் ஆகிய நான். இவை என் எழுத்து" என்ற வாசகத்தைக் கேட்டனர் சபையார். "இது உமது பாட்டனார் எழுத்துத் தானா? பாரும்" என்று சுந்தரரைப் பார்த்துக் கேட்டனர்.

"பாட்டனார் கையெழுத்து இவனுக்கா தெரியும்? அவர் எழுத்துடைய வேறு ஓலைகளின் கைச்சாத்தோடு இதனை ஒப்பு நோக்குதலே முறையாகும்" என்றார் முதியவர். அதுவே சரி என்று ஏற்றுக்கொண்ட சபையார் "ஆவணக்களரி" யிலிருந்து ஆரூரன் கையெழுத்தடங்கிய ஓலைகளை வரவழைத்தார்கள். அவற்றோடு அடிமை யோலைக் கையெழுத்தை ஒப்பு நோக்கினார்கள்; ஆரூரன் கையெழுத்தே என்று தெளிந்தார்கள். "இந்த வழக்கில் பித்தனார் வென்றார்; சுந்தரர் தோற்றார்" என்று தீர்ப்புரைத்தார்கள்.

வழக்குத் தீர்ந்த பின்னர், "ஐயரே ! இவ்வூரே உமது ஊர் என்று தெரிந்தோம். இங்கு உம்முடைய வீடு எங்கு இருக்கின்றது ?" என்று வினவினர் சபையார். முதியவர் முகமலர்ந்து "என்னை ஒருவரும் அறியீராகில் வாருங்கள் ! காட்டுகின்றேன்" என்று அழைத்துக்கொண்டு திருக் கோயிலின் உள்ளே சென்றார்; மறைந்தார்.

இறையவனே மறையவனாக வந்து சுந்தரரை வலிந்து ஆட்கொண்டான் என்று எல்லோரும் அறிந்தார்கள்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்; சுந்தரர் மெய்யரும்பி விதிர் விதிர்த்து உருகினார்; கதறினார். "எல்லாம் உன் அடிமையே ! எல்லாம் உன் உடைமையே ! நாயேனை வலிந்து ஆட்கொண்ட நாதனே ! பேயேனைத் தடுத்தாண்ட பெருமானே !" என்று திருக்கோயிலின் முன்னே பணிந்து விழுந்தார்; பரவசமுற்றார்.

அப்பொழுது விண்ணிலே ஒரு குரல் எழுந்தது. "வன் தொண்டனே ! பணி செய்க; தமிழிலே பாடுக; முன்னமே என்னைப் பித்தன் என்றாய் ! ஆதலால் பித்தன் என்றே எடுத்துப் பாடுக" என்ற வானொலியைக் கேட்டு இன்ப

வெள்ளத்தில் மூழ்கினார். 'அருட்டுறை' என்னும் பெயருடைய திருக்கோயிலின் முன்னின்று அருமையான பாட்டிசைத்தார்.

**" பித்தா பிறைசூடி பெரு**
**மானே அருளாளா "** 3

என்று தொடங்கி அவர் இசைத்த திருப்பாசுரத்தைப் பாடி இறைவனருள் பெற்ற அடியார் எண்ணிறந்தவர்.

# 7. திருப்பாதிரிப்புலியூர்

வட நாட்டில் சோணை யாறு கங்கை யாற்றில் கலக்கும் இடத்திற்கு அருகே பாடலிபுத்திரம் என்ற நகரம் ஒன்று முன்னாளில் பண்புற்று விளங்கிற்று. மகத நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்த அம் மூதூர், அசோக மன்னன் காலத்தில் கலைவளம் பெற்றுத் தலையெடுத்து நின்றதென்று பாரத நாட்டு வரலாறு தெரிவிக்கின்றது.

தமிழ் நாட்டிலும் ஒரு பாடலிபுத்திரம் கெடில நதிக் கரையில் எழுந்தது. சமண சமயத்தைப் பேணி வளர்த்த அப் பெரும்பதியில் சான்றோர் பலர் வாழ்ந்தனர். அங்கிருந்த சமணப் பள்ளியில் பன்மொழிப் புலவர் பலர் பணி யாற்றினர். செந்தமிழ்க் கல்வி செழித்தோங்கித் தழைத்தது.

இத்தகைய புகழ் பெற்ற நகரத்தின் அருகே அமைந்த திருவாமூர் என்ற சிற்றூரில் திருநாவுக்கரசர் பிறந்தார். மருள் நீக்கியார் என்னும் பிள்ளைப் பெயருடைய அவ் அறிஞர் இளமையிலேயே பெற்றோர் இருவரையும் இழந்தார்; தமக்கையாகிய திலகவதியாரே தஞ்சம் எனக் கருதி வாழ்ந்தார். அம் மங்கைக்குப் பெரியதோர் இடர் வந்துற்றது. அவர்க்கு மணமகனாக உறுதி செய்யப் பெற்றிருந்த தலைமகன் திருமணம் நிகழ்வதற்கு முன்னமே போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டான். அக்கால வழக்கத்திற்கு ஏற்பத் திலகவதியார் கற்புநெறி வழுவாமல் உடன் கட்டையேறி உயிர் துறக்கத் துணிந்தார்.

பன்னீராண்டு நிரம்பாத திலகவதியாரின் கருத்தை அறிந்தார் மருள் நீக்கியார்; மனம் பதைத்தார்; கண்ணீர் வடித்தார்; தமக்கையின் அடிகளில் விழுந்து துடித்தார். "மங்கையர் திலகமே ! அறியாப் பருவத்தில் தந்தையும் தாயும் இழந்தேன்; உம்மையே நம்பி உயிர் வாழ்கின்றேன். என்னை நீரும் கைவிட்டால் ஏழையேன் என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? உயிர் துறக்கும் கருத்தை நீர் மாற்றா விட்டால் நும் கண்ணெதிரே என் உயிரை மாய்ப்பேன்" என்றார்.

அருமைத் தம்பியார் வடித்த கண்ணீர் திலகவதியாரின் உள்ளத்தைக் கரைத்தது. வழக்கத்தைத் தழுவி இறப்பதோ, அன்றிக் கடமையைக் கருதி இருப்பதோ என்ற கேள்வி அவர் மனத்தை அலைத்துக் குலைத்தது. ஆயினும் இறைப் பொழுதில் ஒரு நிலைப்பட்டது அவருள்ளம். உடன் பிறப்பு என்னும் பாசம் உடன்கட்டையேறும் விருப்பத்தை வென்றது. தம்பியார் வாழ்தல் வேண்டும் என்னும் ஆசை யால் ஊரார் கூறும் வசையையும் பொறுக்கத் துணிந்தார் திலகவதியார்.[1]

தமிழ் மொழியில் உள்ள அருங்கலைகள் அனைத்தையும் ஆராய்தல் வேண்டும் என்ற ஆசை மருள் நீக்கியார் மனத்தில் நிரம்பி நின்றது. பல்கலைக் கழகம் போல் விளங்கிய பாடலிபுத்திரப் பள்ளியை நாடிற்று அவர் உள்ளம். அப்பள்ளியிலே சமண சமயப் பாடங்களோடு நீதி நூல்களும், அளவை நூல்களும், காவியங்களும் முறை யாகப் பயிற்றப்பட்ட செய்தி அறிந்து அவர் அளவிறந்த ஆர்வம் உற்றார்.

அந் நாளில் தமிழகத்தை அணி செய்த சமணப் பள்ளிகள் சிறந்த கல்விச் சாலைகளாகவும் திகழ்ந்தன. கலை பயில் தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்ந்த சான்றோர் பலர் அப் பள்ளிகளில் ஆசிரியர்களாய் இருந்தனர்; தமிழ்

மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் மாணவர் களைப் பயிற்றினர். அதற்குச் சாதனமாக நிகண்டுகளும், இலக்கணங்களும் இயற்றினர். சாதிமத வேற்றுமையின்றி மாணவராக ஆர்வமுற்ற இளைஞர்க்கெல்லாம் மாசறக் கல்வி பயிற்றிய காரணத்தால் பள்ளி என்னும் சொல் கல்விச் சாலையைக் குறிப்பதாயிற்று. 'பள்ளிக்கு வைத்தல்' என்றால் படிக்க வைத்தல் என்று கருதினர் கற்றோரும் மற்றோரும். இத்தகைய பள்ளிகளுள் தலைமை சான்ற பாடலிபுத்திரப் பள்ளியில் மாணவராகச் சேர்ந்தார் மருள் நீக்கியார்.

பள்ளியில் மட்டற்ற ஆசையோடு அவர் கலை பயின்றார். அங்கு அருங்கலை பயிற்றிய சமணச் சான்றோர் களின் சீலமும் புலமையும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. சமண சமயமே மேலான சமயம் என்னும் கருத்து அவரது இளமையுள்ளத்தில் மெல்ல அரும்பிற்று. தெள்ளிய அறிவும் திருந்திய சொல்வன்மையும் வாய்ந்த மருள் நீக்கியார் படிப்படியாக உயர்ந்து அப் பள்ளியின் தலைவர் ஆயினார். அந் நிலையில் மருள் நீக்கியார் என்ற பெயரை நீக்கி அவர்க்குத் தருமசேனர் என்ற பெயரை இட்டனர் சமணச் சான்றோர். சேனர் என்பது சமண சமயத்தில் உயர்ந்த நிலை அடைந்தோர்க்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. அப் பெயர் பெற்றார் சிலர் தேவாரப் பாட்டிலே குறிக்கப்படுகின்றனர்.

> " சந்து சேனனும் இந்து சேனனும்
> தருமசேனனும் கருமைசேர்
> கந்து சேனனும் கனக சேனனும் "

என்ற திருஞான சம்பந்தர் பாசுரத்திலே சமண சமயத்தில் சிறப்புற்று விளங்கிய சிலர் பெயர்களைக் காணலாம்.

அக் காலத்தில் பல்லவ குலமன்னர் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர்.

அம் மன்னருள் ஒருவன் மகேந்திரவர்மன். அவன் சமண சமயத்தைச் சார்ந்தவன். அச் சமயத்தைப் பேணி வளர்த்தவன். அவன் ஆதரவு பெற்ற மதம் தமிழகத்தில் செழித்து ஓங்கி வளர்ந்தது. பட்டி மண்டபங்களில் சமயவாதம் பாங்குற நிகழ்ந்தது.

சமணப் பள்ளியின் தலைவராக வீற்றிருந்த தருமசேனர் புத்தரோடு வாக்கு வாதங்கள் புரிந்து வெற்றி பெற்றார்.[2] அதனால் அவர் புகழ் எங்கும் பரந்தது. பாடலிபுரப் பள்ளியின் பெருமையெல்லாம் தம் பெருமை ஆக்கிக் கொண்டார் தருமசேனர் என்று தமிழகம் அவரைப் புகழ்ந்தது.

# 8. திருவதிகை

**கெ**டில நதியின் வட கரையில் திருவதிகை என்னும் பெயருடைய பெருமை சான்ற பழம்பதி ஒன்றுண்டு. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் புரியும் அதிகைப் பெருமான் அமர்ந்த ஆலயத்தில் திருத்தொண்டு செய்ய ஆசைப்பட்டார் திலகவதியார். அப்பதியிலுள்ள திருமடம் ஒன்றைத் தம் இருப்பிடமாகக் கொண்டார்; சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்; நித்தலும் பொழுது புலருமுன்னே திருக்கோயிலிற் போந்து அலகிட்டு மெழுக்கிட்டு அரும்பணி புரிந்தார்; பூமாலை புனைந்து ஈசனுக்கு அணிந்தார்; பண்ணோடு இசைபாடிக் கண்ணீர் உகுத்தார்; வற்றிய மேனியராய் நற்றவம் புரிந்தார்.

இவ்வாறு தவநெறியை மேற்கொண்டு திலகவதியார் வாழ்ந்து வருகையில் அவர் தம்பியாகிய மருள் நீக்கியார் சிவநெறி துறந்து சமணர் ஆயினார் என்று கேள்வியுற்றார். நஞ்சு தோய்ந்த அம்புபோல் அச் செய்தி அவர் நெஞ்சத்தில் பாய்ந்தது. ‘இச்செய்தியைக் கேட்பதற்கோ ஏழையேன் இது வரை உயிர் தாங்கி நின்றேன்’ என்று ஏங்கினார்; ‘செந்நெறியாகிய சிவ நெறியை விட்டு மற்றொரு நெறியில் மருள் நீக்கியாரது மனம் எவ்வாறு கவிந்ததோ’ என்று மயங்கினார்; ‘மம்மர் அறுக்கும் திருநீற்றை மறக்கவும் அவர் மனம் இசைந்ததோ’ என உருகினார்; திருவதிகைப் பெருமானிடம் தமது குறையை முறையிட்டுக் கண்ணீர் பெருக்கினார்.

பாடலிபுத்திரப் பள்ளியில் நிகரற்ற தலைவராய் விளங்கிய தருமசேனருக்குக் கடுமையான நோய் வந்துற்றது. சூலை நோய் என்று மருத்துவர் சொல்லிய அத் தீப்பிணி அவரை வாட்டி வருத்தியது; அதனை மாற்றுவதற்கு மருத்துவர்கள் கொடுத்த மருந்தெல்லாம் பயனற்றுப் போயின. "பொல்லாத சூலை நோய் தீருமாறு இல்லை" என்று எல்லோரும் கை விட்டார்.

அந்நிலையில் தமக்கையாரைக் காண வேண்டும் என்ற விருப்பம் தருமசேனரது உள்ளத்தில் எழுந்தது. அவரிடம் ஒரு பணியாளனை அனுப்பினார். அவன் திருவதிகையிற் சென்று திலகவதியாரிடம் தம்பியின் நிலைமையைத் தெரிவித்தான்.

"கொல்லாது சூலைநோய்
குடர்முடக்கித் தீராமை"[1]

எல்லாரும் கை விட்டார் என்று அவன் சொல்லிய போது திடுக்கிட்டார் திலகவதியார். ஆயினும் அவர் பாடலி புத்திரம் செல்ல இசைந்தார் அல்லர்.

தமக்கையார் கருத்தை அறிந்த தருமசேனர் பொல்லாத வயிற்று நோயைப் பொறுத்துக்கொண்டு வழி நடந்து திலகவதியார் இருந்த திருமடத்தைச் சென்றடைந்தார்; பல்லாண்டுகளாகக் காணப் பெறாத தமக்கையின் தவக்கோலத்தைக் கண்டு மனம் கரைந்தார்; அவர் தாள் களில் விழுந்து கண்ணீர் சொரிந்தார்.

கடும் பிணியால் நலிந்து கதறிய தம்பியைக் கண்ட போது திலகவதியார் மனம் குழைந்து, ஈசனது மறக் கருணையை நினைந்து மனமார வாழ்த்தினார். தீரா நோய் தீர்க்கவல்ல திருநீற்றை மறைமொழி ஓதிக் கொடுத்தார். திலகவதியாரே கண்கண்ட தெய்வம் என்று கருதிய தம்பியார் அத் திருநீற்றைப் பணிந்து ஏற்றுப் பண்புற அணிந்தார்.

மனம் திரும்பிய தம்பியை அழைத்துக்கொண்டு திருக்கோயிலை அடைந்தார் திலகவதியார். அங்கே திரு அதிகைப் பெருமானைக் கண்டபோது இருவர் உள்ளமும் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகிற்று; கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. தமிழ்ப் பாட்டுக்கு இரங்கும் ஈசனார் முன்னின்று தம் குறையை முறையிட்டார் தம்பியார்.

**"கூற்றாயின வாறு விலக்ககிலீர்**
**கொடுமைபல செய்தனநான் அறியேன்**
**ஏற்றா யடிக்கே இரவும் பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே"**

என்று தம் ஆற்றாமையை அறிவித்தார். "அப்பனே ! அதிகையில் அமர்ந்தருளும் ஐயனே ! அடியேன் கொடுமை யொன்றும் செய்தறியேன்; நெஞ்சில் வஞ்சகம் நினைத் தறியேன்; எந்நாளும் உம்மை மறந்தறியேன்; கொல்லாமல் கொல்கின்ற கொடிய நோயைத் தீர்த்தருள வேண்டும்; சுடுகின்ற சூலையைத் தவிர்த்தருள வேண்டும்; வயிற்றோடு துடக்கி முடக்கி வருத்தும் வன்பிணியைத் துடைத்தருள வேண்டும்; அஞ்சேல் என்று அருள் புரியவேண்டும் ஐயனே !" என்று இறைஞ்சினார்.

இறைவன் அருள்கூர்ந்தான். பொல்லாத சூலை நோய் அந் நல்லாரை விட்டு ஒழிந்தது. அந் நோய் தீர்வதற்கு அவர் இசைத்த தமிழ்ப் பாட்டின் அருமை யறிந்த தமிழகம் திருநாவுக்கரசர் என்றும் வாகீசர் என்றும் அவரைப் போற்றிப் புகழ்ந்தது. அன்று முதல் சிவத்தொண்டு செய்யத் தலைப்பட்டார் திருநாவுக்கரசர்.[2]

திருத் தொண்டராகிய திருநாவுக்கரசர் நாள்தோறும் நல்ல தமிழ்ப் பாட்டிசைத்து நாட்டு மக்களின் உள்ளங்

கவர்ந்தார் என்பதை அறிந்து கவலையுற்றனர் சமணர்; சமண சமயத்தைத் தழுவி நின்ற பல்லவ மன்னனிடம் சென்று, தரும சேனரது மத மாற்றத்தால் நேர்ந்த மானக் கேட்டை எடுத்துரைத்தனர். சமண நெறியில் சாலச் சிறந்த பற்றுடையவனாகிய பல்லவன் பெருஞ் சீற்றம் உற்றான்; தவறு செய்த தருமசேனரைத் தக்கவாறு ஒறுக்கத் துணிந்தான்; அமைச்சரையும் படைத் தலைவரையும் அழைத்தான்; 'திருவதிகையில் சிவப்பணி செய்து கொண்டிருக்கும் திருநாவுக்கரசரை இப்பொழுதே கொண்டு வருக' என்று ஆணை பிறப்பித்தான்.

மன்னவன் இட்ட பணியை மேற்கொண்டு படைக் கலம் தாங்கிய சேனையோடு தானைத் தலைவரும் அமைச்சரும் திருவதிகையிற் போந்து திருநாவுக்கரசரைக் கண்டார்கள்; மன்னன் ஆணையைத் தெரிவித்தார்கள். வேற்படை தாங்கிய வீரர் பலர் தம்மைச் சூழ்ந்து நின்றதை நோக்கினார் நாவுக்கரசர். பல்லவ மன்னனது படைச் செருக்கைக் கண்டு இறையளவும் அஞ்சினாரல்லர். பல்லுயிரும் பலவுலகும் படைத்தளிக்கும் இறைவனுக்கு ஆட்பட்ட அடியாரைப் பல்லவன் ஆணை என்ன செய்யும் என்று எண்ணி மனத் திண்மை கொண்டார். அந்நிலையில் எழுந்தது ஒரு வீரப் பாடல்.

**"நாம்ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"**

என்று பாடினார். திருநாவுக்கரசரது உயர்ந்த குறிக்கோளை அறிந்து அவரருகே செல்லத் தயங்கி நின்றனர் தானைத் தலைவரும் அமைச்சரும். அந் நிலையில் மன்னவன் ஆணையை நிறைவேற்றும் கடப்பாடுடைய படைத் தலைவருக்கு யாதும் தீங்கு வரலாகாது என்று கருதிய நாவரசர் அவருடன் செல்ல இசைந்து எழுந்தார்; பல்லவன் முன்னே சென்று நின்றார்.

சிவனடியார்க்கு உரிய திருநீறும் சாதனமும் அணிந்து நின்ற நாவரசரைக் கண்டு பல்லவன் சீற்றம் கொண்டான். கொடுமை பல செய்தான். அவன் செய்த தீமையெல்லாம் பொறுத்தார் திருநாவுக்கரசர். சிவனடியே தஞ்சம் எனக் கொண்டு செஞ்சொற் கவி இசைத்தார். அதிகைப் பெருமான் அடி சேர்ந்தார்க்கு அதிர வருவது ஒன்றில்லை. அன்னார் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்று செம்மாந்து பாடினார்.[3] ஒறுத்த பல்லவன் தோற்றான்; பொறுத்த நாவரசர் வென்றார். ஆன்ம வீரத்தால் அரசாங்கத்தின் மிடுக்கையும் அடக்கி விடலாம் என்ற உண்மையை உலகறியக் காட்டினார் திருநாவுக்கரசர். அவர் வாக்கையும் வாழ்க்கை வரலாற்றை யும் ஓதி உணர்ந்து மனத் திண்மை பெற்ற தொண்டர்கள் இந் நாட்டில் எண்ணிறந்தவர். 'பாட்டுக்கொரு புலவன்' என்று பாராட்டப்படும் வீரத் தமிழ்க் கவிஞர் அன்னவருள் ஒருவர். "நாமார்க்கும் குடியல்லோம்" என்று நாவரசர் முழக்கிய பறையின் எதிரொலி பாரதியாரின் வீரப் பாட்டிலே கேட்கின்றது.

**"யார்க்கும் குடியல்லேன் யான்என்ப**
**தோர்ந்தனன் மாயையே - உன்தன்**
**போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்**
**உன்னை மாயையே"**

என்று அவர் வாக்கை ஆதரவாகக் கொண்டு தாக்காகப் பாடினார் பாரதியார்.

பாரத நாட்டில் சுதந்தரப் போர் மூண்ட பொழுது வீரத் தமிழ்ப் பாட்டால் ஆங்கில நாட்டு வல்லரசின் ஆணிவேரை அசைத்தார் பாரதியார். அவர் பாட்டுக்கு ஊற்றம் அளித்தது நாவுக்கரசரது திருவாக்கு. "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே" என்ற பாரதியார் பாட்டுக்கு அடிப்படை திருநாவுக்கரசர் பாடிய 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்னும் திருப்பாட்டன்றோ?

அறத்தையே அடைக்கலமாகக் கொண்டு போர் நிகழ்த்தும் ஆன்ம வீரரை வீரப் படை கொண்ட வேந்தர் எந்நாளும் வெல்லுதல் இயலாது என்னும் உண்மையைத் திருநாவுக்கரசர் வரலாற்றால் உணர்ந்த பாரதியார்,

**"பச்சைஊன் இயைந்தவேல்**
**படைகள்வந்த போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சமென்ப தில்லையே"**

என்று வீர உணர்ச்சியை ஊட்டினார்.

திருநாவுக்கரசர் அணிந்த பாமாலையும், திலகவதியார் சாத்திய பூமாலையும் பெற்ற திருவதிகை முன்னாளில் அதியரைய மங்கை என்று அழைக்கப்பெற்றது.

**"அறிதற்கு அரியசீர் அம்மான் தன்னை**
**அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை**
**எறிகெடிலத் தானை இறைவன் தன்னை**
**ஏழையேன் நான்பண்டு இகழ்ந்த வாறே"**

என்ற திருப்பாசுரத்தில் 'அதியரைய மங்கை' என்று அப்பதியைக் குறித்தருளினார் திருநாவுக்கரசர். எனவே, அதிகை என்பது 'அதியரைய மங்கை' என்ற நெடும் பெயரின் குறுக்கம் என்று தெரிகின்றது.

நெடிய பெயர்களைக் குறுக்கி வழங்குதற்குரிய முறையைக் காட்டியுள்ளனர் தமிழ்க் கவிஞரும் அறிஞரும். சென்னையிலுள்ள மயிலாப்பூரை மயிலை என்று குறுக்கினார் திருஞானசம்பந்தர். வெண்ணெய்நல்லூர் என்ற ஊர்ப் பெயரை வெண்ணை என்று குறுக்கினார் கம்பர். கொடும்பாளூரைக் கொடும்பை என்றார் இளங்கோவடிகள். நெல்லை நாட்டிலுள்ள கரிவலம்வந்த நல்லூர் கருவை என்று குறுக்கப்பெற்றது; அந்நாட்டி

லுள்ள மாறன்தாய நல்லூர் மாறந்தை ஆயிற்று. அருணாசலம் அருணை என்றும், விருதுநகர் விருதை என்றும் வழங்கப் பெறுகின்றன.

திருநாவுக்கரசரைப் பலவாறாகத் துன்புறுத்திய பல்லவ மன்னன் மகேந்திரவர்மன். குணபரன் என்ற சிறப்புப் பெயரும் அவனுக்கு உண்டு. உண்மை யுணராது உணர்ச்சி வசப்பட்டுப் பெரியாராகிய திருநாவுக்கரசருக்குத் தான் செய்த தீமையை எண்ணி எண்ணி உருகினான் அம் மன்னன். சமண மதத்தை விட்டுச் சைவ சமயத்தைச் சார்ந்தான்.

திருநாவுக்கரசருக்கு அருள் புரிந்த திருவதிகை நகரம் அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அந் நகரில் ஒரு திருக் கோயில் எடுத்தான்.

"பாடலிபுத் திரத்தில்அமண்
பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரஈச் சரம்எடுத்தான்"

என்று திருத்தொண்டர் புராணம் தெரிவிக்கின்றது. குணபரன் எடுத்த கோவில் ஆதலால் "குணபர ஈச்சரம்" என்னும் பெயர் அதற்கு அமைந்தது. பன்னிரு நூற்றாண்டு களுக்கு முன்னே கட்டப்பட்ட அவ் ஆலயம் இன்றும் திருவதிகைப் பதியில் நின்று காட்சி அளிக்கின்றது.

பல்லவ மன்னனால் புறக்கணிக்கப்பட்ட பாடலி புத்திரம் நாளடைவில் பீடிழந்தது; பெயரும் இழந்தது; பாதிரிப்புலியூர் என்னும் திருநகரிலே ஒடுங்கிவிட்டது. தென் ஆர்க்காட்டு நாட்டில் திருப்பாப்புலியூர் என்று இப்போது வழங்கும் திருப்பாதிரிப்புலியூர் தேவாரப் பாமாலை பெற்ற பதியாகும்.[4]

திருநாவுக்கரசர் பணி செய்த பான்மையால் திருவதிகையின் பெருமை தமிழ் நாடெங்கும் பரவிற்று.

அவர் கையாலே பணி செய்த திருநகரில் அடி வைத்து நடப்பதற்கும் அஞ்சினர் சிவனடியார்கள். அந் நகரை அடுத்துச் செல்லும் கெடில நதியின் பெருமையும் உயர்ந்தது.

ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் இம் மண்ணுலகில் வாழ்ந்தார் திருநாவுக்கரசர். அவர் காலத்தில் ஞானத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த திருஞான சம்பந்தர் சின்னஞ் சிறு குழந்தையாய்ச் சிவத் தொண்டு செய்துகொண்டிருந்தார். அப் பிள்ளைப் பெருமான் திருநாவுக்கரசரைக் கண்டு சிந்தை குளிர்ந்தார்; அவரைத் தந்தையாகவே கருதினார். 'அப்பரே' என்று அமுதம் உண்ட திருவாயால் அழைத்தார்; அன்று முதல் அப்பர் என்னும் அழகிய பெயர் திருநாவுக்கரசருக்கு உரியதாயிற்று. வாழ்நாள் முழுவதும் இன்னிசையால் தமிழ் வளர்த்த நாவரசர், தமிழ் அப்பராய் நிலமிசை நீடு வாழ்கின்றார்.

# III. சோழ நாடு

“ பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி
கோணிலை திரிந்து கோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை ”

- மணிமேகலை.

## 9. திருவாரூர்

நல்லரசும் வல்லரசும் இந் நிலவுலகில் என்றும் உண்டு. நல்லரசாட்சியில் மன்னுயிர் இன்புற்று வாழும்; வல்லரசாட்சியில் துன்புற்று வாடும்; உயிர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசாங்கத்தை அறுக்கும் படை என்று அறநூல் கூறுகின்றது.

ஆயினும் கல்மனம் படைத்த வல்லரசாங்கம் கண்ணீரை ஒரு பொருளாகக் கருதுவதில்லை. சிறையிலிருந்த சீதையின் கண்ணீரால் இராவணன் மனம் கரையவில்லை; பாஞ்சாலியின் கண்ணீரால் துரியோதனன் மனம் துளங்கவில்லை; சயந்தன் பெருக்கிய கண்ணீர் சூரன் உள்ளத்தை உருக்கவில்லை; ஆனால் ஐயறிவுடைய ஒரு பசு வடித்த கண்ணீரைக் கண்டு கலங்கினான் ஒரு தமிழ் மன்னன்; வாயில்லாத அவ்வுயிரின் குறையறிந்து முறைசெய்தான்.

இக் காட்சியைக் காணும் பேறு பெற்றது, சோழ நாட்டில் உள்ள திருவாரூர் என்னும் திருநகரம்.

முன்னாளில் சோழ நாட்டின் தலைநகராய் அமைந்த அப்பதியில் நீதிநெறி தவறாத அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். வாழையடி வாழையென வந்த அவ் வளவர் குலத்தில் தோன்றிய இளவரசன் ஒருவன் ஒருநாள் தேர் ஊர்ந்து திருவீதியில் செல்லும் பொழுது, ஓர் இளங் கன்று தாயைப் பிரிந்து, பாதையின் ஊடே துள்ளிப் பாய்ந்தது; தேர்க்காலிற் பட்டு மாய்ந்தது. கன்றை இழந்த பசு கதறிற்று; பதறிற்று; கண்ணீர் பெருக்கிற்று. அரசிளங்குமரன் திடுக்கிட்டான்; தேரினின்று இழிந்தான். கன்றின் செந்நீரையும் பசுவின் கண்ணீரையும் கண்டு மயங்கி வீழ்ந்தான்.

கன்றை இழந்து கடுந்துயர் அடைந்த பசு, மன்னவ மாளிகையை நோக்கி நடந்தது; கொற்ற வாசலில் தூங்கிய ஆராய்ச்சி மணியைக் கொம்பால் அசைத்து அடித்தது. மணியோசை கேட்ட மன்னவன் மனம் பதைத்து விரைந்து போந்தான். பசுவின் துயர் கண்டு துடித்தான். அமைச்சர் வாயிலாக, நிகழ்ந்த செயலை அறிந்தான்; இளவரசனே குற்றவாளி என்று துணிந்தான்.

தமிழ் நாட்டில் மன்னர்க்கொரு நீதி, மற்றவர்க்கொரு நீதி என்பது எந்நாளும் இல்லை. குற்றம் செய்தவன் யாவனே யாயினும் குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்றே தீரவேண்டும் என்ற முறைப்படி மகனைத் தண்டிக்கத் தலைப்பட்டான் மன்னன்.

கொலை புரிந்தவன் தன் மைந்தன் என்றும் எண்ணாது, தன் குலத்தை வாழ்விக்க அவன் ஒருவனே உள்ளான் என்றும் கருதாது, இளவரசன்மீது தானே தேரைச் செலுத்திய நீதி மன்னனைத் தமிழ் கூறும் நல்லுலகம் தலைக்கொண்டு புகழ்ந்தது.[1] திருவாரூரின் பெருமை அம் மன்னன் செய்கையால் பன்மடங்கு உயர்ந்தது.

தமிழ்ப் பெருங் காவியங்களாகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அம் மன்னன் புகழைப் பாடுகின்றன. மதுரை மாநகரில் பிழைக்க வந்த கோவலனைக் கொன்று பிழை செய்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். அக் கொடுமையை அறிந்தாள் அவன் மனைவியாகிய கண்ணகி; மனம் கொதித்தாள். புண்ணுற்ற கணவன் மேனியில் விழுந்து புல்லும் கல்லும் கரைந்து உருகப் புலம்பி அழுதாள். 'கரவறியாத என் கணவனைக் கள்வன் என்று பழி சுமத்திக் கொன்றானே மதுரை மன்னன்' என்று கதறினாள். தன் கணவன் குற்றவாளி அல்லன் என்று நிறுவும் பொருட்டுக் காவலனது மாளிகையை நோக்கி நடந்தாள். மன்னன் ஆணை பெற்று, மாளிகையின் உள்ளே சென்று அரியணையில் அமர்ந்திருந்த அரசன் முன்னே நின்றாள். அழுது அழிந்த கண்களோடும், புழுதி படிந்த மேனியோடும், அவிழ்ந்து சரிந்த கூந்தலோடும் எதிரே நின்ற அவலக் காட்சியைக் கண்ட அரசன் மனம் பதைத்து "மாதே! நீ யார்?" என்று வினவினான். அப்போது கண்ணகி தன் ஊரும் பேரும் உரைப்பாளாயினாள்.

"அரசே ! கன்றை இழந்த ஒரு பசுவின் கண்ணீரைக் கண்டு மனம் பதைத்து, அவ்வுயிர்க்குத் தவறிழைத்த தன் அருமைப் புதல்வனைத் தேராழியாற்கொன்று முறை செய்த நீதி மன்னற்குரிய பூம்புகார் நகரத்திற் பிறந்தவள் நான்" என்று பெருமிதமாகப் பேசினாள் கண்ணகி. ஆரூர்ச் சோழன் பெற்ற பெருமை அவன் மரபினர்க் கெல்லாம் உரியதாயிற்று.[2]

பூம்புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் அரசு வீற்றிருந்தான் நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழ மன்னன். அவன் மைந்தன் உதயகுமரன் என்பவன் அந் நகரில் வாழ்ந்த மணிமேகலையைக் காதலித்தான். துறவுள்ளம் படைத்த அம் மங்கை இளவரசனை ஏற்றுக்கொள்ள வில்லை. அவளை எவ்வாற்றானும் கைப்பற்றக் கருதி

நள்ளிரவில் அவளிருந்த இடத்திற்குச் சென்ற இளவரசனை அயலான் ஒருவன் வெட்டி வீழ்த்தினான்.

நிகழ்ந்த செயலை அறிந்தான் நெடுமுடிக் கிள்ளி. மைந்தன் இறந்தானே என்று சிறிதும் மனம் வருந்தினா னில்லை. "ஒரு பசுவிற்குத் தவறிழைத்த அருமைப் புதல்வனைத் தானே கொன்று முறை செய்தான் என் குல முதல்வன். அந்த நீதி மன்னன் மரபில் தீயவனாகிய என் மைந்தன் தோன்றினானே ! மங்கையர் கற்பைக் காக்கும் கடப்பாடுடைய அரசகுமாரனே அதனை அழிக்க முற்பட்டான். அவன் கொலையுண்டது சரி. ஆயினும், என் கையால் ஒறுத்தற்குரிய மைந்தனை மற்றொருவன் கொன்றானே என்றுதான் என் உள்ளம் கொதிக்கின்றது. ஆரூர் வேந்தன் பெற்ற பேறு எனக்குக் கிட்டாது ஒழிந்ததே ! இனி இதை நினைத்து ஆவதொன்றில்லை. தீய மைந்தனது உடலை என் கண்ணிற் காட்டாமல் சுடலையிற் கொண்டு சுட்டு எரியுங்கள்" என்று கட்டளையிட்டான்.[3]

இவ்வாறு தமிழ் நாட்டு மன்னரும் மக்களும் மகனை முறை செய்த திருவாரூர்ச் சோழ மன்னனைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர். அம் மன்னனை மனமாரப் போற்றினர்.[4]

தென்னாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்த நகரங்கள் தில்லையும் திருவாரூரும். தில்லையில் உள்ள கோயில் திருச்சிற்றம்பலம். திருவாரூரில் உள்ளது திரு மூலட்டானம். 'கோயில்' என்ற பெயரைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டது தில்லைச் சிற்றம்பலம். 'பூங்கோயில்' என்ற அழகிய பெயருக்கு உரியதாயிற்று திரு மூலட்டானம்.

அந் நாளில் திருவாரூரில் நிகழ்ந்த திருவிழாக் காட்சிகளைத் தேவாரப் பாசுரங்களில் இனிய சொல்லோவியமாக எழுதிக் காட்டியுள்ளார்

திருநாவுக்கரசர். செக்கச் சிவந்த மேனியனாகிய ஆரூர்ப் பெருமான் அந்நகரில் ஆழித் தேரூர்ந்து செல்லும் அழகினைக் கண்குளிரக் கண்ட அவ் அடியார்,

> **" ஊழித்தீ அன்னானை**
> **ஓங்கொலிமாப் பூண்டதோர்**
> **ஆழித்தேர் வித்தகனை**
> **நான்கண்டது ஆரூரே "**

என்று அகம் குளிர்ந்து பாடினார்.

ஆரூர்ப் பெருமானிடம் அயராத அன்பு பூண்ட அடியார்களுள் ஒருவர் சுந்தரமூர்த்தி. திருநாவலூரிலே பிறந்த சுந்தரர்க்கு ' நம்பி ஆரூரன் ' என்று பெயர் இட்டனர் அவர் பெற்றோர். அவரைத் திருமணப் பந்தரில் தடுத்து ஆட்கொண்டான் ஈசன். அன்று முதல் ' பாடும் பணியே பணியாக் ' கொண்ட நம்பி ஆரூரர், திருவாரூர்ப் பெருமானை நினைந்து உருகினார்; அவரை வணங்க ஆசை யுற்றுப் புறப்பட்டார்.

வன்தொண்டர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற நம்பி ஆரூரர் திரு ஆரூரை நோக்கி வருவதை அறிந்த நகர மாந்தர் அளவிறந்த ஆர்வம் உற்றனர். அவர் வருநாள் ஒரு திருநாள் எனக் கருதி வீதிகளில் பன்னீர் தெளித்தனர்; வீடுகளில் மலர் மாலை தூக்கினர்; மேளதாளங்களோடு நகர முகப்பில் அவரை வரவேற்றனர்.

ஆரூரர் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கி எழுந்தது. " எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ, கேளீர் " என்ற சந்தத் தமிழ்ப் பாட்டிசைத்துத் திருவீதியில் நடந்தார். அடியார் புடைசூழ ஆலயத்தின் உள்ளே சென்று, உச்சிமேற் கை குவித்து 'அடியேனை ஆட்கொண்ட ஐயனே ! ஆரூரில் அமர்ந்த அருமணியே ! உன் திருவடியே தஞ்சம் ' என்று முறையிட்டுச் செஞ்சொற் பாமாலை பாடினார்.

இவ்வாறு சுந்தரர் நாள்தோறும் பூங்கோயிற் பெருமானை வழிபட்டு வருகையில் ஒருநாள், நலமெல்லாம் ஒருங்கே வாய்ந்த ஒரு நங்கையை அங்கு எதிர்ப்பட்டார்; அவள் பேரழகைக் கண்ணாற் பருகிக் களிப்புற்றார். மாசற்ற இருவர் மனமும் கலந்தது; காதல் பிறந்தது; கடிமணம் நிகழ்ந்தது.

திருவாரூரில் மனையறம் புரிந்தார் நம்பி ஆரூரர். அப்போது சிறந்த மாதவர் கூட்டம் ஒன்று அந் நகரில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தது. அத் தொண்டர்கள் முழு நீறு பூசிய மேனியர்; மாசற இமைக்கும் உருவினர்; செற்றம் நீக்கிய மனத்தினர்.

“ கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் ”

என்று திருத்தொண்டர் புராணத்தில் புகழப் பெற்றவர் இவரே.

திருத்தொண்டர் கூட்டத்தைக் கண்ட நம்பி ஆரூரரின் உள்ளத்தில் ஆர்வம் பெருகி வளர்ந்தது; ‘ இவ்வடியார்க்கு நான் அடியனாகும் நாள் எந்நாளோ ’ என்று எண்ணி ஏங்கினார். ‘ திருத்தொண்டத் தொகை ’ என்னும் பெயரால் ஒரு திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்திலே குறிக்கப்படும் தொண்டர்கள் ஒரு நாட்டினர் அல்லர்; ஒரு குலத்தினர் அல்லர். பூவேந்தர் சிலர்; பாவேந்தர் சிலர்; வேளாளர் சிலர்; வணிகர் சிலர்; மறையவர் சிலர்; மாதர் சிலர்; மற்றுமுள்ளார் சிலர். இவர்க்கெல்லாம் தனித்தனியாக வணக்கம் செலுத்திய பின்னர் தொகையடியாராகிய தொண்டர்களைப் போற்றினார் நம்பி ஆரூரர். இங்ஙனம் விதந்து பாடிய அடியார்கள் காலத்திற்குப் பின்னும் வாழ்ந்த திருத்தொண்டர் அனைவரையும் தொகுத்து

"அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று எழுந்த அழகிய மொழிகள் நம்பி ஆரூரது பரந்த மனப்பான்மைக்குச் சிறந்த சான்றாகும்.[5]

ஆரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் அடியாக எழுந்த பெருநூல் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம். பக்திச் சுவையோடு பாட்டின் சுவையும் 'சொட்டச் சொட்ட'த் திருத்தொண்டர் பெருமையையே விரித்துரைத்தார் சோழ நாட்டு முதலமைச்சராகிய சேக்கிழார் பெருமான். அவர் இயற்றிய நூலின் அருமையறிந்த அரசன் "தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட்டம் அளித்து அவரைப் பாராட்டினான்.

மலைநாட்டை ஆண்ட மன்னனாகிய சேரமான் பெருமாளும் நம்பி ஆரூரரும் உணர்ச்சியால் ஒன்றுபட்டு உயரிய நண்பராயினர். நம்பியைக் காணும் ஆர்வத்தால் திருவாரூரை வந்தடைந்தார் சேரமான். புவிவேந்தரும் கவிவேந்தரும் பூங்கோயிலிற் போந்து வழிபட்டனர். தமிழ்ப் புலமை வாய்ந்த சேர மன்னன் 'மும்மணிக் கோவை' என்னும் பாமாலை அணிந்து திருவாரூர்ப் பெருமானை வழிபட்டார்.

அம்மன்னன் விருப்பத்திற்கு இணங்கி அவனுடன் சேர நாட்டிற்குச் சென்றார் ஆரூரர்; சில நாள் சேரமானோடு அளவளாவி இருந்தார். ஆயினும் அவர் மனம் திருவாரூர்ப் பெருமானையே நாடிற்று. 'என்னை ஆளுடைய பூங்கோயிற் பெருமான் பொன்னும் பொருளும் தருவான்; போகமும் ஞானமும் அளிப்பான்; பேதையேன் செய்யும் பிழையெலாம் பொறுப்பான். பின்னும் பிழை செய்யாமல் காப்பான். ஏழையேனை இவ்வாறு காத்தருளும் ஆரூரானை மறக்கவும் ஒண்ணுமோ'[6] என்று மனங் கசிந்து பாடினார்.

திருவாரூர் ஈசன் இம்மை இன்பமும் தருவார், மறுமை இன்பமும் தருவார். தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரு முதல்வர் அவர். ஆதலால்; தியாகராசன் என்றும் தியாகேசன் என்றும் பெயர் பெற்றார். அவர் செய்த அரும் பெரும் தியாகத்தின் மாட்சியை விளக்கிப் போந்தார் குமர குருபர அடிகள். மாநிலம் முழுதும் உழுது உண்ண வல்லான் ஒருவனுக்கு அளித்தார்; நவநிதியையும் எடுத்து ஒருவன் கையில் கொடுத்தார்; அடியார்க்கு வீட்டை வழங்கினார்; பொன்னார் மேனியில் ஒரு பாகத்தைப் பெண்ணுக்கு ஈந்தார். இவ்வாறு நிலத்தையும் நிதியையும் வீட்டையும் பிறர்க்கு அளித்ததோடு தம் உடம்பிலும் ஒரு பங்கைப் பகிர்ந்து கொடுத்த தலைவரைத் தியாகர் என்று கூறுதல் புனைந்துரை யன்று, புகழுரையும் அன்று, பொருளுரையே என்று கூறுகின்றார் அடிகள்.

"வையம் முழுதும் உழுதுண்ண
வல்லாற்கு அளித்து, நவநிதியும்
கையில் ஒருவற்கு அளித்து, எமக்கே
கதிவீ டளித்து, ஓர் கன்னிகைக்கு
மெய்யில் ஒருகூறு அளித்தனரால்
விமலர் கமலைத் தியாகர்என்பது
ஐயர் இவர்க்கே தகும், முகமன்
அன்று, புகழும் அன்றாமே"

என்பது அவர் பாடிய அழகான பாட்டு. மண்ணுலகை யெல்லாம் ஏனமாகி உழுதுண்ண வல்ல திருமாலுக்கு நிலமகளைத் தியாகேசர் கொடுத்தார் என்றால் 'உழுதுண்ண வல்லார்க்கே உரியது நிலம்' என்னும் கொள்கை முழுமுதற் பொருளின் ஆதரவு பெற்றதுபோல் தோன்றுகிறதன்றோ?

பன்னலம் திகழும் பரம்பொருளை இன்னிசை வடிவாகக் கண்ட பெருமை உடையது பண்டைத் தமிழ்நாடு. 'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி !

பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி !' என்று ஈசனைப் பாடினார் திருநாவுக்கரசர். இசை வடிவாகிய ஈசன் பண்ணோடு இசைபாடும் அடியார்க்கு மண்ணுலகும் விண்ணுலகும் மகிழ்ந்தளிப்பான் என்று அருளிப் போந்தார் திருஞான சம்பந்தர்.

நல்லியற் கவிஞராகிய ஞானசம்பந்தர், திருக்கோலக் காவில் இறைவனை வழிபடப் போந்தார்; தளிர் போன்ற இளங் கைகளால் தாளமிட்டுத் தமிழ்ப் பாட்டிசைத்தார். அப்போது பெருமான் அருள் கூர்ந்து பொற்றாளம் பரிசளித்தான். 'நற்றமிழ் பாடிய ஞான சம்பந்தன் பொற்றாளம் பெற்றான்' என்று மாநிலம் புகழ்ந்து மகிழ்ந்தது.'

திருவாரூரில் அமர்ந்த இறைவனை இன்னிசை வண்ணனாகக் கண்டு வணங்கினார் நம்பி ஆரூரர்; சில காலம் அப்பெருமானைப் பிரிந்திருக்க நேர்ந்தபோது உள்ளம் உருகினார். திருவாரூரைத் திசை நோக்கித் தொழுது 'என்னை ஆளுடைய ஐயனே ! எழில் ஆர்ந்த ஏழிசையாய் நின்றாய் நீயே ! இன்னிசையின் பயனாய் இருந்தாய் நீயே ! அமுதின் சுவையாய் அமைந்தாய் நீயே ! என்னையும் தோழனாய் ஏற்றாய் நீயே ! பேதையேன் பிழையெலாம் பொறுத்தாய் நீயே ! இல்லறத்தில் என்னை உய்த்தாய் நீயே ! நின்னைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வேன் ?' என்று முறையிட்டார்.

**" ஏழ்இசையாய் இசைப்பயனாய்**
**இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யும்**
**துரிசுகளுக்கு உடனாகிய**
**மாழைஒண்கண் பரவையைத்தந்து**
**ஆண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன்**
**என்ஆரூர் இறைவனையே "**

என்று இனிய பாட்டிசைத்துப் போற்றினார்.

திருவாரூர் ஆலயத்தில் நாள்தோறும் நல்லிசை முழங்கும்; திங்கள் தோறும் திருவிழாவின் ஒளி விளங்கும்; ஆண்டு தோறும் அணிவிழா நிகழும். இத்தகைய திருநகரில் அரசு வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார் தியாகராசர். அக்காட்சியைக் கண்குளிரக் கண்ட மாணிக்கவாசகர் "ஆரூர் அமர்ந்த அரசே" என்று அழைத்தார். இன்னிசைக் கருவிகளாகிய குழலும் வீணையும், கொட்டும் தாளமும், கொக்கரையும் சச்சரியும் தியாகராசரின் திருக்கரங் களிலிருக்கக் கண்டார் திருநாவுக்கரசர்.

அந்நாளில் ஆரூரில் நடந்த ஆதிரைத் திருநாளின் சிறப்பு ஒரு தேவாரப் பதிகத்தில் விரிவாகக் கூறப்படு கின்றது. வெண்கொடி பறக்கும் வீதியில் முத்து விதானமும் செம்பொற்கவரியும் சூழ்ந்து வர, பத்தர் குழாம் பாட்டிசைக்க, பல்லியம் கறங்கப் பவனி வருகின்றார் தியாகராசர். முதுமையை வென்ற முனிவர்கள் முன்னே செல்கின்றார்கள். மெல்லியல் வாய்ந்த நல்லடியார் பின்னே போகின்றார்கள். திருநீறணிந்த தொண்டர்கள் ஆனந்தக் களிப்பால் ஆடிப்பாடுகின்றார்கள். இத்தகைய தெய்வக் காட்சியைத் தமிழ்ப் பாட்டிலே காட்டுகின்றார் திருநாவுக்கரசர்.

திருவிழாக் காலங்களில் ஆரூர்ப் பெருமான் அளிக்கும் காட்சியையும், அடியார்கள் அதைக் கண்டு மகிழும் மாட்சியையும் எடுத்துரைக்கின்றது ஓர் இனிய பாட்டு.

> **" குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி**
> **எங்கும் குழாம்பெருகி**
> **விழவொலி விண்ணளவும் சென்று விம்மி**
> **மிகுதிரு ஆரூர் "**

என்று சேந்தனார் பாடினார்.

இவ்வாறு அடியார்கள் அல்லும் பகலும் பாடிய நல்லிசைப் பாடல்கள் திருவாரூர்க் கிளிகளின் மனத்திலும்

பதிந்துவிட்டன. பழுமரச் சோலைகளில் அமர்ந்து திருப்பாசுரங்களைக் கிளிகள் அழகாகப் பாடுவதும் அங்குள்ள பூவைகள் அவற்றை இன்புற்றுக் கேட்பதும் வழக்கமாய்விட்டது.

இங்ஙனம் தமிழ்ப் பாட்டைப் பாடியும் கேட்டும் இன்புற்ற கிளியையும் பூவையும் நயந்து நோக்கினாள் ஒரு நங்கை. தமிழ் மாலை அணிந்த தலைவரிடம் அப்பறவை களைத் தூதனுப்பி அவர் அருளைப் பெற ஆசைப் பட்டாள். 'திரு ஆரூர்ப் பெருமான் உள்ளம் கவர்ந்த கிள்ளைகாள் ! பாட்டின் சுவையறிந்த பூவைகாள் ! அறமே கண்ணாக உடைய அப் பெருமானிடம் போந்து எனக்காக ஒன்று சொல்ல வல்லீரோ? அவரை மறக்கும் வகையறியாமல் மயங்குகின்றது என் மனம்; உறக்கமின்றி உழல்கின்றது என் கண்; மெலிந்து வாடுகின்றது என் மேனி. இந்த நிலையை ஈசனாரிடம் எடுத்துரைத்து என் வாட்டம் திருத்த வல்லீரோ?

**"பறக்கும்எம் கிள்ளைகாள்**
**பாடும்எம் பூவைகாள்**
**அறக்கண்என் னத்தகும்**
**அடிகளா ரூரரை**
**மறக்ககில் லாமையும்**
**வளைகள்நில் லாமையும்**
**உறக்கமில் லாமையும்**
**உணர்த்தவல் லீர்களே"**

என்று தன் குறையை முறையிட்டாள்.

திருவாரூரிலே பிறந்தும் வாழ்ந்தும் பேரின்ப நிலை யடைந்த பெரியார் பலர். நந்தி அடிகளும் தண்டி அடிகளும், கழற்சிங்கரும் கலிக்காமரும், அந்நகரில் செயற்கரிய பணி செய்து சிவனடி சேர்ந்தனர். அருமையான அறப் பணி ஆற்றிவரும் தருமபுர ஆதீனத்தை நிறுவிய

குருஞான சம்பந்தருக்கு ஒளி நெறி யருளிய கமலை ஞானப் பிரகாசர் பிறந்த ஊர் திருவாரூரே ! இத்தகைய பெரியோர்கள் வருகையை எதிர்நோக்கியே 'அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்று நம்பி ஆரூரர் பாடினார் போலும் !

அறவோரும் துறவோரும் அரும்பேறு பெற்ற ஆரூரில் இசை ஞானச் செல்வர் மூவர் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே தோன்றினர்; இன்னிசை வடிவாக நின்ற ஈசனை வழிபட்டு இன்பவாரியில் மூழ்கினர்; இறைவன் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்றெண்ணி எண்ணிறந்த இசைப்பாடல்கள் இயற்றினர்; தென்னிசையாகிய இன்னிசைக்குப் புத்துயிர் அளித்தனர்.

இன்று 'இன்னிசை மும்மணிகள்' என்று போற்றப் படும் மூவருள் முதல்வர் தியாகராசர். திருவாரூர்ப் பெருமான் பெயரே இவர் பெயராக அமைந்தது. தெலுங்கில் இவர் பாடியுள்ள கீர்த்தனங்களில் பக்தித்தேன் சொட்டுகின்றது என்று பண்ணின் திறம் அறிந்தோர் கூறுவர்.

மும்மணிகளில் மற்றொருவராகிய முத்துசுவாமி தீக்ஷிதர் தியாகராசப் பெருமானையும் அவர் தொண்ட ராகிய நம்பி ஆரூரரையும் போற்றினார்; தேவாரப் பண்ணையும் பாட்டையும் கண்ணெனக் கருதினார். இவர் இயற்றியுள்ள "தியாகராஜ யோகவைபவம்" என்னும் இசைப் பாட்டு, தேவாரப் பண்முறையைத் தழுவியதென்று தக்கோர் கூறுவர்.

இசைமணிகள் வரிசையில் வைத்துப் போற்றப்படும் இன்னொருவர் சியாமா சாஸ்திரி ஆவர். இவர் தமிழ்க் கீர்த்தனங்களும் இயற்றியுள்ளார்.[3] இன்னிசை நன்மணி களாகிய இம்மூவரும் ஒரே காலத்தில் பிறந்தருளிய பெருமையைத் தமிழகம் மறந்துவிடலாகாது.

# 10. புகார் நகரம்

தமிழ் நாட்டிலே கடற்கரை நகரங்கள் பல உண்டு. அவற்றுள்ளே சாலச் சிறந்தது சென்னை மாநகரம். ஆயினும் சென்னை உருப்பெறுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சோழ மண்டலக் கரையில் ஒரு பட்டினம் சிறந்து விளங்கிற்று. காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் காட்சிக்கு இனியதாய் வீற்றிருந்த அப்பட்டினம் காவிரிப்பூம்பட்டினம் என்று பெயர் பெற்றது. இந்நாளில் பட்டணம் என்பது சென்ன பட்டணத்தைக் குறித்தல் போன்று முன்னாளில் பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினமே. பொன்னி என்னும் காவிரியாற்றின் நன்னீர் பாய்ந்து புனிதமாக்கிய முந்நீர்த் துறையில் அமைந்த பட்டினத்தைப் பூம்புகார் நகரம் என்று புலவர்கள் போற்றுவார் ஆயினர்.[1]

சோழ நாட்டை ஆண்ட கரிகாற் சோழன் என்னும் திருமாவளவன் புகார் நகரத்தைத் திருத்தினான்; தலைநகர் ஆக்கினான். 'குண கடலின் கோமகள்' என்று எந் நாட்டவரும் புகழத்தக்க ஏற்றமும் தோற்றமும் அளித்தான். அதனால் வாணிகம் சிறந்தது; செல்வம் செழித்தது; மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

இவ்வாறு நாட்டுக்குப் பெருநலம் புரிந்த திருமா வளவனைப் புலவர்கள் பாமாலை அணிந்து போற்றினர்; பொது மக்கள் மனமார வாழ்த்தினர். அம் மன்னன் பெற்ற பாமாலைகளுள் ஒன்று 'பட்டினப்பாலை.' பட்டினம்

என்ற பெயரைத் தனக்கே உரியதாக்கிக்கொண்ட காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பும், அங்கு அரசு வீற்றிருந்த வளவன் பெருமையும் அப்பாட்டில் அழகாக விளக்கிக் காட்டப்படுகின்றன. சோழவள நாட்டில் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் செழும் புனல் பொன் கொழிக்கும்" என்று பாடுகின்றது பட்டினப்பாலை.

பசிப்பிணியின் பகைவனாகிய திருமாவளவன் வெற்றிடங்களையெல்லாம் விளைநிலம் ஆக்கினான்; காடுகளை வெட்டித் திருத்திக் கழனியாக்கினான்; காவிரி நீரைக் கால்களின் வழியாக எடுத்துக் குளங்களில் நிரப்பி வளம் பெருக்கினான். கடல் வழியாகவும், தரை வழியாகவும் பல நாட்டுப் பொருள்களும் புகார் நகரத்தில் வந்து நிறைந்தன. கப்பல்கள் இடையறாது போக்குவரவு புரிந்து கொண்டிருந்த துறைமுகத்தில் உயரிய விளக்கொன்று நின்று ஒளி வீசியது. தரையிலே தவழ்ந்து வரும் குழந்தையை முகமலர்ந்து கை நீட்டி அழைக்கும் தாய் போல், கடலில் மிதந்து வந்த கப்பல்களைக் கதிர்க்கரம் விரித்து வரவேற்றுத் துறைமுகத்திற்கு அழைத்த அவ் ஒளிநிலையம் (Light House) 'கலங்கரை விளக்கு' என்று பெயர் பெற்றது.

இரு பாக்கங்களை உடையதாய் விளங்கிய பட்டினத்தின் நடுவே பெரியதோர் அங்காடி (Market) அமைந்திருந்தது. பகலும் இரவும் பண்டமாற்று நிகழ்ந்த பட்டினத்தில் நாளங்காடியோடு அல்லங்காடியும் நடைபெற்றது. அங்காடி என்னும் அழகிய தமிழ்ச் சொல் இப்பொழுது பழகு தமிழில் பெரும்பாலும் வழங்கு வதில்லை. எனினும் தமிழினத்தைச் சேர்ந்த கன்னடத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் அச்சொல் இன்றும் வழங்கி வருகின்றது. காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்து, அத் தொன்னகரின் பெருமையெல்லாம் தன்

பெருமையாக்கிக்கொண்ட பட்டினத்தடிகள் நெஞ்சுருகிப் பாடுகின்ற ஒரு பாட்டிலே இச் செஞ்சொல் பயின்றுள்ளது.

"செங்காட்டில் ஆடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே"

என்பது அவர் திருவாக்கு. ஆங்கிலச் சொல்லாகிய 'மார்க்கட்' வந்து புகுந்து அங்காடியை வழக்காற்றினின்றும் அகற்றிவிட்டது. சென்னையிலுள்ள அந்திக் கடைத் தெருவை அல்லங்காடி என்றும், மூர் மார்க்கட்டை மூரங்காடி என்றும் அழைத்து நாம் இன்புறும் நாள், எந்நாளோ?

இறவாத புகழ் உடைய ஆன்றோர் பலரை ஈன்ற பெருமையும் புகார் நகரத்திற்கு உண்டு. கற்பின் செல்வி யாகிய கண்ணகியை ஈன்றளித்த திரு நகரம் புகார் நகரமே! அம்மங்கையை மணந்து, சில காலம் மனையறம் புரிந்து, பின்பு மாதவியின் மையலிலே தாழ்ந்த கோவலனைக் கானல் வரிப்பாட்டால் பிரித்து, சிலப்பதிகாரக் காவியத்திற்கு அடிப்படை கோலிய நகரமும் அதுவே. புனித மாதவன் என்று புகழப் பெற்ற புத்த சங்கத் துறவியாகிய அறவணவடிகள் வாழ்ந்த நகரமும் அதுவே. "இல்லையே என்னாத இயற்பகையார்" என்று தேவாரத்திலே போற்றப்பட்ட திருத்தொண்டரைத் தந்த நகரமும் அதுவே.

திருமாவளவன் அரசு புரிந்த காலத்தில் கலைமகளும் திருமகளும் புகார் நகரத்தில் களிநடம் புரிவாராயினர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் மன்னன் ஆதரவு பெற்று முறையாக வளர்ந்தன. வரிசையறிந்து பரிசளித்த வளவனை நாடி வந்தனர் நல்லியற் கவிஞர். பட்டினப்பாலை பாடிய கடியலூர்க் கவிஞருக்குத் திருமாவளவன் பதினாறு லட்சம் பொன் பரிசளித்தான் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. இன்னிசைக்

கருவிகளாகிய குழலினும் யாழினும் தமிழ்ப் பாட்டிசைக்க வல்ல பெரும் பாணர்கள் புகார் நகரத்தில் செழிப்புற்று வாழ்ந்தனர்.

**“குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்**
**வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்**
**அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்”**

என்று அன்னாரது இசைப் புலமையைப் பாராட்டுகின்றது சிலப்பதிகாரம்.

அரசன் சபையில் ஆடல் பாடல்களை அரங்கேற்றும் வழக்கம் அந்நாளில் இருந்தது. மாதவி என்னும் அழகிய மங்கை ஐந்தாண்டில் ஆடலும் பாடலும் பயிலத் தொடங்கிப் பன்னீராண்டில் அக்கலைகளை அரசன் சபையில் அரங்கேற்றிப் பரிசு பெற்ற செய்தி சிலப்பதிகாரத்தில் விரித்துரைக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் என்றும் இறைவனை வழிபடும் இயல்புடையவர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் இல்லை. பல நாட்டு மக்களும் கலந்து வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் சைவமும் வைணவமும், சமணமும் சாக்கியமும் இணக்கமுற்று வாழ்ந்தன.[2] திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. நாட்டிலே பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளமும் நிலைபெறும் பொருட்டு மருத நிலத் தெய்வத்திற்கு ஆண்டுதோறும் திருவிழாக் கொண்டாடினர் புகார் நகரத்தார். இருபத்தெட்டு நாள் தொடர்ந்து நடந்த அத் திருவிழாவில் சிறந்த ஆடலும் பாடலும் நிகழ்ந்தன; தெய்வ மணம் கமழ்ந்தது.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புற்றிருந்த பூம்புகார் நகரம் இப்பொழுது சீரிழந்த சிற்றூராகக் கடற்கரையில் துஞ்சுகின்றது. கருங்கடல் பொங்கி எழுந்து அந் நகரின்

பெரும் பகுதியை விழுங்கிவிட்டதாகத் தெரிகின்றது. தலை நகரத்தைக் கொடுங்கடல் கொள்ளை கொண்டபோது திருமாவளவன் வழிவந்த சோழன் " குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி " எளியனாய்த் தமியனாய் வெளியேறினான்;

**" விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க**
**ஒருதனி போயினான் உலக மன்னவன் "**

என்று மணிமேகலை கூறும் செய்தி மனத்தை உருக்குவதாகும்.

# 11. உறையூர்

'உயர்வும் தாழ்வும் ஒரு வழி நில்லா' என்பது ஓர் உண்மையான பழமொழி. உயர்ந்தவர் தாழ்வர்; தாழ்ந்தவர் உயர்வர். இஃது உலகத்து இயற்கை. அவ்வாறே பேரூர் சிற்றூர் ஆகும்; சிற்றூர் பேரூர் ஆகும். கொங்கு நாட்டில் உள்ள பேரூர் சிற்றூர் ஆயிற்று. தமிழ் நாட்டில் சிறிய ஊராய் இருந்த சிற்றூர் பெரிய ஊராகி ஒரு மாவட்டத்தின் தலைமைப் பதியாக இன்று விளங்குகின்றது.

காவிரியாற்றின் கரையிலே முன்னாளில் பெரிய ஊர்கள் பல இருந்தன. அவற்றுள்ளே தலைமை சான்றது உறையூர் என்னும் திருநகரம். அதுவே சோழ நாட்டின் பழைய தலைநகரம். "ஊர் எனப்படுவது உறையூர்" என்று அதன் சீர்மையைப் பாராட்டினர் செந்தமிழ்ப் புலவர். வடமலை என்னும் பெருமலையில் வேங்கைக் கொடியை நாட்டிய திருமாவளவன் வழிவந்த சோழ மன்னர்கள் உறையூரில் அரசு வீற்றிருந்தனர்.[1]

தமிழ்ச் சோழர் வாழ்ந்த அத்தலைநகரில் கலைமகளும் திருமகளும் கலந்துறைவாராயினர். "கார் ஏறும் கோபுரமும் கதிர் ஏறும் சோலைகளும், தேர் ஏறும் வீதிகளும்" அத் திருநகரின் கண்கொள்ளாக் காட்சிகள் என்று பொய்யறியாப் புலவர் ஒருவர் பாடினார்.

செழுமை வாய்ந்த உறையூரிலே பிறந்த கோழிகளும் சிறந்த வீரம் வாய்ந்து விளங்கின. அக்கோழிகள் பாய்ந்தும் பறந்தும், படிந்தும் புடைத்தும் நெடும்போர் புரியக் கண்டு மகிழ்ந்தனர் பண்டை அரசர்கள். பகைவர்மீது படை

யெடுத்துச் செல்லாத காலங்களில் அன்னார் கோழிப் போர் கண்டு மகிழ்ந்தனர்.

> "வருசெருஒன்று இன்மையினால் மற்போரும்
> சொற்புலவர் வாதப்போரும்
> இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா
> ரணப்போரும் இனையகண்டே"

சோழ மன்னன் ஒருவன் இன்புற்றான் என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது. போர் நிகழாத காலங்களில் சோழ மன்னன் தலைநகரில் மல்லர்கள் மற்போர் புரிவர்; புலவர்கள் சொற்போர் புரிவர்; கோழியும் கோழியும் கொடும் போர் புரியும்; வேழமும் வேழமும் வெம்போர் விளைக்கும்.

இத்தகைய காட்சிகளில் ஈடுபட்டிருந்த சோழ மன்னன் கண்ணெதிரே ஒரு கோழிக்கும் யானைக்கும் போர் மூண்டது. 'ஒழிந்தது கோழி' என்று எண்ணி ஊரார் எல்லோரும் விழித்த கண் இமையாமல் பார்த்து நின்றனர். சிறிது நேரத்தில் வேழம் தோற்றது; கோழி வென்றது. வீரக் கோழியை வேந்தனும் வியந்து புகழ்ந்தான். 'கோழியூர் என்ற பெயர் உறையூருக்கு அமைவதாக' என்று ஆணை பிறப்பித்தான். சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ் நூல் களில் கோழியூர் என்ற பெயர் உறையூருக்கு வழங்குகின்றது. சேர நாட்டில் உள்ள கோழிக்கோடும் (Calicut) சோழ நாட்டில் உள்ள கோழியூரும் முன்னாளில் மன்னர் வாழ்ந்த மணிநகரங்களாகும்.

கற்பரசியாகிய கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரில் கோவில் அமைத்த பின்னர், பிற நாட்டுப் பெரு மன்னரும் தத்தம் நாட்டில் பத்தினிக் கோயில் கட்டத் தலைப்பட்டார்கள். அப்போது உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த பெருங்கிள்ளி என்னும் சோழ மன்னன் "கோழியகத்துப் பத்தினிக் கோட்டம் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தான்" என்று சிலப்பதிகாரம்

உணர்த்துகின்றது. எனவே, சோழ நாட்டிலே பிறந்து, பாண்டி நாட்டிலே கற்பின் திறம் காட்டி, சேர நாட்டிலே தெய்விகம் உற்ற கண்ணகி காவிரியாற்றின் கரையில் உள்ள கோழியூரிலும் கோவில் கொண்டு அருள் புரிவாளா யினாள்.

கோழியூரில் அரசாண்ட கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிர் என்ற சிற்றூரில் வாழ்ந்த ஆந்தை என்னும் புலவருக்கும் இடையே தோன்றி வளர்ந்த நட்பின் திறத்தினைச் சங்க இலக்கியம் பாராட்டுகின்றது. சோழ வள நாட்டின் தலைநகரில் ஏற்றமும் தோற்றமும் வாய்ந்து விளங்கிய வேந்தனும், பாண்டி நாட்டுப் பட்டியொன்றில் ஏழையாய் உயிர் வாழ்ந்த புலவரும் தலைசிறந்த தோழராய் இருந்தனர். ஒருநாள் அந்தி வானத்தில் அழகுறப் பறந்து சென்ற அன்னப் பறவைகளைக் கண்டார் ஆந்தையார். வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவ் அன்னங் களில் ஒன்றைத் தம் தோழராகிய சோழ மன்னனிடம் தூதனுப்பத் துணிந்தார். 'அன்னமே ! நீ செல்லும் வழியில் சோழ நாட்டுக் கோழியூரிலே வான் அளாவிய மாளிகையைக் காண்பாய் ! அங்கே வாழ்கின்ற மன்னன் முன்னே சென்று ' நான் ஆந்தையின் தொண்டன் ' என்று சொல் ! உடனே முகமலர்ந்து உனக்குப் பரிசளித்து அனுப்புவான் அப் பார்வேந்தன் ' என்று பேசினார் ஆந்தையார்.

இத்தகைய மேன்மையுற்றிருந்த உறையூரிலே முத்தமிழும் உயர்ந்து ஓங்கி வளர்ந்தது. தமிழ் இசையைப் பண்ணோடு பாடவல்ல பாணர் குலம் மன்னராலும் மக்களாலும் ஆதரிக்கப் பெற்றது. பாணர் குலம் மிகப் பழமை வாய்ந்த தமிழ்க் குலமேயாயினும், தாழ்ந்த வகுப்பாகக் கருதப்பட்டது. உயர்ந்த குலத்தவரால் ஒதுக்கப்பட்ட பாணர்கள் உறையூரில் ஒடுங்கி அடங்கி உயிர் வாழ்ந்தார்கள். ஆலயங்களில் சென்று வழிபடும் உரிமை அன்னார்க்கு இல்லை.

அக் குலத்தார்க்கு அழியாப் பெருமை அளிக்கத் தோன்றினார் ஒரு பாணர். இளமையிலேயே அவர் இசைக்கலையை ஆசையோடு கற்றுணர்ந்தார். யாழ் இசையில் கைதேர்ந்த அப்பாணருக்கு ஏழிசையும் இணங்கிப் பணி செய்தன. காவிரியாற்றின் நடுவே பள்ளி கொண்டருளும் திரு அரங்க நாதனைக் கண் குளிரக் கண்டு பண்ணோடு பாட்டிசைக்க ஆசைப்பட்டார் அப்பாணர். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த பாணனுக்கு அவ் உரிமை கிடையாது என்று அறிந்து நெஞ்சம் உருகினார். காவிரியாற்றின் தென்கரையிலே திருக்கோயிலுக்கு எதிரே நின்று, கல்லும் புல்லும் கரைந்து உருக நாள்தோறும் மெய் மறந்து தமிழ்ப் பாட்டிசைத்தார். அவர் பெருமையை அறியாதார் சிலர் கடுமொழி பேசினர்; கல்லெடுத்து வீசினர். இவ்வாறு ஒறுத்தாரை எல்லாம் பொறுத்தார் திருப்பாணர். அரங்கநாதன் அருளால் சாதிச் செருக்கு அறுந்தது; பாணர் பெருமை சிறந்தது. பண்டைப் பழக்கம் வீழ்ந்தது; பண்பாடு வென்றது.

பெரிய கோயிலின் உள்ளே சென்று திருவரங்கநாதன் பள்ளி கொண்ட கோலத்தைப் பார்த்தார் திருப்பாணர்; பரவசமுற்றார்; ஆனந்தக் களிப்பினால் ஆடினார், பாடினார்.

**"அண்டர்கோன் அணி<br>அரங்கன்என் அமுதினைக்<br>கண்டகண்கள் மற்று<br>ஒன்றினைக் காணாவே "**

என்று அவர் இசைத்த தமிழ்ப் பாட்டைக் கேளாத செவி என்ன செவியே !

உறையூரிலே தோன்றி, இறவாத இன்பத் தமிழால் இறைவனைப் போற்றி, பிறவாத பேறு பெற்ற பாணர் பெருமானைப் பாண் பெருமாள் என்றும், திருப்பாண் ஆழ்வார் என்றும் தமிழகம் வழிபடுகின்றது.

# 12. திருச்சிராப்பள்ளி

**சோ**ழ நாட்டின் தலைநகராக விளங்கிய உறையூரின் அருகே உள்ளது ஒரு குன்று. " சிராப்பள்ளிக் குன்று " என்று அது தேவாரத்திலே குறிக்கப்படுகின்றது.

தென்னாட்டில் சமண சமயத்தைப் பரப்பக் கருதிய முனிவர்கள், தலைநகரங்களின் மருங்கே உள்ள மலைக் குகைகளைத் தம் இருப்பிடமாகக் கொண்டனர் என்பது ஒரு வரலாற்று உண்மை. பாண்டி நாட்டுத் தலைநகராகிய மதுரையின் அருகே அமைந்த எட்டுமலைகளில் அம்முனிவர்கள் வாழ்ந்தார்கள். பல்லவ மன்னரது தலை நகரமாகிய காஞ்சிபுரத்தின் அருகேயுள்ள திருப்பருத்திக் குன்றம் சமண முனிவர்களின் உறைவிடம் ஆயிற்று. அவ் வண்ணமே சோழ மன்னர் அரசு வீற்றிருந்த உறையூரின் மருங்கே நின்ற குன்றையும் அன்னார் உறைவிடமாகக் கொண்டனர்.

உறையூருக்குக் கிழக்கே ' நெடும் பெருங்குன்றம் ' ஒன்று உண்டு என்று அகநானூற்றுப் பாடல் அறிவிக்கின்றது.

**" கறங்கிசை விழவின்**
**உறந்தைக் குணாது**
**நெடும்பெருங் குன்றம்"**

என்று பாடியுள்ளார் ஒரு பழம் புலவர்,

அக்குன்றத்தின் உச்சியிலே சமண முனிவர் சிலர் தவச்சாலை நிறுவினர். அன்னவருள் ஒருவர் ' சிரா ' என்னும் பெயரினர். அவருடைய தவச்சாலை சிராப்பள்ளி

என்று பெயர் பெற்றது. இச்செய்தியை அறிவிக்கின்றது அம் மலையில் உள்ள கல்லெழுத்து.

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் கடுமையான மதப்போர் மூண்டது. சைவமும் வைணவமும் ஒருபால்; சமணமும் சாக்கியமும் ஒருபால் நின்று நிகழ்த்திய நெடும் போரில் மதவெறி கொண்ட மன்னரும் மாந்தரும், நெறி முறை தவறி நடந்ததும் உண்டு. பல்லவ மன்னனாகிய மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரைத் துன்புறுத்திப் பின்பு அவர் பெருமையை அறிந்து சமண சமயத்தைத் துறந்தான்; சைவ சமயத்தைத் தழுவினான். மதவெறி கொண்டு சமணப் பள்ளிகளை இடித்தான்; சிவாலயங்கள் எடுத்தான்.

சிராப்பள்ளிச் சிவன் கோயில் அம் மன்னன் எடுப்பித்த ஆலயங்களில் ஒன்று என்பது அங்குள்ள கல்வெட்டு களால் விளங்குகின்றது. சமணப் பள்ளியை அரசன் அழித்த போதும் நெடுங்காலமாக வழங்கி வந்த சிராப்பள்ளி என்ற பெயர் மாறவில்லை. எனவே, அம்மலையின்மீது கோயில் கொண்ட சிவபெருமானைச் "சிராப்பள்ளிக் குன்றுடை யான்" என்று தேவாரம் பாடுவதாயிற்று. தேவாரப் பாமாலை பெற்றமையால் சிராப்பள்ளி திருச்சிராப்பள்ளி ஆயிற்று.[1]

மகேந்திரவர்மன் நிறுவிய சிராப்பள்ளிச் சிவாலயத்தை திருநாவுக்கரசர் சிந்தையாரத் தொழுதார்; அரசன் உள்ளத் திலும் சமண முனிவர் பள்ளியிலும் சிவ மணம் கமழச் செய்த இறைவன் கருணையை நினைந்து இன்பக் கண்ணீர் உகுத்தார்; 'தாயாகவும் அமைந்த தயாபரன்' என்று சிராப்பள்ளியில் கோயில் கொண்ட ஈசனைப் போற்றினார்.

"தாயுமாய் எனக்கே
தலைக் கண்ணுமாய்ப்
பேய னேனையும்
ஆண்ட பெருந்தகை"

என்று பாடினார். 'பால் நினைந்து ஊட்டும் தாயாகவும் நின்ற பரமனே ! அறிவினுக்கு அறிவாய் நின்று அறிவிக்கும் இறைவனே ! கண்ணின் ஒளியாய் நின்று காணாதன வெல்லாம் காட்டும் கண்ணுதலே ! பேயனையும் ஆட் கொண்ட பெருமானே !' என்று போற்றினார். அவர் திருவாக்கின் அடியாகத் 'தாயுமானவர்' என்னும் பெயர் ஈசனுக்கு அமைவதாயிற்று. அவ்வண்ணமே அம் மலையில் எழுந்தருளியிருக்கும் அம்மையின் பெயரும் திருநாவுக் கரசரது தேவாரத்தின் அடியாக எழுந்ததாகும். 'மட்டுவார் குழலாள்' என்ற அருமைத் தமிழ்ப் பெயரே இன்றளவும் அங்குள்ள அம்மையின் பெயராக வழங்கி வருகின்றது.[2]

இலங்கை வீரனாகிய திரிசிரனை அம்மலையோடு இணைத்துத் திருச்சிராப்பள்ளியைத் திரிசிராமலை என்றும், அதைச் சார்ந்த நகரத்தைத் திரிசிரபுரம் என்றும் கூறுவதுண்டு. குன்று தோறாடும் குமரவேளின் புகழ் பாடிய அருணகிரியார்,

"திரிசிராமலை மேலுறை வீர"

என்று அப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

திருச்சிராப்பள்ளியின் பெருமை படிப்படியாக உயர்ந்தது. மலையின் அடியில் எழுந்த ஊர் சிறந்த நகரமாக வளர்ந்தது. பழைய தலைநகரமாகிய உறையூர் சிற்றூர் ஆகக் குறுகிற்று. இப்பொழுது திருச்சிராப்பள்ளியின் ஓர் அங்கமாக அமைந்துள்ளது உறையூர்.

ஏற்றத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே, தவப் பெருஞ்செல்வர் ஒருவர் திருச்சிராப்பள்ளியிலே தோன்றினார்; தாயுமானவர் என்னும் பெயர் கொண்ட அப்பெரியாரைத் தமிழ் நாடு நன்கறியும். அவர் பாடியருளிய இன்பத் தமிழ்ப் பாடல்கள் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாகும்.[3] இறைவன்

அருளைப் பெற விரும்பி அவர் பாடிய பாடல்கள் படிப்போர் உள்ளத்தை உருக்குவனவாகும்.

"பாராயோ என்னைமுகம்
பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து
செப்பாய் பராபரமே"

என்ற பாட்டைப் பாடாதார் தமிழ்நாட்டில் உண்டோ?

திருச்சிராப்பள்ளிக்குப் பெருமை அளித்த தமிழ்க் கவிஞருள்ளே தலைசிறந்தவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. காவிரியாற்று வெள்ளம்போல் அவர் உள்ளத்திலே பொங்கி எழுந்தது தமிழ்க் கவிதை. தமிழ் மொழியில் ஆர்வம் உடைய மாணவர்க்குத் தாயும் தந்தையுமாய் அமைந்து அறிவை ஊட்டினார் அப்பெரியார். தமிழகத்தில் அறிவுடையோர் 'சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கும் சீர்த்தி' பெற்ற சாமிநாதையர், பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவர் என்றால் அப்புலவர் பெருமானது சீர்மை பேசுந் தரத்ததோ?

"அருத்திமிகும் எனைஅருகில்
இருத்திஅருந் தமிழ்நூல்கள்
அறைந்து, பின்னர்த்
திருத்துறைசை அமர்திருசுப்
பிரமணிய அருட்கடலின்
திருமுன் சாரப்

பொருத்திஅனை யான்கருணைக்கு
இலக்காகி இருபயனும்
பொருந்தச் செய்தோன்
மருத்தபொழில் சிரகிரிவாழ்
மீனாட்சி சுந்தர
நாவலர் ஏறே"

என்று தம்மை ஆட்கொண்டு உருப்படுத்திய குருநாதனை அகனமர்ந்து போற்றினார் ஐயர் பெருமான்.

# 13. திருவரங்கம்

ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கம் நாடறிந்த நன்னகரம்; சங்கத் தமிழ் மாலையும், சான்றோர் புகழ் மாலையும் பெற்ற திருநகரம். வான் அளாவிய சோலை சூழ்ந்த அவ் வளநகரில் திருமால் கோயில் கொண்டருளினார். அப் பெருமானை மனமாரத் தொழுது வாயார வாழ்த்தும் பேறு பெற்ற அடியார் ஒருவர்,

**" நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்தோதப்**
**பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ - பூவுண்டு**
**வண்டுறங்கும் சோலை மதிலரங்கத் தேஉலகை**
**உண்டுறங்கு வான்ஒருவன் உண்டு "**

என்று ஓர் அழகிய தமிழ்ப் பாட்டு இசைத்தார். ' நல் நெஞ்சமே ! தேனார் பூஞ்சோலைத் தென் அரங்க மாநகரில் கண்ணுறங்கும் பெருமான் ஒருவன் உளன்; அவனை நினைக்க நீ உண்டு; வாழ்த்த வாயுண்டு; பாடப் பாட்டுண்டு; இனி உனக்குப் பயமும் உண்டோ ?' என்று கூறினார் அக் கவிஞர்.

இவ்வாறு காவிரித் திருநதியிலே பள்ளிகொண்ட திருமாலின் கோலம் இளங்கோவடிகளின் உள்ளத்தையும் அள்ளுவதாயிற்று. பொன்மலையின்மீது நீலமேகம் நிரந்து படிந்தாற் போன்று அரவணையின்மேல் திருமால் பள்ளி கொண்டுள்ளார் என்று அவர் அழகாகப் பாடினார்.

**" விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்**
**திருஅமர் மார்பன் கிடந்த வண்ணமும் "**

என்பது சிலப்பதிகாரம் எழுதிக் காட்டும் சிறந்த சொல் ஓவியம். இப்பாட்டிலே 'துருத்தி' என்ற பெயரால் குறிக்கப் படுகின்றது திரு அரங்கம்.

முன்னாளில் துருத்தி என்ற பெயர் ஆற்றின் நடுவே எழுந்த ஊர்களுக்கு அமைந்தது. சோழவள நாட்டில் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள குற்றாலத்தின் பழம் பெயர் திருத்துருத்தி என்பதாகும். அது பாடல் பெற்ற பழம்பதி. காவிரியாற்றின் நடுவே அந்நாளில் கண்ணுக்கு இனிய காட்சி அளித்த திருத்துருத்தியில் அமர்ந்த ஈசனைத் தூய நறுந்தமிழ் பாடித் தொழுதார் திருநாவுக்கரசர்.

"பொன்னியின் நடுவு தன்னுள்
பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே"

என்பது அவர் திருவாக்கு. பிற்காலத்தில் காவிரியின் போக்கு மாறியது. துருத்தி என்ற பெயரும் மறைந்தது. குற்றாலம் என்ற பெயர் அதற்கு அமைந்தது. திருப்பூந் துருத்தி என்பது மற்றொரு பழம்பதியின் பெயர். அப் பெயர் இன்றும் வழங்கி வருகின்றது.

மலை நாட்டு முடி மன்னரும் போற்றிப் புகழும் பெருமை சான்ற கோவில்களை உடையது காவிரித் திருநாடு. சேர நாட்டில் அரசு வீற்றிருந்த சேரமான் பெருமாளின் உள்ளத்தைக் கவர்ந்தது தில்லைச் சிற்றம்பலம்; மற்றொரு சேர மன்னனாகிய குலசேகரப் பெருமாளின் மனத்தை ஈர்த்த மணிக்கோயில் திருவரங்கம். சைவ உலகத்தில் கோயில் என்று போற்றிப் புகழப்படும் பெருமை சான்றது தில்லைச் சிற்றம்பலம். அவ் வண்ணமே வைணவ உலகத்தில் பெரிய கோயில் என்று புகழ் பூத்துத் திகழ்வது திருவரங்கம். தில்லை நடராசனையும் திருவரங்க நாதனையும் திசை நோக்கித் தொழுதனர் அம் மன்னர்

இருவரும். சிற்றம்பலத்தைத் தொழுது ஏத்தும் செல்வமே செல்வம் எனக் கொண்டார் சேரமான் பெருமாள். திருவரங்கத்தைச் சேவித்துப் பெறும் செல்வமே சிறந்த பெருஞ் செல்வம் என்று கருதினார் குலசேகரப் பெருமாள்.

' நிலையற்ற வாழ்க்கையை நிலையாகக் கருதுகின்றதே இம் மாநிலம் ! பொன்னும் பொருளும் தேடி அல்லும் பகலும் அலைகின்றதே ! இன்றுளார் நாளை மாள்வார் என்பதை உணராது இறுமாந்திருக்கின்றதே ! பொருளல்லவற்றைப் பொருளாகக் கருதும் மருள் நிறைந்த இம் மாந்தருடன் சேர்ந்து நான் வாழ மாட்டேன். அவர் போகும் நெறியிலே நான் போக மாட்டேன். முத்தி நெறியறியாத முழு மூடமக்களுடன் நான் சேர மாட்டேன். அரந்தை கெடுத்து வரந்தரும் பெருமான் திருவரங்கத்திலே உள்ளான். ஐயனே ! அரங்கனே ! என்று அவனை அயராது அழைப்பேன். அப் பெருமானையே காதலித்துக் கண்ணீர் வடிப்பேன் ' என்று ஆசை யுற்றுப் பேசுகின்றார் குலசேகரப் பெருமாள்.[1]

கருணை வடிவாய திருமால் அரங்க மாநகரில் பள்ளி கொண்ட கோலத்தில் அமைந்த குறிப்பையும் ஆன்றோர் உணர்ந்து மகிழ்ந்தனர். அரங்கநாதன் திருமுடியை மேற்கே வைத்தார்; திருவடியைக் கிழக்கே நீட்டினார். தென் திசைக்குத் திருமுகம் காட்டினார்.

**" குடதிசை முடியை வைத்துக்**
**குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்பு காட்டி**
**தென்திசை இலங்கை நோக்கிக்**
**கடல்நிறக் கடவுள் எந்தை**
**அரவணைத் துயிலு மாகண்டு**
**உடல்எனக்கு உருகு மாலோ**
**என்செய்கேன் உலகத் தீரே "**

என்று அவர் திருக்கோலத்தை எழுதிக் காட்டினார் ஓர் ஆழ்வார். தென்னாடு தெய்வத் தமிழ் வழங்கும் நன்னாடாதலால் திருமாலின் திருமுகம் தெற்கு நோக்கி அமைந்தது. வடநாடு "ஆழ்வார்கள் ஈரச் சொல்லும் நடையாடாத தேசமாகையாலே, அத்திக்கைத் திருத்தும் போது பின்னழகெல்லாம் வேண்டும்" என்று பெருமாள் 'பின்பு காட்டினார்' என்று திருக்குறிப்பின் பொருளை விளக்கினார் வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த பெரியவாச்சான் பிள்ளை.

இவ்வாறு தென் திசையை வாழ்வித்த திருவரங்கம் தென்னரங்கம் என்று அடியார்களால் போற்றப்படுகின்றது. தமிழகத்திலே தென்னரங்கமும் உண்டு : பொன்னரங்கமும் உண்டு என்று பாடினர் தமிழ்க் கவிஞர்கள். தென்னரங்கத்திலே இறைவன் கண் வளர்கின்றான்; பொன்னரங்கத்திலே ஈசன் களிநடம் புரிகின்றான். தென் அரங்கநாதனும் பொன் அரங்கநாதனும் இருவரல்லர்; ஒருவரே என்னும் உண்மையை இனிது உணர்த்தினார் பொய்கை ஆழ்வார்.

**"பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருஅரங்கத் தால்திரிவ ரேனும் ஒருவன்
ஒருவன்அங்கத்து என்றும் உளன்"**

என்பது அவர் திருப்பாட்டு. தென் அரங்கம் என்றும் பொன் அரங்கம் என்றும் பேசப்படுகின்ற இரு அரங்கத்திலும் உள்ள இறைவன் ஒருவனே என்னும் உயரிய கருத்தைத் தெள்ளத் தெளிய உணர்த்தினார் பொய்கையார். இங்ஙனம் இருமையில் ஒருமை கண்ட பெருமை பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

தென் பாண்டி நாட்டுப் புதுவையம்பதியிலே தோன்றினாள் ஒரு தெய்வப் பாவை. அழகின் கொழுந்

தெனத் திகழ்ந்த அப்பாவையைப் பேணி வளர்த்தார் பட்டர்பிரான் என்னும் பெரியார். இளமையிலேயே கண்ணன் திருவுருவம் அவள் கண்ணிலும் கழுத்திலும் புகுந்து நிறைந்தது. "பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா" என்று அவள் பாடிப் பாடிப் பரவசம் உற்றாள்; அப் பெருமானது திருமேனியின் அழகைத் தன் உள்ளத் திரையில் உயிரோவிய மாக எழுதி மகிழ்ந்தாள். 'உண்ணும் சோறும் பருகும் நீரும்' எல்லாம் கண்ணனே என்று எண்ணிக் களிகூர்ந்தாள். அவன் திருவிளையாடல்களை நெஞ்சார நினைந்து போற்றினாள்.

இவ்வாறு பள்ளத்தில் பாயும் வெள்ளம் போன்று பரந்தாமன் திருவடியிலே படிந்த உள்ளமுடைய மங்கை மணப் பருவம் உற்றாள். கண்ணினைக் காக்கும் இமை போல் அக் கோதையைப் பாதுகாத்த பட்டர்பிரான் குணநலம் வாய்ந்த மணமகன் ஒருவனைத் தேடத் தொடங்கினார். தந்தையின் கருத்தறிந்த கோதை மனம் நொந்தாள். 'கருமுகில் வண்ணன் - கமலக் கண்ணன் - அவனே என் கணவன்' என்று அருமைத் தந்தையிடம் அறிவித்தாள்.

கோதையின் கருத்தறிந்த தந்தையார் கவலையுற்றார். 'ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் ஏழையாய கோதையின் காதலை ஏற்றுக் கொள்வானோ' என்று ஏங்கினார். 'மன வாக்குக் கெட்டாத மணிவண்ணன் இவள் மணவாளனாய் வருவானோ' என்று மயங்கினார். 'தனக்குவமையில்லாத் தலைவனுக்கு இவள் தாரம் ஆவளோ' என்று தளர்ந்தார். ஓங்கி உலகளந்த உத்தமன் வாரானாயின் ஏங்கி நிற்கும் கோதையின் உள்ளம் என்னாகுமோ' என்று இடருற்றார்.

அவர் கவலை யறியாத கன்னி அல்லும் பகலும் அஞ்சன வண்ணனையே நினைந்து நெஞ்சுருகி நின்றாள்.

விண்ணிலே தவழ்ந்த கருமேகத்தில் தன் காதலனாகிய கண்ணன் நிறங்கண்டு களிப்புற்றாள். சோலையிலே இசை பாடும் குயிலை நோக்கி, 'கருங் குயிலே ! என் கண்ணன் வரக் கூவாய்' என்று வேண்டினாள். காதல் புரியும் இளங் கன்னியர் வழிபடும் காம தேவனைக் கை தொழுதாள். 'கரும்பு வில் ஏந்திய காம தேவா ! என் கருத்தில் உறையும் காதலன் நீல மேனியன்; கமலக் கண்ணன்; பவளவாயன். அவன் திருமேனியை நான் காணக் கருணை புரியாயோ ! அவனே என் கண் நிறைந்த காதலன்; கருத்திற்கு உகந்த கணவன். மானிடன் எவனையும் நான் மணப்பதில்லை. எவர்க்கேனும் என்னை மணம் பேசினால் மாண்டு தீர்வேன்.'

**" மானிட வர்க்கென்று பேச்சுப் படில்**
**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே "**

என்று வாய்விட்டு உரைத்தாள்.

இங்ஙனம் மையல் நோயால் நையலுற்ற மங்கைக்கு மணிவண்ணன் கனவிலே காட்சியளித்தான். இந்திரன் முதலிய வானவர் எல்லாம் நிறைந்திருக்க, மேள தாளங்கள் முழங்க, மணக்கோலத்தில் மணிவண்ணன் எழுந்தருளி, நித்திலப் பந்தலில் தன் கைத்தலம் பற்றிக் கடிமணம் செய்யக் கனாக் கண்டாள் கோதை.

கண்ணன் மணக் கோலங் கொண்டு வரும் காட்சியையே கனவிலும் நனவிலும் கண்ட கோதை தன்னை ஆடையணிகளால் ஒப்பனை செய்வாளாயினாள். கழுத்திலே காறை அணிவாள்; கண்ணாடி பார்ப்பாள்; கைவளை திருத்துவாள்; கூறை உடுத்துவாள்; வழி மேல் விழி வைத்து நிற்பாள். தன்னந் தனியளாய் இருந்து கன்னங்கரிய திருமாலை நினைந்து கண்ணீர் வடிப்பாள். பரந்தாமா என்று பரிந்து அழைப்பாள். திருவரங்க நாதனது எழுதரிய அழகினை எண்ணி எண்ணி ஏங்குவாள்.

வெள்வளை சோரத் தன் உள்ளங் கவர்ந்த அக் கள்வனையே நினைந்து உருகுவாள். 4

கோதையின் காதலை அறிந்த அரங்கநாதன் மனம் இரங்கினான். அன்பினால் அவள் சூடிக் கொடுத்த மணமாலையும் அப் பெருமானுக்கு உகந்ததாயிற்று. இவ்வாறு தன் திருமகளின் கருத்தறிந்து முடித்த கருணைமாயனை மனமாரப் போற்றினார் பட்டர்பிரான்.

**"ஒருமகள் தன்னை உடையேன்**
**உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன்**
**செங்கண்மால் தான்கொண்டு போனான்"**

என்று திருமகள் கணவனாகிய திருமாலை வாயார வாழ்த்தினார்.

கோதை என்றும், ஆண்டாள் என்றும் தமிழ்நாடு போற்றும் தெய்வப் பாவை பாடியருளிய திருப்பாவை சங்கத் தமிழ் மாலையாகத் திகழ்கின்றது. பூமாலை சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள் பாடிக் கொடுத்த நற்பாமாலையைப் போற்றிப் புகழ்ந்தனர் ஆன்றோர். 5

திருவரங்கநாதனுக்குத் திருத்தொண்டு செய்த அடியார்களுள் சிறந்தவர் விப்பிர நாராயணர் என்னும் தொண்டரடிப்பொடி ஆழ்வார். பள்ளி கொண்டருளும் திருவரங்கப் பெருமானைத் துயிலுணர்த்தும் பான்மையில் இவ் ஆழ்வார் பாடியருளிய 'திருப்பள்ளி எழுச்சி' என்னும் பாமாலை தெய்வத் தமிழ் மணம் கமழ்வதாகும். 6

திரு அரங்கநாதனைச் சேவிக்கும் செல்வமே செல்வம் என்று தெள்ளத் தெளிய உணர்த்தினார் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார். 'பச்சைப் பசு மேனியனே! பவள வாயனே! கமலக் கண்ணனே! அச்சுதா! அமரர் கோவே! ஆயர்தம் கொழுந்தே!' என்று அருந் தமிழால் அருச்சனை

செய்ய ஆசைப் பட்டார் அவ் ஆழ்வார். இந்திரன் நாட்டுச் செல்வமும் செந்தமிழ் இன்பத்துக்கு நிகரில்லை யாதலால் உம்பர் நாட்டுச் செல்வம் வேண்டேன் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

**" பச்சைமா மலைபோல் மேனி**
**பவள்வாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே**
**ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய்**
**இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்**
**அரங்கமா நகரு ளானே"**

என்ற திருவாக்கு பொன்போல் போற்றத்தக்கதாகும்.

# 14. திரு ஆனைக்கா

முன்னொரு கால் ஒரு சோழ மன்னன் காவிரி யாற்றிலே உறையூர்த் துறையில் இறங்கி நீராடினான். தண்ணீரில் மூழ்கி எழுந்தான்; கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் காணவில்லை. 'ஆற்றில் விழுந்த ஆரத்தை நீரே ஏற்றருளும்' என்று ஈசனை வேண்டினான்.[1]

திரு ஆனைக்காவில் உறையும் ஈசனை அன்று காவிரி நீரால் முழுக்காட்டியபொழுது அவர் திருமேனியில் விழுந்தது அம் முத்துமாலை. அரசன் 'சிவார்ப்பணம்' செய்த முத்தாரம் திருமஞ்சனக் குடத்திலே புகுந்து, ஆனைக்காவில் அமர்ந்த பெருமானது திருமேனியைச் சேர்ந்தது என்று எல்லோரும் இன்பவாரியில் மூழ்கினர். இச் செய்தியைத் தேவாரத் திருப்பாசுரம் எடுத்துரைக் கின்றது.

பழங்காலத்தில் வளமார்ந்த பயன்மரச் சோலைகள் ஈசன் உறையும் கோயில்கள் ஆயின. சோழ நாட்டில் உள்ள நெல்லி மரச் சோலை திரு நெல்லிக்கா என்றும், குரங்காடும் பழஞ்சோலை குரக்குக்கா என்றும் தேவாரத்தில் குறிக்கப்பெற்றுள்ளன. காவிரிக்கரையில் அமைந்த குரங்குச் சோலையை "குரக்கினம் குதி கொள்ளும் குரக்குக்கா" என்று தேவாரம் பாடிற்று.

கா என்பது சோலை. காவிரியாற்றின் நடுவே யானை திரியும் நெடுஞ் சோலையொன்று அந்நாளில் நின்றது. அது ஆனைக்கா என்று பெயர் பெற்றது. அங்கு ஒரு நாவல் மரத்திலே வெளிப்பட்ட ஈசனை நாள்தோறும் துதிக்கை

யால் நீராட்டித் தூய மலர் தூவி வணங்கிற்று ஒரு யானை என்று பழங்கதை கூறுகின்றது.[2]

அந் நாவல் மரத்தில் அமர்ந்த நாதனை வழிபட்டுப் பேறு பெற்ற சோழ மன்னருள் ஒருவன் கோச்செங் கண்ணன். தமிழ் நாட்டில் திருக்கோயில் கட்டிய மன்னருள் தலைசிறந்தவன் அவனே. மணிகண்டனாகிய ஈசனுக்கு எழுபது மாடக்கோயில் எடுத்தான் அம் மன்னன் என்று பாடியுள்ளார் திருமங்கை ஆழ்வார். திரு ஆனைக்காவிலும் அவன் திருக்கோயில் எடுப்பித்தான்.[3]

கோச் செங்கண்ணன் கட்டிய கோயில் 'நாவற் கோயில்' என்று பெயர் பெற்றது. 'ஜம்புகேசுரம்' என்ற வடமொழிப் பெயரும் அதற்கு உண்டு. அவ் ஆலயத்தில் அண்டங்கள் அனைத்தையும் ஈன்ற அம்மையோடு அமர்ந்தருளும் ஈசனைக் கண்குளிரக் கண்டு பூமாலையும் பாமாலையும் சாத்தினர் திருத்தொண்டர்கள். அத்தகைய அழகிய பாமாலைகளில் ஒன்று அகிலாண்ட நாயகி மாலை.

அகிலம் எல்லாம் ஈன்ற அம்மையை ஒரு பாகத்தில் வைத்து, கங்கையாகிய மங்கையைச் சடைமுடியில் வைத்துக் காட்சி தரும் இறைவனைக் கசிந்துருகிப் பாடினார் ஒரு கவிஞர். "அம்மையே ! அகிலாண்ட நாயகியே ! என் அனைய அடியார்கள் செய்யும் எண்ணிறந்த பிழைகளைப் பொறுத்து அருள் புரியும் அன்னையாகிய உன்னை ஒரு பாகத்திலே வைத்த பரமன், மூன்று பிழைக்கு மேல் பொறுக்காத ஒரு மங்கையைத் தன் முடியின்மேல் ஏற்றி வைத்தானே ! இதனால் அன்றோ இவன் பித்தன் என்று ஒரு பெயர் பெற்றான் ?" என்ற கருத்தை அமைத்து,

"அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணிஉருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன், அதனால்

பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தன்என் றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு ஆனைக்
காவகி லாண்டநா யகியே"

என்ற அக் கவிஞர் பாடிய அழகான பாட்டில் 'தண்ணீர் மூன்று பிழைதான் பொறுக்கும்' என்னும் பழமொழியைத் தழுவி எழுந்த கற்பனை சிறந்த இன்பம் பயக்கின்றது.

திரு ஆனைக்காவில் உறையும் பெருமானைப் பணிந்து தமிழ்ப் பாமாலை பல புனைந்தார் திருநாவுக்கரசர். 'தனக்குவமையில்லாத் தலைவனாகிய ஈசன் திருவடியே மனக்கவலையை மாற்றும் மருந்து; அதுவே, தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தகைமை சான்றது; அஞ்சேல் என்று ஆதரிக்கும் அருமை வாய்ந்தது. ஆதலால் பெற்றாரையும் உற்றாரையும் பற்றி நில்லாது பற்றற்ற பரம்பொருளையே பற்றுக' என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.[4]

காவிரியாற்றின் இடைக் குறையில் சிவனும் திருமாலும் சேர்ந்து காட்சி தருகின்றார்கள். திரு ஆனைக்காவிற்கு அண்மையில் "தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திரு அரங்கம்" அமைந்துள்ளது. இவ் வண்ணமே காவிரியாற்றின் முதல் அரங்கமாகிய சீரங்கப் பட்டணத்திலும் அரங்கநாதன் கோயிலுக்கு அருகே கங்காதரனுக்கு உரிய சிவாலயம் ஒன்று உண்டு. காவிரியின் இடை அரங்கமாகிய சிவசமுத்திரத்திலும் சோமநாதன் கோயிலுக்கு அருகே அரங்கநாதன் ஆலயம் உள்ளது.

இவ்வாறு காவிரித்தாய் அரனும் அரியும் ஒன்றே என்று தன் மூன்று அரங்கங்களிலும் ஐயந்திரிபற அறிவித்திருப்பினும் மக்களின் மதவெறியால் ஒரோவழி சமயப் பிணக்கம் நேர்ந்ததும் உண்டு. மாதா சேர்த்து வைத்த மதக் குடும்பத்தை மக்கள் பிரிக்க முயல்வது முறையாமோ?

# 15. தஞ்சை மாநகரம்

**கா**வேரியின் கருணையால் நஞ்சை வளம் பெற்றது தஞ்சை நாடு. பஞ்சம் என்பதறியாத அத்திருநாட்டில் தஞ்சை மாநகரம் தழைத்தோங்கி வளர்கின்றது. அஞ்சன வண்ணனாகிய திருமால் அந்நகரில் அமர்ந்து அருள் புரிகின்றான்.

**"வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை**
**மாமணிக் கோயிலே வணங்கி**
**நம்பிகாள் உய்ய நான்கண்டு கொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்"**

என்று தஞ்சை மாமணிக் கோயிலை நெஞ்சாரப் போற்றினார் திருமங்கை மன்னன். செஞ்சடைப் பெருமானாகிய ஈசனும் தஞ்சையம்பதியிலே கோயில் கொண்டருளினான். அக்கோயிலைத் 'தஞ்சைத் தளிக்குளம்' என்று தேவாரம் பாடிற்று.

இத்தகைய தஞ்சை மாநகரின் பெருமை யெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டான் இராசராசன் என்ற சோழன். அவன் மன்னர் மன்னன்; மாநில வேந்தன்; வெற்றி மேல் வெற்றி பெற்ற கொற்றவன்; கடல் சூழ்ந்த இலங்கையையும் வென்று அரசாண்ட இணையற்ற வீரன். அம்மன்னன் தஞ்சையைச் சோழ நாட்டின் தலைநகர் ஆக்கினான். அதற்கு அருமையும் பெருமையும் அளித்தான். முத்தமிழும் அங்கு முழங்கக் கண்டு களித்தான். தஞ்சையம்பதியில் அம்மன்னன் எடுத்த தனிப் பெருங்

கோயில் தமிழ் நாட்டின் ஒரு நல்ல அணியாகத் திகழ்கின்றது. இராசராசன் பெயர் தாங்கி நிற்கும் அப் பெருங்கோயிலை அந்நாளிற் பாடினார் கருவூர்த் தேவர் என்னும் பெரியார்.[1]

சோழ மன்னரின் செல்வச் செழுமைக்கும் சமயப் பற்றுக்கும் ஒரு சான்றாய்த் திகழ்கின்றது தஞ்சைப் பெருங்கோயில். அதன் உயர்ந்த நடுவிமானத்தின் உச்சியிலே குன்று போன்ற கருங்கல்லொன்று நின்று நிலவுகின்றது. அக் கல்லைக் கோபுரத்தின் உச்சியிற் கொண்டு சேர்ப்பதற்கு நெடுந் தொலைவிலிருந்து சாரம் அமைத்ததாகவும், தஞ்சைக்கு நான்கு மைலுக்கு அப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற சிற்றூரின் பெயரே அதற்குச் சான்று பகர்வதாகவும் அறிந்தோர் கூறுவர். இன்னும் அத் திருக்கோயிலின் முன்னே பெரிய நந்தி என்னும் மாக்களையும் ஒரே கல்லில் எடுப்பாக வடிக்கப்பட்டிருக்கின்றது. சுருங்கச் சொல்லின் தஞ்சைக் கற்கோயில் முற்காலச் சிற்பக் கலையின் சீர்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அக்கோயிலின் சுற்றாலையில் அமைந்துள்ள முருகன் திருவுருவைக் கண்டு ஆனந்தமுற்றார் அருணகிரியார்.

> "தஞ்செ௭ன வாம்அடி யவர்வாழத்
> தஞ்சையில் மேவிய பெருமாளே"

என்று பாமாலை சூட்டிப் பணிந்தார்.

சிவ நெறியிலே சிறந்த ஆர்வமுடைய இராசராசன் சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். அம் மன்னனைப் பற்றிய பாட்டும் கூத்தும் முன்னாளிற் பல உண்டு. 'இராச ராசேச்சர நாடகம்' என்னும் கூத்து தஞ்சைத் திருவிழாக் காலங்களில் சிறப்பாக நடைபெற்ற தென்பது பெரிய கோயில் கல்லெழுத்தால் புலனாகின்றது. அந்நாடகம் கிடைத்தால் சிவபாத சேகரன் பெருமை இன்னும் நன்றாக விளங்கும்.

பெருஞ் சோழ மன்னர் காலத்திற்குப் பின் நாயக்க மன்னர் சில காலம், மராட்டிய மன்னர் சில காலம் தஞ்சை மாநகரில் ஆட்சி புரிந்தனர். அன்னார் கட்டிய கோட்டைகளும் மாளிகைகளும் இன்றும் அந்நகரில் பொலிவிழந்து நிற்கக் காணலாம். அவற்றில் ஒன்று சங்கீத மண்டபம் என்று வழங்கும் இசை மன்றம். நெடுங் காலமாக ஒளி மழுங்கிக் கிடந்த அம்மன்றம் இப்பொழுது கலையரங்கமாக மீண்டும் காட்சியளிக்கிறது.

வீர சிவாஜியின் மரபில் வந்த மராட்டிய வேந்தர் பலர் தஞ்சையில் அரசு புரிந்தாரேனும் சரபோஜி மன்னன் ஒருவனே இன்றும் பொதுமக்களால் நினைந்து போற்றப் படுகின்றான். அரசாட்சியில் அவன் கருத்து செல்லவில்லை. ஆதலால் ஆங்கிலேயரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தான். அவர் தந்த பொன்னையும் பொருளையும் கொண்டு கவலையின்றி வாழ்ந்தான்; அருங்கலைவாணரை ஆதரித்தான். பாட்டின் தரம் அறிந்து பரிசளித்தான். அவன் மீது ஒரு குறவஞ்சி நாடகம் பாடினார் ஒரு கவிஞர்.[2] அம் மன்னன் தஞ்சை மாநகரில் பவனி வந்த கோலத்தையும் அவன் அழகைக் கண்டு மையல் கொண்ட மதனவல்லியின் மோகத்தையும் அக் குறவஞ்சி நாடகத்திலே காண்பது ஓர் இன்பம்.

காதலுற்ற மதனவல்லியின் முன்னே குறி சொல்லும் குறவஞ்சி கூடையும் கையுமாய்த் தோன்றுகிறாள்.[3] அவள் தப்பாமல் குறி சொல்லி எப்பாலும் புகழ் பெற்றவள்; பல நாட்டுப் பாவையரின் கைபார்த்துப் பரிசு பெற்றவள். இத்தகைய குறவஞ்சி மதனவல்லியை மகிழ்ந்து நோக்கி,

> **“சொன்ன குறிகளும் பெற்ற வரிசையும்**
> **சொல்லுகிறேனடி கண்ணே ”**

என்று எடுத்துத் தான் பார்த்த பெண்களையும் பெற்ற பரிசுகளையும் அடுக்குவாளாயினாள். ‘அம்மே ! நான்

ஆந்திர நாட்டிலே ஒரு பெண்ணின் கைபார்த்துக் குறி சொன்னேன். அவள் மனமகிழ்ந்து இந்த மூக்குத்தியைப் பரிசளித்தாள்.[4] ஒரு கன்னடப் பெண் 'என் கையைப் பார்' என்று காட்டினாள். நான் பார்த்து நல்ல குறி சொன்னேன். அவள் இந்தக் காதோலை தந்தாள்.[5] இன்னும் கேள் அம்மே ! ஓர் ஆங்கிலப் பெண்ணும் தன் கையைக் காட்டிக் குறி கேட்டாள். அவள் தந்ததே இந்த மேகலை' என்று அடுக்கினாள்.[6]

குறத்தி சொல்லிய சொல்லை நம்பி மதனவல்லியும் குறி கேட்டாள். அவள் கையை நன்றாகப் பார்த்து, 'தஞ்சையை ஆளும் சரப மன்னன் உனக்கு இன்னருள் புரிவான்' என்று கூறினாள் குறவஞ்சி.

சரபேந்திர குறவஞ்சி நாடகம் தஞ்சைக் கோவிலில் நெடுங்காலம் நடந்து வந்தது. 'பல கலைகள் உணர்ந்த தஞ்சைச் சரபோசி' என்று பாராட்டப் பெற்ற மராட்டிய மன்னன் மாளிகை அழிந்தது; மருத்துவசாலை மறைந்தது. ஆயினும் அவன் ஆசையுடன் தொகுத்த அருமையான நூல் நிலையம் மட்டும் 'சரஸ்வதி மகால்' என்னும் பெயரோடு இன்றும் தஞ்சையிலே காட்சி தருகின்றது.

# 16. திருவையாறு

வட நாட்டிலே பஞ்ச நதி பாயும் பழனத் திருநாடு 'பஞ்சாப்' என்று பெயர் பெற்றது. அவ்வண்ணமே ஐந்து ஆறுகள் அடுத்தடுத்துச் செல்லும் தென்னாட்டில் அமைந்த தலம் ஒன்று திரு ஐயாறு என்று அழைக்கப்படுகின்றது. தென்னாட்டில் உள்ள திருவையாற்றைப் பஞ்சநதம் என்னும் பெயரால் வழங்குவர் வடமொழியாளர்.

காவிரித் தாயின் திருக்கரத்தால் அணைக்கப் பெற்ற ஐயாற்றின் அழகினைக் கண்டார் திருநாவுக்கரசர்; ஆனந்தம் கொண்டார். திருவையாற்றின் முத்திசையிலும் காவிரியின் கிளையாறுகள் பரந்து பாயும் அழகும், அவற்றில் மாசற நீராடி ஈசனார் கோவிலிற் போந்து வழிபடும் அடியார் கோலமும் திருநாவுக்கரசரது தேவாரத்தால் தெள்ளிதின் விளங்குகின்றன.1

காவேரியாற்றிலே இறைவனுக்குரிய துறைகள் பல உண்டு. அத் துறைகளில் அமைந்த கோவில்களும் கோட்டங்களும் பலவாகும். ஆயினும், 'காவிரிக் கோட்டம்' என்று தேவாரத்தில் சிறப்பிக்கப்பட்ட கோயிலை திருவையாற்றுக் கோயில் ஒன்றே. "காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ" என்று திருவையாற்றில் அமர்ந்த பெருமானைக் கதறி அழைத்தார் ஒரு திருத்தொண்டர்.

காவிரி நாட்டிலே கடுமழை பெய்தது; ஆற்றிலே புது வெள்ளம் பொங்கி எழுந்தது. இரு கரையிலும் நுரை செறிந்தது. கலங்கிச் சென்ற காவிரியின் இழுப்பும் சுழிப்பும் கண்டு இரு கரையிலும் நின்ற மாந்தர் மனங் கலங்கினர். அப்போது அங்கு வந்து சேர்ந்தார் சுந்தரமூர்த்தி. ஆற்றைக் கடந்து, திரு ஐயாற்றை அடைவதற்கு வழி யொன்றும் காணாது "ஐயாறுடைய இறைவா ! ஓலம்" என்று அரற்றினார். அந் நிலையில் வெள்ளம் வடிந்தது; அடியார் உள்ளம் மகிழ்ந்தது; காவிரிக் கோட்டத்தைச் சுற்றி வந்து கையாரத் தொழுதார்; நாவாரப் பாடினார் சுந்தரர்.

திருவையாற்றுக் கோவிலைச் சூழ்ந்த செழுஞ் சோலையில் கலையும் பிணையும் களித்துத் திரியும்; களிறும் பிடியும் காதல் புரியும்; கடுவனும் மந்தியும் கொஞ்சிக் குலாவும். இத்தகைய இனிய சூழ்நிலையில் நெஞ்சாரத் தொழுதேத்தும் அடியார்க்கு அஞ்சேல் என்று அருள்புரியும் இறைவன் அமர்ந்திருக்கும் அழகிய கோலத்தைக் கண்டு திளைத்தார் திருஞானசம்பந்தர்.

"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்று
அருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே"

என்று பொன் மொழிகளால் போற்றினார். 'பிறவிப் பெருங் கடலில் விழுந்து வருந்தும் உயிர்களைக் கரையேற்ற வல்லவன் இறைவன் ஒருவனே ! தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தகைமை வாய்ந்த தலைவன் ஒருவனே ! போக்கற்ற வர்க்குப் புகலிடமாய் அமைந்த புண்ணியமூர்த்தி ஒருவனே ! இறுதிக் காலத்தில் பொறிகலங்கி, நெறி மயங்கி,

அறிவிழந்து ஆவி அலமரும் பொழுது அபயம் அளிக்க வல்ல பெருமான் ஒருவனே ! அவன் திருவையாற்றுக் காவிரிக் கோட்டத்தில் அமர்ந்துள்ளான்' என்று அறிவுறுத்துகின்றார் திருஞானசம்பந்தர்.

அக் கோயிலிற் போந்து அக்முருகிப் பாடினார் பலர். ஆலயத்தைச் சுற்றி நடன மாடினார் நங்கையர். அப்போது தாளம் எழுந்தது; மத்தளம் அதிர்ந்தது. அம் முழக்கத்தைக் கேட்ட சில மடமந்திகள் இடியோசை என்று எண்ணி மரத்தின் மேல் விரைந்து ஏறின; மழை வருமோ என்று வானத்தைப் பார்த்தன; இவ்வாறு அலமந்த சில மந்தியையும் ஐயாற்றுப் பாட்டிலே காட்டி அடியாரை மகிழ்விக்கின்றார் திருஞான சம்பந்தர்.

திருவையாற்றுக்கு அருகே உள்ள தஞ்சையம்பதி, இராசராசன் காலத்தில் சோழ நாட்டின் தலைநகர் ஆயிற்று. அதனால் திருவையாறு பீடும் பெருமையும் உற்றது. பட்டத்தரசி யாகிய உலோகமாதேவி அங்கே ஒரு திருக்கோயில் கட்டினாள். காவிரிக் கோட்டத்தின் வடக்குத் திருச்சுற்றில் அமைந்த அவ்வாலயம் 'உலகமாதேவீச்சுரம்' என்னும் பெயர் பெற்றது. இக்காலத்தில் உத்தர கைலாசம் என்று வழங்கும் கோயில் அதுவே.

அறம் வளரும் திருவையாற்றிலே அன்ன சத்திரம் பல உண்டு. அவற்றுள் மிகச்சிறந்தது சரபோசி மன்னன் நிறுவிய அறச் சாலையாகும். ஆற்றங் கரையில் அழகாக வீற்றிருக்கின்றது அரண்மனை போன்ற அவ்வறச் சாலை, இப்போது நாட்டு மொழி பயிலும் மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து உதவுகின்றது அந் நிலையம்.

'காசிக்கு வீசம் அதிகம்' என்று கருதப்படும் திரு வையாற்றிலே பல்லாண்டு வாழ்ந்தார் திக்கெல்லாம் புகழுறும் தியாகையர். அவர் புகழுடம்பு பெற்ற ஐயாற்றில் ஆண்டு தோறும் இன்னிசை வெள்ளம் பொங்கிப் பெருகுகின்றது.

# 17. பழையாறை

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பொன்னி நாட்டின் நல்லணியாகத் திகழ்ந்தது பழையாறை என்னும் திருநகரம். சோழ மன்னர்க்குரிய மாளிகை அம் மணிநகரில் விண்ணளாவி நின்றது. இறைவன் உறையும் திருக் கோயில்கள் எம்மருங்கும் காட்சி அளித்தன. அவற்றுள் ஒன்று திருப்பட்டீச்சுரம். பழையாறை நகரில் அமைந்த பட்டீச்சுரத்தைப் பாடியருளினார் திருஞான சம்பந்தர்.[1]

பழையாறை நகரம் பல்லவ மன்னனாகிய நந்தி வர்மனது உள்ளத்தைக் கவர்ந்தது. அவன் அந்நகரைத் திருத்தினான்; புதுக்கினான். தன் பெயரையும் அதற்கு அளித்தான்; நந்திபுரம் என்னும் பெயர் பெற்ற அந்நகரில் திருமாலுக்குக் கோயில் கட்டினான். அதற்கு நந்திபுர விண்ணகரம் என்ற திருப்பெயர் சூட்டினான். அவ் விண்ணகரம் திருமங்கை மன்னனது பாமாலை பெற்றது.

> **" நந்திபணி செய்தநகர் நந்திபுர**
> **விண்ணகரம் நண்ணுமனமே "**

என்ற திருப்பாசுரத்தில் நந்தி மன்னன் அந்நகர்க்குச் செய்த சேவை குறிக்கப்பட்டுள்ளது.

நந்திபுரமாகிய பழையாறையில் தங்கியிருந்த பல்லவ மன்னனை வெல்லக் கருதிப் படை யெடுத்தனர் பகை வேந்தர்; அந்நகரை முற்றுகையிட்டனர். அப்போது காஞ்சி மாநகரத்தில் இருந்த பல்லவப் படை கதித்து எழுந்தது.

உதய சந்திரன் என்னும் வீரன் படைத்தலைமை பூண்டு, நந்திபுரம் போந்து மாற்றரசர் சேனையோடு போர் தொடுத்தான்; வெற்றி பெற்றான்; மன்னனை விடுவித்தான். இவ்வாறு காலத்தில் உதவி புரிந்த உதய சந்திரன் பெயர் தாங்கி நிற்கின்றது, வடவார்க்காட்டு மாவட்டத்தில் உள்ள உதயேந்திரம் என்னும் ஊர்.

நந்திபுர விண்ணகரில் வீற்றிருக்கும் திருமால், ஜகந் நாதன் என்று அழைக்கப் பெற்றார். அதனால் ஜகந்நாதன் கோயில் என்னும் பெயரும் அவ்விண்ணகரத்திற்கு அமைந்தது. நாளடைவில் அப்பெயர் குறுகி நாதன் கோயில் என்று வழங்கலாயிற்று.

சோழர்குல மணிவிளக்காய் இலங்கிய இராஜராஜன் காலம் வரை நந்திபுரம் என்னும் பெயர் பழையாறைக்கு வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. அவன் தந்தையாகிய சுந்தரச் சோழனை 'நந்திபுரி 'மன்னன்' என்று புகழ்ந்து வாழ்த்துகின்றது ஒரு பழம் பாட்டு.[2]

'போதி மரத்தின்கீழ் அமர்ந்த புத்த தேவா ! நந்தி புரியில் வாழும் சுந்தரச்சோழன் கொடைத்திறமும், கட்டழகும், படைத்திறமும் உடையவனாய்ப் பல்லாண்டு சிறந்து வாழ அருள்புரிதல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்கின்றார் அப்பாவலர்.

இத்தகைய சீர்மை வாய்ந்த பெரு நகரில் சோழன் மாளிகை சிறந்து விளங்கிற்று. ஆயிரம் மாடங்களை உடையதாய் நின்று நிலவிய அம்மாளிகை 'ஆயிரத்தளி' என்று பெயர் பெற்றது. 'ஆயிரம் தளி கூடின இடம் ஆயிரத் தளி' என்று அப்பெயரின் பொருளை விளக்குகின்றது வீர சோழிய உரை. "ஆடகப் புரிசை ஆயிரத்தளி" என்று புகழப் பெற்ற அவ்வரண்மனையில் முடிசூட்டு விழாக்கள் நடைபெற்றன. அங்கு நின்ற அரியாசனத்தில் அமர்ந்து மாநில மன்னர் அரசாங்க ஆணை பிறப்பித்தனர். இராஜ

ராஜன் உடன் பிறந்த குந்தவைப் பெருமாட்டியின் தனி மாளிகையொன்று அந்நகரில் அமைந்திருந்தது. கங்கைகொண்ட சோழன் என்று தமிழகம் பாராட்டும் இராஜேந்திரன் இளமைக் காலத்தில் அந்நகரிலுள்ள அரண்மனையில் வாழ்ந்தான் என்று அவன் வரலாறு கூறுகின்றது. இம் மன்னன் அரசாளத் தொடங்கிய பின்னர் முடிகொண்ட சோழபுரம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது அந்நகரம். முடி கொண்ட சோழன் என்பது அப் பெரு மன்னன் பெற்ற விருதுப் பெயர்களில் ஒன்று. பழம் பெருமை வாய்ந்த தலைநகரின் வளம் பெருக்கக் கருதி, அம் மன்னவன் காவேரியினின்றும் கொணர்ந்த நதி முடிகொண்டான் ஆறு என்றே இன்றளவும் வழங்கி வருகின்றது.

சோழ மாளிகையைச் சூழ்ந்து நான்கு படை வீடுகள் நன்கு அமைந்திருந்தன. பம்பைப் படையும் புதுப் படையும் ஆரியப் படையும் மணப்படையும் நெடுங்காலமாக நின்று நிலவிய இடங்கள் நாளடைவில் தனித்தனி ஊர்கள் ஆயின. இப்போது சோழ மாளிகை என்பது ஒரு சிற்றூரின் பெயர். முன்னாள் இருந்த அரண்மனையின் அடையாளங்கள் இந்நாளிலும் அங்கு உண்டு. எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் வரை அவ்வூரில் நின்ற மதிற் சுவர்களை ஆங்கில அரசாங்கம் இடித்து அழித்தது என்று அறிந்தோர் கூறுவர். அந்த இடத்தைச் சுற்றிப் பம்பைப் படையூர், புதுப் படையூர், ஆரியப் படையூர், மணப்படையூர் என்னும் நான்கு ஊர்கள் இன்றும் காணப்படுகின்றன.

அந்நகரின் வடபால் நின்ற பழைமையான ஈசன் கோயில் வடதளி என்று அழைக்கப் பெற்றது. புறச் சமயத்தார் பழையாறையில் ஆதிக்கம் பெற்றிருந்த போது அத் திருக்கோயிலின் உள்ளே எவரும் செல்ல முடியாதபடி மறித்துத் தடுத்து மறைந்திருந்தனர். அப்பதியை வழிபடப் போந்த திருநாவுக்கரசர் மாற்றார் இயற்றிய வஞ்சனையை

அறிந்தார்; மனம் நொந்தார். 'எவ்வாற்றானும் வடதளியில் உள்ள இறைவனை வணங்கியே தீர்வேன்' என்று நெஞ்சுறுதி கொண்டார்.

"வண்ணம் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன்என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே"

'ஐயனே! வடதளியில் கோயில் கொண்ட வள்ளலே! நின் திருமேனியைக் கண்டாலன்றி இவ்விடம் விட்டுப் பெயரேன்' என்று திண்ணிய மனம் உடைய திருநாவுக்கரசர் விண்ணப்பம் செய்தார்; உண்ணாவிரதம் பூண்டார். உயரிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்ட அடியாரைக் கண்டனர் பழையாறை மக்கள்; நெஞ்சம் துடித்தனர்; வஞ்சனையை ஒழிப்போம் என்று வஞ்சினம் கூறினர்; அரசனிடம் சென்று முறையிட்டனர். மன்னன் ஆணை பிறந்தது; தடையெல்லாம் தகர்ந்தது; மறைப்பனைத்தும் மாய்ந்தது. மங்கை பங்கனைக் கண்டு அங்கம் குளிர்ந்தனர் அடியார் எல்லாம்.

ஆன்ம வீரத்தால் அரும்போர் நிகழ்த்தி வெற்றி பெற்ற நாவரசர் உச்சி மேற் கை குவித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ஆலயத்தின் உள்ளே சென்று அகமுருகிப் பாடினார்.

"ஆதியைப் பழையாறை வடதளிச்
சோதியைத் தொழுவார் துயர் தீருமே"

என்று தமிழ்ப்பாட்டு இசைத்தார்.

இவ்வாறு பன்னிரு நூற்றாண்டுகளுக்கு முன்னே சத்தியாக்கிரகத்தின் வெற்றி கண்டது பழையாறை நகரம். அதை நினைத்தே "பாரில் நீடிய பெருமை சேர்பதி பழையாறை" என்று பாடி மகிழ்ந்தார் சேக்கிழார் பெருமான்.

# 18. கும்பகோணம்

**சோ**ழவள நாட்டிலே சாலச் செழுமையுற்று விளங்கும் நகரம் கும்பகோணம். குடமூக்கு என்பது அதன் பழம் பெயர். பன்னிரண்டு நூற்றாண்டு முன்னே எழுந்த பைந்தமிழ்ப் பாசுரங்களில் குடமூக்கு என்று பாடப் பெற்றுள்ள ஊர் எவ்வாறு கும்பகோணம் ஆயிற்று என்பது அறியத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் பெயர் மாறிய பழம்பதிகள் சில உண்டு. காவிரியாற்றின் கரையிலுள்ள மயிலாடுதுறை என்ற ஊரின்- பெயர் மாயவரம் எனச் சிதைந்தது. மணிமுத்தா நதியின் கரையிலே திகழ்கின்ற விருத்தாசலம் என்னும் திருநகரம் முன்னாளில் முதுகுன்றம் என்ற பெயர் பெற்றிருந்தது.

"முத்தா றுடைய முதல்வர்
கோயில் முதுகுன்றே"

என்று அத் தலத்தைப் பாடினார் திருஞானசம்பந்தர். முதுகுன்றம் என்ற தமிழ்ப் பெயர் வடமொழியில் விருத்தாசலம் ஆயிற்று.

சோழ மண்டலக் கரையில் இப்பொழுது வேதாரண்யம் என்று வழங்கும் ஊர் முன்னாளில் மறைக்காடு என்னும் பெயர் பெற்றிருந்தது. அவ்வூரில் கோயில் கொண்ட ஈசனை, "மறைக்காடுறையும் மணாளன்" என்று பாடினார் ஓர் அருட் பாவலர்.

மறைக்காடு என்னும் தமிழ்ப் பெயரின் மொழி பெயர்ப்பே வேதாரண்யம் என்பது வெளிப்படை.

பண்டைத் தமிழிலே கிழக்கைக் குணக்கு என்றும், மேற்கைக் குடக்கு என்றும் வழங்கினர். தமிழகத்தின் கிழக்கு எல்லையாகவும் மேற்கு எல்லையாகவும் அமைந்த நெடுங்கடல்களை முறையே குணகடல் எனவும், குடகடல் எனவும் சங்க நூல்கள் கூறும். குணவாசல் என்றும், குடவாசல் என்றும் பெயருடைய ஊர்கள் இந் நாட்டில் சில உள்ளன. "குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்தார்" இளங்கோவடிகள் என்று சிலப்பதிகாரப் பாயிரம் சொல்லும். தஞ்சை மாவட்டத்தில் குடவாயில் என்று பெயர் பெற்றிருந்த ஊர், இப்போது குடவாசல் என வழங்கப் பெறுகின்றது. அந்த வகையில் குடமூக்கு என்பது மேற்கு மூலையில் அமைந்த ஊரைக் குறித்தது போலும்! அதனைக் கும்பகோணம் என்று வடமொழியிற் பெயர்த்தனர் புராணமியற்றிய புலவர்கள்.

குடமூக்கில் கோயில் கொண்ட சிவபெருமானையும் திருமாலையும் பாமாலை பாடிப் போற்றினர் பெரியோர். தேவாரப் பாடல்களிலும்[1] ஆழ்வார்கள் அருளிய திருப்பாசுரங்களிலும் குடமூக்கு என்றே இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது.

குடமூக்கு என்ற பெயரைக் குடந்தை என்றும் குறுக்கி வழங்குவதுண்டு ஆராவமுதாய், அரவணையிற் பள்ளி கொண்ட திருமாலைக் குடந்தைப் பதியிலே கண்குளிரக் கண்டு வழிபட்டார் நம்மாழ்வார்.

> **"தீரா வினைகள் தீர என்னை**
> **ஆண்டாய் திருக்குடந்தை**
> **ஊரா உனக்கு ஆட்பட்டும்**
> **அடியேன் இன்றும் உழல்வேனோ"**

என்று மனமுருகிப் பாடினார்.

திருக்குடந்தையில் பல்லாண்டு வாழ்ந்து அப் பதியைப் புனிதமாக்கிய பெரியார்களுள் ஒருவர் திருமழிசை யாழ்வார். ‘திருமழிசைப் பிரான் உகந்த இடம்’ என்று குடந்தையைப் புகழ்ந்துரைத்தார் பெரிய வாச்சான் பிள்ளை. குடந்தை மாநகரிலே கண் வளர்ந்த திருமாலைக் காணுந்தோறும் திருமழிசையார் காதல் பெருகிற்று; நினைக்குந்தோறும் அவர் நெஞ்சம் உருகிற்று.

‘என் ஐயனே! காடும் கரையும் அலைந்தமையால் உன் கால்கள் அலுத்தனவோ? திருமேனி சலித்ததோ? காவிரிக் கரையிலுள்ள குடந்தைக் கோவிலுள் பள்ளி கொண்டு இளைப்பாற்றிக் கொள்கின்றாயோ? அடியேற்கு நீயே அன்பாவாய்! ஆரமுதம் ஆவாய்! இன்பாவாய்! எல்லாமும் நீயே ஆவாய்! என்னை முகம் பாராயோ! எழுந்திருந்து பேசாயோ!’ என்று முறையிட்டார்.[2]

வடநாட்டில் நிகழும் கும்பமேளா என்னும் விழாவைப் போன்று கும்பகோணத்தில் பன்னீராண்டுக்கு ஒரு முறை நடைபெறுவது ‘மாமாங்கம்’ என்னும் மகாமகம். நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக நடந்து வரும் மகாமக விழாவிலே கோடிக்கணக்காக மக்கள் கூடுவர்; புனிதநீர் ஆடுவர்; ஈசன் புகழ் பாடுவர்.

இத்தகைய சீர்மை வாய்ந்த குடந்தையம்பதியில் கலை வளர்க்கும் கல்லூரி யொன்று சிறப்புற்று விளங்குகின்றது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் வடகரையில் கண்ணுக்கினிய சோலையின் நடுவே காட்சியளிக்கும் அக்கலைக் கோயில் தமிழ் நாட்டுத் தலைவர் பலரை உருவாக்கித் தந்த பெருமை யுடையதாகும்; எண்ணிலும் எழுத்திலும் வல்லார் பலரை ஈன்றளித்துப் பிறநாட்டு நல்லறிஞர் சூட்டிய புகழ் மாலையும் பெற்ற பதியாகும்.

எண்ணியல் ஆராய்ச்சியில் வல்லவர் என மேலை நாட்டு நுண்ணறிவாளரும் பாராட்டிய கணித மேதை யாகிய இராமானுசம் இளமையிற் கலை பயின்ற கல்லூரி அதுவே ! ஆங்கில மொழியை ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, இனிமையாகச் சொற்பொழிவாற்றும் திறமை பெற்றுச் 'சொல்லின் செல்வர்' என்று எல்லோராலும் புகழப்பட்ட சீனிவாச சாஸ்திரியாரை உருவாக்கிய கல்லூரியும் அதுவே ! இன்னும் பாரத நாட்டில் பெயர் பெற்ற பேராசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும், நிர்வாகத் திறமையுடையோராகவும், அமைச்சராகவும், ஆட்சியாளராகவும் விளங்கிய அறிஞர் பலர் அக் கல்லூரி மாணவர்களேயாவர்.

நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல் தண்டமிழ்ப் பெருந் தொண்டராகிய சாமிநாதையர் அக்கல்லூரியில் ஒரு நல்லாசிரியராக அமர்ந்தார். இருபதாண்டுகளுக்கு மேலாக அங்கு இடையறாப் பணி செய்தார். ஏட்டில் அடங்கியிருந்த தமிழ்ப் பெருங் காவியங் களையும் சங்க நூல்களையும் ஆராய்ந்து அச்சிட்டு அழியாப் புகழ் எய்தினார். நாடுதோறும் சென்று ஏடு தேடி, அகப்பட்ட சுவடிகளை எழுத்தெழுத்தாக ஆராய்ந்து, விளங்காத பொருள்களை வல்லார்வாய்க் கேட்டுணர்ந்து, அல்லும் பகலும் அரும்பாடுபட்டு அவர் குடந்தையில் வெளியிட்ட சிந்தாமணிக் காவியத்தைத் தமிழகம் பொன்னே போல் போற்றி மகிழ்ந்தது.

சிந்தாமணியைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் அச்சிட்டு உதவினார் சாமிநாதய்யர். பத்துப்பாட்டும், புறநானூறும், பிற நூல்களும் ஒன்றன்பின் ஒன்றாய் அச்சேறி வரக்கண்டு தமிழகம் பேரின்பம் அடைந்தது; செந்தமிழ்ச் செல்வத்தை ஐயரவர்கள் வாயிலாக வாரி வழங்கிய கும்பகோணத்தைத் திசை நோக்கி வணங்கிற்று.

# 19. சத்திமுற்றம்

**நா**ரைப் பாட்டொன்று பாடி இந்நாட்டில் நல்ல புகழ் பெற்றார் ஒரு கவிஞர். அவர் காவிரி நாட்டுச் சத்தி முற்றத்திலே பிறந்தவர்; வறுமையிற் செம்மையுற்று வாழ்ந்தவர். பல்லாண்டுகளாகத் தம்மோடு உறவு கொண்ட வறுமையை ஒழிக்க ஒரு வழி தேடினார். பசுந்தமிழ் வளர்க்கும் பாண்டிய மன்னனைக் கண்டால் கலி தீரும் என்று கருதினார். மனையாளிடம் விடைபெற்றுப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரை மாநகரை அடைந்தார்.

அந்நகரில் அவரை அறிந்தார் எவரும் இல்லை. அரண்மனைக் காவலாளரைக் கடந்து மன்னன் முன்னே செல்வதற்கேற்ற ஆடையும் அணியும் அவரிடம் இல்லை. அந்தி மாலை வந்தது. அற்றார்க்கும் அலந்தார்க்கும் உறைவிடமாகிய அம்பலத்திற் போந்து சலிப்புற்றுச் சாய்ந்தார் சத்திமுற்றப் புலவர்.

அவர் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. ‘வறுமையுற்ற மனையில் வாழும் மனையாள் என் வரவு நோக்கிக் காத்திருப்பாளே’ என்று வருந்தினார். ‘பாண்டியனைக் கண்டு வரும் கணவன், பொன்னும் பொருளும் கொண்டு வரும்’ என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்திருப்பாளே என்றெண்ணி மனம் பதைத்தார்.

அப்போது ஆகாய வழியே அணியணியாய்ப் பறந்து சென்ற நாரைகளைக் கண்ணுற்றார். அப்பறவைகள்

தென்குமரித் துறையிலே வயிறார மீன் அருந்தி ஆணும் பெண்ணுமாய்க் காவிரி நாட்டை நோக்கிச் செல்லும் காட்சி அவர்க்கு இன்பம் அளித்தது. அவற்றை "நாராய் நாராய்" என்று நயந்து அழைத்தார்; அவற்றின் காலழகை யும், வாயழகையும் அருமையாகப் புகழ்ந்தார்.

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பனம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"

என்று பரிந்து பாடினார். 'சிவந்த காலும் செம்பவள வாயும் உடைய நாரைகாள் ! உம்மிடம் ஒன்று சொல்கின்றேன். சிறிது செவி சாய்ப்பீராக. நீங்கள் செல்லும் திசையில் காவிரி நாட்டிலே சத்திமுற்றம் என்ற ஊர் ஒன்று உண்டு. அங்குள்ள குளத்தின் அருகே என் குடிசையைக் காண்பீர் ! வாடிய முகத்தோடு என் வரவு பார்த்து வாசலில் காத்திருப்பாள் என் மனையாள். அவளிடம் போந்து 'தமிழ் மன்னன் அரசு வீற்றிருக்கும் மதுரையம்பதியில் ஆடையின்றி வாடையில் மெலிந்து, கையையும் காலையும் சுருட்டி மடக்கி, பெட்டிப் பாம்பு போல் பெருமூச்செறியும் ஏழையாகிய என்னை அம்பலத் திலே கண்டோம் நாங்கள் என்று அன்புகூர்ந்து சொல்லுங்கள்' என்று வேண்டினார்.

"நீயும் உன் பேடையும்
தென்திசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட ஏகுவீர் ஆயின்
சத்திமுற் றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கும் மனைவியைக் கண்டுஎம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலுறத் தழீஇ

அலகுதிறந் தன்ன பல்லினன் ஆகிப்
பேழைசெய் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே "

என்று அவர் பாடிய பாட்டைக் கேட்டான் அவ்வழியாக ஆலயத்திற்குச் சென்ற அரசன். நாரையை நோக்கிப் புலவர் பாடிய பாட்டின் நயம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

ஆலய வழிபாட்டை முடித்து மாளிகைக்குத் திரும்பிய மன்னன் மனம் சத்திமுற்றப் புலவர் பாடிய நாரைப் பாட்டையே நாடிற்று. நாரையின் நீண்ட அலகிற்குப் பனங் கிழங்கை உவமையாகச் சொல்லிய நயத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் தழைத்தான். மறு நாள் அம்பலத்தில் இருந்த ஏழைப் புலவரை அவைக் களத்திற்கு வருவித்தான்; அவர் பாட்டின் அருமையைப் பாராட்டினான். பெரும் பரிசில் அளித்து அவர் வறுமையைப் போக்கினான்.

இப் புலவர் பிறந்த ஊராகிய சத்திமுற்றம் சாலப் பழமை வாய்ந்தது. கும்பகோணத்திற்கு அருகேயுள்ள இவ்வூர் தேவாரப் பாடல் பெற்றுள்ளது.

"அத்தா, அடியேன் அடைக்கலம்
கண்டாய் அமரர்கள்தம்
சித்தா திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே "

என்று மனமுருகிப் பாடினார் திருநாவுக்கரசர்.

இத்தகைய பெருமை சான்ற ஊரின் பெயர் நாளடைவில் சத்தி முத்தம் எனச் சிதைந்து வழங்கலாயிற்று. காற்று, நாற்று என்ற சொற்கள் காத்து, நாத்து என வழங்குதல் போன்று முற்றம் முத்தம் ஆயிற்று.

இவ்வாறு சிதைந்த அச்சொல்லின் அடியாக எழுந்தது ஒரு சுவையான கதை. சத்தியாகிய உமையாள் சிவனருள்

பெறுவதற்கு நெடுங்காலம் தவம் புரிந்தாள். உமா தேவியின் தவத்தை மதித்து ஈசன் காட்சியளித்தான்; 'என்ன வரம் வேண்டும்' என்று அன்புடன் வினவினான். அப்போது காதலுற்ற உமையாள் 'உம்மை இவ்விடத்தில் முத்தமிட வேண்டும்' என்று வேண்டினாள். அதற்கு ஈசனும் இசைந்தான். சத்தி முத்தமிட்ட இடம் அன்று தொட்டுச் சத்தி முத்தம் என்னும் பெயர் பெற்றது என்று ஒரு கதை முளைத்தது. இதற்குச் சான்றாக,

**"மட்டார் குழலி மலைமகள்**
**பூசை மகிழ்ந்தருளும்**
**சிட்டா திருச்சத்தி முற்றத்து**
**உறையும் சிவக்கொழுந்தே"**

என்ற தேவாரத் திருப்பாசுரம்[4] எடுத்துக் காட்டப் படுகின்றது.

# 20. திருநாகேச்சரம்

தமிழ் நாட்டிலே குற்றாலம் இரண்டு உண்டு; பாபநாசமும் இரண்டு உண்டு; திருநாகேச்சரமும் இரண்டு உண்டு. சோழ நாட்டிலே கும்பகோணத்துக்கு அருகே உள்ளது ஒரு நாகேச்சரம்; தொண்டை நாட்டிலே குன்றத்தூருக்கு அண்மையில் உள்ளது, மற்றொரு நாகேச்சரம். சோழ நாட்டுத் திருநாகேச்சரம் பழங்காவிரி யாற்றின் கரையில் அமைந்த பாடல் பெற்ற பகுதியாகும்.

குலோத்துங்க சோழன் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தில் அவன் அவைக்களத்தில் முதலமைச்சராக விளங்கினார் சேக்கிழார் என்னும் தமிழ்ப் பெருமகன். அவர் தொண்டை நாட்டுக் குன்றத்தூரிலே பிறந்தவர்; நூலறிவும் நுண்ணறிவும் பெற்றவர். சிவநெறியும் செந்தமிழும் பேணி வளர்த்தவர். தமிழ்மாலை பெற்ற தலங்களையெல்லாம் வழிபடும் பேறு பெற்ற அப்பெருமான் நாகேச்சரத்தில் திருப்பணிகள் பல செய்தார்.

தேவாரம் பாடிய மூவருள் ஒருவராகிய சுந்தரமூர்த் தியின் உள்ளங் கவர்ந்தது திருவாரூர்ப் பூங்கோயில். திருவாசகம் அருளிய மணிவாசகரின் மனத்தை அள்ளிக் கொண்டது திருப்பெருந்துறை. அவ்வண்ணமே திருத் தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரின் சிந்தையைக் கொள்ளை கொண்டது திருநாகேச்சரம். அங்கே போந்து ஈசனைப் போற்றாத நாளெல்லாம் பிறவா நாளே என்று

கருதினார் அப் பெரியார். அமைச்சர் பதவியினின்றும் நீங்கி அமைதியாகத் தம் ஊரிற் போந்து வாழுங் காலத்தில் திருநாகேச்சரத்தை நாள்தோறும் வணங்குதல் இயலாதே என்று எண்ணி வருந்தினார். அக்குறையை நீக்குவதற்கு ஒரு வழி தேடினார்; குன்றத்தூரின் அருகே திருநாகேச்சரம் ஒன்றை அமைக்கத் துணிந்தார். நல்ல வழியில் ஈட்டிய பொருள் அனைத்தையும் நாதன் திருப்பணியில் செலவிட்டார். தொண்டை நாட்டிலே ஒரு நாகேச்சரம் கண்டார்.[2]

ஈச்சரம் என்னும் பெயருடைய ஊர்கள் தமிழ் நாட்டில் பலவாகும். ஈசன் கோயில் ஈச்சரம் எனப்படும்.[3] மன்னரும் முனிவரும் முன்னாளில் ஈச்சரம் எடுத்தனர். காவிரிப்பூம் பட்டினத்தில் பல்லவ மன்னன் கட்டிய திருக்கோயில் பல்லவனீச்சரம் என்று பெயர் பெற்றது. தஞ்சையம்பதியில் இராசராசன் கட்டிய பெருங்கோயில் இராசராசேச்சரம் என்று வழங்கப் பெற்றது. இந்த முறையில் நாகர் தலைவன் ஒருவன் நிறுவிய சிவாலயம் நாகேச்சரம் என்று அழைக்கப் பட்டது போலும். திருநாகேச்சரம் என்ற கோயிற் பெயர் நாளடைவில் ஊர்ப்பெயரும் ஆயிற்று.

அவ்வூரில் பழமையான திருமால் கோயிலும் உண்டு. திரு விண்ணகர் என்பது அதன் பெயர். பண்டைத் தமிழ் நாட்டிலே பல விண்ணகரங்கள் விளங்கின. காஞ்சி மாநகரில் பரமேச்சுரப்பல்லவன் கட்டிய திருமால் கோயில் பரமேச்சுர விண்ணகரம் என்று பெயர் பெற்றது. கும்பகோணத்திற்கு அருகே நந்தி மன்னன் எடுத்த திருக்கோயில் நந்திபுர விண்ணகரம் என்று அழைக்கப் பெற்றது. இவ்வாறு அமைந்த விண்ணகரங்களுள் சாலப் பழமையும் பெருமையும் வாய்ந்தது திருநாகேச்சர விண்ணகரம். ஆதலால், அது திருவிண்ணகர் என்று சிறப்பிக்கப்பட்டது.[4]

நின்ற திருக்கோலத்தில் அவ்விண்ணகரில் காட்சிதரும் பெருமானை வழிபட்டு நெஞ்சுருகி நின்றார் நம்மாழ்வார். தம்மை ஆட்கொண்டருளிய திருவிண்ணகர்ப் பெருமானைப் "பொன்னப்பன் ! மணியப்பன் ! முத்தப்பன் !" என்று வாயாரப் புகழ்ந்து போற்றினார். 'தன் ஒப்பார் எவருமின்றித் திகழும் என் அப்பன் என்னையும் அடைக்கலமாக ஏற்று அருள் புரிந்தானே' என்று அகம் குழைந்தார்.

**" மின்னப்பொன் மதிள்சூழ் திரு**
**விண்ணகர் சேர்ந்த அப்பன்**
**தன்னொப்பார் இல்லப்பன் "**

என்று பாடி மகிழ்ந்தார். அவர் திருவாக்கை ஓதி உருகிய அடியார்கள் அவ்விண்ணகர்ப் பெருமானை "ஒப்பார் இல் அப்பன்" என்று அழைத்தார்கள். தனக்கு உவமையில்லாத் தலைவன் என்று பொருள்படும் அத் திருநாமம் 'ஒப்பில் அப்பன்' என மருவிற்று. "நின்ஒப்பார் பிறரின்றி நீயே ஆனாய்" என்று வாயாரப் புகழ்ந்து அன்பர்கள் வழி பட்டார்கள். நாளடைவில் ஒப்பிலியப்பன் என்ற பெயரைப் பொதுமக்கள் உப்பிலியப்பன் எனச் சிதைத்து வழங்குவார் ஆயினர். அப் பெயருக்குப் பொருத்தமாக உப்பில்லாத நிவேதனமே அப்பெருமானுக்கு உகந்தது என்னும் கொள்கையும் நிலைபெற்றது.

திருவிண்ணகர் என்ற பழம்பெயர் நாளடைவில் மறைந்து போயிற்று. உப்பிலியப்பன் கோயில் என்பதே இக் காலத்தில் வழங்கும் பெயர். ஒப்பில்லாத அப்பன் உப்பில்லாத உணவையும் ஏற்றுக்கொண்டு வாழையடி வாழையென வந்து வணங்கும் ஏழை மாந்தர்க்கு இன்னருள் புரிகின்றான்.

# 21. குரங்காடுதுறை

கனிகளும் கன்னலும் கணக்கின்றித் தரும் காவிரி நாட்டிலே கவலையின்றிக் குரங்குகள் குதி போடும்; கொஞ்சி விளையாடும். இக் காட்சியைக் கண்டு இன்புற்ற பழந் தமிழ் மக்கள் காவிரியாற்றின் இரு துறைகளைக் குரங்கினத்திற்கே உரிமையாக்கி, 'குரங்காடுதுறை' என்று பெயரிட்டனர். மந்தியொடு மாந்தரும் செழிப்புற்று வாழும் அத்துறைகள் தேவாரப் பாமாலை பெற்ற பழம்பதிக ளாகும்.

முன்னொரு காலத்தில் வானர நாட்டின் தலைவனாக விளங்கினான் வாலி. அவன் சிறந்த வீரன்; சிவனடி போற்றும் சீலன். காவிரிக் கரையில் உள்ள திருவை யாற்றிலும் குரங்காடு துறையிலும் அவன் ஈசனை வணங்கினான் என்று தேவாரம் பாடுகின்றது.[1]

"வாலியார் வணங்கி ஏத்தும்
திருவை யாறமர்ந்த தேனே"

என்று சிறப்பித்தார் திருநாவுக்கரசர். 'காவிரிக்கோட்டம்' என்று பாராட்டப் பெற்றுள்ள திருவையாற்றுக் கோவிலில் ஈசனை வழிபடும் பேறு பெற்ற வானரத் தலைவனை 'வாலியார்' என்று போற்றினார் திருநெறித் தலைவராகிய திருநாவுக்கரசர். காவிரியாற்றின் வடகரையில் உள்ள 'குரங்காடு துறை' யிலும் வாலி ஈசனை வழிபட்டான் என்பது திருஞான சம்பந்தர் தேவாரத்தால் தெரிகின்றது.[1]

இலங்கையில் அரசு புரிந்த இராவணனை வென்று ஒடுக்கிய வாலிதான் காவிரித்துறையில் ஈசனை வழிபட்டான் என்பதும் நன்கு விளங்குகின்றது.

> " நீலமா மணிநிறத்து அரக்கனை
> இருபது கரத்தோடு ஒல்க
> வாலினால் கட்டிய வாலியார்
> வழிபட மன்னு கோயில் "

என்பது திருஞான சம்பந்தர் வாய்மொழி. தேவாரத்திலே குறிக்கப்பட்ட இவ் வரலாற்றை இராமாயணத்தில் விரிவாகக் காணலாம்.

வலிமை சான்ற வாலியை வஞ்சனையால் வெல்லக் கருதினான் இராவணன்; சிவ பூசை செய்யும் வேளையில் அவ் வீரனைப் பற்றிச் சிறை செய்தல் எளிது என்று எண்ணினான்; தென் கடற்கரையில் வழிபாடு செய்து கொண்டிருந்த வாலியின் பின்புறமாகச் சென்று இருபது கைகளாலும் அவனைப் பற்றினான். அப்போது வாலியின் வழிபாடு சிறிது கலைந்தது; வீரம் செறிந்த வால் எழுந்தது; பின்னே நின்று பற்றிய பகைவனைச் சுற்றி இழுத்து இறுக்கி முடிந்தது. வலியச் சென்று கொடிய வாலிலே சிக்கிக் கொண்ட மடமையை நினைந்து மறுக்கமுற்றான் இராவணன்.

முறையாகப் பூசனை முடித்த பின்னர் இலங்கை வேந்தனைக் கண்ணுற்றான் வாலி. ' நிருதர் தலைவனே ! நீ என்பால் வந்த காரணம் என்ன ? ' என்று வினவினான். ' வீரனே ! உன்னோடு போர் செய்யக் கருதி வந்தேன்; வாலில் அகப்பட்டேன் ! வாடினேன்; வருந்தினேன் ' என்றான் இராவணன். ' போர் ' என்ற சொல்லைக் கேட்டபோது பொங்கி நிமிர்ந்தன வாலியின் தோள்கள். உள்ளக் கிளர்ச்சியோடு நேர்மையாகப் பேசலுற்றான்.[2]

'அரக்கர் தலைவனே ! உன் விருப்பத்தின்படியே போர் செய்வோம். வெற்றியும் தோல்வியும் ஒரு வழி நில்லா. வென்றவர் தோற்பதும், தோற்றவர் வெல்வதும் வையத்து இயற்கை. இப்பொழுதே போர் புரிவோம், வருக !' என்று அழைத்தான் வாலி. பேராற்றல் உடைய வாலியை ஒரு காலும் வெல்ல முடியாது என்பதை நன்கறிந்த இராவணன், ' ஐயனே ! நின் வாலால் கட்டுண்டு நான் பட்டது போதும். இனி எந்நாளும் உன்னோடு போர் புரிவதில்லை. இன்று முதல் நான் தோழன்' என்றான். அன்றுதொட்டு வானர மன்னனும் இலங்கை வேந்தனும் மனமொத்த நண்பராயினர்.

ஆயினும் வாலியின் வாலினாற் கட்டுண்ட வசை வாயினாற் சுட்ட வடுப்போல இலங்கை வேந்தன்பால் நீங்காது நிலைபெற்றது. செருக்குற்ற அம் மன்னனை ஏளனம் செய்யக் கருதிய பகைவர்கள் அந் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுவாராயினர். அன்னவருள் ஒருவன் அனுமன்.

இலங்கைக்குத் தூது சென்று, அசோக வனத்தை அழித்து, அரக்கர் சேனையைச் சிதைத்து, அழிம்பு செய்த அனுமனைப் பிடித்து இராவணன் முன்னே நிறுத்தினான் அவன் மைந்தனான மேகநாதன். தருக்கும் செருக்கும் கொண்ட அரக்கர் கோமான் அனுமனை இகழ்ந்து நோக்கி, 'அடே ! நீ யார் ? வாசவனோ ? கேசவனோ ? வேலனோ? காலனோ? அயனோ? அரியோ? பூமி தாங்கும் நாகமோ? பூசுரர் விடுத்த பூதமோ?' என்று வெடித்த குரலில் வினவினான். இராவணன் எடுத்து வீசிய அடுக்கு மொழிகளை அமைதியாகக் கேட்ட அனுமன், 'அரசே ! நீ சொல்லிய அனைவரும் அல்லன். அயோத்தி மன்னனாகிய இராமனுக்கு நான் அடிமை செய்வேன். அனுமன் என்னும் பெயருடையேன். 'வாலியின் மைந்தன் விடுத்த தூதனாய் இங்கு வந்தேன்' என்று மாற்றம் உரைத்தான். வாலியின்

பெயரைக் கேட்டபோது அரக்கனது அசையாத சென்னி அசைந்தது; குழையாத மனம் குழைந்தது. வன்சொல் வழங்கிய வாய் வணக்கமுற்றது. எதிரே நின்ற தூதனை இனிது நோக்கி, 'வாலியின் மகன் விடுத்த தூதனா நீ? வலிமை சான்ற வாலி செம்மையாக வாழ்கின்றானா? அவன் அரசாட்சி நன்றாக நடைபெறுகின்றதா?' என்று வினவினான். அவன் அகத்தில் எழுந்த அச்சத்தை முகத்தில் கண்ட அனுமன், 'அரக்கனே ! அஞ்சாதே ! வாலி மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டான். இனி வரமாட்டான். அவன் வாலும் அவனோடு போய்விட்டது.'

**"அஞ்சலை அரக்கபார் விட்டு**
**அந்தரம் அடைந்தான் அன்றே**
**வெஞ்சின வாலி மீளான்**
**வாலும்போய் விளிந்த தன்றே !"**

என்று ஏளனம் செய்தான்.

இவ்வாறு அசதியாடிய அனுமன் மீது அருஞ் சீற்றம் கொண்டான் அரக்கர் கோமான். குறும்பு செய்த குரங்கின் வாலைச் சுட்டெரிக்குமாறு பணித்தான். அப்பணி தலைமேற்கொண்ட அரக்கர்கள் அனுமன் வாலில் தீக் கொளுவினர். அத் தீயோர் இட்ட தீயை இலங்கையிலே வைத்துவிட்டு இராமனிடம் திரும்பிச் சென்றான் அவ் வீரன்.

அனுமன் வைத்த தீயால் இலங்கையின் ஒரு பாகம் எரிந்து அழிந்தது. இராவணன் மானத்தால் மனம் கொதித்தான். இலங்கை அமைச்சரும், படைத் தலைவரும் வீரம் பேசி அவன் மனத்தில் எழுந்த சீற்றத்தை வளர்த்தார்கள். அப்போது அறிஞனாகிய விபீஷணன் பணிவுடன் எழுந்து அறிவுரை பகரலுற்றான்: 'ஐயனே ! கட்டும் காவலும் உடைய இலங்கை மாநகரை ஒரு குரங்கு சுட்டது என்று சொல்லுதல் சரியோ? அசோக வனத்தில்

மனங் கலங்கிக் கண்ணீர் வடிக்கும் மங்கையாகிய சீதையின் கற்புக் கனலன்றோ இந்நகரத்தைச் சுட்டெரித்தது? அன்றியும் உனக்குக் குரங்கினால் கேடு வரும் என்று முன்னே சாபம் உண்டு. வாலியின் வாலாற் கட்டுண்டு நீ கலங்கியது அச் சாபத்தை மெய்ப்பித்தது அன்றோ ?' என்று வினயமாகப் பேசினான்.

இவ்வாறு பேசிய விபீஷணனை நோக்கி, 'தம்பி ! நீ அறியாது பேசினாய் ! வானர வீரனாகிய வாலியிடம் நான் தோற்றேன் என்பது உண்மைதான். ஆனால் எப்படித் தோற்றேன் என்பது நீ அறியாய். அம்பலத்தில் ஆடுகின்ற எம்பெருமானை வழிபட்டு அரியதோர் வரம் பெற்றிருந்தான் வாலி. அதனை அறியாது அவனோடு போர்புரியச் சென்றேன். இறைவன் அருளிய வரத்தின் படியே என் வலிமையிற் பாதி அவன்பால் சென்றது. என் வலியும் தன் வலியும் கொண்டு என்னை வென்றான் வாலி. எனவே, வரங்கொண்ட வாலிக்குத் தோற்றேனே யன்றி, வால்கொண்ட வாலிக்குத் தோற்றேன் அல்லேன்' என்று மழுப்பினான் இலங்கை மன்னன்.

வாலியின் மைந்தனாகிய அங்கதனும் இராவணனிடம் ஒரு முறை தூது செல்ல நேர்ந்தது. இலங்கையைப் போர்க்களமாக்கி, எண்ணிறந்த உயிர்களை மாய்ப்பதற்கு மனமிசையாத இராமன் அங்கதனை அழைத்து, 'நம்பி ! இராவணனிடம் நீ தூது சென்று சிறையில் வாடும் சீதையை விடுகின்றானா? அல்லது செருக்களத்தில் ஆவியை விடுகின்றானா? என்று கேட்டு இரண்டில் ஒன்றை அறிந்து வா' என்று அனுப்பினான். அவ் ஆணையைத் தலைமேற் கொண்டு சென்றான் அங்கதன். படை திரட்டிக் கொண்டிருந்த இராவணன் அவனைக் கண்டு பரபரப் புற்றான். அரக்கனது சீற்றத்தை அறிந்தும் சிறிதும் அச்சமுறாத அங்கதன் பேசலுற்றான்; 'அரசே, என்னை ஆளுடைய தலைவன் பூதநாயகன்; புவிக்கு நாயகன்; வேத

நாயகன்; விதிக்கு நாயகன்; சீதை நாயகன்; அவன் விடுத்த தூதன் யான்' என்று தன்னை அறிவித்தான்.

அப்போது இராவணன் எள்ளி நகைத்தான். வலிமை சான்ற 'அரனிருக்க, அரியிருக்க, அயன் இருக்க, மரத்திலே திரியும் மந்திகளை யெல்லாம் மறித்துத் திரட்டி இலங்கையிற் புகுந்த உன்னை இங்கே தூதனுப்பிய மனிதனோ உலகநாதன்? தேவரிற் சிறந்த மூவரும் இங்கு வருவதற்கு அஞ்சுவர். என்முன் அஞ்சாது வந்த நீ யாவன்?' என்றான்.

அது கேட்ட அங்கதன் 'ஐயனே! முன்னொரு நாள், இராவணன் என்பான் ஒருவனைத் தன் வாலினால் இறுக்கி வென்று மலைதொறும் தாவிய வாலியின் மைந்தன் யான்' என்று மாற்றம் உரைத்தான். 7

தன் எதிரே நின்றவன் வாலியின் மைந்தன் என்று அறிந்து போது அரக்கர் கோன் உள்ளத்தில் ஆர்வம் பெருகிற்று. அவனை வளைத்துத் தன்பால் இழுத்துக் கொள்ள முயன்றான்; நயமொழி பேசினான். ஆயினும் அரக்கனது சூழ்ச்சியை அறிந்த அங்கதன் அவனை வெறுத்துப் பேசி வெளியேறினான்.

இவ்வாறு இராமாயணத்தில் விரித்துரைக்கப்படும் செய்திகள் வாலியின் வீரத்தையும் சீலத்தையும் நன்கு விளக்குவனவாகும்.

# 22. ஆதனூர்

'சிதம்பரம் போகாமல் இருப்பேனோ; சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ' என்று கொள்ளிட நதிக் கரையில் நின்று உள்ளம் கசிந்து உருகினார் ஒரு தொண்டர். 'கட்டையிருக்கையில் சிதம்பரம் போய்க் காண வேணும் ஐயே' என்று அவர் கண்ணீர் விட்டுக் கதறினார். இவ்வாறு அல்லும் பகலும் தில்லைச் சிற்றம்பலத்தையே நினைந்து உருகிய நந்தனார் என்னும் நல்லார் கொள்ளிடநதிக் கரையில் உள்ள ஆதனூரில் பிறந்தவர்.[1] புலையர் குலத்தைச் சேர்ந்தவர்; சேரியிலே வாழ்ந்தவர். அங்கே எலும்பும் தோலும் குவிந்திருக்கும்; பருந்தும் கழுகும் வட்டமிடும்; பன்றியும் நாயும் படுத்திருக்கும். இத்தகைய சூழ்நிலையில் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சீலராய் விளங்கினார் நந்தனார்.

"சிவலோக நாதனைக் கண்டு
சேவித் திடுவோம் வாரீர்"

என்று ஆனந்தக் களிப்புற்று ஆடினார்.

ஈனத் தொழில் புரிந்து, ஊனைத் தின்று உழன்று, ஈசனை மறந்தொழிந்த தம் இனத்தாரைப் பாசங் கலந்த மொழிகளால் பரிந்தழைத்தார்.

ஆதனூருக்கு அருகே திருப்புன்கூர் என்ற பாடல் பெற்ற பழம் பதி அமைந்துள்ளது. அப் பதியை நாடிற்று நந்தனார் உள்ளம். சேரி மாந்தரிற் சிலர் அவருடன்

சேர்ந்தார்; வாரும் தோலும் வரிசையாக எடுத்தார். பள்ளுப் பாட்டிசைத்தார். திருப்புன்கூரை வந்தடைந்தார்.

திருக்கோயிலின் முன்னே நின்று நந்தனார் துள்ளிக் குதித்தார்; சிவஞானத் தேனை அள்ளிக் குடித்தார். ஈசனே ! சிவலோக நாதனே ! இந்த ஈனப்பறையருக்கு அருள் புரிய லாகாதா? உன்னி உன்னிப் பார்த்தாலும் உன் திருமேனி தெரியவில்லையே ! வளைந்து குனிந்து பார்த்தாலும் உன் வடிவத்தைக் காணும் வகையில்லையே ! மலைபோல் ஒரு மாடு கிடந்து மறைக்குதே !

" வழிமறைத் திருக்குதே மலைபோலே
ஒரு மாடு படுத்திருக்குதே "

என்று முறையிட்டார். அந்நிலையில் ஈசன் அருளால் நந்தி விலகிற்று; நாதன் மேனி விளங்கிற்று. நந்தனார் கண்டார்; ஆனந்தம் கொண்டார். குதித்துக் குதித்துக் கும்பிட்டார்; துதித்துத் துதித்துத் துள்ளினார்; போற்றி போற்றி என்று பொன்னடி வணங்கினார். பிரியா விடை பெற்றுத் திரும்பி ஆதனூரை வந்தடைந்தார்.

நந்தனார்க்காக நந்தியைச் 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று பணித்த ஈசன் அவ்வூரில் நிகழ்த்திய மற்றொரு அற்புதச் செயல் தேவாரத்தில் குறிக்கப் பட்டுள்ளது. ஒருகால் சோழ நாட்டிலே வானம் பொய்த்தது; வயல் காய்ந்தது; தண்ணீர் இன்றி மக்கள் கண்ணீர் சொரிந்தனர். அப்போது அவ்வூருக்கு வந்தருளினார் சுந்தரமூர்த்தி. ஆலயத்தில் அவரைக் கண்டு தமது குறையை முறையிட்டனர் திருப்புன்கூர் மக்கள். கயிலாச நாதன் அருளால் காலத்தில் மழை பெய்யுமாயின் பன்னிரு வேலி நிலம் ஆலயத்திற்குத் தருவதாக வாக்களித்தார்கள். அந்நிலையில் வானம் கறுத்தது; மேகம் திரண்டது; மின்னொளி கண்ணொளியைப் பறித்தது; பெருமழை பிடித்தது. நாள் முழுவதும் விடாமல் பெய்தது.

ஆற்றிலே வெள்ளம் பொங்கிற்று; நிலமெல்லாம் நீரிலே மூழ்கிற்று. அச்சமுற்ற குடிகள் மீண்டும் ஆலயத்திற் போந்து மழையை நிறுத்த வேண்டும் என்று மாதேவனிடம் முறையிட்டார்கள். அழிவு செய்யாமல் மழை நின்றுவிட்டால், மேலும் பன்னிரு வேலிநிலம் தருவதாக ஒப்புக் கொண்டார்கள். அப்போது மழை நின்றது; வெள்ளம் வடிந்தது. வேளாண்மை சிறந்தது. வாக்களித்த நிலம் சிவலோக நாதனைச் சேர்ந்தது. திருவருளால் நிகழ்ந்த இச் செயலைத் தெரிவிக்கின்றது ஒரு தேவாரப் பாட்டு.

> "வையக முற்றும் மாமழை மறந்து
> வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
> உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
> ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந்து எங்கும்
> பெய்யும் மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்து
> பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
> செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
> செழும்பொழில் திருப்புன் கூர்உ ளானே"

என்பது சுந்தரர் திருவாக்கு.

இத்தகைய தண்ணளி வாய்ந்த ஈசன் புகழைப் பேசத் தலைப்பட்டார், நந்தனார். சேரி முழுவதும் சிவமணம் கமழ்ந்தது. இந்த நிலையில் மார்கழித்திங்கள் பிறந்தது. நந்தனார் மனம் சிதம்பரத்தை நாடிற்று; அல்லும் பகலும் தில்லைச் சிற்றம்பலத்தின் எல்லையற்ற பெருமையைச் சொல்லிச் சொல்லி ஆனந்தத்தில் மூழ்கினார். 'சிவனே தெய்வம்; சிதம்பரமே கைலாசம்' என்று தில்லையைத் திசை நோக்கித் தொழுதார்.

> "நாளைப் போகாமல் இருப்பேனோ - தில்லை
> நாதனைக் காணாமல் புசிப்பேனோ - நான்"

என்று ஊண் உறக்கமற்றுச் சேரியைச் சுற்றித் திரிந்தார். 'நாளைப் போவேன்' என்று நாள்தோறும் சொல்லிய

தொண்டரை 'நாளைப் போவார்' என்றே ஆதனூர் வாசிகள் அழைப்பார் ஆயினர்.

தில்லைச் சிற்றம்பலமே நந்தனார் கண்ணிலும் கருத்திலும் நிறைந்து நின்றது. குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், பனித்த சடையும், பவளம் போல் மேனியும் உடைய பரமன் அங்கே ஆனந்த நடம் புரியும் அழகினை எண்ணி எண்ணி உள்ளம் தழைத்தார்.[2] அதனைக் கண்டே தீர்வேன் என்று புறப்பட்டார்.

"ஆடிய பாதத்தைத் தாரும் - உம்மைத்
தேடிவந்தேன் இதோ - பாரும் பாரும்"

என்று பரவசமுற்றுப் பாடினார். தில்லைத் தலத்தைக் கண்டார்; தொல்லைக் கவலை விண்டார்.

மெய்யடியாராகிய நந்தனாரை வருக என்று அழைத்தான் ஈசன்; அந்தமில்லாப் பேரின்பம் அளித்தான். அவர் பிறந்தருளும் பேறு பெற்ற ஆதனூர் இன்று ஆதமங்கலம் என்று அழைக்கப் பெறுகின்றது.

# 23. திரு ஆப்பாடி

பசுக்களைப் பேணி வளர்ப்பது பாரத நாட்டின் பண்பாடு. அவை மேய்வதற்கென்றே சில காடுகளை ஒதுக்கி வைத்தனர் பழங்கால மன்னர். அக் காடுகளில் இயற்கையாக மழையில் முளைத்து வளரும் புல்லை மேய்ந்து, மாந்தர்க்கு நல்ல பாலைத் தரும் பசுவின் கருணையைப் புலவர்கள் பாடி மகிழ்ந்தார்கள்.

> **“ விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து**
> **நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்**
> **பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்**
> **அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந்து ஊட்டும் ”**

பசுவிற்குத் தீங்கிழைத்தல் ஆகாது என்று மணிமேகலை பாடிற்று. பாலிற் சிறந்தது பசுவின் பால் என்பது இந் நாட்டுப் பழங் கொள்கை.[1]

பாற் பசுக்களைப் பரிந்து பேணிப் பாதுகாத்தான் பரந்தாமன்; அதனால் கோபாலன் என்ற பெயரும் பெற்றான்; தென்னாட்டிலே மாடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்ட இடையர், கோபாலர் என்றும் கோவலர் என்றும் அழைக்கப்படுவர்.

> **“ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்**
> **கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை”**

என்று அவர் வாழ்க்கையின் செம்மையைச் சிலப்பதிகாரம் வியந்து பாடிற்று.

அந் நாளில் வாழ்ந்த கோவலர் சூதும் வாதும் அறியாதவர்; பாலைச் சுருக்கி நீரைப் பெருக்கும் பழக்க மற்றவர்; துள்ளி விளையாடும் பாற் கன்றுகளைத் தோற் கன்றுகளாக்கும் பான்மை தெரியாதவர்.

சோழ நாட்டில் உள்ள மணியாற்றின் கரையிலே பசும்புல் நிறைந்த படுகை ஒன்று உண்டு. முன்னாளில் பசுக் குலம் அங்கே செழித்து வளர்ந்தது. அதனால் ஆப்பாடி என்ற பெயர் அதற்கு அமைந்தது. ஆற்றின் தென் கரையில் அழகிய சோலையின் நடுவே நின்றது திரு ஆப்பாடி.[2] அதைச் சுற்றியிருந்த பல ஊர்களிலிருந்தும் பசுக்கள் அங்கு வந்து வயிறார மேய்ந்து அந்திப் பொழுதில் மீண்டு செல்வது வழக்கம்.

அத்தகைய ஊர்களில் ஒன்று சேய்ஞலூர் என்னும் மூதூர். சேய் என்றும், சேயோன் என்றும் செந்தமிழ் நூல்களில் குறிக்கப்படும் முருகப் பெருமானுடைய பெயர் தாங்கி நிற்பது அந் நல்லூர். அவ்வூரிலே வாழ்ந்தான் ஓர் இளைஞன்; அவன் அருங்கலைச் செல்வன்; அருள் நிறைந்த நெஞ்சினன். ஒரு நாள் அவன் தெரு வழியே சென்று கொண்டிருக்கையில் கன்றை ஈன்ற பசுவை ஓர் இடையன் பெருங் கழியால் அடித்து வருத்துவதைக் கண்டான்; இரக்கம் கொண்டான். அக் கொடுமையைத் தடுத்தான்; பசுக்குலத்தின் பெருமையை இடையனுக்கு எடுத்துரைத் தான்.

அவ்வுரை கேட்டுத் திகைத்து நின்ற ஆயனை நோக்கி, இப் பசு மந்தையை இனி நாள்தோறும் நானே ஆப்பாடியிற் கொண்டு மேய்த்து வருவேன்' என்றான். ஆயனும் அதற்கு இசைந்து அகன்றான். அன்று முதல் விசாரசருமன் என்னும் இவ் இளைஞன் மாடு மேய்க்கும் பணியை மேற்கொண்டான்; பசும் புல் நிறைந்த இடம் பார்த்துப் பசுக்களை மேயவிட்டான்; எட்டாத இடங்களிற்

கிடந்த புல்லை வெட்டிக் கொணர்ந்து அவற்றின் முன்னே இட்டான். மண்ணியாற்றின் துறையிலே மாசற நீராட்டிப் பசுக்களைக் கண்ணினைக் காக்கும் இமை போல் கண்காணித்தான்.

நாளடைவில் மந்தை செழித்தது; அவன் சிந்தை திளைத்தது.[3] கருணை வடிவாகிய இளைஞனைக் காணுந் தோறும் பசுக்களின் அன்பு சிறந்தது; பால் சுரந்து நிலத்தில் பாய்ந்தது. இவ்வாறு மண்ணிற் கலந்து பாழாகும் பசுவின் பாலை மாதேவன் பூசைக்குப் பயன்படுத்த ஆசையுற்றான் அப் பையன். உடனே ஆற்றங்கரையில் நின்ற ஆத்தி மரத்தின் அடியில் மணலால் ஓர் உருவம் அமைத்தான்; மண்ணால் அதைச் சுற்றிக் கோயிலும் மதிலும் எடுத்தான்; பசுக்கள் சொரிந்த பாலைக் குடங்களில் ஏந்திப் பரம்பொருளை முழுக்காட்டி, இன்ப வெள்ளத்தில் மூழ்கினான். இவ்வாறு நாளும் ஈசனார்க்குப் பால் முழுக்கு நடைபெற்றது.

இச் செய்தியைக் கேள்வியுற்ற சேய்ஞலூர் மாந்தர் சீற்றமுற்றார். பசு மேய்ப்பதாகச் சொல்லிப் பாலைக் கறந்து மணலிற் கொட்டிப் பாழாக்குகிறான் விசாரசருமன் என்று அவன் தந்தையிடம் குறை கூறினர். மைந்தன் செய்கை கேட்ட தந்தை மனம் வருந்தினான். சிறியவன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு பணிந்து வேண்டினான்.

மறுநாள் மறைவாக மாட்டு மந்தையைப் பின் தொடர்ந்தான் தந்தை. மைந்தன் அறியாமல் ஒரு மரத்தில் ஏறி ஒளிந்திருந்தான்; வழக்கம்போல் பசுக்களை மேயவிட்டு மண்ணியாற்றில் நீராடினான் அவ் விளைஞன்; மெல்லிய மலர்களும் தளிர்களும் கொய்தான்; பசுக்கள் சொரிந்த பாலைக் குடங்களில் நிறைத்தான். மணலைக் குவித்து, மாதொரு பாகனாகப் பாவித்து, ஒருமையுடன் இருந்து வழிபாடு செய்யத் தலைப்பட்டான்.

அக் காட்சியைக் கண்டபோது பொறுமை இழந்தான் தந்தை; பொல்லாத சீற்றமுற்றான். பெருங்கிளை யொன்றை ஒடித்து, ஓடிவந்து பையனைப் பன்முறை அடித்தான். பாற் குடங்களைக் காலால் இடறிக் கவிழ்த்தான். அந் நிலையில் பூசை கலைந்தது. தகாத செயல் செய்த தந்தையின் கால்களை ஒரு கோலால் அடித்து முரித்தான் இளைஞன். அங்கேயே விழுந்து தந்தை இறந்தான்.

தவறு செய்தவன் தந்தையே ஆயினும் தயங்காது ஒறுத்த மைந்தனை மாநிலம் வாயார வாழ்த்திற்று. மங்கை பங்கனும் மனம் மகிழ்ந்து அவனுக்குச் சண்டேசப்பதம் அளித்துத் திருத்தொண்டர் குலத்திற்குத் தலைவனாக்கி னான். அன்று தொட்டுச் சண்டேசுரர் என்று போற்றப்படும் இத் தொண்டர் பெருமையைத் தேவாரமும் புகழ்ந்து பாடிற்று.[4]

உமையம்மையோடு இனிதமர்ந்த ஈசன் வலத் திருவடியில் சண்டேசரை வைத்து, அவர் முடிமீது மலர் மாலை சூட்டி, சண்டேசப் பதம் அளிக்கும் சிற்பத்தைக் கங்கை கொண்ட சோழேச்சரத்தில் இன்றும் காணலாம்.

# 24. அடைக்கல மாதா

மனக்கவலை இல்லாத மாந்தர் இம்மாநிலத்தில் இல்லை. அளவிறந்த பொருள் உடைய அரசர்க்கும் கவலை உண்டு; அருள் ஆர்ந்த மனம் உடைய அறவோர்க்கும் கவலை உண்டு.

இவ்வாறு எல்லோரையும் அலுத்துக் குலைத்து அல்லற்படுத்தும் மனக்கவலையை மாற்றுதற்கு ஏற்ற மருந்தொன்று கண்டனர் மெய்யறிவுடைய மேலோர். அம் மருந்தின் தன்மையைத் தெள்ளத் தெளிய உணர்த்துகின்றார் திருவள்ளுவர்.

> "தனக்கு உவமை இல்லாதான்
> தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது"

என்பது அவர் வாக்கு. 'இறைவன் ஒருவனே தன்னிகரில்லாத் தலைவன். அவனே தஞ்சம் அடைந்தோரைத் தாங்க வல்லவன்; அடைக்கலம் புகுந்தோரை ஆதரித்துக் காக்கும் அருள் உடையவன். அவன் சரணல்லால் சரண் இல்லை என்று உணர்ந்து தஞ்சம் அடைந்தவரே தலைப்படுவர்; மனக்கவலை தீர்ந்த மாறிலா இன்பத்தில் மகிழ்ந்திருப்பர்' என்று அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

'தனக்குவமை இல்லாத் தலைவன்' திருவடி சேர்ந்து எவராலும் கடத்தற்கு அரிய விதியையும் கடந்தான், அந்தணனாகிய மார்க்கண்டன். அடைக்கலப் பொருளாகிய

மார்க்கண்டனைக் காக்கும் பொருட்டு ஈசன் வெளிப்பட்டு, காலதேவனைக் காலால் உதைத்த கதை காவியங்களிலும் பாசுரங்களிலும் பாராட்டப்படுகின்றது.[1]

அடைக்கலத்தின் பெருமையை அறிவுறுத்தும் காவியங்களுள் தலைமை சான்றது இராமாயணம் என்பர். இராமன், நாடு துறந்து காடு புகுந்தபோது, இரக்க மற்ற அரக்கர் இழைத்த கொடுமையால் வாடி வருந்திய அறவோர் அப் பெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். வானர நாட்டில் வாலியின் கொடுமைக்கு ஆற்றாத சுக்கிரீவன் இராமன் அடி பணிந்து அடைக்கலம் புகுந்தான். இறக்கும் தறுவாயில் மெய்ஞ்ஞானம் உற்ற வாலியும் தன் மைந்தனான அங்கதனை இராமனிடம் அடைக்கலமாக ஒப்புவித்தான். அறநெறி துறந்த இராவணன் தம்பியாகிய விபீஷணனும் இராமனைச் சரண் அடைந்தான். இவ்வாறு அடைக்கலம் புகுந்தோரை எல்லாம் ஆதரித்து அவர் மனக்கவலையை மாற்றி யருளிய பெருமையே இராமாவதாரத்தின் பெருமையாகும்.

அடைக்கலத்தின் அருமையறிந்த தமிழ் நாட்டார் அதனைப் பலவாறு போற்றுவார் ஆயினர். அடைக்கலபுரம் என்னும் பெயருடைய ஊர்கள் தமிழ் நாட்டில் உண்டு. பாடல் பெற்ற பழம்பதிகளில் புகலூர் என்றும், புகலி என்றும் பெயர் பெற்ற ஊர்கள் உண்டு. புகல் என்ற சொல்லுக்கு அடைக்கலம் என்பது பொருள். அடைக்கலம் தரும் ஈசன் அமர்ந்தருளும் புகலூரிலே போந்து,

> "பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
> பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று பாடி இறைவன் திருவடி நிழல் அடைந்தார் திருநாவுக்கரசர். சீகாழி என்று இப்போது வழங்கும் சிறந்த ஊருக்குப் 'புகலி' என்ற பெயரும் உண்டு. முன்னொரு காலத்தில் விண்ணவர் கோமானுக்கு அபயம் அளித்துக்

காத்த காரணத்தால் அப் பெயர் அவ்வூருக்கு அமைந்தது என்று புராணம் கூறும். அமரர் தலைவனுக்கு அடைக்கலம் அளித்த புகலியைத் தன்னகத்தேயுடைய சோழ நாட்டின் சீர்மை எந்நாட்டிலும் பரவிற்று.[2] புகலியிலே பிறந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தரைப் 'புகலியர்கோன்' என்று தமிழகம் போற்றிப் புகழ்ந்தது.

இங்ஙனம் அடைக்கலத்தின் பெருமையை அறிந்து போற்றும் தமிழ் நாட்டில் 'அடைக்கல மாதா' வின் திருக் கோவில் ஒன்று இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே எழுந்தது. அக்கோவிலை நிறுவியவர் இத்தாலிய தேசத்தைச் சேர்ந்த வித்தகர்; பெஸ்கி என்னும் இயற்பெயர் உடையவர். தமிழ் நாட்டில் சேசு மதத்தைப் பரப்ப வந்த அப்பெரியார் தமிழ் மொழியை நன்றாகக் கற்றார்; தமிழனைப் போலவே நடையும் உடையும் கொண்டு வாழ்ந்தார். தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டு செய்த அவ் அறிஞரை வீரமாமுனிவர் என்றும், தைரியநாத சுவாமி என்றும் புகழ்ந்து மகிழ்ந்தது தமிழகம்.

அம்முனிவருடைய ஆர்வத்தால் கொள்ளிட நதியின் வடகரையில் உள்ள ஏலாக் குறிச்சியில் தேவமாதாவின் திருக்கோவில் எழுந்தது. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்புரியும் தேவமாதாவுக்கு அடைக்கலமாதா என்று பெயரிட்டனர் முனிவர். கண்ணினைக் காக்கின்ற இமைபோல் மெய்யடியாரைக் காத்தருளும் அடைக்கல மாதாவின் அருட்காவலில் அமைந்த தலத்திற்குத் திருக்காவலூர் என்னும் பெயர் அளித்தார்.

கொள்ளிட நதிக்கரையிலே, தண்ணறுஞ்சோலையின் நடுவே அமைந்த திருக்கோவிலில் கருணைபொழியும் கண்களோடு, மின்னார் முடி புனைந்து, அங்கையில் மணிவடம் தாங்கி அடைக்கல மாதா காட்சி தருகின்றாள். அவ் அருட்கோலத்தைக் கண்டு அகம் குளிர்ந்து பாடினார் வீரமாமுனிவர்.[3]

பாடல் பெற்ற தலங்களுக்குத் தமிழ் நாட்டிலே தனிப் பெருமை உண்டு. தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களும், ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருப்பதிகளும் சாலச் சிறப்புற்று விளங்குகின்றன. இதை அறிந்த வீரமா முனிவர் திருக்காவலூரை ஒரு பாமாலையில் அமைத்துப் போற்றினார்.

'திருக்காவலூர்க் கலம்பகம்' என்னும் பெயரால் வீரமா முனிவர் புனைந்த பாமாலை தெய்வமணக்கும் தமிழ் மாலையாகத் திகழ்கின்றது. அருங்கருணை வாய்ந்த அடைக்கலமாதா அடியாரது பாவத்தீயை ஆற்றுவாள்; பிறவிப் பிணியை மாற்றுவாள் என்று முனிவர் அழகுறப் பாடியுள்ளார்.

திருப்பதி என்னும் திருவேங்கடம் குலசேகர ஆழ்வாரது உள்ளத்தைக் கவர்ந்த வண்ணமே திருக் காவலூர் வீரமா முனிவரின் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலையில் படியாய்க் கிடக்கவும், சுனையில் மீனாய்ப் பிறக்கவும், சோலையில் மரமாய் நிற்கவும் ஆசைப்படுகின்றார் குலசேகர ஆழ்வார். இத்தகைய ஆசை வீரமாமுனிவர் பாடிய கலம்பகத்திலும் வெளிப்படுகின்றது.

"தாள்அணிந்த மதிமுதலாத் தமியனும்அக்
கமலத்தாள் தாங்கி லேனோ
கோள்அணிந்த குழலணிதார் குடைவண்டாப்
புகழ்பாடி மதுஉண் ணேனோ
வாள்அணிந்த வினைப்படைவெல் வலிச்சிங்கம்
ஈன்றஒரு மானாய் வந்தாள்
கேள்அணிந்த காவல்நலூர்க் கிளர்புனத்துப்
பசும்புல்லாக் கிடவேன் நானோ"

'அடைக்கல மாதாவின் மலர் மாலையிலே ஒரு வண்டாக ஊர்ந்து, கருணைத் தேன் பருகும் பேறு

பெறுவேனோ ?' என்றும், ' திருக்காவலூர்ப் பூஞ்சோலையில் ஒரு புல்லாய் முளைக்கும் பேறு பெறுவேனோ ?' என்றும் பாடுகின்றார் முனிவர்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்காவலூரை அடைந்து, அடைக்கல மாதாவைத் தொழுது அருள் பெற்ற அடியார் பல்லாயிரவர். வறுமை நோயால் வாடினோரும், தொழுநோய் முதலிய வன்பிணியுற்று வருந்தினோரும். அடைக்கல மாதாவின் அடியிணை தொழுது துன்பம் நீங்கி இன்பமுற்றனர். 'அருள் தளிர்க்கும்; ஞானம் தழைக்கும்; வரம் அரும்பும்; சீர் பழுக்கும்'[4] என்று முனிவர் சிறப்பித்த திருக்காவலூர்க் கோவில் இன்றும் கொள்ளிடக் கரையில் அருள் கனிந்து காட்சி தருகின்றது.

# 25. கருவூர்

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் ஓர் அங்கமாய்த் திகழ்வது கொங்கு நாடு. மலை வளமும் நிலவளமும் வாய்ந்த அந்நாட்டிலே கொல்லி மலை உண்டு; வெள்ளிமலை உண்டு; ஆனைமலை உண்டு; நீலமலை உண்டு; பாலைமலை உண்டு. பழனி மலை உண்டு.

இத்தகைய பெருமை வாய்ந்த கொங்கு நாட்டிலே காவேரியாறு பரந்து பாய்கின்றது. அவ் ஆற்றின் பெருக்கத்தையும் மேட்டூர்த் தேக்கத்தையும் அந் நாட்டிலே காண்பது ஓர் ஆனந்தம். கவிஞர் பாடும் புகழுடைய காவிரியாற்றிலே சேரும் பேறு பெற்ற சிற்றாறுகளின் கரையில் கருவூரும் பேரூரும் காட்சி அளிக்கின்றன. அமராவதி யாற்றின் கரையில் அமைந்துள்ளது கருவூர்; நொய்யல் என்னும் காஞ்சியாற்றின் கரையில் நின்று நிலவுகின்றது பேரூர். 'கருவூரிலே பிறந்தேன்; பேரூரை நோக்கிப் போகின்றேன்' என்று பொருள்படப் பாடினார் ஒரு பெரியார். "ஆதியிலே எங்கள் ஊர் கருவூர் ஆகும்; அந்தத்தில் போய் அடைவோம் பேரூர் தன்னில்" என்பது அவர் திருவாக்கு. அவ்வாக்கிலே ஒரு சிறந்த உண்மை உண்டு. கருவிலே உருவாகிப் பிறந்தோர் அனைவரும் கருவூரைச் சேர்ந்தவரேயாவர்; பிறவித் துயர் ஒழித்துப் பேரின்ப நலந்தரும் இடமே எல்லோரும் சென்றடையும் பேரூர் ஆகும்.

பழங் காலத்தில் கருவூர் ஒரு விரிநகராக விளங்கிற்று. "உறையூரிற் பெரிது கருவூர்" என்று அக் கடிநகரைப் பாராட்டினார் ஓர் உரையாசிரியர். அந்நகரம் பழங் காலத்தில் சேர மன்னர்க்கு உரியதாய் இருந்தது. அதனாலேயே,

**"கடும் பகட்டு யானை**
**நெடுந்தேர்க் கோதை**
**திருமா வியனகர்க் கருவூர்"**

என்று அகநானூற்றுப் பாடல் எழுந்தது. அந்நாளில் வஞ்சி என்னும் பெயரும் கருவூர்க்கு உண்டு.

சோழ மன்னர்க்கு உரிய பெரு நகரங்களுள் ஒன்று கருவூர் என்று அருளிப் போந்தார் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான். புகழ்ச் சோழன் என்னும் மன்னன் உறையூரில் அரசு வீற்றிருந்து ஆண்டபோது ஒரு நாள் குடபுல மன்னரிடம் கப்பம் பெறுவதற்காகக் கொங்கு நாட்டுக் கருவூருக்கு எழுந்தருளினான். அவ்வூரை,

**"மன்னிய அநபாயன் சீர்**
**மரபின்மா நகரம் ஆகும்**
**தொன்னெடுங் கருவூர் என்னும்**
**சுடர்மணி வீதி மூதூர்"**

என்று பாடினார் சேக்கிழார். அந்நகரின் மதில்களிலே மஞ்சு தவழும்; சோலைகளிலே நறு மணம் கமழும்; ஆற்றிலே யானைகள் நீராடும்; அரங்கிலே நடன மாதர் குழலாடும். இத்தகைய வளநகரில் அமைந்த மாளிகையில் சிலநாள் தங்கியிருந்தான் புகழ்ச் சோழன்.

அந்நகரில் 'ஆனிலை' என்னும் பெயருடைய பழமையான திருக்கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள ஈசனார்க்குப் பூமாலை புனைந்து சாத்தும் பணியை

முறையாகச் செய்து வந்தார் ஒரு திருத்தொண்டர். அவர் நாள்தோறும் அதிகாலையில் எழுவார்; ஆற்றிலே முழுகுவார்; பூக்கூடை கொண்டு பூந் தோட்டத்திற் புகுவார்; பழுதற்ற மலர்களைப் பறிப்பார்; கூடையை நிறைப்பார்; திருக்கோயிலிற் போந்து மாலை தொடுப்பார்; அதை ஈசன் திருமேனியில் அணிந்து திளைப்பார்.

இவ்வாறு நிகழ்ந்து வருகையில் ஒரு நாள் கருமலை போன்ற யானை யொன்று மதங்கொண்டு வீதியில் அவரைப் பின் தொடர்ந்தது; பூக்கூடையைப் பற்றி இழுத்தது; மலர்களை மண்ணில் சிதறி விட்டுச் சென்றது; முதியவராகிய திருத்தொண்டர் பதறி விழுந்தார்; பதை பதைத்தார்; கண்ணீர் வடித்தார்; தலையில் அடித்தார்; சிவனே சிவனே என்று ஓலமிட்டுத் துடித்தார்.[1]

**"ஆறும் மதியும் அணியும் சடைமேல்**
**ஏறும் மலரைக் கரிசிந் துவதோ"**

என்று கதறினார். 'நின் திருமுடியில் ஏறுதற்குரிய நறுமலரைத் தெருவிலே சிந்தி விட்டதே செருக்குற்ற வேழம்!' என்று மனம் உருகினார்.

அந்த வேளையில் அவ்வழியாக வந்தார் எறிபத்தர் என்னும் பெரியார். அவர் ஒரு வன்தொண்டர்; அடியார்க்கு அடியவர்; திருத்தொண்டர்க்குத் தீங்கிழைக்கும் தீயோரை மழுப்படையால் ஒறுப்பவர். அவர் தெருவிலே சிதறிக் கிடந்த மலர்களையும், சிவனடியார் கதறிச் சொரிந்த கண்ணீரையும் கண்டார்; சீற்றம் தலைக் கொண்டார்; மதங்கொண்ட யானையைப் பின்தொடர்ந்தார்; மழுப்படையால் அதன் துதிக்கையை அறுத்தார். கையிழந்த வேழம் கடல் போல் இரைந்து தரையில் விழுந்தது. அதுகண்டு சீறி எழுந்த பாகர் ஐவரையும் எறிபத்தர் படைக்கலத்தால் கொன்று முடித்தார்; கொலைக்களத்தில் அஞ்சாது நின்றார்.

சோழ மன்னனுக்குரிய பட்டத்து யானையையும் பாகரையும் எறிபத்தர் கொன்றார் என்ற செய்தி கருவூரெங்கும் பரவியது; அரண்மனைக் காவலாளர் அச்செய்தியைப் புகழ்ச் சோழனிடம் போந்து அறிவித்தார்கள்; 'பட்டவர்த்தனம் வெட்டி வீழ்த்தப் பட்டது; பாகரும் கொல்லப்பட்டார்' என்று கேள்வியுற்ற சோழன் சீற்றத்தால் கண் சிவந்தான்; 'அது மாற்றார் செய்கை' என்றெண்ணி மறப்படையோடு எழுந்தான் குதிரைமீது ஏறிக் கொலைக்களம் போந்தான். குருதி வெள்ளத்திற் கிடந்த அருமை வேழத்தைக் கண்டு மனம் உருகினான்; பாகர் கிடந்த நிலை கண்டு துயருற்றான். 'இக் கொலை புரிந்த கொடியவர் யார்?' என்று கடுகடுத்து வினவினான். அப்போது தூய வெண்ணீறு துதைந்த மேனியராய், அங்கு நின்ற எறிபத்தர் முன் வந்து, 'மன்னவ! இந்த யானை சிவனடியார் ஒருவருக்குச் சிறுமை செய்தது. ஆதலால் நானே இதனைக் கொன்றேன்' என்றார்.[2]

அவர் பேசிய நேர்மையான வாசகத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான் அரசன். 'பட்டத்து யானை செய்த குற்றத்திற்கு உரியவன் யானே! என்னையும் உமது திருக்கரத்தால் முடித்திடுக' என்று தலை வணங்கி நின்றான் மன்னவன். காவலன் நிலை கண்ட கருவூர் மாந்தரெல்லாம் கண்ணீர் விட்டு அழுதார்கள். அந்நிலையில் ஈசன் அருளால் இறந்த யானை எழுந்தது; பாகரும் உயிர் பெற்றனர். "தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே" என்னும் உண்மைக்கு ஒரு சான்று கண்டது கருவூர் நகரம்.

# 26. காரைக்கால்

அம்மை என்பது ஓர் அருமையான சொல். அதன் செம்மையை உணர்ந்த மாணிக்கவாசகர் "அம்மையே ! அப்பா ! ஒப்பிலா மணியே ! அன்பினில் விளைந்த ஆரமுதே !" என்று ஆதிபகவனை அகங் குழைந்து பாடினார்.

தமிழ் நாட்டிலுள்ள காரைக்காலிலே ஒரு தெய்வப் பாவை அம்மையார் என்று அழைக்கப் பெற்றாள். அரிசிலாறு கடலொடு கலக்கும் துறையில் அமைந்தது காரைக்கால். அந்நகரில் வளமார்ந்த வணிகர் குலத் தலைவனாகிய தனதத்தன் செய்த தவப் பயனாய்த் தோன்றினாள் அப்பாவை.[1] புனிதவதி என்னும் பெயர் பெற்ற அப் பெண்மணி அழகின் கொழுந்தெனத் திகழ்ந்து வளர்ந்தாள்; மங்கைப் பருவம் எய்தினாள். நாகையம் பதியில் வாழ்ந்த பரம தத்தன் என்ற நம்பிக்கு அந் நங்கையை மணம்செய்து கொடுத்தார்கள்.

குல நலமும் குண நலமும் வாய்ந்த காதல் மனையாளும் காதலனும் கருத்தொருமித்து இல்லறம் நிகழ்த்தினர். அறவோர்க்கும் துறவோர்க்கும் ஆதர வளித்தனர்.[2]

இவ்வாறு இருவரும் வாழ்ந்து வருகையில் புனிதவதி யாரின் இணையற்ற சீர்மை பரம தத்தனுக்குப் புலனாயிற்று.

'தன் மனையாள் மானுடமல்லள்; மாதருக்குள் ஒரு தெய்வம்' என்று மாசற உணர்ந்தான்; அயலறியாமல் மனையாளைவிட்டுப் பிரியத் துணிந்தான். மனத்திலே அக் கருத்தை மறைத்து வைத்து, வெளி நாட்டில் வாணிகம் செய்வான்போல் கப்பலேறிச் சென்றான்.[3]

திரைகடல் ஓடிய பரமதத்தன் திரும்பி வருவான் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்து கவலை உற்றார் காரைக்கால் அம்மையார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவனைப் பற்றிய செய்தியொன்று கிடைத்தது. பாண்டி நாட்டில் உள்ள ஒரு கடற்கரை நகரத்தில் அவன் வாணிகம் செய்து வாழ்வதாக அறிந்தார். உடனே சுற்றத்தார் சிலரைத் துணைக் கொண்டு புறப்பட்டார்; கணவன் இருந்த இடம் போந்தார்.

பரமதத்தன் மனம் பதைத்தான். புதிதாக மணந்த மனைவியோடும், பெற்ற மகவோடும் அவரடிகளில் விழுந்து வணங்கினான். அச்செய்கையைக் கண்டோர் எல்லாம் திகைத்து நின்றனர். பரமதத்தன் அவர்களைப் பார்த்து, 'இவர் மானுடம் அல்லர்; பெண்ணாகி வந்த பெருந் தெய்வம். அதனை அறிந்தவுடன் இவரை விட்டகன்றேன். இங்கு மறுமணம் செய்தேன். பெற்ற இப் பெண் மகவிற்கு இவர் பெயரை இட்டேன். என் குலதெய்வம் இவரே யாதலால் குடும்பத்துடன் வந்து வணங்கினேன். இக் கண்கண்ட தெய்வத்தை நீங்களும் கைகூப்பித் தொழுங்கள்' என்றான்.[4]

கணவன் சொல்லிய சொற்களைக் கேட்டாள் காரைக்கால் அம்மையார். அவன் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்தார். இறைவன் திருவடியை நினைந்து உருகினார். 'ஈசனே ! இத்தனை காலமும் என்னைக்

கொண்ட கணவனுக்காக இவ்வுடலைப் பேணினேன். இனி இவ்வூன் பொதியை யான் வேண்டேன்; உன் திருவருளே வேண்டி நிற்பேன்.[5] இம் மண்ணிலே பிறந்து மொழி பயின்ற கால முதல் உன் திருவடியே எண்ணினேன். உன் திருப்புகழே பேசினேன். நஞ்சுண்டு கண்டம் கறுத்த நாதனே ! என் நெஞ்சத்து இடர் தீர்ப்பது எந்நாளோ ?' என்று இறைஞ்சினார்.

'தனக்குவமையில்லாத் தலைவனாகிய ஈசன் விண்ணுலகத்தில் உள்ளான் என்று சொல்லுவார் சொல்லுக. பொன்னுலகத்தில் உள்ளான் என்று பேசுவார் பேசுக. அவன் என் உள்ளத்திலே உள்ளான் என்றுரைப்பன் யான்' என்று உறுதிகொண்டார்.

**"வானகத்தான் என்பாரும்**
**என்கமற்று உம்பர்கோன்**
**தானத்தான் என்பாரும்**
**தாமென்க - ஞானத்தான்**
**முன்நஞ்சத் தால்இருண்ட**
**மொய்யொளிசேர் கண்டத்தான்**
**என்நெஞ்சத் தான்என்பன் யான்"**

என்று பாடினார்; ஆனந்தமுற்று ஆடினார்; மேனி வாடினார்; எலும்புக் கூடாயினார். காரைக்கால் பேயார் என்ற பெயரும் பெற்றார்.

கயிலாச மலையில் அமர்ந்தருளும் கண்ணுதற் பெருங் கடவுளைக் காணும் பேறு பெற்றார் காரைக்கால் அம்மையார். எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய ஈசனிடம் தம் மனத்தில் எழுந்த ஆசையைச் சொல்லி முறையிட்டார். 'என்னை ஆளும் ஐயனே ! உன்பால் எந்நாளும் அயராத இன்ப அன்பு வேண்டும்; இனி நான் பிறவாதிருக்க வேண்டும்; பிறப்பு நேர்ந்தால் உன்னை என்றும்

மறவாதிருக்க வேண்டும்; இன்னும் அறவாழி அந்தணா ! நீ ஆடும் பொழுது உன் அடியின் கீழ் அமர்ந்து பாடி மகிழ வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார். தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டில் ஈசன் அண்டமுற நிமிர்ந்து ஆடும் அடியின் கீழ் அமர்ந்து,

**" காடும் கடலும் மலையும் மண்ணும்**
**விண்ணும் சுழல அனல்கை யேந்தி**
**ஆடும் அரவப் புயங்கன் எங்கள்**
**அப்பன் இடம்திரு ஆலங் காடே"**

என்று பாடி மாறிலா இன்பத்தில் மலர்ந்தார் காரைக்கால் அம்மையார்.

# 27. புதுவை மாநகர்

தமிழகத்தில் புதுவை மாநகரம் ஒரு சிறந்த துறைமுகம். கலங்கள் இயங்கும் அந் நகரில் நலங்கள் பல உண்டு. "இம்மென்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்" என்னும் கொடுங்கோலாட்சியால் நலிவுற்ற பாரத நாட்டு நல்லறிஞர்க்குப் புகலிடமாய் நின்றது புதுவை மாநகரம். ஆங்கில அரசாட்சியின் கொடுமைக்கு ஆற்றாது வெளிப்பட்ட வங்க நாட்டு ஞானச் செல்வராகிய அரவிந்தரை அடைக்கலப் பொருளாக ஏற்று ஆதரித்த பெருமை வாய்ந்தது அந் நகரே ! 'பாட்டுக்கொரு புலவன்' என்று தமிழ் நாட்டார் பாராட்டும் பாரதியாருக்குப் பல்லாண்டு புகலிடம் அளித்துப் பெருமை பெற்றதும் அந் நகரே !

இத்தகைய புகழ் பெற்ற புதுவை மாநகரில் இரு நூறாண்டுகளாகப் பிரெஞ்சு அரசாங்கம் ஆட்சி புரிந்தது. அவ்வாட்சியாளருள் தலைசிறந்தவர் டூப்பிளே என்று வரலாற்று அறிஞர் கூறுவர். அவருடைய உருவச்சிலை புதுவைக் கடற்கரையில் இன்றும் நின்று அணி செய்கின்றது.[1]

புதுவை மாநகரில் அவர் ஆட்சி புரிந்த காலத்தில் தமிழ்ப் பெருமகன் ஒருவர் அங்கு தழைத்து வாழ்ந்தார். ஆனந்த ரங்கப்பிள்ளை என்பது அவர் பெயர். சென்னைக்கு அருகே யுள்ள பிரம்பூரிலே தோன்றிய ஆனந்த ரங்கர் இளமையிலே புதுவையம்பதியை அடைந்தார்;

உழைப்பினால் உயர்ந்தார்; மதி நலத்தால் மாண்புற்றார். பிரஞ்சு அரசாங்கத்தின் பெரு மதிப்பிற்கு உரியரானார்.

செல்வச் செழுமையுற்று வாழ்ந்த ஆனந்தரங்கர் செந்தமிழை ஆதரித்தார்; வரிசை யறிந்து புலவர்க்குப் பரிசளித்தார்; வாடி வந்தடைந்த அறிஞரது வறுமையை ஒழித்து இன்புற்றார்.

அற்றாரை ஆதரிக்கும் பெற்றி வாய்ந்த ஆனந்த ரங்கரின் பெருமையை அறிந்தார், மதுர கவிராயர்; புதுவையை நோக்கிப் புறப்பட்டார். புள்ளும் பொழுதும் பார்த்து உள்ளம் தழைத்தார். மஞ்சு தவழும் அம்மணி நகரில் அஞ்சேல் என்று அருள்புரியும் ஆனந்தரங்கரைக் கண்டார்;

**“பொலங்கொண்ட மணிமாட மீமிசையில்**
**புயல்தவழும் புதுவை என்னும்**
**தலம்கண்டோம், நினதுநகை முகம்கண்டோம்**
**இனிவேண்டும் தனம்கண் டோமே”**

என்று நெஞ்சம் குளிர்ந்து பாடினார். பசியென்னும் தீப் பிணியால் வருந்திய கவிஞர் ஒருவர் பலநாள் வழி நடந்து ஆனந்தரங்கரது மாளிகையை அடைந்தார். அப்போது அவர் அங்கில்லை. அறுவடைக் காலமாதலால் நிலத்தைக் கண்காணிக்கச் சென்றிருந்தார்; அவர் எப்போது வருவாரோ என்று ஏக்கமுற்ற கவிஞர் கழனிக்கு வழிநாடிச் சென்றார். அங்கு வரப்பிலே சிதறிக் கிடந்த நெல்லை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டிருந்த வள்ளலைக் கண்டார். உதிர்ந்த நெல்லை ஒன்று விடாமல் களஞ்சியத்திற் கொண்டு சேர்க்கும் இவரா வறிஞருக்கும் அறிஞருக்கும் உண்டியும் பொருளும் வழங்குகின்றார் என்று ஐயுற்றார். ஆயினும் ஒருவாறு மனந் தெளிந்து தாம் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார். ஆனந்தரங்கர் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் நெல்லைப் பொறுக்கும் பணியில்

ஈடுபட்டிருந்தார். கவிஞர் பசி பொறுக்கமாட்டாமல் பின்னும் தமது குறைபாட்டையே பன்னிக்கொண்டிருந்தார். குறிப்பறிய மாட்டாத கவிஞரை நோக்கி, 'ஏன் பறக்கிறீர் ! சற்றுப் பொறும்' என்றார் அப் பெருமகன். அந்நிலையில் பாசங் கலந்த பசியோடு வந்தது ஒரு தமிழ்ப் பாட்டு.

**" கொக்குப் பறக்கும், புறாப்பறக்கும்**
**குருவிபறக்கும், குயில் பறக்கும்**
**நக்குப் பொறுக்கி களும்பறப்பர்**
**நானேன் பறப்பேன் நராதிபனே !**
**திக்கு விசயம் செலுத்தி உயர்**
**செங்கோல் நடாத்தும் அரங்காநின்**
**பக்கம் இருக்க ஒருநாளும்**
**பறவேன் பறவேன் பறவேனே "**

என்ற பாட்டைக் கேட்டு இன்புற்ற ஆனந்தரங்கர் அக் கவிஞர்க்குத் தக்க பரிசளித்து அனுப்பினார்.

புதுவை மாநகர்க்கு என்றும் அழியாத பெருஞ் சேவை செய்துள்ளார் ஆனந்தரங்கர். அந் நகரில் அவர் கண்ட காட்சிகளையும் கேட்ட செய்திகளையும் நாள்தோறும் குறித்து வைத்தார். தினசரி என்று அந்த 'டைரி'க்குப் பேரிட்டார்.

இருபத்தைந்து ஆண்டு நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்ட அவ்வருமையான தினசரி, ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பாராட்டப் பெற்றுள்ளது. அக்காலத்தில் நிகழ்ந்த அரசியல் சூழ்ச்சிகளும், வெள்ளைக்காரரின் உள்ளப் போக்குகளும், பஞ்சத்தின் கொடுமையும், லஞ்சத்தின் கொண்டாட்டமும், நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களும் அந்நூலில் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

# IV. பாண்டி நாடு

" உலகு புரந்து ஊட்டும் உயர் பேரொழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி "

- சிலப்பதிகாரம்

## 28. மதுரை மாநகரம்

சங்கத் தமிழ்மாலை பெற்ற ஆறுகளுள் தலை சிறந்தது வையை ஆறு. அந்நதியின் துறைகளிலே முன்னாளில் முத்தமிழ் வளம் கொழித்தது; அதன் தெள்ளிய அலைகளிலே தமிழ் ஏடு தவழ்ந்தது. எண் குணத்தவனாகிய ஈசன் அவ் வாற்றின் கரையிலே மண் சுமந்து பணி செய்தான்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த வையை ஆற்றின் கரையிலே வீற்றிருக்கின்றது மதுரை மாநகரம். அதுவே பழம் பதியாகிய பாண்டி நாட்டின் தலைநகரம். தொன்றுதொட்டு முத்தமிழையும் முறையாகப் பேணி வளர்த்த பெருமை அந்நகரத்திற்கே உரியதாகும். பாண்டியர்கள் அங்கு நிறுவிய தமிழ்ச் சங்கம் ஓர் அறிவுக் கருவூலமாகத் திகழ்ந்தது. சங்கப் புலவர்கள் மதுரை மாநகரின் நல்லணியாக விளங்கினார்கள். பிற நாட்டுத் தமிழறிஞர்களையும் வரிசை யறிந்து பேணினர் பாண்டியர். அதனால் நல்ல தமிழ் பாண்டி நாடெங்கும் பரவுவதாயிற்று.

மதுரையம்பதியில் அரசு புரிந்த பாண்டிய மன்னரில் பலர் சிறந்த கவிஞர்களாகவும் புலவர்களாகவும் திகழ்ந்தனர். நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய பாண்டியரிருவர் பாடிய அருமையான பாடல்கள் புறநானூற்றிலே காணப்படுகின்றன. மக்களாய்ப் பிறந்தோர் எல்லாம் கல்வி கற்றல் வேண்டும் என்றும், அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்புவான் என்றும், மதிநலமும் நூலறிவும் உடையவரே மக்கள் மதிப்பிற்கு உரியவர் என்றும் அறிவுறுத்தும் அருமையான பாட்டு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனால் இயற்றப்பட்டதாகும்.[1]

இத்தகைய தமிழார்வம் படைத்த மன்னர் அரசு வீற்றிருந்த மதுரை மாநகரில் தமிழ்வளம் பெருகிற்று. பல தொழில்களிலும் ஈடுபட்ட மக்கள் தமிழறிவு பெற்றுத் தக்க புலவர்களாய் விளங்கினர். அன்னவருள் ஒருவர் கூலவாணிகன் சாத்தனார். கூலக்கடை வைத்து வாணிகம் செய்த சாத்தனார் கூல வாணிகன் சாத்தனார் என்று பெயர் பெற்றார். இவரே மணிமேகலை என்ற சிறந்த காவியம் இயற்றியவர் என்பர். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகளும், மணிமேகலை இயற்றிய சாத்தனாரும் சிறந்த நண்பர்கள். இவ்விருவரும் ஒரு நாட்டவரல்லர்; ஒரு குலத்தவரல்லர்; ஒரு மதத்தினரல்லர். சேரநாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ; பாண்டி நாட்டைச் சேர்ந்தவர் சாத்தனார். இளங்கோ, அரச குலத்தில் பிறந்தவர்; சாத்தனார் வணிகர் குலத்தவர். இளங்கோ, சமண சமயத்தைச் சார்ந்தவர்; சாத்தனார், புத்த சமயத்தைத் தழுவியவர். இவ்வாறு நாட்டாலும், குலத்தாலும், மதத்தாலும் வேறுபட்டிருந்த பெருங் கவிஞர் இருவரும் ஒத்த தமிழுணர்ச்சியாலேயே உயரிய நண்பராயினர்.

பாண்டிய மன்னர் கற்றறிந்த மாந்தரைக் கண்ணெனக் கருதிப் பாதுகாப்பவர் என்ற செய்தி வடநாட்டிலும் பரவியிருந்தது. அந்நாட்டில் ஒருகால் பஞ்சம் வந்துற்றபோது

பல்லாயிரக் கணக்கான மக்கள் தென்னாட்டிற் போந்து பாண்டியனைத் தஞ்சமடைந்தார்கள். அன்னார் சமண சமயத்தைச் சார்ந்தவராயினும் அவர்க்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுத்து ஆதரித்தான் பாண்டியன். தமிழ் மன்னனது நன்மதிப்பைப் பெற ஆசைப்பட்ட சமணர்கள் தமிழ்மொழியை மாசறக் கற்று உணர்ந்தார்கள்; மதுரையைச் சூழ்ந்திருந்த எட்டு மலைகளைத் தம் இருப்பிடமாகக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தார்கள். அவ்வெட்டு மலைகளின் பெயரும் பெருமையும் ஒரு பழம்பாட்டிலே குறிக்கப் பெற்றுள்ளன.[2]

அம்மலைகளிலே வாழ்ந்த சமண முனிவர்கள் ஆயிரக் கணக்கான தமிழ்ப் பாடல்களை இயற்றினர். அவற்றுள் தெரிந்தெடுக்கப்பட்ட நானூறு நீதிச் செய்யுள்கள் நாலடியார் என்ற பெயருடன் இன்றும் வழங்கி வருகின்றன. இரண்டு அடிகளை உடைய திருக்குறளும், நான்கு அடிகளை உடைய நாலடியாரும் நீதி நூல்களுள் தலைசிறந்தன என்பது தமிழ்நாட்டார் கொள்கை. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழியே இதற்குச் சான்றாகும்.

மதுரை மாநகரின் அணிகலனாகத் திகழ்வது இறைவன் திருக்கோயில். 'ஆலவாய்' என்னும் பெயருடைய அவ் ஆலயத்தின் அம்பலத்திலே ஈசன் ஆனந்த நடனம் புரிந்தான்; மணிவாசகரின் திருவாசகத்தைக் கேட்டு மனமகிழ்ந்தான்; சங்கப்புலவரின் அறிவினுக்கு அறிவாய் நின்று செந்தமிழ் மொழியைச் சீராக வளர்த்தான்; பழந்தமிழைப் பசுந் தமிழாக்கினான்.[4]

ஆலவாயில் நிறுவப் பெற்ற அருந்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக வீற்றிருந்தார் நக்கீரர் என்ற நற்றமிழ்ப் புலவர். அவர் அஞ்சாத நெஞ்சினர். செஞ்சடைக்கடவுளே முன்னின்று நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும்

கலங்காத மனத் திண்மை வாய்ந்தவர். முத்தமிழால் வைதாரையும் வாழ்விக்கும் முருகவேள் கோயில் கொண்டு அருள் புரியும் படை வீடுகளின் பெருமையைத் தமிழகத்தார் அறிந்து உய்யுமாறு திருமுருகாற்றுப்படை பாடினார் அப்புலவர் பெருமான்.

பொய்யறியாப் புலவர் என்று புகழ்ப்பெற்ற சங்கப் புலவர்கள் மதுரை மாநகரின் அமைப்பையும் சிறப்பையும் அழகாகப் பாடியுள்ளார்கள். செந்தாமரை மலர் போன்றது அந் நகரம் என்றார் ஒரு கவிஞர். ' தாமரையின் பொகுட்டுப் போல் அமைந்தது திரு ஆலவாய் என்னும் கோயில்; அதைச் சுற்றி அடுக்கடுக்காக உள்ள நகர வீதிகள் அம்மலரின் அழகிய இதழ் போன்றன. அம்மாநகரில் மனையறம் புரிந்த மக்கள் தாமரைப் பூவின் மகரந்தம் போன்றனர். மகரந்தத்தை நாடி வரும் வண்டினம் போல் மதுர கீதம் பாடி வந்து மதுரையாரிடம் பரிசு பெற்றனர் இரவலர் ' என்று பரிபாடல் கூறுகின்றது.

இத்தகைய மதுரையம்பதியில் சில காலம் அமைச்சராயிருந்து பாண்டி நாட்டுக்குப் பெரும்பணி செய்தார் மாணிக்கவாசகர். அவர் கலை ஞானமும் சிவ ஞானமும் பெற்ற சீலர். மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பொருளைக் கொண்டு ஈசனார்க்குக் கோயில் கட்டினார். அதை அறிந்த அரசன் சீற்றம் கொண்டான்; தவறிழைத்த அமைச்சரைச் சிறைக் கோட்டத்தில் அடைத்தான்; பலவாறு துன்புறுத்தினான். தனக்குவமையில்லாத் தலைவனைத் தஞ்சம் அடைந்த மாணிக்கவாசகர் மனக் கவலையற்றுச் செஞ்சொற் கவிபாடிச் சிறையிருந்தார்.[5]

அவர் பொருட்டு ஈசனார் ஒரு திருவிளையாடல் புரிந்தார். காட்டு நரிகளைப் பெரிய பரிகளாக்கிப் பாண்டியனிடம் சேர்த்தார். இவ் அற்புதத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் மாணிக்க வாசகர்.

"ஒருங்கு திரை உலவு சடை
உடையானே நரிகள் எல்லாம்
பெருங் குதிரை ஆக்கியவாறு
அன்றே உன் பேரருளே"

என்று பாடிப் பரவசம் உற்றார்.

தமிழ் நாட்டில் மணிவாசகர் அருளிய திருவாசகம் பொன்னே போல் போற்றப் படுகின்றது. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழியும் உண்டு. இத்தகைய பெருமை சான்ற மாணிக்கவாசகரை அமைச்சராகப் பெற்றிருந்த மதுரையம் பதியின் பெருமை அளவிடற்கு எளிதோ?

பன்னிரு நூற்றாண்டுகளுக்கு முன்னே மதுரையம்பதியில் சமண சமயத்திற்கும் சைவசமயத்திற்கும் பெரும்போர் மூண்டது. அப்போது பாண்டி நாட்டை ஆண்ட அரசன் சமண சமயத்தைத் தழுவி நின்றான். மன்னனைப் பின்பற்றி நாட்டு மக்களும் சமண சமயத்தை மேற்கொண்டார்கள். ஆயினும் பாண்டி மாதேவியாகிய மங்கையர்க்கரசியும், அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவ சமயத்தை விடாது பற்றி நின்றார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து திருநெறித் தலைவராகிய திருஞானசம்பந்தர் மதுரை மாநகருக்கு எழுந்தருளினார். யானைமலை முதலாய எட்டு மலைகளிலும் இருந்த சமண முனிவர்கள் திரண்டு எழுந்து எதிர்த்தார்கள். வாக்குவாதம் மிகத் தாக்காக நடைபெற்றது. பாண்டிய மன்னன் மாளிகையில் பல்லாயிரக் கணக்காகக் குழுமிநின்ற சமண முனிவர்களின் எதிரே பச்சிளம்பாலராக நின்ற திருஞான சம்பந்தரின் நிலை கண்டு ஏக்கமும் இரக்கமும் உற்றார் மங்கையர்க் கரசியார்; ஞானத்தின் திரு உருவாகிய சம்பந்தரைச் சமண முனிவர்கள் அச்சுறுத்துவார்களோ, அவமதிப்பார்களோ என்று அஞ்சினார். மங்கையர்க்கரசியின் கவலையறிந்த ஞானசம்பந்தர், 'அஞ்சேல்' என்று ஆறுதல் அளித்தார்;

'ஆலவாய்ப் பெருமான் அருளால் சமணரை எளிதில் வெல்வேன்' என்று தேற்றினார்.[6]

சமண முனிவர்களும் திருஞான சம்பந்தரும் வைகை ஆற்றிலே புனல் வாதம் புரிந்தார்கள். அந்த வாதத்தில் சமணர் தோற்றார்; சம்பந்தர் வென்றார். பாண்டிய மன்னனும் சமண சமயத்தை விட்டு மீண்டும் சைவ சமயத்தைச் சார்ந்தான். மன்னன் முன்னிலையில் நிகழ்ந்த புனல் வாதத்தின் பெருமையைப் பாட்டில் அமைத்துப் பாராட்டினர் பாவலர்.

> " பொருப்பிலே பிறந்து தென்னன்
> புகழிலே கிடந்து சங்கத்து
> இருப்பிலே இருந்து வைகை
> ஏட்டிலே தவழ்ந்த பேதை "

என்று போற்றினார் ஒரு கவிஞர். இங்ஙனம் தமிழ்ச் சுவை அறிந்த தன்மையால் அன்றோ ஆற்றுப் பெருக்கற்ற காலத்திலும் தன் ஊற்றுப் பெருக்கால் செந்தமிழ் பயிலும் மதுரை மாநகரை வாழ்வித்து வருகின்றது வைகை யாறு?

ஆலவாயில் உள்ள வெள்ளியம்பலம் தமிழ் நாட்டார் போற்றும் பஞ்ச சபைகளில் ஒன்றாகும். அம் மன்றத்திலே இறைவன் ஆடிய திருக்கூத்தின் அழகைக் கண்டு மெய் மறந்த அடியார் ஒருவர் 'கால் மாறி ஆடிய கற்பகமே ! யான் உன்னை விடுவேன் அல்லேன்' என்று கதறினார்.

இவ்வாறு ஆலவாயில் அங்கயற் கண்ணியோடு அமர்ந்து அருள் புரியும் ஈசன் பெருமையை அடியார் அடிக்கடி புகழக் கேட்டு மதுரையில் வாழும் கிளிகளும் மதுர மொழியால் அப் பெருமான் திருவிளையாடல்களை எடுத்துரைத்தன என்று பாடினார் ஒரு கவிஞர்.

"ஆடல் புரியும் அரன்என்றும் மூவர்தமிழ்ப்
பாடல் புரியும் பரன்என்றும் - கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னோன்என்று
கின்னரிவா சிக்கும் கிளி"

என்ற அருமையான பாட்டிலே ஆலவாயான் பெருமை அழகுற விளங்குகின்றது. 'ஆடல் புரிவான் எங்கள் அரசன்' என்று பேசும் ஒரு கிளி; 'தேவாரப் பாடல் கேட்பான் எங்கள் பரன்' என்று தித்திக்கப் பேசும் மற்றொரு கிளி; 'நரியைப் பரியாக்கி நடையும் பயிற்றுவான் எங்கள் நாதன்' என்று நவிலும் இன்னொரு கிளி. இவ்வண்ணம் ஈசன் புகழைப் பேசிய கிளிக் குலம் இன்றும் திரு ஆலவாயிலில் வாழ்கின்றது. கிளி மண்டபத்தில் உள்ள பச்சைக் கிளிகளும், பஞ்சவர்ணக் கிளிகளும், வெள்ளைக் கிளிகளும் மற்றுமுள்ள கிள்ளைகளும் மீனாட்சியம்மையின் திருப்பெயரை இசையினும் இனிய மழலை மொழியால் பேசும் பொழுது அன்பர் செவிகளில் இன்பத் தேன் வந்து பாய்கின்ற தன்றோ !

# 29. அழகர் கோயில்

மதுரை மாநகரின் அருகே உள்ள மலைகளுள் ஒன்று சிறுமலை; மற்றொன்று பெருமலை. சிறுமலையிலே இனிய பழம் உண்டு; பெருமலையிலே ஈசன் அருள் உண்டு.

இந் நாளிலே அழகர் மலை என்றும், சோலைமலை என்றும் பெயர் பெற்றுள்ளது அப் பெருமலை. அம்மலையில் ஒல்லென ஒலித்து, மெல்லெனப் பாயும் அழகிய நதியைச் சிலம்பாறு என்று பழந்தமிழிலக்கியம் போற்றுகின்றது. அவ் ஆறு பழமுதிர் சோலையின் வழியே சென்று, அருவியாக வீழும் அழகினைக் கண்டு அக மகிழ்ந்த நற்றமிழ்ப் புலவர்களில் ஒருவர் நக்கீரர். அவர் பாடிய திருமுருகாற்றுப்படையில்

> "இழுமென இழிதரும் அருவிப்
> பழமுதிர் சோலை மலைகிழ வோனே"

என்று சிலம்பாற்றின் அருவியை ஒரு செஞ்சொல் ஓவியமாக எழுதிக் காட்டினார். சிலம்பாற்றின் நல்லருவிக்கு நிகரான செஞ்சொல் அருவியின் இன்பம் தருவது இப்பாட்டு. சிறப்பு ழகரத்தை நான்கு இடங்களில் நன்கு அமைத்து நல்ல தமிழின்பத்தை ஊட்டுகின்றார் நக்கீரர்.

திருமுருகாற்றுப்படையிலே பாடப் பெற்றுள்ள பழமுதிர் சோலை, முருகப் பெருமானுக்குரிய படை வீடுகளில் ஒன்று. அதன் பழம்பெருமையைத் திருப்புகழும் பாடிற்று.

"படையொடு சூரன் மாள
முடுகிய சூர தீர
பழமுதிர் சோலை மேவு பெருமாளே !"

என்பது திருப்புகழ் பாடிய அருணகிரி நாதரின் திருவாக்கு.

'பழமுதிர் சோலைமலை' என்ற நெடும் பெயர் நாளடைவில் சோலைமலை எனக் குறுகிற்று. வல்லசுரனாகிய சூரன் குலத்தை வென்று ஒழித்து, வாகை மாலை சூடிய முருகன், சோலைமலையில் நின்று அடியார்க்கு அருள் புரியும் செம்மையை நினைந்து சிந்தை குளிர்ந்தார் அருணகிரியார்.

"சூரர்குலம் வென்று
வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே !"

என்று புகழ் மாலை சூட்டினார். எனவே, பழமுதிர் சோலை என்னும் பழம் பெயருடைய முருகனது படை வீடே இப் பொழுது சோலை மலை என வழங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

பழங்காலத்தில் 'இருங் குன்றம்' என்ற பெயருடையதாய் இருந்தது இம்மலை. இருங்குன்றம் என்ற சொல்லுக்குப் பெருமலை என்பது பொருள். முன்னாளில் இருங்குன்றம் முதலிய எட்டு மலைகளில் சமண முனிவர்கள் தவச்சாலை யமைத்து வாழ்ந்தார்கள் என்பது அங்குள்ள கல்லெழுத்துகளாலும் தேவாரத் திருப்பாசுரங்களாலும் தெளிவாகத் தெரிகின்றது. அச்ச நந்தி என்பார் அத்தகைய முனிவர்களுள் ஒருவர். நந்தி என்பது சமண முனிவர்களின் சிறப்புப் பெயராக அந்நாளில் வழங்கிற்று.[1]

இருங்குன்றத்தில் சமண முனிவர்கள் வதிந்து தவம் புரிந்த இடம் இப்போது 'பஞ்ச பாண்டவர் படுக்கை' என்று பொது மக்களால் அழைக்கப் படுகின்றது. அதைச் சென்று காண்பதற்குச் செம்மையான வழி இல்லை. கரடு

முரடான கற்களின் இடையே நடந்து, வழுக்குப் பாறைகளின்மீது தவழ்ந்து, இடுக்கு வழிகளைக் கடந்து மேலே சென்றால் அருமையான குகை யொன்றைக் காணலாம். செழுமை வாய்ந்த ஆலஞ் சோலையின் நிழலில், சவியுறத் தெளிந்த சுனையின் அருகே அமைந்துள்ள அக்குகை ஒருமையுடன் இருந்து தவம் புரிவார்க்கு ஏற்ற இடமாகவே தோன்றுகின்றது. அக் குகையின் உள்ளே படுக்கை போலப் பல பாறைகள் அமைந்திருத்தலால் அவற்றைப் பஞ்ச பாண்டவர் படுக்கை என்று கருது கின்றனர் பொது மக்கள்.

கரு நிறம் உடைய கண்ணனும் வெண்ணிறம் வாய்ந்த பலராமனும் இருங் குன்றத்தில் ஒருங்கே காட்சி யளித்தனர் என்று பரிபாடல் கூறும். சங்க காலம் என்று சொல்லப் படுகின்ற பழங்காலத்தில் வெள்ளை மூர்த்தியாகிய பலராமனைத் தமிழ் நாடு வழிபட்ட செய்தி சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலே குறிக்கப்பட்டுள்ளது. 'வால்வளை மேனி வாலியோன் கோயில்' காவிரிப்பூம்பட்டினத்திலே காட்சி யளித்தது என்று சிலப்பதிகாரம் பாடிற்று. இருங்குன்றம் என்ற மலையிலும் கருமையும் வெண்மையும் கலந்து நின்ற கடவுட் காட்சியை வியந்து பாடினார் இளம் பெருவழுதி.

**"கல்லறை கடலும் கானலும் போலவும்**
**புல்லிய சொல்லும் பொருளும் போலவும்**
**எல்லாம் வேறு வேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்**
**தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம்"**

என்பது அவர் பாடிய பரிபாடல். ஆயினும் காலப் போக்கில் பலராமன் வழிபாடு அருகிற்று. கண்ணன் வழிபாடு பெருகிற்று. சிலப்பதிகாரமே இதற்குச் சான்று.[2]

வட வேங்கட மலையை 'நெடியோன் குன்றம்' என்று கூறுதல் போன்று, இருங்குன்றத்தைத் 'திருமால் குன்றம்' என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. திருமால் வேங்கட

மலையில் விளங்குதல் போலவே இருங்குன்றத்திலும் நின்ற திருக்கோலத்தில் இலங்கும் தன்மையைப் பாடுகின்றார் இளங்கோவடிகள். இவ்வாறு வேங்கடம் ஆகிய திருப்பதி மலைக்கும், இருங்குன்றம் என்னும் சோலைமலைக்கும் நெருங்கிய ஒற்றுமை இருத்தலால் தென் திருப்பதி என்ற பெயரும் சோலை மலைக்கு வழங்கி வருகின்றது.

சோலை மலையில் நின்று அருள் புரியும் திருமாலின் அடியிணை தொழுது அடைக்கலம் புகுந்த அடியார் பலர். 'சோலைமலையை ஆளும் அரசே ! துளவமாலை அணிந்த திருமாலே ! புலன் ஐந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி, அறிவு அழிந்து அலமரும்போது உன் திருவடியைத் தஞ்சம் அடையும் வகை அறியேன். ஆதலால் காலன் வரு முன்னே, கண் பஞ்சடையும் முன்னே அடியேன் உன் திருவடியில் அடைக்கலம் புகுந்தேன்' என்று மன முருகித் தொழு கின்றார் ஒரு திருமாலடியார்.[3]

சோலைமலையிலே கோயில் கொண்ட திருமால் கண் ணழகர்; வாயழகர்; தோளழகர்; தாளழகர். ஆதலால் அழகர் என்னும் பெயர் அவர்க்கே உரியதாயிற்று. அவர் வாழும் மலையும் அழகர் மலை என்னும் பெயர் பெற்றது. அரும்பெருஞ் சோதியாய் அம்மலையிலே நின்றருளும் அழகரைக் கண்களிப்பக் கண்டார் நம்மாழ்வார்; அவர் திருமேனியின் எழுதரிய அழகினைக் கண்ணால் முகந்து பருகினார்; உள்ளம் உருகினார்.

"முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையொடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ
திருமாலே கட்டுரையே"

என்று ஆராத அன்பினால் அகம் குழைந்து பாடினார்.

திருமால் இருஞ்சோலை என்று திருவாய் மொழியிலே போற்றப் படுகின்ற சோலைமலை, பாரதம் பாடிய பெருந் தேவனாரது உள்ளங் கவர்ந்த உயரிய தலங்களுள் ஒன்றாகும். தமிழகத்தின் வடக்கெல்லையாகத் திகழும் திருவேங்கடம் என்னும் திருப்பதியும், காவிரியாற்றின் நடுவே கருணை மாமுகிலாகிய திருமால் கண்ணுறங்கும் திருவரங்கமும், கற்றவர் போற்றும் கச்சி மாநகரமும், திருமால் இருஞ்சோலை என்னும் சோலைமலையும் பிறவித்துயர் கெடுக்கும் பெரும்பதிகள் என்று போற்றுகின்றார் பெருந்தேவனார்.[4]

'நாடறிந்த கள்வன் நாரணன் ஆவன்' என்ற பழ மொழிக்கு ஏற்பச் சோலைமலை அழகர், கள்ள அழகர் என்று அழைக்கப் படுகின்றார். அடியாரது உள்ளம் கவர்ந்து ஆட்கொள்ளும் சோலைமலை அழகரை 'வஞ்சக் கள்வன்; மாமாயன்' என்று புகழ்ந்து போற்றினார் நம்மாழ்வார்.

> "செஞ்சொற் கவிகாள் உயிர்காத்து
> ஆட்செய்மின் திருமால் இருஞ்சோலை
> வஞ்சக் கள்வன் மாமாயன்
> மாயக் கவியாய் வந்துஎன்
> நெஞ்சும் உயிரும் உள்கலந்து
> நின்றார் அறியா வண்ணம்என்
> நெஞ்சும் உயிரும் அவையுண்டு
> தானே ஆகி நிறைந்தானே"

என்று அப் பெருமான் பாடிய திருவாய் மொழியின் அடியாகச் சோலைமலை அழகர் கள்ள அழகர் ஆயினார் என்றும் கூறுவதுண்டு.

கள்ள அழகருக்குரிய மலைக் கோட்டையில் கண்ணய ராமல் நின்று காவல் புரிகின்றான் கறுப்பன் என்னும் வீரன். பதினெட்டாம் படிக் காவலனாகிய கறுப்பனை நினைக்கும் பொழுதே குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்;

கேடு சூழ்ந்தவர் உள்ளம் கிடுகிடுக்கும். நீதி மன்றங்களிலே படியேறி நெஞ்சாரப் பொய் சொல்லும் வஞ்சகரும் கறுப்பனது படி வாசலைக் கண்டால் கதறுவர்; பதறுவர்; வாய்மையே பேசுவர். மதுரை மாவட்டத்திலுள்ள நீதி மன்றங்களிலே தீராத வல் வழக்குகள் படிவாசல் கறுப்பன் முன்னிலையில் நொடிப் பொழுதில் நேர்மையாகத் தீர்ந்து விடும் செய்தி பாண்டி நாட்டில் நெடுங்கதையாக வழங்குகின்றது.

கோயிற் பூனை தேவருக்கு அஞ்சாது என்று சொல்வ துண்டு. ஆனால், அழகர் கோயிற் பூனைகள் அங்குள்ள கறுப்பனுக்கு அஞ்சும். இதை நன்கு அறிந்த நன்மக்களுள் ஒருவர் காஞ்சி மாநகரைச் சேர்ந்த பச்சையப்ப முதலியார். அயலூர்களிலிருந்து அழகரை வழிபடக் கருதி வரும் அடியார்க்கு உணவளிப்பதற்காக நூறாயிரம் வராகன் பொன் அவர் சோலைமலைக் கோயிலுக்கு நன்கொடை யாக வழங்கினார். இந்த அன்னதானக் கட்டளை என்றென்றும் பழுதுறாமல் நடைபெற வேண்டும் என்று விரும்பிய பச்சையப்பர் பதினெட்டாம் படிக் கறுப்பன் பார்வையிலுள்ள ஒரு கல்லிலே அக்கட்டளையின் திட்டங்களைப் பொறித்துள்ளார்.

கறுப்பன் காவலில் அமைந்த கோட்டைகள் இரண்டு. ஒன்று புறக் கோட்டை; மற்றொன்று அகக் கோட்டை. அகக் கோட்டையின் உள்ளே அமைந்த அழகரை, ‘மதிள் சூழ் சோலைமலைக்கு அரசே’ என்று ஆதரித்து அழைத்தார் பெரியாழ்வார். நெருக்கடியான நிலைமை வந்துற்றபோது பாண்டிய மன்னரை இக்கோட்டைகள் பாதுகாத்தன போலும் ! மகம்மதியர் படையெடுப்பால் சோழ நாட்டில் குழப்பமும் கொடுமையும் நிகழ்ந்த போது திருவரங்க நாதனைச் சோலை மலைக் கோட்டையிற் கொண்டு சேர்த்தனர் என்ற வரலாறு ஒன்று உண்டு.

சோலைமலை அழகர் இளவேனிற் காலத்தில் வைகை யாற்றுக்கு எழுந்தருளுவார். சித்திரைத் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் ஆற்றிலே இறங்குவார் அழகர். அப்போது தென்னாடு முழுவதும் திரண்டெழுந்து வைகையை நோக்கிச் செல்லும். ஆற்று மணல் எங்கும் ஆணும் பெண்ணுமாய் அடியார் கூட்டமும் நிறைந்து நிற்கும். சோலை எங்கும் சோறு மணம் கமழும். நகரம் எங்கும் தெய்வ நலந் திகழும். இக்காட்சியைக் காணப் பெறாத அன்பன் ஒருவன், 'நான் ஆற்றைக் கண்டேனா? அழகரைத் தொழுதேனா?' என்று அகம் குழைந்து உருகினான்.

# 30. பாவைப்பாட்டு

மழைக் காலம் கழிந்தது; மார்கழி பிறந்தது. விடியற் காலத்தில் பறவைகள் எழுந்து பாட்டிசைத்தன. திருக் கோயில்களில் காலைச் சங்கம் முழங்கிற்று. இன்னிசை வீணையர் ஒருபால் நின்று பண்ணார்ந்த பாட்டிசைத்தனர். சென்னியில் அஞ்சலி கூப்பிய அன்பர்கள் ஒருபால் நின்று செஞ்சொற்கவி பாடினர். 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே' என்ற அடியார் குரல் எங்கும் பரந்து நிறைந்தது.

இத்தகைய இனிய காலைப் பொழுதில் நீராடப் புறப் பட்டனர் இளங் கன்னியர்; எழுந்திராத தோழியரின் வீடு தோறும் சென்று துயிலுணர்த்தினர்.

> **" புள்ளும் சிலம்பினகாண்**
> **புள்ளரையன் கோயிலிலே**
> **வெள்ளை விளிசங்கின்**
> **பேரரவம் கேட்டிலையோ**
> **பிள்ளாய் எழுந்திராய். "**

என்று இசையினும் இனிய குரல் கொடுத்து அழைத்தனர். அப்போது பள்ளியை விட்டு எழுந்து வந்தார் சில பாவையர். மற்றும் சிலர் கதவைத் திறவாமல் கடுந் துயிலில் ஆழ்ந்திருந்தார். அவரிடமும் பரிவுகூர்ந்து 'ஐயோ! இப்படியும் உறங்குவார் உண்டோ? கதவைத் தட்டினோம்! கையைக் கொட்டினோம்! பாடினோம்! ஆடினோம்! ஒன்றும் பயனில்லையே!'

“ கூற்றத்தின் வாய்வீழ்ந்த
  கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே
  பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல்
  உடையாய், அருங்கலமே
தேற்றமாய் வந்து
  திறவேலோர் எம்பாவாய் ”

*‘அம்மா தோழீ ! அரக்கனாகிய கும்ப கருணனிடம் நீ உறக்கம் பயின்றாயோ? அவன் இறக்கும்பொழுது உறக்கத்தை யெல்லாம் உன்னிடம் இறக்கி விட்டானோ ?’ என்று பாடி எழுப்பினர்.*

*இவ்வாறு வல்லுறக்கம் கொண்ட கன்னியருள் ஒருத்தி வாயாடுவதில் வல்லவள். அவள் எழுந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்; நாணிக்கோணி நின்றாள். அவளைப் பார்த்து, ‘ மானின் நேர்விழி மாதே; நீ தேன் ஒழுக நேற்றுப் பேசினாயே ! நாளைப் பொழுது புலர்வதன் முன்னம் நானே வந்து எல்லோரையும் எழுப்புவேன் என்று சொன்னாயே ! அந்தச் சொல் எந்தத் திசை வழியாய்ச் சென்றதோ? அல்லது உனக்கு இன்னும் பொழுது விடிய வில்லையோ ?’ என்று அசதியாடினர்.*

*எல்லோரும் வந்து சேர்ந்தவுடன் இறைவன் திருப் புகழைப் பாடிக்கொண்டு நீராடும் துறையை நோக்கி நடந்தனர்.[1] ‘ மாலே ! மணிவண்ணா ! மதுசூதா ! ஆதியும் அந்தமும் ஆகிய நின் புகழே பாடுவோம்; ஆடுவோம்; வல் வினையை வேரறுப்போம்’ என்றனர் திருமாலைப் போற்றும் கன்னியர்.*

*சிவனடியாராகிய சிறுமியர் ‘ எம்மையாளும் ஈசனே ! பழமைக்கெல்லாம் பழமையான பரம்பொருள் நீயே ! புதுமைக் கெல்லாம் புதுமையாய் நின்ற புனிதனும் நீயே ! செம் பொருளாகிய நின்னை எம்பிரானாகப் பெற்றோம் !*

நின் மெய்யடியாரையே பணிந்து மணந்து வாழ்வோம்,' என்று பாடினர்.[2]

நீராடும் துறையைக் கண்டபோது நங்கையர் நெஞ்சம் களித்தது; முகம் மலர்ந்தது. கைவளை ஒலிக்க, காலணி சிலம்பக் கடிது சென்று தண்ணீரின் உள்ளே பாய்ந்து மூழ்கினர்; மிதந்தனர்; நீந்தினர். காதில் அணிந்த குழையாட, கழுத்தில் அணிந்த இழையாட, மாலை சூழ்ந்த குழல் ஆட, மகிழ்ந்து வண்டின் குழாம் ஆட அங்கும் இங்கும் ஓடினர்; ஈசன் புகழ் பாடினர்.

> "காதார் குழையாடப்
> பைம்பூண் கலன்ஆடக்
> கோதை குழல்ஆட
> வண்டின் குழாம்ஆடச்
> சீதப் புனல்ஆடிச்
> சிற்றம் பலம்பாடி"

இன்புற்ற இளங்கன்னியரின் கோலத்தைத் திருவெம்பாவை பாடிற்று.

பாவைப் பாட்டுப் பாடிப் பரமன் அடிதொழுதால் மாதம் மும்மாரி பொழியும்; பசியும் பிணியும் ஒழியும் என்பது பழந்தமிழ் நாட்டார் கொள்கை. கருணை வாய்ந்த மேகத்தைக் கைகூப்பித் தொழுது, 'வான் முகிலே ! நீ கருங்கடலின் நீரைக் கவர்ந்து, திருமாலின் உருவம் போல் மெய் கறுத்து, அப் பெருமான் கையிலமைந்த சங்கு போல் முழங்கி, சக்கரம் போல் மின்னி, சரம் உமிழும் சார்ங்கம் போல், நாடு செழிக்க மழை பொழிவாயாக' என்று நயந்து வேண்டினர் திருமாலைத் தொழும் நங்கையர்.

அப்படியே சிவனடியாராகிய சிறுமியரும் வானத்தை நோக்கிக் 'கைம்மாறு கருதாக் கருணை முகிலே ! நீ நெடுங் கடலின் நீரை முகந்து உண்டு, எம்மையாளுடைய உமையம் மையின் மேனிபோல் கறுத்து, அவள் சிலம்பு போல்

ஒலித்து, மருங்குல் போல் மின்னி, புருவம்போல் வில்லிட்டு, 'முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய்' என்று கைப்பித் தொழுதனர்.

மார்கழித் திங்களில் வைகை யாற்றிலே இளங் கன்னியர் நீராடி வையகம் முழுவதும் மழை வளம் சிறக்குமாறு மாதேவியை வேண்டி, ஆடலும் பாடலும் நிகழ்த்துதல் வழக்கம் என்று பரிபாடல் என்னும் பழந்தமிழ் நூல் கூறுகின்றது. கோகுலத்தில் வாழ்ந்த ஆயர்குலச் சிறுமியரும் மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்து, கண்ணன் புகழ்பாடி யமுனை யாற்றில் நீராடி மகிழ்ந்த செய்தியைத் திருப்பாவை குறிக்கின்றது.[3]

மணிவண்ணனாகிய திருமாலை மனங்குளிரப் பாடி யமுனையில் நீராடும் மங்கையர் புனிதமான மணல் எடுத்துப் பராசக்தியாகிய பார்வதியம்மையின் திருவுருவம் செய்வர்; தூபமும் சாந்தமும் கொண்டு போற்றுவர்; எங்கள் 'கண்ணிலும் கருத்திலும் நிறைந்து நிற்கும் கண்ணனை எம் கணவனாகத் தருவாய் அம்மே' என்று கைகூப்பித் தொழுவர். இப்பாவை நோன்பின் சீர்மை பாகவதப் பாட்டால் இனிது விளங்கும்.[4]

'ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் அதை அன்னை யெனப் பணிதல் ஆக்கம்' என்று பாரதியார் பாடிய முறையில் பராசக்தியை வியந்து திருவெம்பாவை பாடினார் மாணிக்கவாசகரும். மார்கழித் திருவாதிரையோடு முடிவுறும் பத்து நாளிலும் மங்கையர் பார்வதி தேவியின் பாதத்திறம் பாடிப் பனி நீராடுவர்.[5]

மார்கழித் திங்களில் நடைபெறும் விழாக்களுள் தலை சிறந்தது திருவாதிரையாகும். 'மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப் போகுதையே - கட்டையிருக்கையில் சிதம்பரம்

போய்க் காண வேணும் ஐயே!' என்று கதறியழுதான் நந்தன் என்னும் திருத்தொண்டன். அந்த முறையில் மார்கழி நீராடும் மங்கையரும் தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் ஆடும் ஈசனைப் போற்றி ஆனந்தமாய்ப் பாடுவர்.[6]

இவ்வாறு மங்கையர் எல்லாம் மகிழ்ந்தாடும் திருநாளைக் காணாது மயிலாப்பூரில் மரணமுற்றாள் பூம்பாவை என்னும் புனித நங்கை. அப்பெண்ணின் தந்தையார் சிவநேசர்; அரனடியாரிடம் அயராத அன்புடையவர். திருஞான சம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளியபோது சிவநேசர் அவரிடம் தமது துயரத்தைச் சொல்லி மனங்கரைந்தார். இறந்த பூம்பாவைக்கு உயிர்ப்பிச்சை இடல் வேண்டும் என்று இரந்து நின்றார். அது கண்ட திருஞான சம்பந்தர் உள்ளம் இரங்கினார். ஈசன் அருள் நினைந்து 'பூம்பாவைப் பதிகம்' பாடினார்.[7]

மார்கழித் திருவாதிரையும், ஆண்டாள் பாடியருளிய 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளும்,' பெரும்பாலும் ஒன்றுபட்டே வரும். அப் புனிதமான நாளில் இளம் பெண்கள் இறைவனைப் பணிந்து வேண்டுகின்ற வரமும் ஒன்றேயாகும்.[8]

'ஈசனே ! எம் பெருமானே ! ஆதிரை நாயகனாகிய உன்னிடம் அடியேம் செய்யும் விண்ணப்பம் ஒன்று உண்டு. அதைக் கேட்டருளல் வேண்டும். எம் கண் அல்லும் பகலும் உன்னையன்றி வேறு எப்பொருளையும் காணலாகாது. எம் கை உனக்கே யன்றி வேறு எவர்க்கும் எத்தகைய பணியும் செய்யலாகாது; இந்த வரத்தை நீ தந்தருள்வாயாயின் கதிரவன் எங்கே தோன்றினாலும் எமக்குக் கவலையில்லை' என்று இளமங்கையர் வேண்டுவதாகத் திருவெம்பாவை பாடிற்று.

இவ்வண்ணமே திருப்பாவையும் அருளிச் செய்கின்றது.[9] ‘திருமாலே ! எங்கள் பெருமானே ! உன் பொன்னடி போற்றி வரம் ஒன்று வேண்டுகின்றோம். ஐயனே ! அன்று இன்று எனாதபடி என்றும் யாம் உன் அடியார்கள்; உனக்கு பணி செய்வோம். உன்னை யல்லாமல் வேறு எப்பொருளிலும் எம் சிந்தை செல்லாதிருக்க அருள் புரிவாயாக’ என்று வேண்டுகின்றார் இளம் பாவையர். எனவே மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும் ஆண்டாள் அருளிய திருப்பாவையும் தமிழ் நாட்டார்க்கு அருள் நெறி காட்டும் இரு கண்கள் என்பதில் ஐயமொன்று உண்டோ?

# 31. திருநெல்வேலி

**தெ**ன் தமிழ் நாடு என்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயும் காதினிலே. இந்நாட்டிலே சிவனருள் சிறந்தது; திருவாய் மொழி பிறந்தது; எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய ஈசனை,

> **" தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே**
> **அல்லற் பிறவி அறுப்பானே "**

என்று திருவாசகம் ஓலமிட்டு அழைத்தது.

இத்தகைய தென்பாண்டி நாட்டின் தலைநகரம் நெல்லை மாநகரம். இந்நகரின் பழம் பெருமையைப் பாடினார் நல்லியற் கவிஞராகிய ஞானசம்பந்தர். திருநெல்வேலிக்கு அவர் எழுந்தருளியபோது தமிழ்த் தென்றல் வரவேற்றது. அப் பூங்காற்றின் இனிமையை நுகர்ந்த இளங்கவிஞர், 'தென்றல் வந்துலாவிய திருநெல்வேலி' என்று உள்ளம் குளிர்ந்து பாடினார்.

நெல்லை மாநகரின் நல்லணியாகத் திகழ்வது நெல்லையப்பர் திருக்கோவில். அக்கோயிலைச் சுற்றி மாட வீதிகள் உண்டு. மாடம் என்னும் சொல் கோவிலைக் குறிக்கும். வஞ்சி மாநகரத்தில் திருமால் பள்ளி கொண்டிருந்த ஆடக மாடம் என்னும் திருக்கோயிலின் பெயரும் தான்தோன்றி மாடம், தூங்கானை மாடம் முதலிய பாடல் பெற்ற சிவாலயங்களின் பெயரும் இதற்குச் சான்றாகும். நெல்லை மாநகரின் மாட வீதிகளைச் சுற்றி நான்கு ரத வீதிகள் நன்கு அமைந்துள்ளன.

நெல்லையில் உள்ள சில தெருக்களின் பெயர்கள் நல்ல தமிழாட்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். கூழைக் கடைத் தெரு என்பது ஒரு தெருவின் பெயர். குறுகிய தெருவாய் இருத்தலால் அப்பெயர் அதற்கு அமைந்தது என்று பொது மக்கள் கருதுகின்றார்கள். உண்மையில் அத்தெருவின் பெயர் கூலக்கடைத்தெரு என்பதாகும். 'கூலம்' என்பது ஒரு பழைய தமிழ்ச் சொல். உணவுப் பொருள்களாகிய நெல் புல் முதலிய பதினெட்டு வகைத் தானியங்களை விற்கும் கடை கூலக்கடை என்று முன்னாளில் வழங்கிற்று. மதுரையம்பதியில் கூலக்கடை வைத்து வாணிகம் செய்த புலவராகிய சாத்தனார் கூலவாணிகன் சாத்தனார் என்று குறிக்கப்படுகின்றார். சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் 'கூலம் குவித்த கூலவீதி' ஒன்று இருந்ததென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கூலவீதி என்பதற்குக் 'கூலக் கடைத்தெரு' என்றே பொருள் கூறிப் போந்தார் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார். எனவே பழங்காலத்தில் பழகு தமிழில் வழங்கிய கூலக்கடைத்தெரு என்ற பெயரை இன்றளவும் பாதுகாத்து வைத்திருப்பது நெல்லை மாநகரமேயாகும்.

பாண்டிய மன்னர்கள் தென்னாட்டை ஆண்ட காலத்தில் அரசாங்கத்திற்குரிய வரிப் பணத்தைக் காலத்தில் செலுத்தத் தவறிய குடிகள் காவற்புரையில் அடைக்கப் பட்டார்கள். வரிப் பணத்தைக் கொடுத்துத் தீர்க்கும் வரை அவர்களை அங்கே வைத்துக் காவல் செய்வது வழக்கம். இத்தகைய காவற்புரையொன்று நெல்லையம்பதியில் இருந்தது. அக் காவற்புரையிருந்த தெரு 'காவற்புரைத் தெரு' என்று பெயர் பெற்றது. நாயக்க மன்னரின் ஆணையால் காவை வடமலையப்பன் என்பவர் நெல்லை நாட்டில் ஆட்சி புரிந்த காலத்தில் தென் திருப்பேரை யென்னும் ஊரைச் சேர்ந்த பரம வைணவர் இருவர் அக் காவற்புரையில் அடைக்கப்பட்டார்கள். அவ்விருவரும்

சிறந்த தமிழறிஞர். கவி பாடும் திறமையும் பெற்றவர். ஒரு மூாத காலம் காவற்புரையில் சிறையிருந்த இருவரும் கவிபாடிக் காலங் கழித்தனர். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்று நம்பி, தென் திருப்பேரையில் கோயில் கொண்ட இறைவனை நினைந்து மனங் கசிந்து பாடினர்.[1]

நாள்தோறும் இவர்கள் காவற்புரையில் இருந்து கவி பாடும் செய்தியைக் காவலாளர் வாயிலாகக் கேள்வியுற்ற வடமலையப்பன் அவ்விடத்திற்கு வந்து அன்னார் கல்வித் திறமையை அறிந்து சிறையினின்றும் அவரை விடுவித்தார் என்று ஒரு வரலாறு கூறுகின்றது. சிறைக் கோட்டத்தில் அவ்விருவரும் பாடிய பாமாலை 'மகரநெடுங் குழைக் காதர் பாமாலை' என்று வழங்கி வருகின்றது.

குற்றவாளிகளை அடைத்து வைக்கும் வன் சிறைக் கோட்டமும் நெல்லை மாநகரில் இருந்ததாகத் தெரிகின்றது. தண்டனை பெற்ற குற்றவாளிகளின் காலில் கையிலும் விலங்கிட்டு அடைத்து வைத்திருக்கும் சிறைக் கோட்டம் 'விலங்கடி' என்று பேர் பெற்றிருந்தது. நெல்லையம்பதியில் மேலரதவீதியை யடுத்து 'விலங்கடி முடுக்கு' என்னும் பேருடைய சிறிய தெரு ஒன்றுள்ளது. அதுவே பழைய சிறைக் கோட்டம் இருந்த இடம் ஆகும்.

நெல்லை மாநகரின் தீர்த்தத் துறையாகிய சிந்துபூந் துறை சாலப் பழமை வாய்ந்தது. பூந்துறை என்பதே அதன் பழம் பெயராகும். அத்துறையில் நீராடப் போந்த திருஞான சம்பந்தர் அதன் இருமருங்கும் அமைந்த செழுஞ் சோலையைக் கண்ணுற்றார். அச்சோலையில் மகிழ்ந்து விளையாடிய மந்திகளை நோக்கி வியந்து நின்றார். அணி அணியாக மந்திகள் கிளைக்குக் கிளை தாவியபோது மரக்கொம்புகளில் மலர்ந்திருந்த மலர்கள் குலுங்கிச் செந்தேன் துளிக்கக் கண்டார். அக்காட்சியை ஓர் அழகிய பாட்டாகப் பாடினார்.

“ கந்தமார் தருபொழில் மந்திகள்
பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வேலி
உறை செல்வர் தாமே ”

என்று பூந்துறையுடைய பெருமானைப் புகழ்ந்து போற்றினார். அவர் வாக்கின் திறத்தால், பூந்துறை சிந்து பூந்துறையாயிற்று.

இத்தகைய் சிந்து பூந்துறையில் உள்ள தருமை மடத்தில் முன்னாளில் வாழ்ந்தார் ஒரு செந்தமிழ்ச் செல்வர். அவர் காசியிற் போந்து குமர குருபர முனிவரிடம் கல்வி கற்றவர்; கற்பனைக் களஞ்சியம் என்று கற்றறிந்தோர் பாராட்டும் சிவப்பிரகாச முனிவரின் செந்தமிழ் ஆசிரியர்; வெள்ளியம்பலவாணர் என்னும் பெயருடையவர். தேவாரம் முதலிய திருமுறைகளில் நிரம்பிய அறிவு வாய்ந்திருந்த இக்கவிஞர் தாம் இயற்றிய சில பாடல்களைத் திருமுறைப் பாடல்களின் இடையே செருகிச் சேர்த்து விட்டார் என்று சொல்லப்படுகின்றது. இவர் செருகிய பாடல்களை ‘ வெள்ளி பாடல் ’ என்று கூறுவர் தெள்ளறிவுடையோர்.

நெல்லையம்பதியிலே எண்ணிலும் எழுத்திலும் வல்லார் பலர் வாழ்ந்தார்கள்; பண்ணிலும் பாட்டிலும் சிறந்தார் பலர் திகழ்ந்தார்கள்; அவர்களுள் ஒருவர் அழகிய சொக்கநாதர். அறுபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அவர் வாக்கிலே ஒளியுண்டு; பாட்டிலே சுவையுண்டு. நெல்லையம்பதியில் கோயில் கொண்டருளும் காந்திமதி அம்மையைப் பிள்ளைத்தமிழ் மாலை அணிந்து போற்றினார் அக்கவிஞர். அப்பிள்ளைத்தமிழில் கவிச் சுவையும் பக்திச் சுவையும், களிநடம் புரியக் காணலாம்.[2] பொதிய மாமலையிலே பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்

தமிழ் மொழிகளைச் செவி குளிரக் கேட்டுக் காந்திமதியம்மை மனமகிழ்கின்றாள் என்று பாடுகின்றார் கவிஞர்.

> " மலையத் தமிழ்கேட்டு உளமகிழும்
> வாழ்வே ! வருக ! வருகவே !
> வரைமால் வனத்துத் திருநெல்லை
> வடிவே ! வருக ! வருகவே !"

என்று ஆர்வமுறப் பாடிய கவிஞர் தாய்மை உள்ளத்தோடு மேலும் கூறுகின்றார்: ' குழந்தாய் ! நீ வாராது இருந்தால் உன் கண்ணுக்கு மையெழுதேன்; நெற்றிக்குத் திலகமிடேன்; அழகான நகை அணியேன்; அடுத்தடுத்துக் கதை சொல்லேன்; இனிப்பான பாலூட்டேன்; ஒக்கலையில் வைத்துத் தேரோடும் வீதியின் வளங் காட்டேன்; தொட்டிலில் வைத்துத் தாலாட்டேன்; ஆதலால் தவழும் குழந்தாய் ! காந்திமதித் தாயே ! வருக ! வருக !' என்று அழைக்கும் முறை சால அழகியதாகும்.[2]

இப்பிள்ளைத்தமிழ் திருநெல்வேலிக் கோவிலில் அரங் கேற்றப் பெற்றது. அக்காலத்தில் இருந்த முருகதாசர் முதலிய அருட் கவிஞர்கள் பிள்ளைத்தமிழின் அழகினைப் பாராட்டினார்கள். காந்திமதியின் கருணையால் சிறந் தோங்கி வளரும் நெல்லை மாநகரம் ' திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி ' யென்று திருஞான சம்பந்தர் வழங்கிய வாய்மொழியை மெய்ப்பித்துப் பல்லாற்றானும் சிறந்து ஓங்கி விளங்குகிறது.

# 32. திருக்குற்றாலம்

ஆற்று வளமும் அருமையான காற்று வளமும் உடையது திருக்குற்றாலம். மஞ்சு தவழும் சோலை சூழ்ந்த குற்றால மலையில் மழை பொழியும்; அருவி சொரியும்; வெள்ளம் ஆறாகப் பாய்ந்து ஓடும். அங்கு,

> " ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
> ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம் "

என்று பாடினார் குறவஞ்சிக் கவிஞர். சிற்றாறு என்னும் சித்திரா நதியில் பெருகி வரும் வெள்ளமும், திருக் குற்றாலத்தில் நற்றவம் புரியும் சான்றோர் உள்ளமும் இக் கவிதையால் அழகுற விளங்குகின்றன.

திருக்குற்றாலத்தில் அருவிகள் பல உண்டு. வட அருவி என்பது சிறந்ததோர் அருவி. பொங்குமாகடல் என்னும் ஆழச் சுனையில் மூழ்கி எழுந்து பரந்து வீழும் அவ் வருவியைக் காண்பது ஓர் ஆனந்தம். இன்னும், ஐந்து கவராகப் பிரிந்து வீழும் அருவியும் அம் மலையிலே உண்டு. ஐந்தலை அருவி என்பது அதன் பெயர். 'தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்' என்று புகழப் பெற்ற தேனருவியும், சிற்றருவி என்று சொல்லப்படும் 'கானருவியும்' * குற்றாலத்தில் உண்டு. இவ் அருவித் துறைகளில் நீராடி இன்புற்றவர் எண்ணிறந்தவர்.

---

* " Forest Falls " என்னும் ஆங்கிலப் பெயர் உடையது இவ்வருவி.

மேலை நாட்டு மேதையரும் போற்றிப் புகழும் பெருமை வாய்ந்தது திருக்குற்றால அருவி. மேலை நாட்டிலே பிறந்த அறிஞர் ஒருவர் கிறிஸ்தவ சமயத் தொண்டு செய்வதற்காகத் தமிழ் வழங்கும் தென்னாட்டில் வந்து சேர்ந்தார். அரை நூற்றாண்டு அந்நாட்டில் வாழ்ந்து 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டார்' தமிழின் தொன்மையையும் செம்மையையும் உலகறியக் காட்டிய பெருமை அவருக்கே உரியதாகும். இத்தகைய அரும்பணியில் ஈடுபட்ட அப் பெரியார் கடுமையான வேனிற் காலத்தில் குற்றாலம் போந்து அருவியாடி இன் புற்று வந்தார். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் ஆசையால் அவ்வருவியின் பெருமையைப் பாராட்டியுள்ளார். 'இந் நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலை சிறந்தது குற்றால அருவி' என்னும் பொருள்பட அவர் வழங்கிய புகழுரையைத் 'திரு நெல்வேலி வரலாறு' என்ற ஆங்கில நூலிலே காணலாம்.*

மலையடிவாரத்தில் அமைந்த திருக்குற்றாலத்தில் கோங்கும் வேங்கையும், சந்தனமும் சண்பகமும் செழித் தோங்கி வளரும். வளமுற வளர்ந்த இம்மரங்களில் முல்லைக் கொடிகள் பின்னிப் பூத்து மணம் கமழும். வேங்கை மரத்தின் பொன் போன்ற மலர்களைப் பறித்துக் குறும்பலா மரத்தடியில் அமர்ந்த இறைவன் திருவடியிலே தூவி வணங்குவர் சிவனடியார்.[1] நாள்தோறும் இக் காட்சியைக் கண்ட யானைகளின் உள்ளத்திலும் ஆர்வம் பெருகிற்று; தாமும் குறும்பலா ஈசனைக் கும்பிட வேண்டும் என்னும் ஆசையால் ஆணும் பெண்ணுமாகப் பூப் பறிக்கப் புறப்பட்டன. ஓங்கி உயர்ந்த வேங்கை மரத்தில் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மலர்களைத் தம் துதிக்கையால் வளைத்துப் பறித்து மத்தகத்தில் ஏந்திக்கொண்டு, குறும்பலாவிற் போந்து தலை வணங்கித் தொழுதன. அந்

(* History of Tinnevelly by Caldwell, P.8.)

நிலையில் மத்தகத்தில் இருந்த மலர் ஈசன் சேவடியிற் சேர்ந்தது. இவ்வாறு யானைகளும் மலர் தூவி வழிபட்ட காட்சியைக் கண்டு இன்புற்ற திருஞான சம்பந்தர்,

**" பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து**
**மத்தகத்திற் பொலிய ஏந்தி**
**கூந்தற் பிடியும் களிறும்**
**உடன்வணங்கும் குறும்பலாவே "**

என்று பாடியருளினார்.[2]

குற்றால மலையில் பல வகையான பழங்கள் உண்டு. 'குலை வாழைத் தீங்கனியும் மாங்கனியும் தேன் பிலிற்றும்' என்று தேவாரத்திலே பாடப்பட்ட செழுஞ் சோலைகள் இன்றும் குற்றாலத்தில் உண்டு. அம்மலையின் ஆதிவாசிகளாய வானரங்கள் அப்பழங்களை வயிறாரத் தின்று வாட்டமின்றி வாழும்.

குற்றாலத்துக் குரங்குகள் தமிழ்ப் பாட்டில் அமையும் பேறு பெற்றுள்ளன. பூஞ்சோலையின் கிளைகளில் இருந்தும், நடந்தும், ஆடியும், ஓடியும் விளையாடுகின்ற குரங்குகளை நோக்கி, 'குற்றாலத்துக் குரங்கே ! கொப்பை விட்டு இறங்கே !' என்று பரிந்து பாடுவர் இளம் பிள்ளைகள். பிள்ளைக் கவிஞராகிய திருஞான சம்பந்தரும் இக்குரங்குகளின் மூதாதைகளைக் குற்றாலத்திலே கண்டார்.

**" மலையார் சாரல் மகவுடன்**
**வந்த மடமந்தி**
**குலையார் வாழைத் தீங்கனி**
**மாந்தும் குற்றாலம் "**

என்று அவர் அருளிய பாட்டு ஒரு செஞ்சொல் ஓவியம்; குரங்கு ஒன்று குட்டியோடு மலையினின்று இறங்கிற்று; வாழைத் தோட்டத்தின் உள்ளே புகுந்தது. செம்மையாகப் பழுத்திருந்த வாழைக் குலையின்மீது அமர்ந்தது;

பழங்களை ஒவ்வொன்றாகப் பறித்தது; உரித்தது; தின்றது; தின்று கொண்டேயிருந்தது.

சிற்றாற்றின் கரையிலே சித்திர சபை என்னும் சிறந்த மன்றம் ஒன்று உள்ளது. ஈசன் திரு நடம் புரியும் பஞ்ச சபைகளில் அதுவும் ஒன்று. "கூற்றுவன் வரும்பொழுது உற்றாரும் உறவினரும் உறு துணையாகார். குற்றாலத் துறையும் கூத்தனே உற்ற துணையாவார்" என்று அறிவுறுத்தினர் ஆன்றோர்.

**"உற்றார் யாருளரோ**
**உயிர்கொண்டு போம்பொழுது**
**குற்றாலத் துறைகூத்தன்**
**அல்லால் நமக்கு - உற்றார் யாருளரோ"**

என்று திருநாவுக்கரசரால் பாடப் பெற்ற கூத்தன் கோவில் இன்றும் குற்றாலத்தில் காட்சி தருகின்றது.

இயற்கை வளம் மலிந்த திருக்குற்றாலத்தின் இளங் காற்றிலே உள்ளே இன்ப சுகம் வேறெங்கும் காண்டல் அரிது. மந்தமாருதம் என்னும் அம் மெல்லிய பூங்காற்று நலிவுற்ற உடலுக்கு நன்மருந்து; இயற்கையன்னை அளிக்கும் இணையற்ற விருந்து.

திருக்குற்றாலத்தின் சிறப்பைக் கற்றாரும் மற்றாரும் அறியக் காட்டுவது குறவஞ்சி நாடகம். சிங்கன் என்ற குறவன் வேட்டையாடப் புறப்படுகிறான்; பாங்கான ஓர் இடத்தில் வலையை விரித்துப் பக்கத்தில் உள்ள புதரில் பதுங்கியிருக்கிறான்; அவன் எண்ணியபடியே பறவைகள் வலையில் அகப்படுகின்றன.

**"தேசத்துக் கொக்கெல்லாம்**
**கண்ணிக்குள் ளேவந்து**
**சிக்குது பார்,கறி தக்குதுபார்"**

என்று கூத்தாடுகிறான். பிடித்த பறவைகளை எடுத்துக் கொண்டு காதல் மனையாளாகிய சிங்கியைக் காண விரைந்து சென்றான்.

வீட்டிலே சிங்கியைக் காணவில்லை. சிங்கனது முறுக்கு மீசை துடித்தது. 'என்னிடம் சொல்லாமல் எங்கே போனாள் இவள்? எப்படிப் போனாள்?' என்று வெறு வீட்டைப் பார்த்து வெகுண்டு வினவினான்.

சில நாள் கழித்துச் சிங்கி வந்து சேர்ந்தாள். பட்டு உடுத்து, பணி பூண்டு, சீவி முடித்துச் சிங்காரமாக வந்த சிங்கியைக் கண்டான் சிங்கன். சினமெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது.

"இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய் நீ, சிங்கி"

என்று மெத்த அன்போடு கேட்டான்.

"கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக்
குறிசொல்லப் போனேன்அடா - சிங்கா"

என்ற கனிவான மறுமொழி கிடைத்தது.

அவள் சுற்றிக் கட்டியிருந்த பட்டுச் சேலையைப் பார்த்து வியப்புற்று சிங்கன்,

"இல்லாத சுற்றெல்லாம் எங்கே படித்தாய்
நீ, சிங்கி"

என்று மெல்ல நெருங்கினான்.

"நல்லாரைக் காண்பவருக்கு
எல்லாம் வரும்அடா, சிங்கா"

என்று அறவுரை பகர்ந்து பேச்சை முடித்தாள் ஆசைக் குறத்தி!

# 33. தென்காசி

**பா**ரத நாட்டிலே கங்கைக்கும் காசிக்கும் தலைசிறந்த பெருமை உண்டு. சிவகங்கையும் சிவகாசியும் தென்னாட்டில் உள்ள சிறந்த நகரங்கள். "கங்கை கொண்டான்" என்ற சிறப்புப் பெயர் பெற்றான் ஒரு சோழ மன்னன். 'காசி கண்டான்' என்று பாராட்டப் பெற்றான் ஒரு பாண்டிய மன்னன்.

இப் பாண்டியன் கண்ட காசி தென்காசி என்னும் திருப்பெயர் பெற்றது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த இம்மன்னனைக் 'காசி கண்ட பராக்கிரம பாண்டியன்' என்று தென் பாண்டி நாடு போற்றிப் புகழ்ந்தது.[1]

வட காசியை வாழ்விக்கும் கங்கைபோல் தென் காசியைப் புனிதமாக்குவது சித்திரா நதி. 'ஞானிகளும் அறியார்கள் சித்ரா நதி மூலம்' என்று குற்றாலக் குறவஞ்சி அதன் பிறப்பின் மேன்மையைப் புகழ்ந்து பேசிற்று. திருக்குற்றால மலையில் உள்ள செழுஞ் சோலைகளிலும், செண்பகக் காடுகளிலும் நுழைந்து, பொங்கு மாகடல் என்னும் பொய்கையில் விழுந்து எழுந்து தென்காசியை நோக்கி விரைந்து செல்லும்.[2] சித்திரா நதியின் இருமருங்கும் பழங் காலத்தில் செண்பகக் காடு செறிந்திருந்தது. கடம்ப வனத்திலே மதுரையும், வேணு வனத்திலே நெல்லையும், தில்லை வனத்திலே சிதம்பரமும் தோன்றியவாறு செண்பக வனத்திலே எழுந்தது தென்காசி நகரம். சித்திரா நதியின்

வடகரையில் நின்ற செண்பக வனத்தில் ஈசனுக்கு ஒரு திருக்கோயில் எடுத்தான் பராக்கிரம பாண்டியன்; பதினேழு ஆண்டு அத்திருப்பணியில் ஈடுபட்டான். கோயிற் பணி முடிந்தது. கோபுர வேலை அரைகுறையாக இருந்தபொழுது இறைவன் திருவடி சேர்ந்தான் மன்னன். குடிகள் எல்லாம் வாடித் துடித்தனர்; கண்ணீர் வடித்தனர். 'காசி கண்ட காவலனே ! எடுத்த திருப்பணியை முடிப்பதற்கு முன் எங்கே சென்றாய் ?' என்று ஏங்கினர்.[3]

'தென்காசி கண்ட எங்கள் மன்னன், செயற்கரிய செய்து சிவகதியுற்ற திருத்தொண்டர் குழாத்திற் கலந்தானோ? வெள்ளி மாமலையில் வீற்றிருந்தருளும் விமலன் திருவடி அடைந்தானோ? பூலோக கைலாசம் என்னும் தில்லைப் பொன்னம்பலத்தில் புகுந்தானோ? அழிவற்ற மறையோடு மறையாய் மறைந்தானோ? சிவலோகத்தில் சென்று சேர்ந்தானோ? இரு காசியிலும் கோயில் கொண்ட ஈசன்தாள் எய்தினானோ ?' என்று அன்னார் வருந்தினார்.

'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஒரு சான்றாக விளங்கினான் பராக்கிரம பாண்டியன். பல்லாண்டுகளாக மெய் வருத்தம் பாராது, அல்லும் பகலும் உழைத்து பொன்னும் பொருளும் செலவிட்டுக் கட்டிய ஆலயத்தில் தன் புகழ் விளங்க வேண்டும் என்ற ஆசை இறையளவும் அம்மன்னன் மனத்தில் இல்லை. 'இது என் செயல் அன்று; என்னை ஆளும் ஈசன் செயல்' என்று எல்லோரும் அறியக் கல்லிலே எழுதியுள்ளான் இக் காவலன். 'ஈசன் அருளால் அமைந்த இந்தக் கோயில் எல்லார்க்கும் சொந்தக் கோயில். மேலும் மேலும் இவ் வாலயத்தில் திருப்பணி செய்வாரது அடியில் விழுந்து அடியேன் தொழுவேன்; அவர்க்குத் தொழும்பனாய்ப் பணி செய்வேன்' என்று பார் அறியக் கூறினான் பராக்கிரம பாண்டியன்.[4]

தென்காசிக் கோயில் பழுதுபடாமல் நெடுங்காலம் நின்று விழுமிய பயனைத் தரல் வேண்டும் என்று விரும்பினான் இவ் வேந்தன். 'எப்போதேனும் இக்கற்பணியில் குற்றங்குறை கண்டால் அவற்றை அப்போதே பழுது பார்ப்பவர் பாதம் பணிவேன் எந்நாளும். அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்' என்று உருக்கமாகப் பாடினான் இப்பாண்டியன்.

**"ஆராயினும் இந்தத் தென்காசி**
**மேவும்பொன் ஆலயத்து**
**வாராத தோர்குற்றம் வந்தால்;அப்**
**போதங்கு வந்துஅதனை**
**நேராக வேஒழித் துப்புரப்**
**பார்களை நீதியுடன்**
**பாரார் அறியப் பணிந்தேன்**
**பராக்ரம பாண்டியனே"**

என்பது கல்லிற் கண்ட கவி.

இப் பாண்டியனது ஆர்வத்தை உடனிருந்து அறிந்த தம்பியாகிய குலசேகர பாண்டியன் நாடாளும் உரிமை பெற்ற போது குறையாக நின்ற கோபுரத்தைக் கட்டி முடித்தான். ஒன்பது தட்டுகளை உடையதாய் உயர்ந்து ஓங்கி நின்று தென்காசி நகருக்கு ஒரு நல்லணியாய் விளங்கிய அக் கோபுரம் பிற்காலத்தில் தீப்பிடித்து வெடித்தது. இப்போது இடிந்து தலைபிளந்து நிற்கும் அதன் தோற்றத்தையும், பாண்டியன் பாடியுள்ள உருக்கமான பாட்டையும் பார்த்தால் நெஞ்சம் பொறுக்குதில்லையே !

தென்காசிப் பெருங் கோயில் கட்டிய பாண்டியன், அதனருகே அகரம் என்னும் பெயரால் ஐந்து ஊர்களையும் அமைத்தான் என்பது கல்லெழுத்தால் விளங்குகிறது. அவற்றுள் ஒன்று மேலகரம். தென்காசிக்கும் திருக்குற்றா

லத்திற்கும் இடையே அமைந்த மேலகரத்திற் பிறந்த திரிகூட ராசப்பக் கவிஞரே குற்றாலக் குறவஞ்சி என்னும் அருமையான நாடகம் இயற்றியவர். அந்நூலுக்குப் பரிசாக நாயக்க மன்னர் நயந்தளித்த 'குறவஞ்சி மேடு' என்ற நன்செய் நிலமும், கருப்புக்கட்டி ஊற்றும் குற்றாலத்தில் இன்றும் காணப்படும். அங்கு நாட்டப்பட்டுள்ள பழங்கல் ஒன்று குறவஞ்சிக் கவிஞரது நினைவுச் சின்னமாக இன்றளவும் நின்று நிலவுகின்றது.

தென்காசியில் உள்ள கல்லும் கதை சொல்லும். திருக்குற்றாலத்திற்குச் செல்லும் நெறியில் 'அடிபட்டான் பாறை' என்ற கல்லொன்று உண்டு. அப்பாறையின் வரலாற்றைக் குறவஞ்சி நாடகத்திலே காணலாம்.

முன்னொரு நாள், குறுகிய மனமும் பெருகிய செல்வமும் உடையான் ஒருவன் குதிரைமீது ஏறிக் குற்றாலத்தை நோக்கிச் சென்றான். பாதையில் அமைந்த பாறையின் அருகே வந்தபோது அங்கு நின்றார் சிலர் அவனைத் தடுத்தார்கள். தான் என்னும் அகந்தை யுற்ற அத்தருக்கன் சீற்றம் தலைக்கொண்டான். 'இப் பாறைதான் திருக்குற்றாலத்தின் எல்லை; இதன்மீது பரிமாவின் மேலேறிச் செல்லலாகாது; இது புனிதமான இடம்' என்று பணிவாகக் கூறித் தடை செய்த மக்களைத் தாறுமாறாக ஏசிவிட்டுத் தன் வாசியை ஓட்டினான் அத்தருக்கன். நடந்த குதிரையின் நான்கு கால்களும் பாறையில் நன்றாக ஒட்டிக்கொண்டன. அடியெடுக்க மாட்டாமல் அலமந்து நின்றது அவ் விலங்கு. அன்று முதல் 'அடியொட்டுப் பாறை' என்று பெயர் பெற்றது அப்பாறை.

"ஆசார ஈனத் தருக்கன் குதிரை
அடியொட்டுப் பாறை
அடிஒட்டி னாற்போலும்
தேசத்துக் கொக்கெல்லாம்
கண்ணிக்குள் ளேவந்து
சிக்குது பார்கறி தக்குதுபார்"

என்ற குறவஞ்சிப் பாட்டால் இவ்வரலாறு விளங்கும். இப் புதுமை கண்ட அடியொட்டுப் பாறை இப்பொழுது பொது மக்கள் உலாவும் பூஞ்சோலையாகத் திகழ்கின்றது.

தென்காசி நகரிலே தென்றல் தவழும் இளவேனிற் காலம். மன்னன் மாளிகையில் தன்னந் தனியளாய் இருக் கின்றாள் அரசமாதேவி; மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றிலே வாடுகின்றாள். சோலையிலே ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் குலாவும் அன்னங்களைக் கண்டு அகம் குழைகின்றாள். 'மதுரைக்குச் சென்ற என் மன்னர் என்று வருவாரோ?' என்று மயங்குகின்றாள். 'செந்தமிழ் இன்பத்திலே திளைத்திருக்கும் அவர் நெஞ்சம் இங்கே இளைத்து வாடும் என்னையும் நினைக்குமோ' என்று ஏங்குகின்றாள்.

"என்னை இவ்வாறு அவர்மறந்தும்
யான்அவரை மிகநினைந்திங்கு
இருந்து வாட
முன்வினைப் பயன்தானோ
இப்பிறப்பில் செய்ததவம்
முடிந்த வாறோ
கன்னன்மதன் அபிராமன்
வரதுங்க ராமன்இயற்
காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்காள்
இனிஎவ்வாறு உயிர்தரித்திங்கு
ஆற்று மாறே"

என்று தன் உணர்ச்சியை யெல்லாம் தமிழ்ப் பாட்டிலே உகுத்து ஆற்றாமையை மாற்ற முயல்கின்றாள். 'அன்பின் சுவையறிந்த அன்னங்காள்! என் காதலராகிய காவலர் செஞ்சொற் கவிஞர். அவர் அருந்தமிழ் நூலொன்று இயற்றினார். தேமதுரத் தமிழோசை நிரம்பிய அந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றக் கொண்டு

சென்றார். சின்னாளில் வருவேன் என்று சொல்லிச் சென்றவர் பன்னாளாகியும் வரக்காணேன் ! இங்கு அவரையே நினைந்து நான் இருக்க, அங்கே தமிழிலே தோய்ந்து அவர் இருக்க நேர்ந்தது பண்டை வினையின் பயனோ? பாவியேன் செய்த பழவினையோ?' என்று மனம் உருகிப் பேசுகின்றாள்.

இவ்வாறு பாடிய பாவை வரதுங்கராம பாண்டியன் தேவி. அம்மன்னனது வேலின் வெம்மையும், இயற்றிய அவன் நூலின் செம்மையும், ஒரு பழம் பாட்டால் விளங்கு கின்றன.[5] இம்மன்னன் தென்காசிக்கு அருகேயுள்ள கருவையம்பதியிலே ஈடுபட்டு அருமையான அந்தாதியும் மாலைகளும் பாடியுள்ளான்.

இப்பாண்டியன் காலத்தில் அதிவீரராம பாண்டி யனும் வாழ்ந்தான். அவனும் சிறந்த கவிஞன்; செந்தமிழ்ப் புலமை பெற்று விளங்கியவன். நைடதம் என்ற நூல் இயற்றி அழியாப் புகழ் அடைந்தவன் அவனே. 'வெற்றி வேற்கை வீர ராமன், கொற்கையாளி' என்று நறுந்தொகை அவன் புகழைப் பாடிற்று.

பிற்காலப் பாண்டியர்கள் என்று தென்னாட்டு வரலாற்றிலே பேசப்படுகின்ற பராக்கிரமன் முதலாய பாண்டியர்கள் நற்றமிழ்ப் புலமையோடு சிற்பக் கலையிலும் சிறந்த ஆர்வமுடையராய் இருந்தனர் என்பது தென்காசித் திருக்கோயிற் பணியினால் தெரிகின்றது. அங்குள்ள கற்றூண்களில் வடிக்கப்பட்டுள்ள உருவங்களைக் கண்டால் கண் களிக்கும்; கருதினால் மனம் திளைக்கும்.

கல்லிலே நின்று காட்சியளிக்கின்றாள் ஒரு மங்கை; அவள் மேனிலத்தும் நானிலத்தும் மிக்க எழில் உடையாள்; அழகு துள்ளும் முகத்தினாள்; கமுகை வென்ற கழுத்தினாள்; சின்னஞ் சிறிய இடையினாள்; வன்னச் சேலை உடையினாள்; கருவமிருக்கும் மங்கைப் பருவத் தாள். ஒரு கையிலே கண்ணாடி பிடித்து மற்றொரு கையை

வண்ணமாக வளைத்து நெற்றியிலே பொட்டிட நிற்கின்றாள் அப்பூவை.

“ இருண்ட மேகம்சுற்றிச் சுருண்டு
சுழிஎறியும் கொண்டையாள் - குழை
ஏறியாடி நெஞ்சைச் சூறையாடும்
விழிக் கெண்டையாள்
திருந்து பூமுருக்கின் அரும்பு
போலிருக்கும் இதழினாள் - வரிச்
சிலையைப் போல்வளைந்து பிறையைப்
போல்இலங்கும் நுதலினாள் ”

என்று குற்றாலக் குறவஞ்சிக் கவிஞர் எழுதிய சொல் ஓவியம் அக்கல் ஓவியத்தை தழுவி எழுந்ததாகத் தோன்றுகின்றது.

ஆங்கில நாட்டுக் கம்பெனியார் இங்கு அரசாண்ட காலத்தில் காசா மேசர் என்பவர் தென்காசி நாட்டில் ஒரு வர்த்தக கர்த்தராக நியமிக்கப்பட்டார். அவர் தென்காசி நகரின் அருகே ஒரு குடியிருப்பு அமைத்து, திருக்குற்றால மலையிலே தோட்டப் பயிர் செய்யத் தொடங்கினார். தெற்கு மலைத் தோட்டம் முதலிய பத்துத் தோட்டங்களை உருவாக்கியவர் அவரே. அம்மலையில் இருபெரும் பாறைகள் குடை போற் கவிந்துள்ள இடத்தில் இயற்கையாக அமைந்திருக்கின்றது ஒரு குகை. அக் குகையிலே ஒரு முனிவர் நெடுங்காலம் இருந்து தவம் புரிந்தார். அது கண்ட பொது மக்கள் ‘ பரதேசிக் குகை என்று அதற்குப் பெயர் இட்டனர். பதினைந்து பழைய எழுத்துகள் இன்றும் அங்கே காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்து அறிந்தால் அக்குகையைப்பற்றிய குறிப்புகள் கிடைத்தல் கூடும்.

‘ பரதேசிக் குகை ’ யைச் சுற்றி ஒரு தோட்டம் வகுத்தார் காசாமேசர். நாட்டு மக்கள் அதற்குப் ‘ பரதேசித் தோட்டம் ’ என்று பெயரிட்டார்கள். காசாமேசர் அதனைச் சற்றே

திரித்து 'பாரடைஸ் எஸ்டேட்' என்று ஆங்கிலத்தில் அமைத்தார். பரதேசியார் காலத்தில் அருள் விளைந்த இடம் காசாமேசர் கை வைத்தவுடன் பொருள் விளையும் பூமியாயிற்று. இன்றளவும் ஆங்கிலத்தில் 'பாரடைஸ் எஸ்டேட்' என்ற பெயரே அதற்கு வழங்கி வருகின்றது.

ஆறு ஆண்டுகள் காசாமேசர் பரிவாரங்களோடு தங்கி யிருந்த இடம் ஒரு சிற்றூர் ஆயிற்று. பேர் ஆசை கொண்ட அவ்வர்த்தக கர்த்தர் 'காசாமேசர் புரம்' என்று அதற்குப் பெயர் கொடுத்தார். ஆனால் காசி என்னும் பெயரின் வாசி யறிந்த தென்காசியார் அதைக் 'காசிமேசபுரம்' என்று வழங்கலாயினர். முன் பின் அறியாத பரதேசியைச் சுவர்க்கத்தில் மாட்டிய வெள்ளையற்கும் வீடளிக்கக் கருதி அவர் பெயரை முத்தி தரும் காசியாக மாற்றினர் போலும் தென்காசி மக்கள் !

தொன்று தொட்டுப் பொருளும் அருளும் பொருந்தித் திகழ்வது தென்காசி நன்னகரம். அதைச் சார்ந்த மேலகரம், திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகத்தைத் தமிழகத்தார்க்குத் தந்தது. அந்த அகரத்திலே, குறவஞ்சிக் கவிஞர் குடும்பத் திலே பிறந்தருளினார் ஒரு பெருமகன். செந்தமிழையுஞ் சிவ நெறியையும் கண்ணெனக் கருதி வளர்க்கும் திருவாவடு துறை ஆதீனத்தைச் சார்ந்து, தவ ஒழுக்கத்தில் தலைசிறந்து திகழ்ந்தார் அப்பெருமான். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்னும் அவர் பெயரை அறியாதார் இந்நாட்டில் அறியாதாரே ! ஆவடு துறை ஆதீனத் தலைவராக அவர் அமர்ந்திருந்த காலத்தில் தமிழ் மொழியின் நிலை உயர்ந்தது; கலை சிறந்தது.[6]

# 34. பாவநாசம்

**பொய்** அறியாப் புலவர் பாடும் பெருமை உடையது பொருனை என்னும் திருநதி. "தமிழ் முனிவன் வாழும் மலை" என்று தக்கோர் புகழும் பொதிய மலையிலே பிறந்து, ஒரு காத வழி நடந்து, தென் தமிழ் நாட்டிலே பாலருவியாய் வீழ்ந்து பரந்து பாயும் பொருனையாற்றின் அழகினைப் புகழ்ந்தனர் பாவலரும் நாவலரும்.

**"திங்கள்முடி சூடுமலை**
**தென்றல்விளை யாடுமலை**
**தங்குமுகில் சூழுமலை**
**தமிழ்முனிவன் வாழுமலை**
**அங்கயற்கண் அம்மை,திரு**
**அருள்சுரந்து பொழிவதெனப்**
**பொங்கருவி தூங்குமலை**
**பொதியமலை என்மலையே"**

என்று ஒரு குறவஞ்சியின் வாயிலாக அம்மலையின் வளம்பாடி மகிழ்ந்தார் குமரகுருபர முனிவர். "தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டிநாடு" என்று மாணிக்க வாசகர் வியந்து போற்றிய நன்னாட்டை வாழ்விக்கும் பொதிய மலையிலே குளிர்மை வாய்ந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு இறும்பூதெய்துகின்றாள் குறவஞ்சி. "பெருமை சான்ற பொதிய மாமலையே! தண்மையுடைய வெண்மதியை நீ முடியிலே அணிந்தாய்! வண்மையுடைய முகிலை வண்ணத் துகிலாக உடுத்தாய்! நீ ஈன்றெடுத்த தென்றல் என்னும் பூங்காற்று எம்மருங்கும் தவழ்ந்து

விளையாடக் கண்டு மகிழ்ந்தாய் ! எத்திசையும் புகழ் மணக்கும் முத்தமிழின் முதுபெருந் தொண்டனாகிய திரு முனிவன் என்றும் இருந்து வாழ இடம் தந்தாய் ! அகில மெல்லாம் காத்தருளும் அங்கயற்கண் அம்மையின் கங்கு கரையற்ற கருணைபோல் பொங்கிப் பொழியும் பொருனை யாற்றின் அருவியால் பொலிவுற்றாய் ! இயற்கை இன்பம் தரும் தென் மலையாகிய நின்னை என் மலையாகப் பெற்றேன். பெருமிதம் உற்றேன்" என்று செம்மாந்து பேசுகின்றாள் அம் மங்கை.

இத்தகைய இனிய தமிழ் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது பாவநாசம் என்னும் பழம்பதி. பொருனையாற்றின் புண்ணியத் துறைகளுள் தலைமை சான்றது அப்பதியே. மெய்யடியாரது பாவத்தையெல்லாம் போக்கவல்ல பரம்பொருளாகிய ஈசன் பொருனையாற்றின் கரையிலே கோயில் கொண்டுள்ளான். உலகம்மை என்னும் உமாதேவியோடு பாவநாசனாகிய ஈசன் அமர்ந்தருளும் திருக்கோயிலின் முன்னே பணிந்து செல்லும் பொருனையாற்றின் தெளிவையும், அவ் ஆற்றில் இறங்கி நீராடுவதற்கு அமைந்த படித்துறையின் அழகையும் காண்பது ஓர் ஆனந்தம். திருவாரூர்த் தேர் அழகும், திருவிடைமருதூர்த் தெரு அழகும் பாவநாசப் படி அழகும் கண்ணாற் கண்டு களிக்கத் தக்கனவாகும். பழமரச் சோலையின் நிழலில் பாங்குற அமைந்த பாவநாசப் படித்துறையை,

"பொதும்பர் நிழல்குளிர் தூங்கப்
பொலிந்த படித்துறை"

என்று பாராட்டினார் ஒரு பாவலர். அப் படித்துறையை மருவி ஓடும் நதியிலே எண்ணிறந்த மீன்கள் அணியணியாக

நீந்திச் செல்லும்; ஆற்றின் மீது அழகாகக் கவிந்த மரக் கிளைகளில் வானரங்கள் மந்தியோடு கொஞ்சிக் குலாவும்.

இயற்கை நலம் வாய்ந்த பாவநாசப் படித்துறையில் நாள்தோறும் நீராடிப் பூசனை புரிந்து உலகம்மையை உள் ளன்போடு வழிபட்டு வந்தார் ஒரு கவிஞர்.[1] அவர் ஒருகால் உலகம்மையிடம் பிரியா விடை கொண்டு இராமேச்சுரத் திற்குச் சென்றார்; இராமநாதனைக் கண் களிப்பக் கண்டு வணங்கினார். அக்காலத்தில் இராமேச்சுர தரிசனம் செய்தோர் இராமநாதபுரம் போந்து சேதுபதியையும் காண்பது வழக்கம். இராமநாதனை வழிபட்ட பலன் சேது மன்னரைக் காண்பவர்க்கே கிடைக்கும் என்பது அன்னார் கொள்கை. அந்த முறையில் இராமநாதபுரத்திற்குச் சென்றார் கவிஞர். ஆயினும் மாளிகையின் உள்ளே தலைகாட்ட முடியவில்லை. இவரை "ஏன்" என்று கேட்பவர் அங்கு எவரும் இல்லை. பகல் முழுவதும் பசியைப் பொறுத்துக்கொண்டு தலைவாசலில் காத்திருந்தார் ! மாலைப் பொழுதில் மாளிகையை வலம் வந்து கடைவாசலை அடைந்தார். தம் தலைவிதியை நொந்து ஒரு தமிழ்ப்பாட்டு இசைத்தார்.

"முத்தலை சிந்தும் பொருநா
நதித்துறை மூழ்கி எழுந்து
அத்தலை நின்று விடாய் ஆறிக்
கல்வி அளைந்து நறுங்
கொத்தலர் சண்பகக் காவோடு
நின்று குலாவிய யான்
இத்தலை வந்து கடைத்தலை
காத்தல் இளந்தலையே"

"அந்தோ ! எந்த இடத்தில் இருத்தற்குரிய நான் இந்த இடத்தில் வந்து இடர்ப்படுகின்றேன் ! பொருநைத் துறையிலே நீராடி, பூஞ்சோலையிலே இளைப்பாறி, புலவர்

குழாத்திலே திளைத்துப் பழகிய யான் அழைப்பாரும் அடுப்பாரும் இன்றித் தன்னந் தனியனாய்க் கடைத் தலையில் காத்திருக்கின்றேனே ! இது ஈன மன்றோ?" என்று அக்கவிஞர் கசிந்துருகிப் பாடிய பாட்டு அவ் வழியாக வந்த சேதுபதியின் செவியில் விழுந்தது. உடனே கடைவாயில் திறந்தது. செஞ்சொற் கவி பாடிய பாவநாசப் புலவரைச் சீராக வரவேற்றார் சேது மன்னர்; பிழை பொறுக்குமாறு வேண்டினார்; வரிசையறிந்து பரிசளித்தார். சேதுபதியிடம் விடை பெற்றுப் பாவநாசப் பதியை வந்தடைந்தார் பாவலர்.

இப்பாவலர் மரபிலே தோன்றிய புலவர் பெருமான் சிவஞான முனிவர். பாவநாசத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்க புரத்திலே பிறந்து, முக்களாலிங்கன் என்னும் பிள்ளைப் பெயர் பெற்ற இவ்வித்தகர், இளமையிலேயே திருவாவடுதுறை மடத்தை அடைந்து துறவு பூண்டார். தென்மொழியும் வடமொழியும் தெள்ளத் தெளிய உணர்ந்தார்; செயற்கரிய தவம் செய்து செம்மையுற்றார்.

**" வடநூற் கடலும்**
**தென்தமிழ்க் கடலும்**
**முழுதுணர்ந் தருளிய**
**முனிவரன், துறைசை**
**வாழ்சிவ ஞான மாதவன் "**

என்று அவர் புலமைத் திறத்தையும் தவத்தின் சிறப்பையும் தமிழகம் வியந்து புகழ்ந்தது. சைவ சித்தாந்தத்தின் உயிர் நாடியாக விளங்கும் சிவஞான போதம் என்னும் செம்மை சான்ற ஞானநூலுக்குப் பேருரை கண்ட பெரியார் இவரே ! திருக்குறளின் கருத்துகளை நாடறிந்த கதைகளின் வாயிலாக விளக்கிச் 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்னும் பெயரால் அரியதொரு நூல் இயற்றிய கவிஞரும் இவரே !

வட மொழிக்கும் தென்மொழிக்கும் 'இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக' என்று ஒரு சாரார் இந்நாட்டிலே பரப்பிய தவறான கொள்கையை மறுத்து, தென்மொழி யாகிய தமிழின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்திய புலவர் பெருமான் இவரே ! இவ்வாறு சிவநெறிக்கும் செந்தமிழ் மொழிக்கும் சீரிய தொண்டுசெய்த சிவஞான முனிவர் பாவநாசத்தை யடுத்த சிங்கையம்பதியிலே கோயில் கொண்டு செந்தமிழ் நாட்டைக் காத்தருள்கின்றார்.

# 35. ஆழ்வார் திருநகரி

**பொ**ருனையாறு வளம் பெருக்கும் நெல்லைத் திரு நாட்டில் தமிழுலகம் தலைக்கொண்டு போற்றும் பொதிகை மலை உண்டு; வைணவ உலகம் வணங்கி ஏத்தும் குருகைப் பதியும் உண்டு. தமிழ்ப் பெருந் தேர்க்கு அச்சாணி எனத் திகழும் அருந்தவ முனிவன் வாழும் மலை பொதிகை. வைணவத் தருவிற்கு ஆணி வேராக விளங்கும் மாறன் பிறந்த ஊர் குருகை.

குருகை என்பது குருகூர் என்ற பெயரின் குறுக்கம். பொருனை யாற்றின் தென் கரையில் சவியுறத் தெளிந்த சங்கணித் துறையில் உள்ளது அம்மூதூர்.[1] ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே அவ்வூரில் வேளாண் மரபிலே தோன்றினார் ஒரு பெரியார். அவர் கருவிலே ஞானத் திருவுடையார். நெடுங்காலம் தவம் முயன்று பெற்ற தனியிளங் குழந்தையைக் கண்டு பெற்றாரும் உற்றாரும் பேரின்பம் எய்தினர்; மாறன் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். ஆயினும் அக் குழந்தை முகமலர்ந்து தலையசைத்து விளையாடக் கண்டாரில்லை. குழலினும் இனிய மழலை மொழி பேசக் கேட்டாரில்லை. இங்ஙனம் உலக நடைக்கு மாறாக உயிர் வாழ்ந்த குழந்தையை அவ்வூரிலுள்ள திருமால் கோயிலுக்கு எடுத்துச் சென்றனர். ஆலயத்தைக் கண்ட குழந்தை அகமகிழ்ந்து அங்கு ஒருசார் அமைந்த புளியமரத்தை நோக்கித் தவழ்ந்து, அதன் நிழலில் அமர்ந்தது. போதி மரத்தடியில் அமர்ந்த புத்தர் போலவும்,

அசோக மரத்தடியில் அமர்ந்த அருகர் போலவும் புளியமரத்தடியில் அமர்ந்த புனிதராகிய மாறனைக் குருகையார் வியந்து புகழ்ந்தனர்.

இவ்வண்ணம் பதினாறாண்டுகள் வாழ்ந்த மாறன் பெருமையை உலகறியச் செய்தவர் ஓர் அருட் பெருஞ் செல்வர். அவர் திருக்கோளூர் என்னும் சிற்றூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர்; இளமையிலேயே செவிச் செல்வம் பெற்றுச் சிறந்தவர். அவர் பாடிய செஞ்சொற் கவிதையின் சுவை அறிந்த சான்றோர் அவர்க்கு ‘ மதுர கவி ’ என்னும் கலைப்பட்டம் சூட்டினர்.

இத்தகைய சீர்மை வாய்ந்த நல்லார் புளிய மரத்தடியிற் போந்து மாறன் திருமேனியைக் கண்டார். ஞானச் சுடரொளியாய் விளங்கிய அப் பெருமானைத் தம் குருநாதனாகக் கொண்டார். அவர் திருவாய் மலர்ந்து அருளிய திருப்பாசுரங்களைப் பண்ணோடு பாடிப் பரவசமுற்றார். தமிழ் நாடெங்கும் அப் பாசுரங்களைப் பாடி அடியார் மனத்தை மகிழ்வித்தார். அப்பணி புரியுமாறு தம்மை ஆட்கொண்ட மாறனைத் தெய்வ மாகவே கருதி வழிபட்டார்.

**“ தேவு மற்றறியேன் குருகூர் நம்பி**
**பாவின் இன்னிசை பாடித் திரிவனே ”**

என்பது அவர் திருவாக்கு.

தென்னாட்டில் வைணவ சமயத்தைப் பேணி வளர்த்த பெருமக்கள் ஆழ்வார்கள் என்று அழைக்கப்படுவர். பன்னிரு ஆழ்வார்கள் பண்ணார்ந்த பாட்டிசைத்து, தமிழ் நாடெங்கும் தெய்வ மணம் கமழச் செய்தனர். அன்னவருள் தலைமை சான்றவர் குருகை மாறன் என்பது ஆன்றோர் கொள்கை. அவருடைய திருவாய்மொழி முதலிய திருப்பாசுரங்கள் தெள்ளிய மறைமொழிகளாகத்

திகழ்கின்றன. அவர் வழங்கிய ஞானச் செல்வத்தின் அடியாக எழுந்தது வைணவ சித்தாந்தம்.

திருமால் அடியாராகிய ஆழ்வார்களுள் தலைமையும் பெருமையும் உடையவராதலால் நம்மாழ்வார் என்ற அருமைத் திருப்பெயர் குருகை மாறனுக்கே உரியதாயிற்று. இத்தகைய பெரியார் பிறந்தருளும் பேறு பெற்றமையால் குருகூரின் புகழ் பெருகிற்று. ஆழ்வார் திருநகரி என்ற பெயர் அதற்கு அமைவதாயிற்று. நெல்லை நாட்டில் பொதியமலைச் சாரலில் எழுந்த ஊர்களில் ஒன்று ஆழ்வார் குறிச்சி என்னும் பெயர் பெற்றுள்ளது. ஆழ்வார் என்னும் சொல் சிறப்பு வகையில் நம்மாழ்வாரையே குறிக்குமாதலால் அவ்வூரும் அவர் பெயர் தாங்கி நிற்பது போலும்.

உண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம் கண்ணனே என்று ஆர்வமுற்றுப் பாடிய இவ் ஆழ்வார் தமிழறிஞர் களை இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் முறை அழகிய தாகும். 'வம்மின் புலவீர்' என்று ஆதரித்து அழைத்து அவர்க்கு ஓர் நல்லுரை பகர்கின்றார்.[2] 'நும் மெய் வருத்திக் கைசெய்து உய்ம்மினோ' என்று அவர்க்கு வாழும் நெறி காட்டுகின்றார். உழைப்பின் பெருமையை உணர்த்தும் இத் திருவாய்மொழி பொன்னே போல் போற்றத் தக்கதாகும் !

தமிழகத்தின் பொற்கலம் என்று புகழப் பெறுகின்ற சங்க காலத்தில் பொய்யறியாப் புலவர் பலர் வாழ்ந்தனர். வரையாது பொருள் வழங்கி அறிஞரையும் வறிஞரையும் ஆதரித்த பெருஞ் செல்வரும் வாழ்ந்தனர். அவர் கொடைத் திறங்கண்டு இன்புற்ற புலவர்கள் இறவாத தமிழ்க் கவிதையால் அன்னாரைப் புகழ்ந்து போற்றினர். புலனழுக்கற்ற அந்தணாளன் என்று புலவர் உலகம் பாராட்டிய கபிலர் பெருமான் பாரி என்னும் சிற்றரசனை மனமாரப் புகழ்ந்து பாடினார். அவ் வண்ணமே

கொடையிற் சிறந்த அதிகமான் என்னும் குறுநில மன்னனை வாயார வாழ்த்திப் பாடினர் ஔவையார். தன் தலையையும் கொடுத்து ஒரு புலவரின் வறுமையை ஒழிக்க முற்பட்ட குமணனைச் சிந்தை குளிர்ந்து பாடினார் சாத்தனார். இன்னோரன்ன செய்திகள் சங்க நூல்களால் அறியப்படும்.

சங்கப் புலவர்கள் காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் கொடுப்போர் அருகினர்; கொள்வோர் பெருகினர். பாடவல்ல புலவர்கள், ஏட்டிலே தமிழ்ப் பாட்டைத் தீட்டிக்கொண்டு சிறு பொருள் படைத்தோரை நாடித் திரிந்தனர். பாட்டும் உரையும் அறியாத மாந்தரின் ஓட்டைச் செவிகளில் பசுந்தமிழை உகுப்பாராயினர். அன்னார் நிலைமை கண்டு இரக்கமுற்றார் நம்மாழ்வார்; 'புலவர்களே ! இம்மண்ணுலகில் செல்வர் இப்போதில்லை' என்று தமிழ்ப் புலவர்களுக்கு அறிவித்தார். 'வறும் பூவில் சென்று பாடும் வண்டுபோல் செவிச்செல்வம் பெறாத புல்லரைப் பாடிப் பொழுது போக்குதல் நன்றோ ! வாய் விளைந்து உண்ணக் கருதும் வழக்கத்தை ஒழித்து மெய் வருந்த உழைத்து வாழும் வழக்கத்தை மேற்கொள்வீர்' என்று ஆழ்வார் அருளிய அறிவுரை தமிழ்ப் புலவர்க்கு எஞ்ஞான்றும் ஒளி நெறி காட்டுவதாகும்.

**"வம்மின் புலவீர் ! நும் மெய்வருத்திக்**
**கைசெய்து உய்ம்மினோ**
**இம்மண்ணுலகில் செல்வர் இப்போது**
**இல்லை நோக்கினோம்**
**நும்இன் கவிகொண்டு நும்மிட்டா**
**தெய்வம் ஏத்தினால்**
**செம்மின் சுடர்மணி என்திரு**
**மாலுக்குச் சேருமே"**

என்பது திருவாய்மொழி.

நம்மாழ்வாருக்கு இந்நாட்டில் வழங்கும் பெயர்கள் பலவாகும். அவற்றுள் சடகோபன் என்னும் பெயர் பெரு வழக்குடையது. நம்மாழ்வார்மீது கம்பர் இயற்றியதாகக் கருதப்படும் ஓர் அந்தாதி நூல் 'சடகோபர் அந்தாதி' என்று பெயர் பெற்றுள்ளது.

இத்தகைய ஆழ்வார் பிறந்தருளும் பேறு பெற்ற திருநகரைக் காண ஆசையுற்றுத் தொண்டை நாட்டினின்றும் புறப்பட்டு நெல்லை நாட்டை வந்தடைந்தார் உடையவர் என்னும் சிறப்புப் பெயருடைய இராமானுசர். அவர் 'புகழ் மலிந்த பாமன்னு மாறன் அடிபணிந்து உய்ந்தவர்.' அப்பெருமான் ஆழ்வார் திருநகரியின் அருகே வந்தபோது,

**"இதுவோ திருநகரி, ஈதோ பொருநல்**
**இதுவோ பரமபதத் தெல்லை - இதுவோதான்**
**வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை**
**ஓதும் சடகோபன் ஊர்"**

என்று வியந்து போற்றினர் என்றால், அப் பதியின் பெருமையை விரித்துரைக்கவும் வேண்டுமோ?

# 36. செப்பறை

**பொ**ருனையாற்றின் கரையிலே செப்பறை என்றொரு தலம் உண்டு; தனியே அதற்கொரு நலம் உண்டு. சோலையும் வயலும் சூழ்ந்த அத்திருப்பதியில் தனக்குவமை யில்லாத் தலைவன் தன்னந் தனியனாய்த் தாண்டவம் புரிகின்றான். 'அழகிய கூத்தன்' என்னும் அருமைப் பெயர் பெற்ற அப் பெருமான் ஐந்தொழில் புரியும் ஆலயத்தின் அருகே அறு தொழிலோர் இருக்கை இல்லை; மாட வீதிகளைச் சுற்றி மக்கள் குடியிருப்பும் இல்லை.

இத்தகைய செப்பறையைச் சேர்ந்த சிற்றூர் இராச வல்லிபுரம் எனப்படும். பயிர்த் தொழில் செய்யும் கார் காத்த வேளாளர் பண்புற்று வாழும் அவ்வூரில் அகிலாண்ட நாயகி கோயில் கொண்டுள்ளாள். அவ்வம்மையை மதுரத் தமிழாற் பாடினார் மாதவச் சிவஞான முனிவர்.

> "அருள்ஞான வாரியே
> ராசை மேவிய செல்வ
> அகிலாண்டம் என்னும் அரசே"

என்பது அவர் திருவாக்கு.

அருட்செல்வமும் பொருட்செல்வமும் உடையார் பலர் அவ்வூரில் வாழ்ந்தார்கள். செப்பறையில் ஆனந்த நடம் புரியும் அழகிய கூத்தர்க்கு வழிவழியாகத் தொண்டாற்றும் திருமடம் ஒன்று அங்குண்டு. செப்பறை

மடம் என்று பெயர் பெற்ற அந்நிலையத்தில் கலை ஞானமும் மெய்ஞ்ஞானமும் நிரம்பிய மேலோர் பலர் விளங்கினர்; தென்கலையும் வடகலையும் வளர்த்தனர். அன்னார் பெருமை தென்னாடெங்கும் பரவிற்று. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த நல்லறிஞர் ஒருவர் செப்பறை மடத்தை நாடி வந்தடைந்தார்; கல்விக் களஞ்சியமாய் விளங்கிய கனக சபாபதி தேசிகரைக் கண்டார். அவர் அடியின் கீழ் அமர்ந்து அருங்கலை பயின்றார். தமிழ் மொழியில் 'இலக்கணக் கொத்து' முதலாய பல நூல்கள் இயற்றிப் புகழ் பெற்ற அப்பெரியார் செப்பறை மடத்தைச் சிந்தையாரப் போற்றியுள்ளார்.[1]

முத்தமிழின் சுவை தேர்ந்த வித்தகர் பலர் அவ்வூரிலே தோன்றினர். அன்னவருள் ஒருவர் மன்னன் முத்துசாமி என்று பாவலர் உலகத்தில் பாராட்டப் பெற்றவர்; அவர் கார்காத்த வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்; கற்றவர்க்கு உற்ற துணைவர். தென்பாண்டி நாட்டுக் கவிஞருள் ஒருவராகிய அழகிய சொக்கநாதர் அவருடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியராயினார்.[2]

ஒருநாள் மன்னன் முத்துசாமியைக் கண்டு பரிசு பெறக் கருதி வந்தார் ஒருவர். அப்போது வள்ளல் வெளியே சென்றிருந்தார். அழகிய சொக்கநாதர் அவரை அன்புடன் வரவேற்றார். உண்பதற்கு இனிய கனிகளைக் கொடுத்து உபசரித்தார். வந்தவர் தமது மத்தளத்தை எடுத்து அழகிய சொக்கநாதரிடம் தமது கை வரிசையைக் காட்டத் தொடங்கினார். அவர் கைதேறாத கற்றுக்குட்டி என்பதை மத்தளம் நன்கு முழக்கிற்று. அப்போது வள்ளல் தம் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார். அழகிய சொக்கநாதர் அவரை எதிர்கொண்டு அழைப்பார்போல் வெளியே எழுந்து சென்று, 'மன்னவா! சற்று முன் இங்கே ஒருவர் வந்தார்! மத்தளத்தை எடுத்தார்; ஓயாமல்

தட்டினார். அங்கங்கே நின்ற பணிப் பெண்கள் அவர் எருத் தட்டுகிறார் என்று எண்ணிக் கூடையை எடுத்து ஓடி வந்தார்கள் ! அக்காட்சியை நீ காண்பாயோ ?' என்ற கருத்தடங்கிய பாடல் ஒன்று இயம்பினார்.[3] எருத் தட்டிய கையிலும் ஏற்ற பரிசளித்து அனுப்பினார் முத்துசாமி வள்ளல்.

வரிசை யறிந்து அறிஞர்க்குப் பரிசளிக்கும் இயல்பு வாய்த்த அவ்வள்ளல், வருந்தி வந்தவர் எவரையும் வறிதே அனுப்பியதில்லை. இல்லை என்ற சொல் அவரிடம் என்றும் இல்லை.

செப்பறைப் பதியை நோக்கி ஒருநாள் முத்துசாமி வள்ளலும் அழகிய சொக்கநாதக் கவிஞரும் செல்லும் பொழுது, காயும் இலையும் செறிந்து குலுங்கிய ஒரு செழுஞ் சோலை அவர் கண்களைக் கவர்ந்தது. அந் நிலையில் வள்ளல் கவிஞரை அமர்ந்து நோக்கி, 'ஐய ! காய் என்று தொடங்கி இலை என்று முடியும்படி ஒரு கவி சொல்லுக' என்று வேண்டினார். உடனே எழுந்தது ஒரு பாட்டு.

**"காய்சினம்இல் லாதான் கருணைமுத்து சாமிவள்ளல்**
**வாய்மையுளான் பாடி வருவோர்க்கு - தாய்நிகர்வான்**
**எல்லையில்லா மாண்பொருளை ஈவான் இவனிடத்தில்**
**இல்லைஎன்ற சொல்லே இலை"**

என்ற நல்ல பாட்டைக் கேட்ட வள்ளல் நாணித் தலை கவிழ்ந்தார். இலையும் தழையும், காயும் பழமும் நிறைந்து நின்ற சோலையைக் கவிதையிலே காணலாம் என்று எண்ணியிருந்த வள்ளல் ஏமாற்றமுற்றார். எனினும், பழுத்த பண்புடைய ஒரு பெருமகனைப் பற்றிய பாட்டு தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது. முத்துசாமி வள்ளலின் உள்ளத்தில் செம்மை உண்டு; வெம்மை இல்லை. அவர் வாக்கில் உண்மை உண்டு; இல்லை என்ற சொல் இல்லை. அவர்

கையிலே வரையாது கொடுக்கும் திறம் உண்டு; கரவில்லை என்பது இப்பாட்டால் அழகுற விளங்குகின்றது.

இராசை முத்துசாமி வள்ளலின் பண்பாட்டை அறிந்த கவிஞர், தமிழ்நாட்டில் உள்ள நாவலர்களுக்கு ஒரு விண்ணப்பம் செய்கின்றார். 'கற்று அறிந்த கவிஞர்களே ! நும் மனக் கவலை தீர வேண்டுமானால் முத்துசாமி மன்னனைப் பாடுங்கள் ! அவன் நினைத்தால் உங்கள் வறுமை நிலை குலைந்து ஓடும் ! மூடர்கள் முன்னே நின்று இனி முட்டிமுட்டிப் பாடாதீர் ! இதுவரை கயவரைப் பாடிய காயிதங்களைக் காற்றாடியாக்கிப் பட்டமாய்ப் பறக்க விடுங்கள் ! இளம் பிள்ளைகளுக்காவது அவை இன்பம் பயக்கும்' என்று கொடாக்கண்டரைப் பழித் துரைக்கின்றார்.[4]

இவ்வாறு முத்தமிழ் வாணரின் வாழ்த்துரை பெற்ற வள்ளலின் குடும்பம் இன்றும் நெல்லை நாட்டில் வாழையடி வாழையென வாட்டமின்றி வாழ்ந்து வருகின்றது.

# 37. முக்கூடல்

தென் பாண்டி நாட்டிலே முக்கூடல் என்ற ஊர் ஒன்று உண்டு. வடநாட்டில் உள்ள திரிவேணியைப் போன்று தென்னாட்டில் முக்கூடல் ஒரு சிறந்த தீர்த்தத் துறையாக விளங்கிற்று. பொதிய மலையிலே பிறக்கும் பொருனையாறும், குற்றால மலையிலே பிறக்கும் சிற்றாறும், கழுகு மலையின் அருகே ஓர் ஊற்றினின்றும் எழுந்து ஓடும் ஓடையும் முக்கூடற் பதியிலே கலக்கும் காட்சியைக் கண்டு கவிஞர் பாட்டிசைப்பார் ஆயினர்.

வேனிற் காலம் முடிந்ததும் முக்கூடலில் வேளாண்மை செய்யும் உழவர் வானத்தையே நோக்கி நிற்பர்; கார் மேகம் தவழ்ந்து சென்றால் கைகூப்பித் தொழுவர்; மழைக் காற்று வீசினால் மனம் களிப்பர்; பருவமழையை வருவிக்குமாறு கருங்குயிலை வேண்டுவர்.[1] இத்தகைய உழவர் மனங்களிக்கப் பருவ மழைக்குரிய அறிகுறிகள் தோன்றும். 'கோடை மாறி கொண்டல் வந்தது' என்று குயில் கூவும்; சுழல் காற்று வீசும்; மின்னலின் ஒளி கண்ணைப் பறிக்கும்; வானம்பாடி வட்டமிட்டு ஆடும்; கருவானத்தில் இடியேறு முழங்கும். இவ் அறிகுறிகளைக் கண்டு அகமகிழ்ந்து 'ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி' என்று ஆடிப் பாடுவர் பயிர்த் தொழில் செய்யும் பள்ளர்.[2]

உழவர் உள்ளம் களிக்கப் பொதிய மலையிலும் குற்றால மலையிலும் கார்மேகம் கவிந்தது; கனத்த மழை பெய்தது. பெரியாறு என்னும் பொருனை யாற்றிலும்,

சிற்றாறு என்னும் சித்ரா நதியிலும் புது வெள்ளம் பொங்கி எழுந்தது; கால்களின் வழியாகக் குளத்தில் நிறைந்து வயல்களிற் பாய்ந்தது. காய்ந்து கிடந்த நிலத்தில் பாய்ந்து நிறைந்த தண்ணீரை, முக்கூடலழகரின் கருணை வடிவாகக் கண்டு வணங்கினர் பண்பாடுடைய பள்ளர்.

பண்ணை நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யத் தலைப்பட்டான் வடிவழகக் குடும்பன். சேரிப் பள்ளரோடு சேர்ந்து நாற்றங்காலை நன்றாக உழுதான்; தொளியில் விதையைத் தெளித்தான்; முளைத்த முளைக்குத் தண்ணீர் அடைத்தான்; வயலைச் சுற்றி வேலியிட்டான்; வளர்ந்த நாற்று முகம் கண்டான்; அளவிலா மகிழ்ச்சி கொண்டான்.[3]

நாற்று வளர்ந்த போது அதைப் பறித்து ஏராலே சீராக்கிய நிலங்களில் நடுகைபோடத் தொடங்கினர் பள்ளியர். பாட்டோடு கலந்து நடந்தது நடுகை. அப் பாட்டிலே காளிங்க நடனம் செய்த கண்ணனைப் பாடினர்; கஞ்சனைக் கொன்று முடித்த அஞ்சன வண்ணனைப் போற்றினர்; வானவர்க்கு அமிழ்தூட்டிய வள்ளலை வாழ்த்தினர்; மூவுலகும் ஈரடியால் அளந்த முதல்வனைப் புகழ்ந்தனர்.

**'கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்**
**கஞ்ச னார்க்கொரு நஞ்சனார்**
**கடையும் அமுதம் உடையும் திரையில்**
**காட்டி அண்டருக் கூட்டினார்**
**அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்**
**அழகர் முக்கூடல் வயலுள்ளே**
**ஆடிப் பாடி நாற்று முடியை**
**அலைத்துக் குலைத்து நடச்செய்தே"**

என்று வாயாரப் பாடிக் கையார நட்டனர் பள்ளியர்.

நட்ட நாற்றுத் தளிர்த்தது; பசப்பேறித் தழைத்தது; பொதி நீட்டிப் புன்முறுவல் பூத்தது; கதிர் எழுந்து

வளைந்து முதிர்ந்தது; நாட்கதிர் நடந்தது; அறுவடை முடிந்தது.

இவ்வாறு அழகர் பண்ணையில் பணி செய்த வடிவழகக் குடும்பனுக்கு வாய்த்த பள்ளியர் இருவர். மூத்தவள் முக்கூடற் பள்ளி. இளையவள் மருதூர்ப் பள்ளி. இருவரும் 'விண்ணாணம்' பேசுவதில் விருப்பம் மிக்கவர். தம் பிறப்பின் மேன்மையை ஓயாது பேசுவர். 'என் குடும்பம் இன்று நேற்று வந்ததன்று; பெரியாறும், சிற்றாறும் கலந்த கால முதல் வழிவழியாக வருவதாகும்' என்று முக்கூடற்பள்ளி கூறுவாள்.[4] அது கேட்ட இளைய பள்ளி,

> "செஞ்சிக்கும் கூடலுக்கும்
> தஞ்சைக்கும் ஆணைசொல்லும்
> செங்கோல் வடமலேந்திரன்
> எங்கள் ஊரே"

என்று தன் குடிப் பெருமை பேசுவாள்.

வடிவழகக் குடும்பனுக்கு மூத்த பள்ளி மாமன் மகள். அந்த முறையில் தன்னை உரிமையுடன் உகந்து மணந்து கொண்டான் என்று எப்பொழுதும் பெருமிதமாகப் பேசுவாள் அப்பள்ளி.[5] இளையாள் அவளுக்கு இளைத்தவளா? 'மாமன் மகள் ஆனால் என்ன? மற்றொருத்தி ஆனால் என்ன? உழக்கிலே கிழக்கு, மேற்கு என்பதுண்டோ? உன்னைக் கட்டிய பள்ளன் என்னைக் கண்டான்; காதல் கொண்டான்; வலிய என் ஊரில் வந்து மணந்தான்; முன்னே வந்தவள், பின்னே வந்தவள் என்று பேசுவதில் ஏதேனும் பொருள் உண்டோ?' என்று மூத்தாளின் வாயடைப்பாள்.[6]

இப்படியே ஏச்சும் பேச்சும் வளர்ந்துகொண்டே போகும். நெடும் பொழுது வாதாடிய பின் இருவர் வாயும் ஓயும். 'ஏசலும், பூசலும் இனி வேண்டா. ஈசனார் பாதம்

பணிந்து இணங்கி வாழ்வோம்' என்று சொல்லிப் பாடு பார்க்கச் செல்வர் பள்ளியர் இருவரும்.

முக்கூடலின் தொன்மையும், சீர்மையும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே இயற்றப்பட்ட 'முக்கூடற் பள்ளு' என்னும் நாடகத்தால் நன்கு விளங்கும். தமிழ் மொழியிலுள்ள பள்ளு நாடகங்களுள் இதுவே தலைசிறந்ததாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் பாண்டி நாட்டை ஆண்ட மாறவர்மன் பயிர்த் தொழிலை வளர்ப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து, முக்கூடலில் பெரியதோர் ஏரி வெட்டினான். அம்மன்னனது பட்டப் பெயர் ஸ்ரீவல்லபன் என்பது. அப்பெயரை அமைத்து 'ஸ்ரீவல்லபப் பேரேரி' என்று அவ் ஏரியை அழைத்தனர். நாளடைவில் பேரேரி என்பது பேரி என மருவிற்று. 'ஸ்ரீவல்லபப் பேரி' 'சீவலப்பேரி' யாகச் சிதைந்தது. முக்கூடல் என்னும் பழம் பெயர் மறைந்து, சீவலப்பேரி என்பதே ஊரின் பெயராகவும் வழங்கலாயிற்று. எனவே, இந்நாளில் நெல்லை நாட்டிலுள்ள சீவலப்பேரியே பள்ளு நாடகத்தில் பாடப் பெற்ற முக்கூடலாகும்.

இப்போது சீவலப்பேரி ஒரு சிற்றூராகிவிட்டது. ஆற்றுப் பெருக்கற்ற காலத்தில் அங்குள்ள பரந்த வெண்மணல், நடப்போர் அடிகளைச் சுட்டெரிக்கும். ஆற்றிலே நீராடச் செல்லும் மாதர்கள் அச்சுடுமணற் பரப்பில் அடிவைத்து நடந்து படும் அவதியைக் கண்ட பெரியோர் 'செக்கடிக்கப் பெண் கொடுத்தாலும், சீவலப் பேரியில் பெண் கொடுக்கலாகாது' என்றார்கள். அவர் வாய் மொழி தென்னாட்டில் ஒரு பழமொழியாய் இன்றும் வழங்குகின்றது.

# 38. கொற்கை மாநகரம்

பாரத நாட்டில் உள்ள இமயமலையும் பொதிய மலையும் புலவர் பாடும் புகழுடையனவாகும். சந்தனச் சோலை சூழ்ந்த பொதிய மாமலையில் செந்தமிழ் முனிவன் என்றுமிருந்து தமிழகத்தைக் காத்தருள்கின்றான் என்று பாடுவர் செஞ்சொற் புலவர்.

பொன் மலையும் வெள்ளி மலையும் காட்சி தரும் இந் நாட்டில் பொதிய மலைக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. சீரிளமைத் திறம் வாய்ந்த செந்தமிழின் திருவுருவாகவே திகழ்கின்றது அம்மலை. அதனால் 'மலையம்' என்னும் பொதுப் பெயர் அதற்கே சிறப்பாக உரியதாயிற்று.[1]

இத்தகைய பெருமை சான்ற மலையில் பிறக்கும் பேறு பெற்றது பொருனை என்னும் திருநதி. தென் தமிழ் நாடாகிய நெல்லை நாட்டுக்கே உரிய அந்நதி கடலொடு கலக்குமிடத்தில் கொற்கை என்னும் துறைமுக நகரம் முன்னாளில் சிறந்து விளங்கிற்று. குமரித்துறைக்கும் கோடிக் கரைக்கும் இடையே அமைந்த கொற்கை மாநகரை நாடிவந்தனர் பிறநாட்டு வணிகர். நவமணிகளுள் ஒன்றாகிய நல்முத்து கொற்கைக் கடலில் வளமுற விளைந்தது.

தென்பாண்டி நாட்டில் முத்து விளையும் துறைகளை எல்லாம் தொகுத்துப் பாடியுள்ளார் ஒரு பெருங் கவிஞர்.

> "கோடும் குவடும் பொருதரங்கக்
> குமரித் துறையில் படுமுத்தும்

> கொற்கைத் துறையில் துறைவாணர்
> குளிக்கும் சலாபக் குவால்முத்தும் ”

என்பது நெல்லை நாட்டுக் கவிஞராகிய குமர குருபர முனிவரது திருவாக்கு. கொற்கைத் துறையில் விளைந்த முத்து உருண்டு திரண்டு தெள்ளிய முத்தாகத் திகழ்ந்ததனால் அதனைக் ‘குவால் முத்து’ என்று சிறப்பித்தார் முனிவர். ‘விளைந்து முதிர்ந்த விழுமுத்து’ என்று கொற்கை முத்தின் சீர்மையைப் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியும் பாடிற்று.

அயல் நாட்டு வணிகர் பொன்னையும் பொருளையும் தந்து வாங்கிச் சென்ற தென்னாட்டு முத்து, கடல் கடந்து பிற நாடுகளிற் போந்து மன்னர் முடியிலும் மாதர் அணியிலும் இலங்குவதாயிற்று என்று பழங்கால யவனர் குறிப்பொன்று பகர்கின்றது.

அந்நாளில் பாண்டி மன்னர்க்கு முத்துச் சலாபமே சிறந்த செல்வம். இதனை நன்கறிந்து பாடினார் நல்லிசைப் புலவராகிய ஔவையார். “பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து” என்பது அவர் வாக்கு.[2] கொற்கையில் அமைந்த முத்துச் சலாபத்தால் சிறப்புற்ற பாண்டி மன்னன் ‘கொற்கைக் கோமான்’ என்றும், ‘கொற்கைத் துறைவன்’ என்றும் பாராட்டப் பெற்றான்.

ஒருகால் கொற்கைத் துறையின் முத்துச் சலாபத்தைக் காண்பதற்காகச் சென்றான் பாண்டி மன்னன். வேற்படை தாங்கிய வீரர் முன்னே செல்ல, வேழம் போல் நடந்து சென்ற வேந்தனைக் கண்டாள் ஓர் இளமங்கை. பொதிகைச் சந்தனம் பூசிய அவன் மார்பின் அழகையே பார்த்துக் கொண்டு நின்றாள்; மன்னன் வீதியின் வழியே சென்று மறைந்த பின்னர், வீட்டின் உள்ளே சென்று மஞ்சத்தில் சாய்ந்தாள். காதலாகிக் கசிந்து கண்ணீர் உகுத்தாள். முத்து முத்தாகக் கன்னத்தில் உருண்டு ஓடிய கண்ணீரைக்

கண்டாள் அவள் தோழி. ' ஐயோ ! கொற்கைக் கருங்கடலில் விளையும் முத்தைக் காண வந்த எம் காவலன், இக் கன்னியின் கண்ணீர்க் கடலினின்று எழுகின்ற முத்தைக் கண்டானில்லையே !' என்று வருந்தினாள்.

> " இப்பிஈன் றிட்ட எறிகதிர் நித்திலம்
> கொற்கையே யல்ல படுவது - கொற்கைக்
> குருதிவேல் மாறன் குளிர்சாந் தகலம்
> கருதியார் கண்ணும் படும் "

என்ற அழகிய பாட்டில் பாண்டியனுக்குரிய கொற்கைக் கடலின் முத்து குறிக்கப்படுகின்றது.

பாண்டி நாட்டின் பெருமையைப் பாரெங்கும் பரப்பிய கொற்கை மாநகரில் வாணிகத்திற்கேற்ற பல சாதனங்களை அமைத்திருந்தான் பாண்டியன். அரசாங்க நாணயம் அடிப்பதற்காக அந்நகரின் அருகே அக்கசாலை ஒன்று நிறுவப் பெற்றிருந்தது. பிற்காலத்தில் சென்னை மாநகரில் அமைந்த ' தங்கசாலை ' போன்று முற்காலத்தில் கொற்கையம்பதியில் அமைந்தது அக்கசாலை. அச்சாலையைத் தன்னகத்தே உடைய ஊரும் 'அக்கசாலை' என்று பெயர் பெற்றது.

நாளடைவில் கொற்கைத் துறைமுகத்தை விட்டுக் கடல் விலகிப் போயிற்று. பொருனையாற்று நீரில் கலந்து வந்த மண்ணும், மணலும் துறைமுகத்தைத் தூர்த்து விட்டன. அந்நிலையில் கொற்கையில் வாழ்ந்த மக்கள் பிற ஊர்களிற் சென்று குடியேறுவாராயினர். ' கெட்டால் பட்டணம் செல்க ' என்னும் பழமொழிக்கு ஏற்ப அக்கசாலையில் வாழ்ந்த தட்டார்கள் திருநெல்வேலி நகரில் சென்று தொழில் புரிந்து வாழத் தொடங்கினர். அன்னார் அக்கசாலையை விட்டுப் பெயரும்போது அங்கு நெடுங்காலமாகத் தாம் வழிபட்ட பிள்ளையாரையும் உடன் கொண்டு சென்றார்கள். நெல்லை மாநகரில் அப்பிள்ளை

யாருக்கு ஒரு கோவில் அமைத்து அதனருகே குடியிருந்தார்கள். அன்று அவர்கள் வகுத்த "அக்கசாலைப் பிள்ளையார் தெரு" இன்றும் நெல்லையம்பதியிலே காணப்படுகின்றது.

நெல்லை நாட்டின் பழைய வரலாற்றை ஆராய்ந்து எழுத ஆசைப்பட்டார், மேலை நாட்டு அறிஞராகிய கால்டுவெல் ஐயர். நெல்லை நாட்டைத் தம் தாயகமாகக் கொண்டு ஐம்பதாண்டுகள் இடையன்குடி என்னும் சிற்றூரில் வாழ்ந்து, மெய்வருத்தம் பாராது உழைத்துத் தமிழ் மொழியின் தொன்மையினையும் செம்மையினையும் ஆராய்ந்து வெளிப்படுத்தினார் இவ் அறிஞர். தமிழகத்தில் பாண்டி நாடே பழம்பதி என்றும், பசுந்தமிழை வளர்த்த பெருமை பாண்டியர்க்கே சிறப்பாக உரியதென்றும் நன்கு உணர்ந்த கால்டுவெல் ஐயர் மேலைநாட்டு நல்லறிஞர் நூல்களில் குறிக்கப் பெற்ற கொற்கைத் துறைமுகத்தைத் துருவிப் பார்க்கத் தொடங்கினார். கடற்கரையை விட்டு ஐந்து மைல் தூரம் விலகிச் சீரும் சிறப்பும் இழந்து நின்ற சிற்றூராகிய கொற்கை முற்காலத்தில் ஒரு துறைமுக நகரமாக இருந்திருத்தல் கூடுமோ என்று ஐயுற்றார். அவ்வூரிலே சென்று ஆராய்தல் இன்றியமையாதது என்று எண்ணினார். சில கூலியாள்களை அமர்த்திக்கொண்டு கொற்கையூருக்குச் சென்றார்.

வெள்ளையர் ஒருவர் விறுவிறுப்பாக வருவதையும் அவர் பின்னே வேலையாள்கள் கடப்பாரை முதலிய கருவிகளைத் தாங்கி நடப்பதையும் கண்ட கொற்கை வாசிகள் மனம் பதைத்தார்கள். தம் முன்னோர் பாடுபட்டுத் தேடிக் கொற்கையம்பதியில் புதைத்து வைத்திருந்த பொன்னையும் பொருளையும் பெயர்த்து எடுத்துச் செல்லும் கருத்தோடு வெள்ளையர் ஒருவர் புறப்பட்டு வந்தாரென்று எண்ணினார்கள்; கூட்டங் கூட்டமாக நின்று எட்டியும் சுட்டியும் பேசினார்கள். அவர்களுள் ஒருவர்

துணிந்து முன்வந்தார். கால்டுவெல் ஐயரை நோக்கிப் பேசலுற்றார்:

'கொற்கையை நாடி வந்த பெரியவரே ! உம்மைக் கண்டு எங்கள் உள்ளம் நடுங்குகின்றது. இவ்வூரிலே பழம் புதையல்கள் பல உண்டு. அவற்றைப் பெயர்த்தெடுக்கும் கருத்தோடு நீங்கள் இங்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது. இந்த ஊர் முன்னொரு காலத்தில் சிறந்த நகரமாக இருந்தது. அப்போது மன்னரும் செல்வரும் இங்கு வாழ்ந்தார்கள். உழைப்பாளராகிய ஏழை மக்கள் கடலுள் மூழ்கி முத்தெடுத்துக் கூலி பெற்றார்கள். அவர்கள் பாடுபட்டுத் தேடிய பணம் இந்த மண்ணிலே புதைத்து வைக்கப்பட்டுள்ளது. அப்புதையல்களைப் பெரும் பூதம் ஒன்று காத்து வருகின்றது. நீங்கள் அவற்றைப் பெயர்த் தெடுக்க முற்பட்டால் பூதம் சும்மா பார்த்துக்கொண்டு இருக்குமோ? சீற்றம் கொண்டு இவ்வூரையே அடியோடு அழித்து விடும்.'

'முன்னொருகால் இங்கு நிகழ்ந்த ஒரு செய்தியைச் சொல்லுகின்றேன், கேளும் ! சில ஆண்டுகளுக்கு முன்பு நெல்லை நாட்டில் ஆட்சி புரிந்த வெள்ளையர் ஒருவர் புதையல் எடுப்பதற்காக இவ்வூருக்கு வந்தார். அவர் கருத்தையறிந்த கொற்கைக் குடிகளாகிய நாங்கள் கலக்கம் உற்றோம். பூதம் காக்கும் புதையலின் அருகே போக வேண்டா என்று அவரைப் பணிந்து வேண்டினோம். அவர் எங்களை ஏளனம் செய்வார் போல் ஒரு புன்னகை புரிந்தார். அப்பொழுது அவருடன் இருந்தவருள் ஒருவர் இவ்வூர்வாசிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கத் தொடங்கினார்.'

**"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்**
**புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடர்காள்**
**கேளுங்கள் - கூடுவிட்டிங்கு**

ஆவிதான் போயின பின்பு
ஆரே அநுபவிப்பார்
பாவிகாள் ! அந்தப் பணம்."

என்ற பாட்டைச் சொல்லி விட்டு, மண்ணுள் மூழ்கி மறைந்து கிடக்கும் புதையல்களெல்லாம் அரசாங்கத்துக்கே உரியன என்று அழுத்தமாகப் பேசினார். நாங்கள் அஞ்சி விலகினோம்.

'வெள்ளை அதிகாரிக்கு ஒரு கூடாரம் அமைக்கப் பட்டது. அங்கிருந்து கொண்டு சில இடங்களைத் தோண்டிப் பார்க்கும்படி அவர் வேலையாள்களை ஏவினார்; நெற்றி வேர்வை நிலத்தில் விழ அவர்கள் பகல் முழுவதும் பாடுபட்டார்கள். கருகருக்கும் வேளையில் புதையல் இருக்குமிடம் ஒன்று தெரிந்தது. அதைத் தொட்டவுடன் வேலையாள்கள் கை சோர்ந்து, மெய் சோர்ந்து, மயக்கமுற்று விழுந்தார்கள். அவர்களை மருத்துவ சாலைக்கு அனுப்பிவிட்டுத் தம் கூடாரத்தில் உறங்கினார் வெள்ளையர். காலையில் கண் விழித்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். புதையல் இருந்த இடம் புலப்படவில்லை. நன்றாகக் கண்களைத் துடைத்துப் பார்த்தார். பாளையங் கோட்டையில் தம் வீட்டின் அருகே அக்கூடாரம் நிற்கக் கண்டார். அச்சம் அவருள்ளத்தைப் பற்றிக் கொண்டது. வெளியே சொன்னால் வெட்கம் என்றெண்ணி அன்று முதல் அவர் இவ்வூரருகே வருவது மில்லை; புதையலைப்பற்றி நினைப்பது மில்லை. இது பொய்யன்று; புனைந்துரை யன்று; முற்றும் உண்மை. 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்று இந் நாட்டுப் பெரியார் ஒருவர் பாடியுள்ளார். ஆதலால் பூதம் காக்கும் புதையல் அருகே போகாமல் வந்த வழியே நீங்கள் செல்வது நல்லது' என்று கூறி முடித்தார் கொற்கைப் பெரியார்.

அவர் சொல்லிய கதையைக் கவனமாய்க் கேட்டார் கால்டுவெல் ஐயர். 'ஐயோ, நான் புதையல் எடுக்க வர

வில்லையே ! பொருளாசை எனக்கு இல்லை. முன்னொரு காலத்தில் கொற்கை, கடற்கரையில் இருந்ததாகச் சில குறிப்புகளால் அறிந்தேன். அது உண்மைதானா என்று ஆராய்ந்து அறியும் ஆசையால் இங்கு வந்தேன். காசைக் கவர வந்த மோசக்காரன் என்று இகழாது ஆராய்ச்சியில் ஆசையுற்ற ஒரு மாணவன் என்று நம்பி ஒல்லும் வகையில் எனக்கு உதவி செய்தல் வேண்டும்' என்று நயந்து வேண்டினார்.

அவர் உருக்கமாகச் சொல்லிய சொல்லை நம்பினர் கொற்கை வாசிகள்; வேலை செய்ய விடையளித்தனர். அப்போது அவர் செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கொற்கையின் பழம் பெருமை விளங்கிற்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பாண்டி நாட்டுச் சிறந்த துறைமுகம் கொற்கையே என்பது ஐயந்திரிபறத் துலங்கிற்று.

# 39. காயல் மாநகரம்

ஏறக்குறைய அறுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே பாண்டி நாட்டிற்கு வந்தார் ஓர் இத்தாலிய மேதை. அவர் பல நாடு கண்டவர்; 'மார்க்கோ போலோ' என்னும் பெயருடையவர். அவர் வந்த காலத்தில் சுந்தர பாண்டியன் மதுரையில் அரசு வீற்றிருந்தான். அவன் உடன் பிறந்தவர் நால்வர்; அவர் பாண்டி நாட்டின் பல பகுதிகளில் ஆட்சி புரிந்தனர்.

மார்க்கப் போலோ, தாம் கண்ட காட்சிகளையும் கேட்ட செய்திகளையும் முறையாக எழுதி வைத்தார். பாண்டி நாட்டின் பண்பாட்டையும், பழக்க வழக்கங் களையும் அவர் எழுதிய குறிப்புகளால் நன்கு அறிந்து கொள்ளலாம்.

அவர் வந்த காலத்தில் கொற்கைத் துறைமுகம் தூர்ந்து போயிற்று. குணகடல் அதைவிட்டு நெடுந் தூரம் விலகி நின்றது. பொருனை யாற்று முகத்தில் அமைந்த 'காயல்' என்னும் துறையில் அலைமோதிக் கொண்டிருந்தது. அத்துறைமுகத்தில் தலையெடுத்து நின்ற காயல் நகரத்தை அவர் சுற்றிப் பார்த்தார். அதன் பரப்பும் சிறப்பும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. 'பெருமையும், மேன்மையும் வாய்ந்த நகரம்' என்று அந்நகரத்தைப் பாராட்டியுள்ளார் அவ் அறிஞர்.

அயல் நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்யும் வழக்கம் தமிழகத்தில் நெடுங்காலமாக உண்டு.

சோழ நாட்டுத் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கடல் வழியாக வந்து இறங்கிய குதிரைகளை, 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவி'[1] என்று பட்டினப்பாலை குறிக்கின்றது. பாண்டி நாட்டுத் துறைமுகத்திலும் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன என்பது மார்க்கப் போலோவின் குறிப்புகளால் தெரிகின்றது.

'பாண்டிய மன்னர்கள் தம் குதிரைப்படையை வலுப்படுத்தும் கருத்தோடு பெரும் பொருள் செலவிடுகிறார்கள். ஆண்டுதோறும் ஐயாயிரம் குதிரைகள்வரை இறக்குமதி செய்கின்றார்கள். ஆயினும் அவற்றைப் பேணி வளர்க்கும் முறை பாண்டி நாட்டார்க்குப் பிடிபட வில்லை. அக் குதிரைகளுக்கு இந்த நாடும் ஒத்துக் கொள்ளவில்லை. ஆதலால் அவை வலியிழந்து, வாலும் தோலுமாகி ஒல்லையில் இறந்து விடுகின்றன. காயல் துறையில் குதிரை வாணிபம் செய்வோர் ஆண்டுதோறும் கொள்ளை ஊதியம் அடைகின்றார்கள்' என்ற செய்தி அவர் குறிப்பிலே காணப்படுகின்றது.

இன்னும் தென்பாண்டி நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைக் கூறுமிடத்தில் தாம்பூலம் போடும் பழக்கத்தை அவர் விளக்கமாக எழுதியுள்ளார். வெற்றிலை போடும் பழக்கம் தொன்றுதொட்டு இந்நாட்டில் நிகழ்ந்து வருகின்றது. தமிழ் நாட்டார்க்கு வெற்றிலையில் உள்ள விருப்பம் வேறு எப்பொருளிலும் இல்லையென்றே சொல்லலாம். செல்வர் மாடங்களில் வெற்றிலைச் செல்லம் உண்டு. ஏழையர் மடியிலும் வெற்றிலைப்பை உண்டு. 'இலையமுது' என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ளது வெற்றிலை. பாடுபட்டுப் பிழைக்கும் ஏழை மக்கள் வயிறு காய்ந்தாலும் வெற்றிலை போடாதிருக்க மாட்டார்கள். வெற்றிலைக்கும் விதியில்லாத வறியவனை 'வெறுவாய்க்கு இலை கெட்டவன்' என்று வசை கூறுவர்.

'அடை' என்ற பெயரும் வெற்றிலைக்கு உண்டு. அதனாலேயே 'அடைப்பை' என்பது வெற்றிலைப் பையைக் குறிக்கின்றது. அடையோடு போடும் காயாகிய பாக்கு அடைக்காய் என்று சங்க நூல்களில் வழங்குகின்றது. அடைக்காய்க் கொட்டையே ஆங்கிலத்தில் 'அரிக்கனட்' என்று சிதைந்துள்ளது. திருமணத்துக்கு அடைக்காய் வைத்து அழைக்கும் பழக்கம் இன்றும் தமிழ் நாட்டில் உண்டு.

மார்க்கப் போலோ தென்னாட்டுக்கு வந்த காலத்தில் தாம்பூலம் என்ற சொல் நாடெங்கும் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. கலித்தொகையிலும், காளிதாசன் கவிதையிலும் எடுத்து ஆளப்பட்டுள்ளது இச்சொல். தாம்பூலத்தால் தென்னாட்டிலுள்ள எவ்வாயும் செவ்வாயாக மார்க்கப் போலோவுக்குக் காட்சியளித்தது.

இந்நாட்டுப் பண்பாட்டின் அடியாக எழுந்த சில பழக்க வழக்கங்கள் மேலை நாட்டவராகிய மார்க்கப் போலோவுக்குப் பெருவியப்பை அளித்தன. 'இந்நாட்டில் ஆண்களும், பெண்களும் நாள்தோறும் குளிக்கின்றார் களே ! தண்ணீர் குடிக்கும் கிண்ணத்தைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக்கொண்டு நீரை அண்ணாந்து பருகுகின்றார்களே ! இரு கையாலும் உணவை எடுத்து உண்ணாமல் ஒரு கையால் எடுத்து உண்கின்றார்களே ! வீடு வாசல்களைச் சாணத்தால் மெழுகுகின்றார்களே ! அரையில் உடுத்த ஓர் ஆடையோடு வெளியே திரிகின்றார்களே !' என்று அவர் எழுதியுள்ள குறிப்புகள் மேலை நாட்டவருக்கும், கீழை நாட்டவருக்கும் உள்ள வேற்றுமைகளை நன்கு உணர்த்துகின்றன.

இவ்வாறு தென்பாண்டி நாட்டுப் பழக்க வழக்கங் களை விரித்தெழுதிய மார்க்கப் போலோ 'காயலி'ன் அருகே யிருந்த முத்துச் சலாபத்தையும் விளக்கமாகக்

குறித்துள்ளார். 'வேனிற் காலத்திலே முத்துக்குளிக்கும் வேலை தொடங்கும். கடலுள் மூழ்கிப் பழகிய பரதவர், படகுகளில் ஏறிச் செல்வர். முத்துச் சிப்பிகள் விளையும் இடந்தெரிந்து, படகை நிறுத்திப் பணி செய்வர். படகிலே கட்டிய கயிற்றைப் பற்றிக்கொண்டு நீரினுள்ளே இறங்குவர். அகப்பட்ட முத்துச் சிப்பிகளை வாரி எடுத்து இடுப்பிற் கட்டிய பையில் இடுவர். மூச்சு முட்டும் பொழுது கயிற்றை அசைப்பர். படகின்மீது நிற்கும் தோழர்கள் உடனே கயிற்றை இழுத்து அவரைப் படகின்மேல் ஏற்றுவர். எடுத்த சிப்பிகளைப் படகிலே கொட்டிவிட்டு, சிறிது இளைப்பாறி மீண்டும் கடலினுள்ளே இறங்குவர். இவ்வாறு நாள் முழுதும் பணி செய்து முத்துச் சிப்பிகளைக் கடற்கரையில் கொண்டு குவிப்பர். அவற்றைப் பங்கிடும் பொழுது பத்தில் ஒரு பாகம் பாண்டிய மன்னர்க்கு இறைப் பொருளாக வழங்கப்படும். கடலுள் மூழ்கி முத்து எடுக்கும் பரதவரை மீன்கள் கடித்து விழுங்கி விடாமல் அவற்றின் வாயை மந்திரத்தால் கட்டிக் காக்கும் மறையவர்க்கு இருபதில் ஒரு பாகம் மந்திரக் கூலியாகக் கொடுக்கப்படும். எஞ்சிய சிப்பிகள் பாடுபட்டவருக்குரிய பங்காகும்' என்று மார்க்கப் போலோ கூறுகிறார்.

தமிழ் நாட்டு மன்னர் நீதியும் அவர் எழுதிய குறிப்புகளால் நன்கு விளங்குகின்றது. 'நாட்டைக் காப்பது அரசு; அவ்வரசைக் காப்பது நீதி' என்பது இந்நாட்டுக் கொள்கை.

> **"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை**
> **முறைகாக்கும் முட்டாச் செயின்"**

என்று திட்பமாகக் கூறினார் திருவள்ளுவர். 'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' அமைந்து குற்ற நற்றங்களை நன்கு ஆராய்ந்து நீதி செலுத்தினர் பழங்காலத் தமிழ் மன்னர்கள். நீதி மன்றத்தில் இன்னான் என்றும் இனியான்

என்றும் பார்ப்பதில்லை. உடையான் என்றும் இல்லான் என்றும் உணர்வதில்லை. குற்றத்திற்கேற்ற தண்டனையைக் கூசாமல் விதித்தனர் கொற்றவர். இவ்வாறு மன்னர்கள் கடைப்பிடித்து ஒழுகிய நெறிமுறையைக் கண்டு மகிழ்ந்தார் மார்க்கப் போலோ.

கடன் கொண்டவன் கொடுத்தவனிடம் நேர்மையாக நடந்து கொள்ளும் பழக்கமொன்று அவர் குறிப்பிலே காணப்படுகின்றது. வாங்கிய கடனை வாக்களித்த நாளில் செலுத்தாவிட்டால் கடனாளியைப் பின் தொடர்ந்து சென்று அவன் நிற்குமிடத்தைச் சுற்றி ஒரு கோடு கீறுவான், கடன் கொடுத்தவன். அக்கோட்டைக் கடந்து கடன் பட்டவன் தப்பி ஓட வழி தேடுவதில்லை; கீறிய கோட்டுக்குள்ளே நின்று கடனைத் தீர்க்க முயல்வான். பணம் கிட்டாதாயின் தக்கார் ஒருவரைக் கடனுக்காகப் பிணைப்படுத்துவான். இப்படிச் செய்யாமல் கீறிய கோட்டைத் தாண்டினால் கடனாளி கொலைத் தண்டனைக்கு உள்ளாவான். அரசன் முதலாக ஆண்டி ஈறாக எல்லோரும் இந்நெறிமுறையில் அடங்கி நின்றனர். நாடாளும் அரசனும் இவ்வழக்கத்திற்குக் கட்டுப்பட்டு நடந்ததைக் கண்கூடாகக் கண்டார் மார்க்கப் போலோ.

அயல் நாட்டு வணிகன் ஒருவனிடம் அரசன் ஒரு சிறு தொகை கடனாகப் பெற்றிருந்தான். அவ் வணிகன், பல முறை கேட்டும் பணம் வரவில்லை. ஒரு நாள் அரண்மனை யினின்று வெளிப்பட்டுக் குதிரைமீது சென்று கொண் டிருந்த அரசனைக் கண்டான் அவ்வணிகன். அவனைப் பின் தொடர்ந்து சென்றான். குதிரை நின்ற வேளை பார்த்து அதைச் சுற்றி ஒரு கோடு கீறினான். அது கண்ட அரசன் அங்கேயே நின்று விட்டான். வணிகனுக்குரிய கடனைத் தீர்த்த பின்னரே அவனிட்ட கோட்டைக் கடந்து மாளிகையை அடைந்தான். இக் காட்சியைக் கண்ட பொது மக்கள் 'அறம் காக்கும் அரசன்' என்று அவனை வாயாரப்

புகழ்ந்து வாழ்த்தினர் என்ற செய்தியை மார்க்கப் போலோ எழுதியுள்ளார்.

அவர் கண்ட காயல் துறைமுகமும் சில நூற்றாண்டுகளில் தூர்ந்து போயிற்று. காயலையும் கடல் கைவிட்டு அகன்றது. இப்பொழுது சீரிழந்த சிற்றூராகக் காணப்படுகின்றது காயல். ஆயினும் அவ்வூரிலே வீரபாண்டிய கட்டபொம்மன் கட்டிய மண்டபமொன்று இன்றும் காட்சியளிக்கின்றது. வெள்ளையரோடு வெம்போர் விளைத்த கட்டபொம்மன் திருச்செந்தூர் முருகனைக் குலதெய்வமாகக் கொண்டவன். அங்கு நடைபெறும் பூசையைப் பாஞ்சாலங் குறிச்சியில் இருந்துகொண்டே அறிந்து தொழுவதற்காக ஒரு நாழிகை வழி தூரத்துக்கு ஒரு நகரா மண்டபம் கட்டியிருந்தான். அவை ஒன்றினின்று மற்றொன்று எடுத்தியம்பும் நகராவின் ஓசையால் அவன் பூசை வேளையைத் தெரிந்து கொள்வான். திருச்செந்தூருக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் இடையேயுள்ள பாதையில் பாழடைந்த சில நகரா மண்டபங்கள் இன்றும் காணப்படுகின்றன. காயலில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு எதிரே காணப்படும் சதுர மண்டபம் அவற்றுள் ஒன்றாகும். பாஞ்சாலங்குறிச்சியில் விடுதலைக் கொடி நாட்டிய வீரக்குடியின் சீலத்திற்கு ஒரு சான்றாக விளங்கும் மண்டபத்தைப் பாதுகாத்து வைத்திருக்கும் காயலைக் காண்பதுவும் நன்றே.

# 40. கயத்தாறு

இசை பாடும் புலவர் மலிந்த தமிழ் நாட்டில் வசை பாடும் கவிஞரும் சிலர் வாழ்ந்தனர். அவர்களில் தலைமை சான்றவர் காளமேகம். அம்மேகம் தமிழகத்தில் வளமாக வசைமாரி பொழிந்தது. 'வசை பாடக் காளமேகம்' என்ற புகழுரையும் பெற்றது.

ஒருகால் சோழ நாட்டிலிருந்து பாண்டி நாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் காளமேகம். ஆலஞ்சோலை சூழ்ந்த ஓர் அழகிய சிற்றூர் அவர் கண்களைக் கவர்ந்தது. அவ்வூரின் நடுவே நின்ற திருக்கோயில் அவர் உள்ளத்தை ஈர்த்தது. 'மாலைப் பொழுதில் ஆலய வழிபாடு செய்தல் சாலச் சிறந்தது' என்றெண்ணி ஊரின் உள்ளே சென்றார். கண்ணுக்கினிய சோலையிலே கோயில் கொண்டிருந்த ஈசனைப் பண்ணார்ந்த பாட்டிசைத்துப் போற்ற விரும்பினார். 'ஒரு நாமம், ஓர் உருவம்' இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் சொல்லி வணங்குதல் வழக்கமாதலின் அங்குள்ள ஈசன் பெயர் யாதோ என்று அறிய ஆசைப் பட்டார்.

அந் நிலையில் அவ்வாலயத்தில் வழிபாட்டிற்காகக் குழுமியிருந்த அடியார்கள் இவர் ஊருக்குப் புதியவர் என்று தெரிந்து கொண்டு, 'ஐயா ! இவ்வூர் ஆலங்குடி; இங்குள்ள ஈசனுக்கு ஆலங்குடியான்' என்பது பெயர் என்று அறிவித்தார்கள். அப்போது காளமேகம் அவர்களை

நோக்கி, 'நீங்கள் சொல்வது சரியன்று; ஆலம் குடித்த ஈசனை 'ஆலம் குடியான்' என்று சொல்லலாமா?

> "ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
> ஆலங் குடியான்என்று ஆர்சொன்னார் - ஆலங்
> குடியானே யாயின் குவலயத்தோர் எல்லாம்
> மடியாரோ மண்மீதி லே"

'ஆலம் தான் உகந்து அமுது செய் தானை' என்பது ஆன்றோர் திருவாக்கன்றோ ?[1] ஆலம் குடித்ததனால் அன்றோ அப் பெருமானது கண்டம் கறுத்தது? நீலகண்டன் என்ற பெயரும் எழுந்தது ? அவன் கண்டத்தில் அமைந்த கருமையான அடையாளத்தைக் கண்டும் ஆலம் குடியான் என்று அழைத்தல் ஆகுமா? இவ்வுலகத்தை யெல்லாம் அழித்து முடிப்பதற்கு எழுந்த ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சை அவ் வள்ளல் அள்ளிக் குடித்ததனால் அன்றோ இன்று மாந்தர் மண்ணுலகில் வாழ்கின்றார்கள்? ஆலம் குடித்தான் என்பதற்கு இவ்வுலகமே சான்றாயிருக்க, ஆலம் குடியான் என்று அவனை அழைத்தல் மெய்யாகுமோ' என்று நயம்பட உரைத்தார்.

இக்கவிஞர் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையைக் கடந்து நெல்லையம்பதிக்குச் செல்லும் வழியில் மற்றொரு சிற்றூரை அடைந்தார். அன்று காலையிலிருந்து அவர் பசியால் நலிந்து வெயிலால் உலர்ந்து வாடித் தளர்ந்திருந்தார். அந்தி மாலையில் அவ்வூரில் எழுந்த மேளதாளமும் ஆரவாரமும் அவர் உள்ளத்தில் ஆனந்தம் ஊட்டின. வயிறார உணவு கிடைக்கும் என்ற எண்ணமும் பிறந்தது. ஆற்றங்கரையில் இருந்த பெருமாள் கோவிலில் அன்று ஒரு திருநாள். வீதி யெங்கும் கொடிகள் பறந்தன; வீடுதோறும் கோலங்கள் விளங்கின; காளமேகம் உள்ளம் குளிர்ந்து கோவிலின் உள்ளே சென்றார். பெருமாளைக் கருட வாகனத்தில் ஏற்றி மாலைகளையும் நகைகளையும் அணிவித்துக் கொண் டிருந்தார் ஆலயக் குருக்கள்.

காளமேகத்தின் கண் சுழன்றது; கால் தளர்ந்தது; உடல் சோர்ந்தது. ஒதுக்கமான ஓர் இடத்தில் படுத்து உறங்கி விட்டார். பெருமாளை வெளியே எழப் பண்ணும் வேளை வந்தது. முரசு அதிர்ந்தது. சீர்பாதம் தாங்கிச் சேவை செய்வதற்குரிய பணியாளர்கள் தண்டயத்தின் அண்டையில் வந்து சேர்ந்தனர். கருடனது திருவடியின் அருகே அவ் வாகனத்தில் அமர்ந்தார் கோயிற் குருக்கள்.

தண்டயத்தைத் தூக்கித் தோளில் வைத்தபோது சீர்பாதப் பணியாளரில் ஒருவர் வரவில்லை என்று குருக்கள் குறை கூறினர். அப்போது தூண் மறைவிலே உறங்கிக் கொண்டிருந்த காளமேகத்தைத் தட்டி எழுப்பித் தண்டயத்தை அவர் தோளிலே மாட்டி மகிழ்ந்தனர் மெய்யடியார்கள். அவரும் தம் தலைவிதியை நொந்துகொண்டு தண்டயம் தாங்கினார்.

திருவீதியிலே கோலாகலமாகச் சென்றார் பெருமாள். வீடுதோறும் நின்று சேவை சாதித்தார். காளமேகத்தின் தோள் கடுத்தது; கால் வலித்தது; கை சலித்தது. பொறியில் அகப்பட்ட எலிபோல் துடித்தார்.

ஊரைச் சுற்றி வந்து விமானம் இறங்கிற்று. காளமேகத்தின் சீற்றம் தலைக்கு ஏறிற்று. பெருமாள் முன்னே நின்று வசை பாடலுற்றார்.

**" பாளைமணம் கமழ்கின்ற கயத்தாற்றுப்**
**பெருமாளே பழிகாரா கேள்**

**..................................................**

**நாளைஇனி யார்சுமப்பார் எந்நாளும்**
**உன்கோயில் நாசம்தானே "**

என்று வசைபாடி அவ்வூரை விட்டகன்றார். *

இவ்வாறு காளமேகத்தின் வசைப்பாட்டைப் பெற்ற கயத்தாறு என்னும் ஊர் தென்பாண்டி நாட்டில்

* இது ஆண்டான் கவியின் பாட்டு என்பாரும் உளர்.

உப்பாற்றங்கரையில் உள்ளது. கழுகு மலையிலே தோன்றிச் சித்திரா நதியில் வந்து சேரும் உப்பாறு முன்னாளில் கயத்தாறு என்னும் பெயர் பெற்றிருந்தது. ஆதலால் அதன் கரையில் எழுந்த ஊர் கயத்தாறு என்றே அழைக்கப் பட்டது. கோதண்டராம நதி என்ற பெயரும் அதற்கு உண்டு.

பாஞ்சாலங்குறிச்சியிலே பிறந்து வெள்ளை யரசாங்கத்தை அலைத்துக் குலைத்து அலறவைத்த மானவீரனாகிய வீரபாண்டிய கட்டபொம்மனின் கடைசி நாளைக் கண்டதும் கயத்தாறே !

**“ வானம் பொழியுது பூமி விளையுது**
**மன்னவ னுக்கேது தீர்வைப் பணம்**
**தானம் தெரியாமல் வந்து தலையிட்டால்**
**மானம் அழிந்து மடிந்திடுவீர் ”**

என்று மார்பு தட்டிய வீரனை வஞ்சகமாகப் பிடித்துக் கயத்தாற்றில் உள்ள புளிய மரத்தில் தூக்கிட்டுக் கொன்றது வெள்ளை அரசாங்கம். வேற்று நாட்டாரது ஆட்சிக்கு அடங்கி ஆண்மை யிழந்து வாழ்வதினும் அவரோடு போர் தொடுத்து மாள்வது நன்று எனக் கருதி அம் மான வீரனை மனக்கோயிலில் அமைத்துப் பொது மக்கள் போற்றுவாரா யினர். வீரபாண்டியன் புகழுடம்பு பெற்ற புளிய மரத் தடியில் வீரக்கல் நாட்டிப் பாட்டாலும் உரையாலும் பாராட்ட விரும்பிய மாந்தர் வெள்ளையரசாங்கத்தின் சீற்றத்திற் கஞ்சி அவ்வாறு செய்யா தொழிந்தனர். ஆயினும் அவ்வழியாகச் செல்லும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல்லெடுத்து அப்புனிதமான இடத்தில் இட்டுப் போற்றி வருகின்றனர். அன்று முதல் நன்றி மறவாத தமிழ் மக்கள் அங்கு தூவிய கற்கள் குன்று போலக் குவிந்து இன்றும் காட்சி தருகின்றன. பாஞ்சாலங்குறிச்சியிலே பிறந்து வீரப் புகழ் பெற்ற கட்டபொம்மன் கயத்தாற்றிலே கற்கோயில் கொண்டு வீற்றிருக்கின்றான்.

# V. நாஞ்சில் நாடு

"வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேயம்ஒன் றுளது, அதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே !"

- *மனோன்மணீயம்*

# 41. கோட்டாறு

*ஆன்ற பெருமையுடைய தமிழ் நாட்டில் 'மூன்று' என்ற எண் மிக அருமையாகப் போற்றப்பட்டு வருகின்றது; உலகம் மூன்று; தமிழ் மூன்று; தேவரில் சிறந்தவர் மூவர்; தமிழ் நாட்டு முடிமன்னர் மூவர்; அன்னார் முடிமேற் கொண்டு பாராட்டிய நூல் முப்பால். இப்பண்பினைக் கண்ட பாவலர் ஒருவர்,*

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்"

*என்று பாடினார். தமிழகத்தில் நாடும் நதியும், மலையும் பதியும், முடியும் கொடியும், முரசும் பரியும் மூன்றாக அமைந்துள்ள முறையினைக் கண்டு முற்றிய இன்பம் உற்றார் அக்கவிஞர். இத்தகைய தமிழகத்தை ஆண்ட மூவேந்தரும் முடிமேல் அணிந்து போற்றும் பெருமை சான்றது முப்பாலாகிய திருக்குறள் என்று அழகுறக் கூறி முடித்தார்.*

சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரும் ஆட்சி புரிந்த முந் நாடுகளிலும் தமிழ் மொழியே முன்னாளில் வழங்கிற்று. சேர மன்னரில் சிலர் செந்தமிழ்ப் புலவர்களாகவும் கவிஞர்களாகவும் விளங்கினார்கள்; வரிசையறிந்து பரிசளித்துத் தமிழ் அறிஞர்களை ஆதரித்தார்கள்.

அந்நாளில் வஞ்சி மாநகரம் சேர நாட்டின் தலைநகரம். ஆதலால் வஞ்சி வேந்தன் என்றும், வஞ்சியர் கோமான் என்றும் பெயர் பெற்றான் சேர மன்னன்.

> **“ வாழியரோ வாழி**
> **வருபுனல்நீர் ஆன்பொருனை**
> **சூழ்தரும் வஞ்சியார்**
> **கோமான்தன் தொல்குலமே ”**

என்று சேரன் பழங்குடியைச் சிலம்பு வாழ்த்திற்று. சேர நாட்டாரையும் வஞ்சியார் என்றழைக்கும் வழக்கமுண்டு.

முன்னொரு நாள் கடற்கரையில் இன்புற்றிருந்த ஒரு மங்கை வஞ்சி வீரன் ஒருவனை அங்கே கண்ணுற்றாள். அவன் கட்டழகு அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்நங்கையை வீரனும் நயந்து நோக்கினான். இருவர் நெஞ்சமும் கலந்தன. இவ்வாறு காதலுற்ற நிலையில் அரசன் ஆணையால் அவ்வீரன் போர்க்களத்திற்கு அழைக்கப்பட்டான். அப்போது மனமும் முகமும் வாடிய மங்கையை நோக்கி, ‘ மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே ! நீ வருந்தாதிரு; விரைவில் வெற்றி பெற்றுத் திரும்பி வருவேன்; உன்னை மணந்து மகிழ்வேன் ’ என்று உறுதி கூறினான். அவனையன்றி மற்றொருவனை மணப்பதில்லை என்று மங்கையும் வாக்களித்தாள். அன்று முதல் அவள் அல்லும் பகலும் காதலன் வரவு நோக்கிக் காத்திருந்தாள். ‘ ஒல்லையில் வருவதாகச் சொல்லிச் சென்றவன் திங்கள் பலவாகியும் திரும்பி வரவில்லையே ! வஞ்சி நகரத்தான் தன்னை வஞ்சித்து அகன்றானோ ’ என்று எண்ணி எண்ணி நெஞ்சம் கரைந்தாள் நங்கை.

"வஞ்சியேன் என்றுஅவன்தன்
ஊர்உரைத்தான் யானும்அவன்
வஞ்சியான் என்பதனால்
வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியேன்
என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ"

என்று மனம் வருந்தி முறையிட்டாள். என் உள்ளம் கவர்ந்த வீரன் 'வஞ்சியேன் வஞ்சியேன்' என்று பன்முறை உரைத்தான். அப்போது வஞ்சியாகிய தன் ஊரைக் குறித்தான் என்று நான் எண்ணவில்லை; வஞ்சித்து ஒழுகமாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்தான் என்று எண்ணினேன். அதை நம்பி நானும் அவனையே மணப்பதாக வாக்களித்தேன். 'வஞ்சியேன்' என்றவன் 'இப்போது என்னை வஞ்சித்து விட்டானே' என்று தன் ஆற்றாமையை அறிவித்தாள்.

இத்தகைய வஞ்சி நாட்டிலே பல நாடுகள் உண்டு. அவற்றுள் ஒன்று நாஞ்சில் நாடு. அந்நாடு சாலப் பழமை வாய்ந்தது.[1]

"பண்ணை பெருத்த பழநாடு - சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிரும் நாடு"

என்று பாராட்டப் பெற்ற அந்நாட்டில் உப்பும் நெல்லும் ஓய்வின்றி விளையும்; குமரிக் கடலும் குடமலைத் தொடரும் அரணாக நின்று காவல் புரியும்; ஆறும் மழையும் நீர்வளம் பெருக்கும்; அருந்தமிழ் ஆர்வம் அளவின்றிச் சுரக்கும்.

வளமார்ந்த அந்நாட்டை நீரூட்டி வளர்ப்பதற்கு ஒரு ஆறும் உண்டு. பழையாறு என்பது அதன் பெயர். அவ்வாற்று வெள்ளத்தை அணைகளால் அணைத்து, கால்களில் எடுத்து, கழனிகளிற் பாய்ச்சி நற்பயன் பெறுவர் நாஞ்சில் நாட்டார். பழையாற்றின் முதல் அணை 'பாண்டியன் அணை' என்று பெயர் பெற்றுள்ளது.

அவ்வாற்றின் கரையில் பூதப் பாண்டி என்னும் பெயருடைய ஊர் அமைந்திருக்கின்றது. அழகிய பாண்டிய புரம் என்ற ஊரும் அதற்கு அருகே உண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நாஞ்சில் நாட்டை ஆண்ட குறுநில மன்னரின் பெருமை புறநானூற்றிலே பேசப்படுகின்றது. அன்னவருள் ஒருவன் நாஞ்சில் வள்ளுவன். அவன் ஆட்சியில் அமைந்த நாட்டின் வளமும், அவன் கொடைத்திறமும் ஔவையார் முதலிய நல்லிசைப் புலவர்களால் பாடப் பெற்றுள்ளன. அவன் சிறந்த வீரனாகவும் விளங்கினான் என்பது அப்புலவர் களின் வாக்கால் புலனாகின்றது.

பழையாறு பாயும் நன்னாட்டில் வரையாது கொடுக்கும் வள்ளல்கள் பலர் அந்நாளில் வாழ்ந்தனர். அவர்களில் தலை சிறந்தவன் 'ஆய்' என்னும் அருமையான பெயருடையவன். அவன் வறுமையின் பெரும் பகைவன்; அற்றார்க்கெல்லாம் உற்ற துணைவன்; தாயனைய ஆய் என்று தமிழகம் போற்ற வாழ்ந்தவன்.

> **"இம்மைச் செய்தது மறுமைக் காம்எனும்**
> **அறவிலை வணிகன் ஆய்அலன்"**

என்று அவன் பண்பாட்டைப் பாராட்டினார் ஒரு பழந்தமிழ்ப் புலவர். உயர்ந்த குறிக்கோள் உடைய அவ்வள்ளல் 'ஈதல் அறம்' என்று எண்ணி வறியவர்க்குப் பொருள் வழங்கினாலல்லன். இப் பிறப்பில் ஈதலாகிய அறத்தைச் செய்தால் மறு பிறப்பில் அதன் பயனாகிய இன்பம் விளையும் என்று கருதினானில்லை. 'அற்றார்க்கு ஈதல் பொருள் பெற்றார் கடமை' என்பது அவன் கொள்கை. இத்தகைய விழுமிய நோக்கத்துடன் வாழ்ந்த வள்ளலின் பெருமை தமிழ் நாடெங்கும் பரவிற்று. அவனை ஈன்ற நாடு ஆய்நாடு என்றும், அதன் தலைநகர் ஆய்குடி என்றும் பெயர் பெற்றன.

தமிழ் நாட்டைக் குறித்து மேலை நாட்டு அறிஞர்கள் எழுதிப் போந்த பழங் குறிப்புகளில் ஆய்நாடு இடம் பெற்றுள்ளது. ஆய்நாட்டிலே உள்ள பெரிய ஊர் கோட்டாறு என்று யவன அறிஞராகிய தாலமி கூறுகின்றார். இந்நாளில் நாஞ்சில் நாட்டின் தலைநகர் போல் விளங்கும் நாகர்கோயிலை யடுத்த கோட்டாறு முன்னாளில் அயல் நாட்டாரும் அறிந்த சிறந்ததோர் நகரமாகத் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை.

கோட்டாறு என்பது ஓர் ஆற்றின் பெயர். கோட்டாற்றின் கரையில் எழுந்த ஊர், கோட்டாறு என்று அழைக்கப் பெற்றது. வாட்டாறு, வெள்ளாறு, ஐயாறு முதலிய ஆற்றுப் பெயர்கள் ஊர்ப் பெயர்களாக வழங்குதல் போன்று கோட்டாறும் ஊர்ப் பெயராயிற்று. நாஞ்சில் நாட்டின் வழியாகச் செல்லும் பழையாறு ஆதியில் கோட்டாறு என்று பெயர் பெற்றிருந்தது என்று அறிந்தோர் கூறுவர்.

சேர நாட்டைச் சேர்ந்த கோட்டாறு பாண்டி நாட்டின் எல்லைப்புறத்தில் அமைந்திருந்ததனால் அடிக்கடி தொல்லை யுற்றது; பாண்டியரும் சோழரும் படையெடுத்த காலங்களில் அல்லற்பட்டது. நெடுமாறன் என்ற பாண்டியன் கோட்டாற்றைப் பாழாக்கினான். குலோத்துங்க சோழனும் அந்நகரை வென்று அழித்தான்.

> **“ முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட**
> **முன்னொருநாள் வாள்அபயன் முனிந்த போரில்**
> **வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட**
> **வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும் ”**

என்று சோழ மன்னன் பெற்ற வெற்றிச் சிறப்பைக் கலிங்கத்துப் பரணி பாடிற்று. இவ்வாறு மாற்றார் படையெடுப்பால் எரிந்தும் தகர்ந்தும் நலிவுற்ற நகரம் அழிந்து போகாமல் அன்றுபோல் இன்றும் தலை நிமிர்ந்து நிற்பது நாஞ்சில் நாட்டாரது உறுதிப்பாட்டை நன்கு உணர்த்துவதாகும்.

# 42. பூதப்பாண்டி

**நா**ஞ்சில் நாட்டை நஞ்சை (நன்செய்) நாடென்றும் சொல்வதுண்டு. தொன்று தொட்டுத் தாளாண்மையுடைய வேளாளர் அந்நாட்டுப் பழங்குடிகளாகப் பணியாற்றி வருகின்றார்கள். அன்னார் உழைப்பாலேயே நாஞ்சில் நாடு நஞ்சை நாடாயிற்று. மேலைக் கடலைக் கடந்து வரும் மாரிக்காற்று அந்நாட்டிலே பெருமழை பொழியும். அதன் தூவானமே நெல்லை நாட்டில் ' சாரல் ' எனப்படும். இவ் உண்மையை அழகாக உணர்த்துகின்றது மனோன்மணீயம்.

> " இப்பெருந் தேயத்து எங்கும் இராப்பகல்
> தப்பினும் மாரி தன்கடன் தவறா
> கொண்மூ என்னும் கொள்கலம் கொண்ட
> அமிழ்தினை அவ்வயிற் கவிழ்த்தபின் செல்புழி
> வடியும் நீரே நம்மிடிதீர் சாரல் "

என்று பேசினான் பாண்டி நாட்டு அமைச்சன். 'அரசே ! இரவு பகல் வரத் தவறினாலும் நாஞ்சில் நாட்டில் மழை பெய்யத் தவறுவதில்லை. கருமேகம் அந்நாட்டில் மழையைக் கொட்டுகின்றது. பின்பு அது வேகமாகச் செல்லும் வழியில் தூறும் துளிகளே சாரல் ஆகும் ' என்று அவன் பேசிய மொழிகளால் நாஞ்சில் நாட்டு நீர்வளம் நன்கு விளங்கும்.

' பல துளி பெரு வெள்ளம் ' என்பது இந்நாட்டில் ஒரு பழமொழி. முன்னொரு காலத்தில் தென்பாண்டி நாட்டை ஊட்டி வளர்த்த நதி யொன்று பல்துளி (பஃறுளி) என்னும் பெயர் பெற்றிருந்தது. அந்நதியையும், அதனால் வளம் பெற்ற நாட்டையும் கொடுங்கடல் கொள்ளை கொண்டது.

ஆயினும் அந்நதியின் பெயரை நாஞ்சில் நாட்டில் உள்ள பறளியாறு நினைவூட்டுகின்றது. ' நாஞ்சில் நாட்டுக் காவேரி ' என்று நல்லறிஞர் போற்றும் அந்நதிக்குப் பல பெயர்கள் உண்டு. பழையாறு என்பது பொது மக்கள் இட்ட பெயர்; கோட்டாறு என்பது கல்வெட்டிலே கண்ட பெயர்; பறளியாறு என்பது பாட்டிலே பயின்ற பெயர்.

**" எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் தோன்றி**
**இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு**

**..................................................**

**தத்திவிழும் பறளியாற்று அணையும் தள்ளி**
**தமிழ்ப்பாண்டி ராஜசிங்கம் தனையும் வென்று**
**கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சி நாடும்**
**கோட்டாறும் கூபர்கோன் கொண்ட நாளே"**

என்று பாட்டிலே குறிக்கப்பட்டுள்ள பறளியாறு என்ற பெயர் பஃறுளியாற்றுப் பெயரின் சிதைவாகத் தோன்று கின்றது.

இத்தகைய பெருமையுடைய ஆற்றின் கரையிலே 'பூதப்பாண்டி' என்னும் ஊர் ஒன்றுண்டு. ஒரு பாண்டி மன்னன் பெயர் அவ்வூர்ப் பெயரில் அமைந்துள்ளது என்பது வெளிப்படை. பழங்காலத்தில் பாண்டிநாட்டை ஆண்ட மன்னருள் பூதப்பாண்டியன் என்பான் புகழ் பெற்ற வீரனாய் விளங்கினான் என்று புறநானூறு கூறும்.

பூதன் என்ற பெயருடைய பெருமக்கள் சிலர் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. பெண்ணையாறு பாயும் நன்னாட்டில் புலவர்களை ஆதரித்த பூதன் ஒருவன் இருந்தான். அவன் அளித்த இனிய எளிய விருந்தை உண்டு பாராட்டினார் ஔவையார்.[1]

மதுரையில் அரசாண்ட பூதப் பாண்டியன் புவிச் செல்வமும் கவிச் செல்வமும் பெற்று விளங்கினான். அகப் பொருளும் புறப்பொருளும் அமைத்துக் கவிபாடும் திறம் அவனிடம் இனிது அமைந்திருந்தது. இளவேனிற்

காலத்தின் இயற்கை நலங்களை விளக்கி அம்மன்னன் பாடிய பாட்டொன்று அகநானூற்றிலே சேர்க்கப் பெற்றுள்ளது.

பெறுதற்கரிய பேறுகள் பலவும் பெற்று வாழ்ந்தான் அப்பாண்டியன். அவன் மனையாளாகிய பட்டத்தரசி ஓர் அருங்கலைச் செல்வி; சிறந்த கற்பரசி. பண்பார்ந்த தலைவர் பலர் அவன் நண்பராய் இருந்தனர். பசுந்தமிழ் வழங்கும் பாண்டி நாட்டைப் பரிபாலனம் செய்யும் உரிமை தான் முன் செய்த நல்வினையாற் கிடைத்தது என்று எண்ணி எண்ணி அவன் இறும்பூது எய்தினான்; குடிகள் நல்ல வண்ணம் வாழ்தல் வேண்டும் என்பதே அவன் குறிக்கோள்.

இத்தகைய நல்ல மன்னனுக்கும் தொல்லை கொடுக்கத் துணிந்தனர் மண்ணாசை பிடித்த அயல் நாட்டு மன்னர். அன்னார் ஒன்று சேர்ந்து பாண்டி நாட்டின் மேல் படையெடுத்தனர். போர் நேர்ந்தது என்று அறிந்த பாண்டியன் பொங்கி எழுந்தான். வீரப் பெரும்படை திரண்டது. அப் படையின் நடுவே நின்று ஒரு வஞ்சினம் கூறினான் பாண்டியன். 'என் நாட்டின்மீது மாற்றார் படை யெடுத்தார்கள் ! அவரது கொட்டத்தை அடக்குவேன் ! அவர் சேனையை அலற அடிப்பேன் ! பதறப் புடைப்பேன் ! அப்படை புறங்காட்டி ஓடக் காண்பேன் ! அப்படிக் காணேன் ஆயின், காதல் மனையாளைப் பிரியும் தகவிலன் ஆகக் கடவேன்; மாவன் முதலிய மெய்யன்பர்களின் நட்பினை இழந்தவன் ஆகக் கடவேன்; நெறி முறை தவறிய கொடுங்கோலன் என்று இகழப் படுவேனாக; தென்னாடு காக்கும் பாண்டியர் குலத்திற் பிறவாது புன்னாடு காக்கும் புறக்குடியிற் பிறப்பேனாக' என்று பேசினான்.

அம்மன்னன் பெயர் கொண்ட பூதப்பாண்டி என்ற ஊரின் அருகே பறளியாற்றில் உள்ள அணைக்கட்டு 'பாண்டியன் அணை' என்றே இன்றளவும் அழைக்கப் படுகின்றது. இவ் அணைக்கட்டில் பறளியாற்று நீரை

எடுத்துச் செல்லும் பாசனக் கால்வாய் 'புத்தனாறு' என்று பெயர் பெற்றுள்ளது. புத்தனாறாகிய புத்தாறு பிறந்த பின்னர் தாயாறாகிய பறளியாறு பழையாறு என்னும் பெயர் பெற்றது போலும் !

பூதப் பாண்டியில் பழமையான குகைக் கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள ஈசன் பூதலிங்கம் என்று அழைக்கப் படுகின்றார். அக்கோயில் பூதப்பாண்டியனால் நிறுவப் பெற்றதென்று அவ்வூரார் கூறுவர்.

இவ்வாறு நாஞ்சில் நாட்டில் தன் பெயரையும் புகழையும் நிலை நாட்டிய பூதப்பாண்டியன் இறந்தபோது பெருந் தமிழ் நாடு அருந்துயரில் ஆழ்ந்தது. பாண்டிமாதேவி உடன்கட்டையேறி உயிர் துறக்கத் துணிந்தாள். அவள் கருத்தறிந்த மதுரை மாநகரத்தார் பொறுக்க முடியாத வருத்த முற்றுக் கதறினர். கண்ணீர் பெருக்கினர். அந்நகரில் வாழ்ந்த சான்றோர் பலர் அரண்மனையிற் போந்து அரசியின் கருத்தை மாற்ற முயன்றனர். அப்போது அரசமாதேவி அவர்களை நோக்கி,

**" பல்சான் றீரே பல்சான் றீரே**
**செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்**
**பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே "**

'உயிர்க்கு உயிராகிய உன் கணவனுடன் செல்க' என்று வழியனுப்பாமல் என்னைத் தடுக்கும் பொல்லாப் பெரியோரே ! உமக்கு ஒன்று கூறுவேன். பழஞ் சோறுண்டு பாயில்லாமல் வெறுந்தரையில் படுத்து, கைம்மை நோன்பை மேற்கொண்டு உயிர் வாழும் கடைப்பட்ட மகளிர் இனத்தைச் சேர்ந்தவள் அல்லேன் யான் ! என் கணவனை ஏற்றும் ஈமப் பள்ளி எனக்கு வெம்மை விளைக்கும் நெருப்பன்று ! தண்மை தரும் தாமரைப் பொய்கையாகும்' என்று மறுமொழி கூறித் தீப்பாய்ந்து உயிர் நீத்தாள். பழந் தமிழ்நாட்டுக் கற்புநெறி வழுவாமல் கணவனாருடன் சென்ற தேவியைக் கற்பரசிகளின் வரிசையில் வைத்துத் தமிழகம் போற்றுகின்றது.

# VI. சேரநாடு

"புனலம் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிரி"

- *புறநானூறு.*

## 43. முசிரி

'**கொ**ச்சியிலே குறுணி மிளகு' என்று மெச்சிப் பேசுவர் தென்பாண்டி நாட்டார். மலைவளம் மல்கிய சேர நாட்டில் மணமும் சுவையும் உடைய நல்ல மிளகு முன்னாளில் மிகுதியாக விளைந்தது. மேலை நாட்டார் அதனை மிகவும் விரும்பினர். சிறப்பாகக் குட்டநாடு என்னும் பகுதியில் விளைந்த காரசாரமான மிளகு அவர்களுக்கு மெத்தப் பிடித்திருந்தது, உயர்ந்த விலை கொடுத்து அவர்கள் அம்மிளகை வாங்கித் தம் மரக்கலங்களில் ஏற்றிச் சென்றனர்.

அந்நாளில் சேரநாட்டுக் கடற்கரையில் முசிரி என்னும் துறைமுகம் சிறந்து விளங்கிற்று. பெரியாறு கடலில் பாயும் இடத்தில் வீற்றிருந்த முசிரி மாநகரம் 'குடகடலின் கோமகள்' என்று கொண்டாடத்தக்க செல்வச் செழுமை வாய்ந்து திகழ்ந்தது. மேலைநாட்டுக் கப்பல்கள் அத்துறைமுக நகரத்திற் போந்து செம்பொன்னைச் சொரிந்து கருமிளகை ஏற்றிச் சென்ற செய்தியை அகநானூறு என்னும் பழைய தமிழ் நூல் அழகாகக் கூறுகின்றது.[1]

இவ்வாறு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சீரும் சிறப்பும் உற்று விளங்கிய முசிரியின் பெருமை நாளடைவில் குறைந்தது. முசிரி என்னும் பெயரும் மழுங்கி மறைந்தது. சேரமான் பெருமாள் சேரநாட்டில் அரசு புரிந்தபோது கொடுங்கோளூர் என்னும் துறைமுக நகரம் மலையாள நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது என்பது திருத்தொண்டர் புராணத்தால் விளங்குகின்றது.[2]

கொடுங்கோளூரில் அரசு வீற்றிருந்த சேரமானும் திரு வாரூரில் சிவத்தொண்டு புரிந்த சுந்தர மூர்த்தியும் ஒருவரை ஒருவர் கண்டு பழகுவதற்கு முன்னமே உணர்ச்சியால் ஒன்றுபட்டு உயரிய தோழராயினர். சேரநாட்டிலே பிறந்தவர் சேரமான்; நடுநாட்டிலே பிறந்தவர் சுந்தரர். அரசாளும் குலத்தைச் சேர்ந்தவர் சேரமான்; அந்தணர் குலத்தில் வந்தவர் சுந்தரர். நாடாளும் பணியை மேற் கொண்டவர் சேரமான்; ஈசனைப் பாடும் பணியே பணியாகக் கொண்டவர் சுந்தரர். இங்ஙனம் பல்லாற்றானும் வேறுபட்ட சேரமானும் சுந்தரமூர்த்தியும் சிவனடி மறவாச் செம்மை வாய்ந்தவர் ஆதலின் சிறந்த நண்பராயினர்.

தம் உயிர்த்தோழராகிய சுந்தரரைக் காணும் ஆசை யால் மலைநாட்டினின்றும் புறப்பட்டுத் திருவாரூருக்கு எழுந்தருளினார் சேரமான்; சுந்தரரோடு அளவளாவினார். அவர் பாடிய தமிழ்ப் பாட்டைக் கேட்டு மனம் உருகினார். எல்லையற்ற பெருமை வாய்ந்த தில்லை அம்பலத்தை அவரோடு சென்று வணங்கினார்; இன்ப வெள்ளத்தில் மூழ்கினார். ‘பொன் வண்ணத்து அந்தாதி’ என்னும் செந்தமிழ்ப் பாமாலை சாத்தினார். ஐந்தொழில் புரியும் ஆடலரசை அகனமர்ந்து ஏத்தினார்.

மனம் ஒத்த நண்பர் இருவரும் திருஆலவாய் முதலாய தென்னாட்டுத் திருப்பதிகளைக் கண்களிப்பக் கண்டு வணங்கிச் சேரநாட்டுத் தலைநகரை நண்ணினர். சிவநேயச்

செல்வர் இருவரையும் ஒருங்கே கண்ட சேரநாட்டு மக்கள் இன்பக் கண்ணீர் சொரிந்தார்; மலர்மாரி பொழிந்தார்.

பொது மக்களின் ஆர்வத்தை அறிந்து அகமகிழ்ந்த சேரமானும் சுந்தரரும் 'அஞ்சைக் களம்' என்னும் ஆலயத்திற் போந்து ஈசனை நெஞ்சார வழிபட்டனர். 'அஞ்சைக் களத்து அப்பனே' என்று அழைத்துச் செஞ்சொற்பாமாலை அணிந்தார் சுந்தரர்.

> **" அலைக்குங் கடலங்கரை மேல் மகோதை**
> **அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே "**

என்ற தேவாரத் திருப்பாசுரத்தில் மகோதை என்று சேரமானது தலைநகரம் குறிக்கப்படுகின்றது.[3] அதனால் மகோதை என்ற பெயரும் கொடுங்கோளூருக்கு உண்டு என்பது நன்கு விளங்கும்.

கோதை என்பது சேர மன்னர்க்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. கோதையார்க்குரிய தலைநகரமாகிய கொடுங்கோளூர் மகோதை என்று பெயர் பெற்றது போலும் !

> **" கோதை அரசர் மகோதை யெனக்**
> **குலவு பெயரும் உடைத்து உலகில் "**

என்று திருத்தொண்டர் புராணம் தெரிவிக்கிறது.

இத்தகைய மகோதைப் பட்டினத்தில் ஒரு நாள் கோதையரசர் பவனி வந்தார். அவர் திருமேனியைக் காண்பதற்கு ஆசைப்பட்ட இளமங்கையர் பட்டும் பணியும் புனைந்து கொண்டு கதவைத் திறந்து எட்டிப் பார்த்தனர். 'எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடலாமோ ?' என்று அவர்களைத் தட்டி அடக்கி வீட்டினுள்ளே அனுப்பிக் கதவைத் தாழிட்டனர் தாய்மார்கள். அவர்கள் வீட்டினுள்ளே வேலை செய்யும் வேளை பார்த்துக் கதவைத் திறந்து, பின்னும் தெருவுக்குச் சென்றனர்

கன்னியர். அது கண்டு ஓடிவந்து பெண்களை அதட்டி மீண்டும் வீட்டின் உள்ளே அடைத்துத் தாழிட்டனர் தாய்மார். இவ்வாறு அன்னையர் அடைத்தலாலும் கன்னியர் திறத்தலாலும் கதவின் குடுமி தேய்ந்து போயிற்று என்று பாடுகின்றார் ஒரு கவிஞர்.

**"தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்**
**தேயத் திரிந்த குடுமியவே - ஆய்மலர்**
**வண்டுலாம் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்**
**கண்டுலாம் வீதிக் கதவு"**

என்ற பாட்டில் கோதையின் வருகையால் தேய்ந்த குடுமியைக் காணலாம்.

தேவாரப் பாடல் பெற்ற திருவஞ்சைக் களம் இப்பொழுது திருவஞ்சிக்குளம் என்று மலையாள மொழியில் மருவி வழங்குகின்றது. சேரநாட்டில் பழைய தலைநகராகிய வஞ்சி மாநகரம் இத் திருவஞ்சிக்குளமே என்பர் சிலர். சேரமான் அரசு புரிந்த கொடுங்கோளூர் மேலைநாட்டார் நாவில் கிராங்கனூர் எனச் சிதைந்தது. சங்க நூல்களில் முசிறி என்றும், தேவாரத்தில் மகோதை என்றும் பெயர் பெற்று விளங்கிய திரு நகரம் இப்போது ஏற்றமும் தோற்றமும் இழந்து கேரள நாட்டுக் கடற் கரையில் உறங்குகின்றது.

## VII. வடநாடு

"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்"

- பட்டினப்பாலை.

# 44. கோதாவரித்துறை

**கா**லைப் பொழுது. கதிரவன் ஒளி வீசி எழுந்தான். கமலப் பள்ளியில் கண்ணுறங்கிய அன்னம் விழித்து எழுந்து அருகேயிருந்த பூஞ்சோலையிற் சென்று உலாவிற்று. அதன் நடையழகைக் கண்டு மகிழ்ந்தன பறவையெல்லாம்.

சோலையைத் தலைநிமிர்ந்து பார்த்தது அவ்வன்னம். 'இப் பூஞ்சோலைக்கு எனது நடையன்றோ அழகு செய் கின்றது? இன்னிசை பாடும் வண்டினங்களும் என் நடையில் ஈடுபட்டு வாயடங்கி விட்டனவே' என்று எண்ணி இறுமாப்புற்றது. அதன் அகத்தில் எழுந்த செருக்கு முகத்திலே தெரிந்தது.

அன்னத்தின் செருக்கைக் கண்டு வெறுப்புற்ற வண்டுகள் 'என்னதான் இருந்தாலும் இந்த அன்னத்திற்கு இத்துணை கர்வம் ஆகாது. இச்சோலைக்கு அன்னநடை ஒன்றுதானா அழகு தருகின்றது? மயில் அழகாக ஆட வில்லையா? குயில் இனிதாகக் கூவவில்லையா? கிளி

மழலை மொழி பேச வில்லையா? செருக்குற்றவர் சீரழிவர் என்பதை இவ் ஏழை அன்னம் அறியவில்லை ! இந்த மட அன்னத்திற்கு ஒரு காலம் வந்தால் சின்னஞ்சிறு வண்டுகளாய எமக்கும் ஒரு காலம் வரும்' என்று கருதிப் பொறுத்திருந்தன.

அப்போது அச்சோலையிலே பூப்பறிக்க வந்தனர் சில மங்கையர். இளங் கிளிகளைக் கையில் வைத்துக் கொஞ்சிப் பேசிக்கொண்டு அழகுற நடந்து வந்த வஞ்சியரைக் கண்டது அவ்வன்னம். 'இம்மாதரது நடையின் முன்னே என் நடை செல்லாது' என்று செருக்கு ஒழிந்தது; தலை கவிழ்ந்து சோலையை விட்டு வெளியே சென்றது.

அன்னத்தின் தோல்வியைக் கண்ட வண்டுகள் ஆனந்த முற்றன. விளையாட்டரங்கத்தைச் சுற்றி நின்று வெற்றி தோல்விகளைக் கண்டு கைகொட்டி ஆர்க்கும் சிறுவரேபோல் செருக்கழிந்த அன்னத்தின் சிறுமை கண்டு ஆரவாரம் செய்தன வண்டுகள்.

"பாகொக் கும்சொல் பைங்கிளி யோடும்
பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண
மலர்கொய் யும்
தோகைக் கொம்பின் அன்னவர்க்கு அன்னம்
நடைதோற்றுப்
போகக் கண்டு வண்டினம் ஆர்க்கும்
பொழில்கண்டார்"

என்று இக்காட்சியை ஒரு சொல் ஓவியமாக எழுதி யமைத்தார் கம்பர்.

மிதிலை மாநகரில் அன்னங்கள் ஆடும் ஓர் அழகிய துறை அமைந்திருந்தது. அதன் அருகே சிறந்தோங்கி நின்றது சீதையின் கன்னிமாடம். ஒரு நாள் அம்மாடத்தின் மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றை நுகர்ந்து

நின்றாள் சீதை. அப்போது வீதியின் வழியே நடந்து சென்ற இராமன் தற்செயலாகக் கண்ணெடுத்து, மாடத்தில் நின்ற மங்கையை நோக்கினான். மங்கையும் எதிர் நோக்கினாள். கண்ணொடு கண் கலந்தது; காதல் பிறந்தது. தன் உள்ளங் கவர்ந்த அண்ணலின் பேரழகைக் கண்ணால் முகந்து பருகினாள் சீதை. அவ்வீரனது வேழ நடை அவள் உள்ளத்தை அள்ளுவதாயிற்று.

கன்னி மாடத்தின் மேடையிலே கண்டு காதலித்த மங்கையை மீண்டும் மிதிலை மன்னன் மாளிகையில் காணும் பேறு பெற்றான் இராமன். மன்னரும் முனிவரும் அமர்ந்திருந்த மணி மண்டபத்தை நோக்கி நடந்து வந்தாள் மணமகளாகிய சீதை.

**"அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண**
**மன்னவை இருந்த மணிமண்டபம் அடைந்தாள்"**

அப்பொழுது அன்ன நடையையும் வென்ற சீதையின் அணி நடையைக் கண்டு அகமகிழ்ந்தான் இராமன். இத்தகைய நம்பியும் நங்கையும் திருமணம் புரிந்துகொண்டு வாழ்ந்தார்கள்.

அயோத்தி மாநகரில் அரசு வீற்றிருந்து ஆளுதற்குரிய தலைமகனான இராமன் திருநாடு துறந்து கானகம் செல்லும் நிலை வந்துற்றது. அதைக் குறித்து அவன் சிறிதும் வருந்தினான் அல்லன். மரவுரி தரித்து மாநகரினின்றும் புறப்பட்டான்.

அந்நிலையில் சீதையும் மரவுரி புனைந்து உடன் எழுந்தாள். காதல் மனையாளின் கருத்தை அறிந்தபோது வீரன் திருமுகத்தில் கவலை படர்ந்தது. மாளிகையன்றி மற்றோரிடம் அறியாத சீதை கானகத்தின் கடுமையை எவ்வாறு பொறுப்பாள் என்று வருந்தினான். மந்த மாருதம் தவழும் மாளிகையில் மெல்லிய மஞ்சத்திலே துயின்று

பழகிய மங்கை, கானகப் புல்லிலும் கல்லிலும் எவ்வாறு துயில்வாள் என்று கலங்கினான். காட்டில் வாழ்வதற்கு எவ்வகையிலும் தகுதியற்ற சீதையால் என்னென்ன தொல்லைகள் வருமோ என்று எண்ணிக் கவலையுற்றான்.

கணவனுடன் கானகத்திற்குப் புறப்பட்ட சீதையின் உள்ளத்தில் இன்பமே நிறைந்து நின்றது. மாளிகையையும், மஞ்சத்தையும் மறந்தாள்; காட்டின் கடுமையையும் கதிரவன் கொடுமையையும் அறியாளாயினாள். கங்கைக் கரையில் ‘ களியன்னமும் மடஅன்னமும் ’ நடமாடக் கண்டு களித்தாள். மரம் அடர்ந்த சோலைகளைக் கண்டு மகிழ்ந்தாள். புன்னகை பூத்த முகத்தோடு விளையாடிக் கொண்டு கணவனுடன் வழி நடந்தாள்.

இராமனும் சீதையும் கோதாவரியாற்றின் கரையை வந்து அடைந்தார்கள். செஞ்சொற் கவிஞரின் உள்ளம் போல் தெளிந்து சென்ற தண்ணீரைக் கண்டு குளிர்ந்தது அவர்கள் நெஞ்சம். அவ்வாற்றங் கரையில் ஓர் அழகிய அன்னம் ஒதுங்கிச் சென்றது. ஒரு யானைக்கன்று தண்ணீரைப் பருகிக் கரையை நோக்கி நடந்து வந்தது.

ஆற்றங் கரையில் அன்னத்தின் நடையைக் கண்ட இராமன் அதன் நடையோடு சீதையின் நடையை ஒப்பிட்டுப் பார்த்தான். மிதிலை மாளிகையில் அவள் மணக்கோலத்தில் நடந்து வந்த அணி நடையும், கரடு முரடான கானகத்தில் மரவுரி புனைந்து நடந்து வந்த மணி நடையும் அலை அலையாக அவன் மனத்தில் எழுந்து இன்பம் ஊட்டின. பட்டு விரித்த மாளிகையிலும், பாதையற்ற கானகத்திலும் பாங்குற நடந்த அந்நடையின் அழகை நினைத்து அகமகிழ்ந்தான். புன்முறுவல் அவன் முகத்திலே தோன்றிற்று. சிந்தனை தேக்கிய முகத்தில் எழுந்த முறுவல் சிறிய முறுவலாகவே அமைந்தது.

ஆற்றங்கரையிலே யானைக் கன்றின் நடையைக் கண்ட போது சீதையின் உள்ளத்தில் சிறந்த இன்பம் பிறந்தது. மிதிலை வீதியில் காதலனாகிய இராமன் நடந்த விழுமிய நடையும், பின்பு கானகத்தில் நடந்த கண்ணிய நடையும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து உவகையூட்டின. அதன் அறி குறியாக அவள் முகத்திலும் முறுவல் தோன்றிற்று. இயல் பாகவே மந்தகாசம் தவழ்ந்து கொண்டிருந்த முகத்தில் இப்போது புதியதோர் புன்னகை எழுந்தது. அது செடி கொடிகளிலே மலர்ந்த மலர்போல் அம்மங்கையின் திருமுகத்தில் நின்று அழகு செய்தது.

எனவே இருவர் மனத்திலும் எழுந்த இன்ப உணர்ச்சி ஒன்றே எனினும், இராமன் முகத்தில் அது சிறிய முறுவலாக வெளிப்பட்டது. சீதையின் முகத்தில் அது புதிய முறுவலாகப் பூத்தது. கானகத்தில் கவலையோடு சென்ற தலைவனது மன நிலையையும், அவனுடன் களித்து விளையாடிச் சென்ற சீதையின் மனநிலையையும் அவ்விருவரது முகத்தில் எழுந்த முறுவலின் வாயிலாகப் புலப்படுத்திய கம்பர் கவித்திறம் போற்றுதற்குரியதாகும்.

# 45. காசி

'கங்கைக்கு நிகரான நதியும் இல்லை; காசிக்கு நிகரான பதியும் இல்லை' என்பது இந்துக்கள் கொள்கை. தொன்றுதொட்டு, பாரத நாட்டு மன்னரும் அறிஞரும் கங்கையாற்றையும் காசி மாநகரையும் வணங்கிப் போற்றி வாசி பெற்றுள்ளார்கள்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் தோன்றிய முனிவர் ஒருவர் காசியம்பதியைக் காண ஆசைப் பட்டார்; காடும் மலையும் கடந்து அப்பதியை அடைந்தார். கங்கைக் கரையிலே நின்று, பொங்கிப் பரந்து சென்ற பெரு வெள்ளத்தை நோக்கினார். அவர் உள்ளத்தில் இன்ப வெள்ளம் பொங்கிற்று.

'எங்கும் புகழ்பெற்ற கங்கை மாநதியே ! காசி நகரில் உன்னைக் கண்டு வணங்கும் ஆசையால் எத்தனையோ காத வழி நடந்தேன்; கடுந்துயர் உழந்தேன். ஆயினும் இங்கு வந்து சேர்ந்தவுடன் நான் பட்ட பாடெல்லாம் பறந்தோடி மறைந்தது; தாய் முகம் கண்ட சேய்போல் மனம் தழைத்தேன்.'

'கருணை வடிவாய திருநதியே ! பாரதநாடு செய்த பெருந் தவத்தின் பயனாக இமயமலையிலே பிறந்தாய் ! விண்ணுக் கடங்காமல், இமய வெற்புக்கு அடங்காமல் எழுந்த உன் வெள்ளத்தைப் பேணி அணைத்துத் தன் வேணியில் அமைத்தான் என்னையாளுடைய ஈசன்.

'புனிதர் போற்றும் பெருநதியே ! உன் புண்ணியத் துறைகளில் அமர்ந்து, அருந்தவம் முயன்று இன்பப் பேறு பெற்றவர் எண்ணிறந்தவர். மாதவத்தின் ஆற்றலால் விதியையும் வென்று உயர்ந்த மார்க்கண்டனுக்கு அருள்புரிந்த மணிகர்ணிகைத் துறையை இன்று கண்களிப்பக் கண்டேன்; மனம் குளிர்ந்து வணங்கினேன்.

**"கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு"**

என்ற அருமைத் திருக்குறளில் மாதவ முனிவனாகிய மார்க் கண்டனை அன்றோ மனத்திற் கொண்டு பாடினார் தமிழ் மறை யருளிய திருவள்ளுவர்?

'வித்தகர் போற்றும் விழுமிய நதியே ! மன்னன் அரிச் சந்திரன் காவல் புரிந்த மயானத்தைக் கண்டேன். மனம் உருகி நின்றேன். வாய்மை தவறாத அம்மன்னவன் கடுமையான சோதனையைத் தன் சாதனையால் வென்ற வரலாற்றை அறியாதார் பாரத நாட்டில் உளரோ? 'பதி இழந்தேன், பாலனை இழந்தேன், நிதி இழந்தேன், இன்னும் எதை இழந்தாலும் சொன்ன சொல்லை இழக்கமாட்டேன்' என்று அவ்வாய்மையாளன் கூறிய கட்டுரையைக் கேளாத செவி என்ன செவியே !

'மாசகற்றும் காசி மாநகரே ! உன் பெயர் வாசியை அறிந்து போற்றுகின்ற நாடுகளுள் தலை சிறந்தது எங்கள் தமிழ்நாடு. தென்காசி என்ற ஊரும், சிவகாசி என்ற ஊரும் தென்னாட்டிலே உண்டு. விசாலாட்சியின் அருள் இங்கு விளங்குதல் போலவே மீனாட்சியின் அருள் தமிழ் நாட்டில் உள்ள மதுரையில் விளங்குகின்றது. வாரணாசி என்று உன்னை அழைப்பதன் காரணத்தை இங்கு வந்த பின்னரே அறிந்தேன். கங்கையில் வந்து சேரும் வாரணை என்ற ஆற்றுக்கும் அசி என்ற ஆற்றுக்கும் இடையே முன்னாளில் அமைந்த காசி, வாரணாசி என்று பெயர் பெற்றது என்று

அறிந்தோர் சொல்லக் கேட்டேன். வாரணாசி என்னும் பெயரே திரிந்து 'பனாரஸ்' ஆயிற்று என்று அன்னார் சொல்லியபொழுது சிறிது திகைத்தேன்; வடநாட்டார் நாவில் வகரம் திட்டவட்டமாக வழங்குவதில்லை என்பதை வழி நடந்து வரும்போது ஒருவாறு உணர்ந்தேன். கன்னட நாட்டில் வசவன் பசவன் ஆகின்றான். வங்க நாட்டில் வங்காளம் பெங்கால் ஆகின்றது. அந்த முறையில் வாரணாசி என்ற சொல் பாரணாசியாக மருவி பனாரஸ் எனச் சிதைந்தது என்பதை அறிந்துகொண்டேன். எனினும் பழந்தமிழ்க் கவிதையில் வாரணாசி என்ற பெயர் அழகாக வழங்குவதறிந்து அகமகிழ்கின்றேன்.

'பிறவிப் பிணி தீர்க்கும் பெருநகரே ! தென்னாட்டு அறவோரும், அறிஞரும் உன்னை நாடி வருகின்றார்கள். பலநாள் இங்கே தங்கிப் புண்ணியத் துறைகளில் நீராடி அகிலேசரை வணங்க ஆசைப்படுகின்றார்கள். ஆயினும் கடும்பனியால் நலிந்து, கடு வெயிலால் உலர்ந்து அன்னார் வாடி வருந்துகின்றார்களே ! அவர்கள் தங்குவதற்கு இடமும் இல்லை; மடமும் இல்லை. வடநாடு முழுவதும் ஒரு குடைக்கீழ் ஆளுகின்ற மகம்மதிய மன்னர்க்கு இவர்கள் படும்பாடு தெரியுமோ தெரியாதோ? அம்மன்னனிடம் சென்று இக் குறையை முறையிடக் கருதியுள்ளேன். தமியேன் வாசி பெறுதற்கு நீ வரம் தரல் வேண்டும்' என்று கைகூப்பித் தொழுது விடை பெற்றார்.

மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது முனிவர் மகம்மதிய மன்னர் மொழியை மாசறக் கற்றார். அம் மொழியைச் செம்மையாகப் பேசுவதற்கேற்ற நாவன்மை பெறுமாறு சகல கலாவல்லியாகிய கலைமகளின் அருளை நாடினார்.

**" மண்கண்ட வெண்குடைக் கீழாக**
**மேற்பட்ட மன்னரும்என்**

பண்கண் டளவில் பணியச்செய்
வாய், படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகலகலா வல்லியே”

என்று பாமாலை அணிந்து போற்றினார்.

நாமகளின் அருளை முன்னிட்டு முனிவர் நாடாளும் மன்னனிடம் சென்றார். செவ்வி பார்த்து அவன் முன்னே போந்து செம்மையான சொற்களால் தென்னாட்டார் படும் தொல்லைகளை எடுத்துரைத்தார். முனிவர் பேசிய தெள்ளிய மொழிகள் மன்னன் உள்ளத்தைக் கவர்ந்தன. அவர் விரும்பியவாறே காசி மாநகரில் உள்ள கேதார கட்டத்தில் மடம் கட்டிக்கொள்ள இடமளித்தான் மன்னன். அங்கு முனிவர் முயற்சியால் எழுந்த மடம் குமாரசாமி மடம் என்று பெயர் பெற்றது.

அத்திரு மடத்தில் தமிழ் மணம் கமழ்ந்தது; தெய்வ நலம் திகழ்ந்தது. வடநாட்டு மொழியின் வாயிலாகத் தென்னாட்டுப் பண்பாட்டையும் பக்திப் பாடல்களின் சுவையையும் விரித்துரைத்தார் முனிவர். இவர் சில சமயங்களில் கம்பராமாயணப் பிரசங்கமும் செய்ததுண்டு. சிறந்த இராம பக்தராகிய துளசி தாசர் அந்தப் பிரசங்கங் களைக் கேட்டு உவந்தனர் என்றும், கம்பராமாயணத்தில் உள்ள கருத்துகளைத் தாம் இந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக்கொண்டனர் என்றும் கூறுவர். *

* குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம், பக்கம் 29 - டாக்டர் உ.வே. சாமிநாதையர்.

குமரகுருபர முனிவர் என்று தமிழ்நாடு போற்றும் இப் பெரியார் நிறுவிய திருமடம் இன்றும் காசியம்பதியில் காட்சி தருகின்றது. அங்கிருந்து அவர் தொடுத்த காசிக் கலம்பகம் என்னும் பாமாலையில் காசியின் மணம் கமழ்கின்றது.

> **“ பாவலரும் நாவலரும் பண்மலரக் கண்மலரும்**
> **காவலரும் ஏடவிழ்க்கும் காசியே ”**

என்று முனிவருடன் சேர்ந்து நாமும் அந்நகரைத் திசை நோக்கித் தொழுவோம் !

# 46. கங்கைத்துறை

அரக்கர் என்பவர் இரக்கம் அற்றவர்; அனைத்துலகும் தாமே ஆளும் ஆசை உற்றவர். ஒரு காலத்தில் அவர் இவ்வுலகத்தில் ஆதிக்கம் பெற்றனர். அறம் வாடிற்று. மறம் எங்கும் தலைவிரித்து ஆடிற்று. அப்போது அயோத்தி மாநகரில் அவதரித்தான் இராமன். நல்லோர் செய்த நல்வினையாலும் தீயோர் செய்த தீவினையாலும் கோசலையின் திருமகனாய்த் தோன்றினான் இராமன்; நாடாளும் உரிமையை இழந்து கானகம் நோக்கி நடந்தான். அப்பெருமானோடு சீதையும் இலக்குவனும் சென்றார்கள்.

நாடு துறந்து மூவரும் கங்கையாற்றின் கரையை வந்து அடைந்தார்கள். அங்கே அருந்தவம் முயன்ற முனிவர்கள் அறமே உருவாகிய மூவரையும் கண்டு அகமகிழ்ந்தனர்; ஆனந்தக் கண்ணீர் சிந்தினர்; அழகிய சொல்மாலை அணிந்து போற்றினர்; அன்பென்னும் அமிழ்தத்தை ஊட்டினர். அம்முனிவர்களுடன் ஒரு தவச்சாலையில் ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருந்தான் இராமன்.

அப்போது அங்கு வந்தான் ஒரு வேடர் தலைவன். அவன் கன்னங்கரிய மேனியன்; செம்மை சான்ற மனத்தினன். கங்கையாற்றிலே பிடித்த மீனை ஒரு கையிலும், கொம்பிலே வடித்த தேனை மற்றொரு கையிலும் கொண்டு, இராமன் தங்கியிருந்த தவச் சாலையின் முன்னே நின்று,

"தேவா ! நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்"

என்று கூவினான். அவனை ஐயனிடம் அழைத்துச் சென்றான் இலக்குவன்.

வேடர் பெருமானாகிய குகன் இராமனைக் கண்குளிரக் கண்டான்; உள்ளம் தழைத்தான்; மீனையும் தேனையும் அவன் முன்னே வைத்தான்; திருவடியில் விழுந்து வணங்கி எழுந்தான். 'தேவரீர் திருவமுது செய்வதற்காக இவற்றைத் திருத்திக் கொணர்ந்தேன்' என்று அன்பு ததும்பப் பேசினான்.

வேடன் செயல் கண்ட முனிவர்கள் வெறித்து நோக்கினர். 'குலத்தளவே ஆகும் குணம்' என்பதை மெய்ப்பித்துவிட்டானே குகன் என்று எண்ணி மனம் குழம்பினர். அந்நிலையில் அவரை நோக்கிப் புன்னகை புரிந்தான் இராமன். 'அகத்தில் அமைந்த அன்பின் சின்னங்களாகும் இப்பொருள்கள்; ஆதலால் இவை அமிழ்தினும் சிறந்தன' என்று நல்லுரை பகர்ந்தான்.

சடை முடியும் மரவுரியும் தரித்துத் தவச் சாலையில் இருந்த இராமன் கோலத்தைக் கண்டு உள்ளம் உருகினான் குகன். 'ஐயா ! மண்ணுலகம் செய்த பாவத்தால் அன்றோ இம்மன்னன் மணிமுடி துறந்தான்? ஏற்றமும் தோற்றமும் இழந்து இவ் ஆற்றங்கரையிலே அமர்ந்தான்; எத்துணைச் சிறப்பாகக் காண வேண்டிய கமலக் கண்ணனை இந்தக் கோலத்தில் காண்கின்றேன்? என் கண் செய்த பாவம் கடலினும் பெரிது' என்று மனம் கரைந்து நின்றான்.

அந்நிலையில் அந்திமாலை வந்தது. ஐயன் குகனை நோக்கி, 'நாளைக் காலையில் கங்கையைக் கடப்பதற்கு நீ உதவி புரிதல் வேண்டும். ஆதலால் இன்று உன் ஊருக்குச் சென்று நாளை ஓடம் கொண்டு வருக' என்று விடை கொடுத்தான். அச்சொல் வேடன் உள்ளத்தில் அம்பு போல் தைத்தது. 'என்னைப் போய்வா என்றானே ! நான் எவ்வாறு போவேன்? எங்கே போவேன்?' என்று அங்கலாய்த்தான்.

“ கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்து வான்,இப்
பார்குலாம் செல்வ ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான்
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய
செய்குவன் அடிமை என்றான்.”

‘ உலகெலாம் ஆளப் பிறந்த உத்தமனே ! கள்ளமுடைய என் உள்ளத்தை நீ கண்டு கொண்டாய் ! என் போலித் தன்மையை அறிந்துதான் ‘ இன்று போ ’ என்று பணித்தாய். உண்மையில் நான் அன்புடையவனாயின் இந்தக் கோலத்தில் உன்னைப் பார்த்த கண்களைப் பறித்து எறிந்திருக்க மாட்டேனா? ஆயினும், என் அப்பனே ! உன்னை விட்டு எங்கே போவேன்? இன்ப நிலையத்தை விட்டு இன்னலின் உள்ளே போவேனா? நிரம்பிய அன்பு என்னிடம் இல்லை என்றாலும் இயன்ற சேவை செய்து கொண்டு இங்கேதான் இருப்பேன் ’ என்றான் குகன்.

அவன் சொல்லிய சொற்களைக் காதாரக் கேட்டான் இராமன். கருமையான உருவத்தில் அமைந்த அருமையான அன்பின் சுவையை நுகர்ந்தான். அவன் உள்ளத்தின் செம்மையைச் சீதையும் தம்பியும் கண்டு கொண்டார்களா என்று அறிய விரும்பி இருவர் முகத்தையும் நோக்கினான். தம்பியின் முகத்தில் ஓர் இன்ப ஒளி படர்ந்திருந்தது. மாசற்ற மனமுடையான் ஒருவன் கங்கைக் கரையில் வேடர் குலத்தில் உள்ளான் என்று எண்ணிக் களிப்புற்ற தம்பியின் முகம் ‘ திருமுக ’ மாய் இலங்கிற்று.

“ கோதைவிற் குரிசில் அன்னான்
கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்

காதலன் ஆகும் என்று
கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப
இருத்திஈண்டு எம்மொடு என்றான்"

கருணை நிறைந்த கண்களால் குகனைப் பார்த்து, 'யாதினும் இனிய நண்பா ! எம்மொடு நீயும் இரு' என்று இன்னுரை கூறினான்.

அவ்வுரை கேட்ட குகன் ஆனந்த வாரியில் மூழ்கினான்; அரை குறை அன்பினரையும் ஆட்கொண்டருளும் அண்ணலின் அடியிணை பணிந்தான்; வேடப் பெரும்படையைக் கூவி அழைத்தான். தவச் சாலையைச் சுற்றி நின்று காவல் புரியக் கட்டளை இட்டான்.

அப்போது இலக்குவன் விரித்த நாணற் புல்லின்மீது பள்ளிகொண்டனர் இராமனும் சீதையும். வில்லேந்திய கையனாய் விடியும் அளவும் கண்ணயராமல் இருவரையும் காத்து நின்றான் இலக்குவன். புல்லிலே படுத்திருந்த தன்னிகரில்லாத் தலைவனையும், தன் நலம் மறுத்து நின்ற தம்பியையும் மாறி மாறிப் பார்த்து மனம் உருகிக் கண்ணீர் சொரிந்தான் குகன்.

பொழுது புலர்ந்தது; கங்கையைக் கடப்பதற்கு ஆயத்தமானான் கமலக் கண்ணன். அப்போது குகன் அவன் அடி பணிந்து, 'ஐயனே ! அண்மையிலே உள்ளது அடியேன் இருப்பிடம். அங்கே தேனும், தினையும் உண்டு; மெல்லிய தோலாடை உண்டு; ஏவல் புரிய வேடர் பலர் உண்டு. ஒரு நாளேனும் நீங்கள் மூவரும் அங்கே தங்கி அருள் புரிய வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தான்.

அது கேட்ட இராமன், 'அன்பனே ! இன்னும் சில காலம் புனித மாதவரோடு உறவாடி, புண்ணியத் துறைகளாடித் திரும்பி வரும்பொழுது அங்கு வருவோம்' என்று வாக்களித்தான். குகனுடைய உள்ளம் குளிர்ந்தது.[1]

உடனே ஓடத்தை வரவழைத்தான். மூவரும் முறையாக ஏறிய பின்பு அவ் வோடத்தைத் தானே ஆனந்தமாகச் செலுத்தினான்.

இவ்வாறு கங்கை யாற்றைக் கடந்த பின்னர், 'சித்திர கூடத்திற்கு வழி எது?' என்று வினவினான் இராமன். 'ஐயனே ! அவ்விடத்திற்கு வழிகாட்டிக்கொண்டு அடியேனும் உம்மோடு வருவேன்; பாதை செய்வேன்; பர்ணசாலை கட்டுவேன்; பாதுகாத்து நிற்பேன்' என்று பணிவுடன் கூறினான் குகன்.

கங்கை வேடனது கங்கு கரையற்ற அன்பு இராமன் உள்ளத்தைக் கவர்ந்தது. அகமும் முகமும் மலர்ந்து அன்பனை நோக்கி, 'என் ஆருயிர் அனையாய் நீ; என் தம்பி உன் தம்பி; என் மனையாள் உன் தோழி' என்று இணையற்ற மொழி பகர்ந்தான் இராமன்.

குலத்தாலும் நலத்தாலும் வேறுபட்ட குகனைத் தன் குடும்பத்தில் சேர்த்துக் கொண்ட தலைவனது பெருங் கருணையை நினைந்து உருகினாள் சீதை:[2] 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது' கங்கை வேடனைச் சரிநிகர் சமானமாகக் கருதிய அரும் பெருங் கருணையை வியந்து,

> **"ஆழி வண்ணநின் அடியிணை அடைந்தேன்**
> **அணிபொழில் திருஅரங்கத்து அம்மானே"**

என்று பாடினார் திருமங்கை ஆழ்வார்.[3] கைம்மாறு கருதாப் பேரன்பின் பயனாக யாரும் பெறாத பேறு பெற்ற கங்கை வேடனைக் 'குகப் பெருமாள்' என்று வைணவ உலகம் போற்றி வழிபடுகின்றது.

## VIII. ஈழ நாடு

" சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் "

*- பாரதியார்.*

# 47. மாதோட்டம்

இலங்கை எனப்படும் ஈழநாட்டில் நெடுங்காலமாக வழங்கி வரும் மொழிகள் சிங்களமும் தமிழும். அங்கு நிலவும் சமய நெறிகள் சாக்கியமும் சைவமும்.

தமிழகத்திற்கு அப்பாற்பட்ட இலங்கை முதலிய நாடுகளில் அமைந்த திருக்கோயில்களையும் திசை நோக்கித் தொழுதனர் தேவாரம் பாடிய பெரியோர். திருக்காளத்தி மலையில் நின்று கயிலாச மலையைப் பாடினார் திருஞான சம்பந்தர். அவ்வண்ணமே இராமேச்சுரத்திலிருந்து கடல் சூழ்ந்த இலங்கையில் உள்ள சிவாலயங்களைப் பாடிப் பரவினார் அப்பெருமான். இச்செய்தியைத் தெரிவிக்கின்றது திருத்தொண்டர் புராணம்.[1]

ஈழநாட்டிலே திருக்கோணமலையும் மாதோட்ட நகரும், தெய்வ மணக்கும் திருப்பதிகள். இவ்விரண்டும் தேவாரப் பாடல் பெற்ற பழம்பதிகள். பாலாவியாற்றின் கரையிலே பண்புற அமைந்தது மாதோட்டம், அந்நகரில் கண்ணுக்கினிய தண்ணறுஞ் சோலையின் நடுவே நின்ற கேதீச்சரம் என்னும் திருக்கோயிலை மனக் கண்ணால் கண்டு மகிழ்ந்து பாடினார் திருஞான சம்பந்தர்.

"மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடும் திருந்துகே தீச்சரத்து
இருந்தஎம் பெருமானே"

என்று ஆதரித்து அழைத்தார். பாலாவியாற்றிலே நீராடி, மாதோட்டத்தில் அமர்ந்த மாதொரு பாகனை வழிபடும் பேறு பெற்ற மெய்யடியாரைப் பாடிப் பணிந்தார் சுந்தரமூர்த்தியும்.

எத்திசையும் புகழ்பெற்ற இராசராசன் தமிழ்நாட்டில் அரசு புரிந்த காலத்தில் மகிந்தன் என்னும் மன்னவன் ஈழ நாட்டை ஆண்டு வந்தான். அவன் மாற்றாரோடு உறவு பூண்டான் என்றறிந்த சோழன் சீற்றமுற்றான். உடனே, தமிழ்ப் படை திரண்டு எழுந்தது. இளவரசனாகிய இராசேந்திரன் படைத் தலைமை ஏற்றான். கருங்கடல் கடந்து ஈழ நாட்டில் இறங்கிய தமிழ் வெள்ளத்தைக் கண்டபோதே கலங்கினான் இலங்கை வேந்தன். ஆயினும் சிங்களப் படை சினந்து எழுந்து எதிர்த்தது. கடும் போர் புரிந்தது. இறுதியில் ஈழப்படை தோற்றது; சோழப் படை வென்றது. ஈழமண்டலம் மும்முடிச் சோழன் என்னும் சிறப்புப் பெயருடைய இராசராசனுக்கு உரியதாயிற்று. மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரும் பெற்றது. இவ் வெற்றிச் சிறப்பினை அவன் மெய்க்கீர்த்தி பாடிற்று.[2]

ஈழ மண்டலம் மும்முடிச் சோழ மண்டலம் என்னும் புதுப் பெயர் பெற்றாற் போன்று மாதோட்ட நகரம் இராசராசபுரம் என்று அழைக்கப் பெற்றது. பாடல் பெற்ற அப் பழம்பதியில் சோழ மன்னன் பெயர் விளங்கும் வண்ணம் தமிழ் நாட்டுத் தலைவன் ஒருவன் ஒரு சிவாலயம் எடுத்தான். அதற்கு இராசராசேச்சரம் என்னும் பெயர் கொடுத்தான். அவ் ஆலயத் திருவிழாவிற்கு நிலங்கள் விடுத்தான். சிவபாதசேகரன் என்று இராசராசன் பெற்ற

சிறப்புப் பெயருக்கு ஏற்ற முறையில் சோழ நாட்டிலும் ஈழநாட்டிலும் இராசராசேச்சரங்கள் பல எழுந்தன.

இராசராசன் கடல் சூழ்ந்த இலங்கைக்கும் காவலன் ஆயினான். சோழநாட்டில் தஞ்சையைத் தலைநகரமாக்கிய வண்ணமே ஈழநாட்டில் பொலனருவையைத் தலைநகரம் ஆக்கினான். அப் புது நகரில் ஓர் அழகிய கற்கோயில் எடுத்தான். 'தாயிற் சிறந்த கோவில் இல்லை' என்ற தமிழ் நாட்டுப் பழமொழியின் வழி நின்ற தன் அருமைத் தாயாகிய வானவன்மாதேவியின் பெயரை அவ்வாலயத் திற்கு வழங்கினான். வானவன்மாதேவீச்சரம் என்பது அத் திருக்கோயிலின் பெயர். சிவ தேவாலயம் என்னும் பெயரோடு அக்கோயி இன்றும் இலங்கையில் காட்சியளிக்கின்றது. அதன் கட்டுக் கோப்பும் சிற்பட பணியும் தமிழகத்தின் கலை வளத்திற்குச் சிறந்த சான்றாகும்.

இலங்கையிற் பாடல் பெற்ற ஈசன் திருக்கோயில் இரண்டும் சிதைந்தும் அழிந்தும் சீரிழந்து நிற்கின்றன மாதோட்டத்தின் பழம் பெருமை மழுங்கிவிட்டது. திருக் கோணமலை பொதுமக்களால் திருக்கணாமலை என்று திரித்து வழங்கப்படுகின்றது. மேலை நாட்டு மொழிகளில் 'டிரிங்காமலி' என்று குறிக்கப்படும் மலை அதுவே முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அங்கிருந்த பழமையான திருக்கோயிலை இடித்துப் பாழாக்கினர் பரங்கியர் என்னும் போர்சுக்கீசியர். அம்மலையிற் புதைந்து கிடந்த மூன்று அழகிய திருவடிவங்கள் இப்பொழுது கண்டு எடுக்கப் பட்டுள்ளன. இலங்கை மக்களின் ஆர்வத்தால் திருக்கோண மலையில் ஒரு சிறு கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மாதோட்டத்தில் உள்ள மண்மேட்டை அகழ்ந்து பார்த்து ஆராய்ந்தால் பழைய கேதீச்சரத்தையும்

இராசராசேச்சரத்தையும் பற்றிய அடையாளங்கள் கிடைக்கக் கூடும். *

"மாவின்கனி தூங்கும் பொழில்
மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில்
பாலாவியின் கரைமேல்
மூவரென இருவரென
முக்கண்ணுடைய மூர்த்தி
தேவன்எனை ஆள்வான்திருக்
கேதீச்சரத் தானே"

என்று தேவாரத்தில் பாடப் பெற்ற இறைவன் திருவுருவைக் காணும் நாள் எந்நாளோ?

---

* இப்பொழுது சைவ நன்மக்களின் முயற்சியால் திருக் கேதீச்சரத் திருப்பணி நடைபெறுகின்றது.

# 48. கதிர்காமம்

ஆறுகளே நாட்டின் நல்லணிகள் என்று பாடினர் தமிழ்க் கவிஞர். 'சான்றோர் கவி' யெனச் சென்ற கோதாவரியாறு 'புவியினுக்கு அணியாய்' விளங்கிற் றென்று போற்றினார் புலவர் பெருமானாகிய கம்பர். தமிழகத்தில் வழங்கும் ஆற்றுப் பெயர்களில் பொன்னும் முத்தும் மணியும் அமைந்திருத்தல் இதற்கு ஒரு சான்றாகும்.

கண்ணப்பர் பணி செய்த காளத்தி மலையிலே பொன் முகலி என்னும் பொன்னாறு பாய்கின்றது. முதுகுன்றம் என்னும் பழம் பெயருடைய விருத்தாசலத்தை வலம் செய்கின்றது முத்தாறு. அழகர் மலையாகிய திருமாலிருஞ் சோலையை அணி செய்கின்றது சிலம்பாறு. இலங்கையின் தென்பகுதியிலுள்ள கதிர்காமம் என்ற திருப்பதியிலே மாணிக்க கங்கை என்னும் மணியாறு ஓடுகின்றது. அவ் ஆற்றங்கரையிலே அறுமுகச் செவ்வேளாகிய முருகன் கோயில் கொண்டுள்ளான்.

கடல் சூழ்ந்த இலங்கையில் உள்ள முருகன் பதிகளுள் தலை சிறந்தது கதிர்காமமே. அப்பதியில் உறையும் பெருமானை

"கதிர்காம வெற்பில் - உறைவோனே
கனமேரு ஒத்த - புயவீரா !"

என்று ஆதரித்து அழைத்தார் அருணகிரியார். குன்று தோறும் நின்று அருள் புரியும் இறைவன் முருகன் என்பது

தமிழ் நாட்டார் கொள்கையாதலின் கதிர்காம மலையும் அவர்க்கு உரியதாயிற்று. மெய்யடியார் மனத்தில் விளையாடும் முருகன் - கோலமா மயில்மீது குலாவும் குமரன் - கதிர்காம மலையில் காட்சி தரும் கோலத்தை அருமையாகப் பாடியருளினார் அருணகிரியார்.[1]

மலையினின்றும் மாணிக்க கங்கை அருவியாக இழிந்து பரந்து பாயும் இடம் இப்போது செல்லக் (செல்வக்) கதிர்காமம் என்று வழங்கப் பெறுகின்றது. பழைய கதிர்காமம் என்றும், சுவாமி மலை என்றும் அதனைச் சொல்வதுண்டு.

'மணியாற்றின் கரையில் அமர்ந்த முருகனும் மாணிக்க வடிவத்தில் விளங்கினான் என்பர். அக் காட்சியை மனக் கண்ணால் கண்டு மகிழ்ந்த அருணகிரியார், மயில் ஏறி விளையாடும் முருகனே ! அயராத அன்பர்க்கு அருகனே ! கதிர்காமம் மேவிய கடவுளே ! இதமொழி பகரினும், மத மொழி பகரினும் இவ் ஏழைக்கு இரங்கி வரவேணும்' என்று வேண்டுகின்றார்.[2]

கதிர்காமத்தை நினைத்துக் கசிந்துருகும் அடியார்கள் கருவினை அறுவர்; முருகருள் பெறுவர். காட்டு வழிச் சென்றாலும் அவர்க்குக் கள்வர் பயமில்லை; இருளிலே நடந்தாலும் மிருக பயமில்லை. விலங்குகளும் வெம்மை அடங்கிச் செம்மையுற்று வாழும். அம்மலையில் அரியும் கரியும் அளவளாவித் திரியும்; மானும் புலியும் மருவி விளையாடும்; கரடியும் மரையும் கலந்து களிக்கும்; மயிலும் பாம்பும் மகிழ்ந்து விருந்தருந்தும்.[3]

இத்தகைய இனிய சூழ்நிலையில் அமர்ந்த முருகனைக் குறிஞ்சி நிலக் குடிகளாகிய வேடர் ஆதியில் வழிபட்டனர்.

**" வனமுறை வேடன்**
**அருளிய பூசை**
**மகிழ்கதிர் காமம் - உடையோனே "**

என்று அன்னார் வழிபாட்டை விரும்பி ஏற்றுக்கொண்ட முருகன் பெருமையைத் திருப்புகழ் பாடிற்று.

கதிர்காமக் கோயில் சிறிது; ஆயினும் அதன் கீர்த்தி பெரிது. முன்னொருகால் வடநாட்டு மன்னன் ஒருவன் கதிர்காம வேலனைக் கண்டு வணங்கினான்; மகப் பேறில்லாத குறையை அப்பெருமானிடம் முறையிட்டான். 'அறுவர் பயந்த ஆறமர் செல்வா ! மலைமகள் மகனே ! நின் திருவருளை நாடி வந்தடைந்தேன் ! உன்னை யொழிய ஒருவரையும் அறிகிலேன்; கருத்தறிந்து முடிக்கும் கதிரேசா ! நின் கருணையினால் எனக்கு மகப்பேறு கிடைக்குமாயின் அக்குழந்தையை உனக்கே அர்ப்பணம் செய்வேன்' என்று வாக்களித்தான். நம்பிக்கையோடு தன் நாட்டுக்குத் திரும்பினான்.

கதிரேசன் அருளால் ஒரு பெண் மகவைப் பெற்றான் அம் மன்னன்; அதனைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தான்; மழலைச் சொற்கேட்டு மகிழ்ந்தான். அவன் மனக்குறை தீர்ந்தது. நலமெலாம் ஒருங்கே பெற்ற அந்நங்கையைச் சில தோழியரோடு கதிர்காமத்திற்கு அனுப்பினான். தந்தையின் ஆணைப்படி கந்தன் கோயிலில் திருப்பணி செய்து வந்தாள் அம்மங்கை.

**"எங்கை உனக்கல்லாது**
**எப்பணியும் செய்யற்க**
**கங்குல் பகல் எம்கண்**
**மற்றொன்றும் காணற்க"**

என்று தோழியரோடு நாள்தோறும் கதிரேசனைத் தொழுதாள்.[4] கோயிலின் அருகே அமைந்த ஒரு திருமடத்தில் இருந்துகொண்டு பணி செய்தனர் அப்பாவையர்.

இவ்வாறிருக்கையில், ஒரு நாள் கண்டியரசனாகிய விக்கிரம ராச சிங்கன் கதிர்காம வேலனை வழிபட வந்தான்; பூமாலை புனைந்து கொண்டிருந்த பூவையைக்

கண்டான்; காதல் கொண்டான். 'கற்பகத்தின் பூங் கொம்போ! காமன் தன் பெரு வாழ்வோ!' என்று அவள் அற்புத மேனியின் அழகை நினைந்து நெடுமூச்செறிந்தான். கதிர்காம நாதனைக் கைதொழுத பலன் கண்கூடாகக் கிடைத்தது என்று எண்ணித் தோழன் ஒருவனை அவளிடம் தூது அனுப்பினான்.

பாவை, தூதன் மொழி கேட்டுச் சீறினாள். மாதவர் நோன்பையும் மடவார் கற்பையும் காக்கும் கடமை பூண்ட காவலனோ இவ்வாறு கருதினான் என்று எள்ளி நகைத்தாள்.

மங்கை மறுத்தாள் என்று அறிந்த மன்னன் மானத்தால் மனம் புழுங்கினான்; அவளைப் பற்றிக் கொணருமாறு படைத் தலைவரை ஏவினான். மறப்படை சென்று மங்கை தங்கியிருந்த மடத்தை வளைத்தது; ஆர்ப்பரித்தது. 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்று திடமாக நம்பிய நங்கை கதிரை வேலனைக் கை கூப்பித் தொழுதாள்.

**"காக்கக் கடவியநீ**
**காவாது இருந்தக்கால்**
**ஆர்க்குப் பரமாம்**
**அறுமுகவா - பூக்கும்**
**கடம்பா, முருகா**
**கதிர்வேலா நல்ல**
**இடங்காண் இரங்காய் இனி"**

என்று பரிந்து அழைத்தாள். அப்போது ஊரார் திரண்டு எழுந்தனர். மன்னன் படையை வெருட்டி அடித்தனர். கண்டியரசன் செய்கையைக் கண்டித்தனர். மானம் இழந்த காவலன் ஓடி மறைந்தான். மறுவிலாக் கற்புடைய அம்மாது பல்லாண்டு பணி செய்து எண்பதாண்டுகளுக்கு முன்பு கதிரேசன் திருவருளிற் கலந்தாள்.

தமிழ் மக்களின் பரந்த மனப்பான்மைக்கு ஒரு சிறந்த சான்றாகத் திகழ்வது கதிர்காமம். தொன்று தொட்டுத் தமிழருக்குக் கண்கண்ட தெய்வமாகத் திகழ்பவன் முருகன். முத்தமிழால் வைதாரையும் வாழ்விப்பவன் முருகன். இத்தகைய இறைவனைக் கதிர்காமத்தில் பூசை செய்பவர் சிங்களக் குருக்கள்.

கதிரேசன் திருவுருவத்தை ஞானக் கண்ணால் கண்டவர் உண்டு; ஊனக் கண்ணால் கண்டவர் எவரும் இலர். அருவமாய் நின்று அடியார் பல்லாயிரவரை ஆடித் திருவிழாவில் ஆட்கொண்டருளும் அறுமுகப் பெருமானை மனமாரப் போற்றி, 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே ! கதிரேசா ! தமிழகத்தையும் ஈழநாட்டையும் இணைத்து நிற்கும் தனிப் பெருந்தெய்வமே ! இருநாடும் என்றென்றும் இசைந்து வாழ அருள் புரிவாய்' என்று திசைநோக்கித் தொழுகின்றோம்.

✤ ✤ ✤

# ‘ஆற்றங்கரையினிலே’

## பின்னிணைப்பு

(கட்டுரைகளில் எடுத்தாளப்பட்டுள்ள பாடல்கள்.)

## ஆறும் ஊரும்

பக்கம் அடிக்குறிப்பு

10 : 1. “மற்றாரும் தன்னொப்பார்
இல்லான் கண்டாய்
மயிலாடும் துறைஇடமா
மகிழ்ந்தான் கண்டாய்.”

- திருநாவுக்கரசர் தேவாரம்.

## I. தொண்டை நாடு

### 1. காஞ்சி மாநகரம்

18 : 1. “ஆடவர்கள் எவ்வாறு
அகன்றொழிவார், வெஃகாவும்
பாடகமும் ஊரகமும்
பஞ்சரமா - நீடியமால்
நின்றான் இருந்தான்
கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு.”

- கணிகண்ணர்.

18 : 2. “காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெல்லாம் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்.”

- பெரிய புராணம்.

19 : 3. “வெண்குடை நீழல்செங் கோல்நடப்ப
விடைவெல்கொடி வேற்படை முன்உயர்த்த
பண்புடைப் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே”

- திருமங்கை ஆழ்வார்.

20 : 4. “வண்மையால் கல்வியால்
மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள்
உரிமையால் திண்மையால்
தேர்வேந்தர் வானேறத்
தெள்ளாற்றில் வென்றானோடு
யார்வேந்தர் ஏற்பார் எதிர்.”

- பெருந்தேவனார்.

## 2. சென்னை மாநகரம்

24 : 1. “தாளால் உலகம் அளந்த அசைவேகொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான் - நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத் தணை.”
(நீளோதம் - நெடுங்கடல்)

- திருமழிசை ஆழ்வார்.

24 : 2. “மன்னுதன் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன்தொண் டையர்கோன் செய்தநன்
மயிலைத்
திருவல்லிக்கேணி நின்றானை.”
(பொழில் - சோலை; வாவி - குளம்)

- திருமங்கை ஆழ்வார்.

## 3. திருக்காளத்தி

30 : 1. "மாகமார் திருக்காளத்தி
மலையெழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார், மோந்து நின்றார்"

(மாகம் - மேகம், ஆகாயம்; உவகை - மகிழ்ச்சி)

*- பெரிய புராணம்.*

31 : 2. "நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின்று ஏறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார், கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த
மதியென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்"

(உன்மத்தர் - பித்தர்)

*- பெரிய புராணம்*

## 4. திருவேங்கடம்

37 : 1. "வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி

நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்."
(மீமிசை - மேலே, அணங்கு ஆழி - வருத்தும் சக்கரம்,
பொலம்பூ ஆடை - அழகிய பொன்னாடை, நின்ற
வண்ணம் - நின்ற திருக்கோலம்.)

*- சிலப்பதிகாரம்.*

37 : 2. "பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன்நின்று
இருகண் இளமூங்கில்
வாங்கி - அருகிருந்த
தேன்கலந்து நீட்டும்
திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை."

*(வேழம் - ஆண்யானை; பிடி - பெண்யானை; வரை - மலை.)*

*- பூதத்தாழ்வார்.*

38 : 3. "செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா
நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன்
பவளவாய் காண்பேனே"
(செடி-பாவம்.)

*- குலசேகர ஆழ்வார்.*

38 : 4. "குன்றும் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே."
(ஞாலம்-உலகம்; ஓயும்-ஒழியும்.)

*- நம்மாழ்வார்.*

# II. நடு நாடு

## 5. திருக்கோவலூர்

40 : 1. "கறங்குவெள் அருவி
கல்அலைத்து ஒழுகும்
பரம்பின் கோமான்
பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி ஆண்ட
வல்வில் ஓரியும்
காரி ஊர்ந்து
பேரமர்க் கடந்த
மாரி ஈகை
மறப்போர் மலையனும்."

*(கறங்கு - ஒலிக்கின்ற; அலைத்து - உருட்டி; மிசை உச்சி; காரி - காரி என்னும் பெயருடைய குதிரை; அமர் போர்; கடந்த - வென்ற; மாரி ஈகை - மழை போன்ற கொடை; மலையன் - திருமுடிக்காரி.)*

- புறம்.

43 : 2. "சென்றுஅடி வணங்கி நின்று
செய்தவ வேடம் கொண்டு
வென்றவற்கு இடையூறு இன்றி
விட்டனன் என்று கூற
இன்றுஎனக்கு ஐயன் செய்தது
யார்செய்ய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார்."

- பெரிய புராணம்.

46 : 3. "இவர்யார் என்குவை யாயின் இவரே
ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்

படுமணி யானைப் பறம்பின் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்."

*- புறம்.*

47 : 4. "வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலும் முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையற்கு உதவி......
மினல்புகும் வீடுபேறு எண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்."

*- பெருந்தொகை.*

## 6. திருவெண்ணெய் நல்லூரர்

48 : 1. "மறந்தருதீ நெறிமாற
மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும்
ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால்
நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித்
திறம்பாடும் சீர்ப்பாடு."

*- பெரிய புராணம்.*

49 : 2. "அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து."

*- பெரிய புராணம்.*

53 : 3. "பித்தா பிறைசூடி
பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே
நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாய்
இனிஅல்லேன் எனலாமே."

- சுந்தரர் தேவாரம்.

## 7. திருப்பாதிரிப்புலியூர்

55 : 1. "தம்பியார் உளராக வேண்டும்என
வைத்ததயா
உம்பர்உல கணையஉறு நிலைவிலக்க
உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும்
அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி
யார்இருந்தார்."

(தயா - கருணை; நூல் - தாலி.)

- பெரிய புராணம்.

57 : 2. "அத்துறையின் மீக்கூறும்
அமைதியினால் அவ்விடத்தில்
சித்தநிலை அறியாத
தேரரையும் வாதின்கண்
உய்த்தஉணர் வினில்வென்றே
உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத்
தலைமையினில் மேம்பட்டார்."

(தேரர் - புத்த முனிவர்.)

- பெரிய புராணம்.

## 8. திருவதிகை

59 : 1. “கொல்லாத சூலைநோய்
குடர்முடக்கித் தீராமை
எல்லாரும் கைவிட்டார்
இதுசெயல்என் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றுஇயம்பி
நான்உய்யும் படிகேட்டுஇங்கு
அல்லாகும் பொழுது அணைவாய்
என்றார்என்று அறிவித்தான்.”

*- பெரிய புராணம்.*

60 : 2. “இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொகையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்.”

*- காஞ்சிப் புராணம்*

62 : 3. “சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கள் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல்அரண் முரண்ஏறும்
அகலம்வளாய் அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை;
அஞ்ச வருவதும் இல்லை.”

*(திங்கள் - சந்திரன்; உரிவை - தோல்; ஏறு காளை; அகலம் - மார்பு; தமர் - அடியார்.)*

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

64 : 4. "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்அடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தர
வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே."

- *திருநாவுக்கரசர் தேவாரம்.*

## III. சோழ நாடு

### 9. திருவாரூர்

67 : 1. "ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான்."

(ஆழி - சக்கரம்)

- *பெரிய புராணம்.*

68 : 2. "வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
பெரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே."

- *சிலப்பதிகாரம்.*

69 : 3. "மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றால்
மகனை முறைசெய்த மன்னன் வழிஓர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது

வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னையும் ஈமத்து ஏற்றுக.”

- *மணிமேகலை.*

69 : 4. “புறவுநிலை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடல்பரிந்த கொற்றவன் யார்
அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.”

- *சிலப்பதிகாரம்.*

72 : 5. “பத்தராய்ப் பணிவார்கள்
எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார்
அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே
வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள்
எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி
தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய
முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த
அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில்
அம்மானுக்கு ஆளே.”

- *திருத்தொண்டத்தொகை - சுந்தரமூர்த்தி.*

72 : 6. “பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானை
பின்னை என்பிழை யைப்பொறுப் பானை
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை

இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலும் ஆமே."

- *சுந்தரர் தேவாரம்.*

75 : 7. "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்துஅவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளன்."

- *சுந்தரர் தேவாரம்.*

77 : 8.

**பல்லவி**

தருணம் ஈதம்மா என்னை ரக்ஷிக்க

**அனுபல்லவி**

கருணா நிதியாகிய காமாக்ஷி ரக்ஷிக்க

**சரணம்**

அனுதினமும் என்தன் நாக்கில் உன்நாமம்
அதுவல்லால் மற்றொன்றும் இல்லைஎன் நேமம்
மனக்கவலை தீர்க்க மறுதெய்வம் உன்னைப் பார்க்க
எனக்குண்டோ உனக்கேற்க இரங்கி உன்கண் பார்க்க.

- *சியாமா சாஸ்திரி கீர்த்தனம்.*

## 10. புகார் நகரம்

78 : 1. "பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தம் முன்னுடைய
நலம்சி றந்தது வளம்புகார் நகரம்."

- *பெரிய புராணம்.*

81 : 2. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
...... ...... ...... ...... ...... ...... ...... ...... ...... ...... ......

நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
அறவோர் பள்ளியும் அறனோம் படையும்."

- *சிலப்பதிகாரம்.*

## 11. உறையூர்

83 : 1. "குலகிரியின் கொடுமுடிமேல்
கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரும் மதிக்குடைக்கீழ்
நெடுநிலங்காத்து இனிதளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர்
வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம்
உள்ளுறையூ ராம்உறையூர்."

- *பெரிய புராணம்.*

## 12. திருச்சிராப்பள்ளி

88 : 1. "நன்றுடை யானைத்
தீயதில் லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை
உமையொரு பாகம் உடையானைச்
சென்றடை யாத
திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக்
கூறஎன் உள்ளம் குளிரும்மே."
(ஏறு - காளை.)

- *திருஞானசம்பந்தர் தேவாரம்.*

89 : 2. "மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாஉகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே."

(மட்டு - தேன்; கட்டு - பாசம்; சிட்டர் - பெரியவர்.)

- *திருநாவுக்கரசர் தேவாரம்.*

89 : 3. "தந்தை தாயும்நீ
என்உயிர்த் துணையும்நீ
சஞ்சலம் அதுதீர்க்க
வந்த தேசிக
வடிவும்நீ உனையலால்
மற்றொரு துணைகாணேன்
அந்தம் ஆதியும்
அளப்பரும் சோதியே
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய
தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே."

- *தாயுமானவர்.*

## 13. திருவரங்கம்

93 : 1. "மெய்யில் வாழ்க்கையை
மெய்யெனக் கொள்ளும்இவ்
வையம் தன்னொடும்
கூடுவ தில்லை, யான்
ஐயனே, அரங்கா, என்று
அழைக் கின்றேன்
மையல்கொண் டொழிந்தேன்
என்தன் மாலுக்கே."

- *குலசேகர ஆழ்வார்.*

96 : 2. "மென்னடை அன்னம் பரந்துவிளை யாடும்
வில்லிபுத் தூர்உறை வான்தன்
பொன்னடி காண்பதோர் ஆசையி னால்என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா
இன்னடி சிலொடு பாலமு தூட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே
உலகளந் தான்வரக் கூவாய்."

- *ஆண்டாள்.*

96 : 3. “மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.”

*- ஆண்டாள்.*

97 : 4. “காறை பூணும், கண்ணாடி காணும்தன்
கையில் வளைகு லுக்கும்
கூறை உடுக்கும், அயர்க்கும், தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறித் தேறிநின் றாயிரம்பேர்த்
தேவன் திறம்பி தற்றும்
மாறில் மாமணி வண்ணன்மேல்
இவள் மாலுறு கின்றாளே.”

*- பெரியாழ்வார்.*

97 : 5. “அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.”

*- உய்யக்கொண்டார்.*

97 : 6. “கதிரவன் குணதிசைச்
சிகரம்வந் தணைந்தான்
கனையிருள் அகன்றது
காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின
மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள்
வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர்
இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும்
பிடியொடு முரசும்

அதிர்தலில் அலைகடல்
போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி
எழுந்தரு ளாயே"

- *தொண்டரடிப்பொடி ஆழ்வார்.*

## 14. திரு ஆனைக்கா

99 : 1. "தார மாகிய பொன்னித்
தண்துறை ஆடி விழுத்தும்
நீரின் நின்றுஅடி போற்றி
நின்மலா கொள்என ஆங்கே
ஆரம் கொண்டஎன் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடை யாரே."

(தாரம் - பெண்; ஈரம் - அன்பு.)

- *சுந்தரர் தேவாரம்.*

100 : 2. "அப்பூங் காவில் வெண்ணாவல்
அதன்கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும்
மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக்
கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை
நாளும் வழிபட் டொழுகுமால்"

(குவளைக் களத்தார் - கண்டம் கறுத்தார்.)

- *பெரிய புராணம்.*

100 : 3. "ஆனைக் காவில் தாம்முன்னம்
அருள்பெற் றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார்
மகிழும் கோயில் செய்கின்றார்

ஞானச் சார்வாம் வெண்ணாவல்
உடனே கூட நலம்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமரும் கோயிற் பணிசமைத்தார்."

(பானற்களம் - நீலகண்டம்.)

- *பெரிய புராணம்.*

101 : 4. "எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம்; ஏவர் நல்லார்
செத்தால்வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய், நீடு பொன்னித்
திருஆனைக் காவுடைய செல்வா என்தன்
அத்தா, உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டுஅடியேன்
என்செய் கேனே."

(அல்ல கண்டம் - துன்பம்.)

- *திருநாவுக்கரசர் தேவாரம்.*

## 15. தஞ்சை மாநகரம்

103 : 1. "மின்நெடும் புருவத்து
இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்னடம் பயிலும்
இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்து இவர்க்கே."

(விலங்கல் - பண்மாறி இசைத்தல்; இஞ்சி - மதில்;
இராசராசேச்சரம் - கோயிலின் பெயர்.)

- *கருவூர்த் தேவர்.*

104 : 2. "நன்னயம்சேர் தஞ்சைதனில்
நலம்பெருகும் வாசல்இது

மன்னுசர போஜிமன்னன்
மகிழ்ந்திருக்கும் வாசல்இது."

*- சரபேந்திர குறவஞ்சி.*

104 : 3. "அந்தமிகும் கந்தன்எங்கள்
மருமகன்காண் அம்மே
அன்னநடை வள்ளிஎங்கள்
கன்னிகைகாண் அம்மே."

(அந்தம் - அழகு.)

*- சரபேந்திர குறவஞ்சி.*

106 : 4. "நண்ணி டங்கொரு தெலுங்கு மானினி
நாசெய் சூடெனச் சொன்னாள்
நாடி நற்குறி ஓதினேன் இந்த
நாசிகா பரணம் ஈந்தாள்."

(மானினி - பெண்; நாசெய் சூடு - என் கையைப் பார்: இது தெலுங்கு. நாசிகாபரணம் - மூக்குத்தி)

*- சரபேந்திர குறவஞ்சி.*

105 : 5. "கண்ணி இங்கொரு கன்னடப் பெண்,நன
கையின நோடே என்றாள்
கருத வட்கிசை குறித னக்கவள்
காதின் ஓலை அளித்தாள்."

(நன கையின நோடே - என் கையைப் பார் : இது கன்னடம்)

*- சரபேந்திர குறவஞ்சி*

105 : 6. "ஒண்ணு தல்பெறும் இங்கிலீஷ் மாது
ஒருத்தி 'லுக்மை ஹாண்' டென்றாள்
ஓதி னேன்அவள் பாணி ரேகைகண்டு
உதவி னாள்இந்த மேகலை."

(நுதல் - நெற்றி; லுக் மை ஹாண்டு - என் கையைப் பார்; இது ஆங்கிலம்; பாணி - கை.)

*- சரபேந்திர குறவஞ்சி.*

## 16. திருவையாறு

107 : 1. "முத்திசையும் புனற்பொன்னி
மொய்பவளம் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப்
பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள்
எம்பெருமான் எனஇறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க்கு
ஆளாய்நான் உய்ந்தேனே."

(பொன்னி - காவேரி; இறைஞ்சும் - வணங்கும்; ஆளாய் - அடியவனாய்.)

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

## 17. பழையாறை

109 : 1. "காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல் செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழைசை பட்டிசரம்
ஏத்தவினை பற்றழியுமே."

(பழைசை - பழையாறு; பற்று - பாசம்.)

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

110 : 2. ..............................................................................................

..............................................................................................

"போதியம் திருநிழற் புனித ! நிற் பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகில் சிறந்துவாழ் கெனவே."

(புனித - புத்த தேவா ! ; பரவுதும் - வணங்குவோம்; வண்மை - கொடை; வனப்பு - அழகு; திண்மை - ஆற்றல்.)

- பெருந்தொகை.

## 18. கும்பகோணம்

114 : 1. "தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யும்குட மூக்கிலே."

- *திருநாவுக்கரசர் தேவாரம்.*

"எங்கள் பெருமான் இமையோர் தலைவன்நீ
செங்கண் நெடுமால் திருமார்பா - பொங்கு
படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேற்
சேர்ந்தாய்
குடமூக்குக் கோயிலாக் கொண்டு."

(இமையோர் - தேவர்)

- *பூதத்தாழ்வார்.*

115 : 2. "நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய்கு லுங்கவோ
விலங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால் பரந்த
காவிரிக் கரைக்கு டந்தையுள்
கிடந்த வாறு எழுந்திருந்து
பேசு வாழி கேசனே."

- *திருமழிசை ஆழ்வார்.*

118 : 3. ..............................................................................

..............................................................

"தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரஸ்வதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே"

- *திருநாவுக்கரசர் தேவாரம்.*

## 19. சத்திமுற்றம்

119 : 1. "விட்டார் புரங்க ளொருநொடி
வேவவொர் வெங்கணையால்
சுட்டாயென் பாசத் தொடர்பறுத்
தாண்டு கொடும்பியம்பும்
மட்டார் குழலி மலைமகள்
பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக்கொழுந்தே."

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

## 20. திருநாகேச்சுரம்

121 : 1. "வேயுதிர் முத்தொடு மத்த
யானை மருப்பும் விராய்ப்
பாய்புனல்வந் தலைக்கும்
பழங்காவிரித் தென்கரை
நாயிறும்திங் களும்கூடி
வந்தாடும் நாகேச்சரம்
மேயவன்தன் அடிபோற்றி
என்பார் வினைவீடுமே."

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

122 : 2. "தும்பதிகுன் றத்தூரில் மடவ ளாகம்
தானாக்கித் திருக்கோயில் தாபித் தங்கண்
செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போல் ஈதும்
திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்றி."

(மடவளாகம் - கோயிலைச் சுற்றியுள்ள தெரு.)

*- சேக்கிழார் நாயனார் புராணம்.*

122 : 3. "............நாகேச்சுரம் நாகளேச்சுரம் நன்கான
கோடீச்சுரம் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்
..............................................................................

ஈடுதிரை இராமேச்சுரம் என்றென்று ஏத்தி
இறைவனுறை சுரம்பலவும் இயம்பு வோமே."

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

122 : 4. "ஆண்டாய்உனைக் காண்பதோர்
அருள்எனக்கு அருளுதியேல்
வேண்டேன்மனை வாழ்க்கையை
விண்ணகர் மேயவனே."

*- திருமங்கை ஆழ்வார்.*

## 21. குரங்காடுதுறை

123 : 1. " கோலமா மலரொடு தூபமும்
சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார்."

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

126 : 2. " மின்ஒளிர் முடியாய் ! வென்றவர் தோற்பர்
தோற்றவர் வெல்வர் வெஞ்செருவில்
என்னொடும் பொருவான் இச்சைஉண் டாயின்
இராவணா ! பொருதி, ஈண்டு என்ன,
கல்நெடும் தோளாய் ! கலங்கினன் வாலால்
கட்டுண்டு பட்டது கிடக்க
இன்னமும் பொரவோ? இனிச்செரு அமையும்
இன்றுநின் தோழன்நான் என்றான்."

*- இராமாயணம், உத்தரகாண்டம்.*

129 : 3. " இந்திரன் செம்மல், பண்டோர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றி
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தவன், தேவர் உண்ண
மந்தர கிரியால் வேலை
கலக்கினான் மைந்தன் என்றான்."

*- கம்பராமாயணம்.*

## 22. ஆதனூர்

130 : 1. " பகர்ந்துலகு சீர்போற்றும்
பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன்
செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும்
முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு
மேற்கானாட்டு ஆதனூர்."

(முளரி - தாமரை.)

*- பெரிய புராணம்.*

133 : 2. " முத்தி அளித்திடும் பாதம் - தில்லை
மூவா யிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்
ஆசையைப் போக்கிய பாதம் - பர
மானந்த வெள்ளத்தில் ஆடிய பாதம்."

*- நந்தனார் கீர்த்தனம்.*

## 23. திரு ஆப்பாடி

133 : 1. " பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ."

*- தனிப்பாடல்.*

135 : 2. " மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த
மண்ணித்தென் கரைமேல் மன்னி
அந்தமோடு அளவி லாத
அடிகள்ஆப் பாடி யாரே."

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

136 : 3. "ஆய நிரையின் குலமெல்லாம்
அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும்
விரும்பு புனலும் ஆர்தலினால்

ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி
எய்தி இரவும் நண்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச்
சொரிய மடிகள் சுரந்தனவால்."

(நிரை - மந்தை; பல்கி - பெருகி; புனல் - தண்ணீர்.)

*- பெரிய புராணம்.*

137 : 4. "பீரடைந்த பாலதாட்டப்
பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந் தான்தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு
சேய்ஞலூர் மேயவனே."

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

## 24. அடைக்கல மாதூ

138 : 1. "ஒன்றி இருந்து நினைமின்கள்
உம்தமக்கு ஊனம் இல்லை
கன்றிய காலனைக் காலால்
கடிந்தான் அடிய வற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம் பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும்
எம்பெருமான்தன் திருக்குறிப்பே."

*- திருநாவுக்கரசர் தேவாரம்.*

140 : 2. தொல்லை நாளினில் சூரனுக்கு
அஞ்சியே சுரர்கோன்
வல்லை வான்ஓரீஇ மனையொடு
வந்திவண் வைகி
எல்லை யில்பகல் இருந்தவம்
புரிந்துதான் இனிய

நல்ல வாழ்வுறும் நலத்தது
சோழநன் னாடு.

*- தனிப்பாடல்.*

140 : 3. "கனைபூத்த சோணாட்டுக்
காவிரியின் வடகரைமேல்
சினைபூத்த நிழற்பொழில்வாய்
சிங்கநெடுங் கொடிநிழற்றும்
திருக்காவ லூரகத்துத்
திகழ்ஒளிவாய் மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநமை
அளிப்பதுநின் தயையாமோ."

*- திருக்காவலூர்க் கலம்பகம்.*

142 : 4. "நானா தயைதளிர்ப்ப; ஞான நிழல்குளிர்ப்ப,
தேனார் வரம்அரும்ப, சீர்கனிய - வானாரும்
அஞ்சலிசெய் உன்தாள் அருட்காவல் நாயகியே
எஞ்சிலதோர் சோலை எனக்கு."

*- திருக்காவலூர்க் கலம்பகம்.*

## 25. கருவூர்

145 : 1. "களியா னையின்ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா."

*- பெரிய புராணம்.*

146 : 2. "மன்னவன் தன்னை நோக்கி
வானவர் ஈசர் நேசர்,
'சென்னி!இத் துங்க வேழம்
சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணச் சாத்தக்
கொடுவரும் பள்ளித் தாமந்

தன்னைமுன் பறித்துச் சிந்தத்
தரைப்படத் துணித்து வீழ்த்தேன்."

- பெரிய புராணம்.

## 26. காரைக்கால்

147 : 1. "வங்கமலி கடற்காரைக்
காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார்
தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை
அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப்
புனிதவதி யார்பிறந்தார்."
(வங்கம் - மரக்கலம்)

- பெரிய புராணம்.

147 : 2. "நம்பர்அடி யார்அணைந்தால்
நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும்
செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னால்அவர்க்குத்
தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகுநாள்."

(துகில் - ஆடை; பரிவு - அன்பு; உம்பர்பிரான் - தேவ தேவன்.)

- பெரிய புராணம்.

148 : 3. "கடல்மிசை வங்கம் ஓட்டிக்
கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங்கு
அளவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க
மீண்டும்அக் கலத்தில் ஏறிப்

படர்புனல் கன்னி நாட்டோர்
பட்டினம் மருங்கு சேர்ந்தான்."

(கன்னி நாடு - பாண்டி நாடு; பட்டினம் - கடற்கரை நகரம்.)

*- பெரிய புராணம்.*

148 : 4. "மற்றவர் தம்மை நோக்கி,
'மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வம் ஆதல்
நானறிந்து அகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்மின்' என்றான்."

(பதம் - பாதம்)

*- பெரிய புராணம்.*

## 27. புதுவை மாநகர்

151 : 1. "தார்இ லங்கு மலையெனும் தோளினான்
தாழ்ந்தி டாரைத் தறிக்கும்ஒள் வாளினான்
போர்இ லங்கும் உயர்நாம வேலினான்
போற்றுவீரக் கழலணி காலினான்
சீர்இ லங்கு பசும்பொற்செங் கோலினான்
செய்ய மாமுறை செப்புநல் நூலினான்
ஏர்இ லங்கும் டூப்ளேஎனும் நாமம்பூண்டு
எங்கள் வேந்தென் றிலங்கும்இவ் வேந்தலே."

*- சவுரிராயலு.*

# IV. பாண்டி நாடு

## 28. மதுரை மாநகரம்

155 : 1. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
.......................................................................
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருகஎன் னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்."

- *புறம்.*

156 : 2. " பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை ஆனை - இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு ? "

- *பெருந்தொகை.*

165 : 3. " மானின் நேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதி யாய
இடங்களில் பலஅல் லல்சேர்
ஈனர் கட்குஎளி யேன லேன்திரு
ஆல வாய்அரன் நிற்கவே."

- *திருஞானசம்பந்தர் தேவாரம்.*

156 : 4. " கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்துஆய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா
எண்ணவும் படுமோ."

- *பரஞ்சோதி முனிவர்.*

157 : 5. "அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே

நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே."

*- திருவாசகம்.*

## 29. அழகர் கோயில்

162 : 1. "கனக நந்தியும் புட்ப நந்தியும்
பவண நந்தியும் குமணமா
கனக நந்தியும் குனக நந்தியும்
திவண நந்தியும் மொழிகொளா
அனக நந்தியர் மதுவொ ழிந்துஅவ
மேத வம்புரி வோம்எனும்
சினக ருக்குஎளி யேன்அ லேன்திரு
ஆல வாய்அரன் நிற்கவே."

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

163 : 2. "மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தாள் உள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்துவிர் ஆயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்
தோன்றிய பின்அவன் துணைமலர்த் தாளிணை
ஏன்றுதுயர் கெடுக்கும்."

*- சிலப்பதிகாரம்.*

164 : 3. "கொண்ட மருந்தும் கடைவாய்
வழியுகக் கோழைவந்து
கண்டம் அருந்துய ராம்போதுன்
பாதம் கருதறியேன்
வண்டம ரும்துள வோனே ! தென்
சோலை மலைக்கரசே !
அண்டம் அருந்தும் பிரானே ! இன்
றேஉன் அடைக்கலமே."

*- அழகர் அந்தாதி.*

165 : 4. "தேன்ஓங்கு சோலைத் திருவேங் கடம்என்றும்
வான்ஓங்கு சோலை மலைஎன்றும் - தான்ஓங்கு
தென்அரங்கம் என்றும் திருஅத்தி யூர்என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்?"

- *பெருந்தேவனார்.*

## 30. பாவைப் பாட்டு

169 : 1. "மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்."

(போய - முன் செய்து கழிந்த; புகுதருவான் நின்றனவும் - இனி வர இருக்கும் தீவினைகளும்; தூசு - பஞ்சு.)

- *திருப்பாவை.*

170 : 2. "முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப்
பெற்றஉன் சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்."

(பேர்த்தும் - மீண்டும்; பெற்றி - தன்மை; பங்கு - உரிமை.)

- *திருவாசகம்.*

171 : 3. "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேர்இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!"

- *திருப்பாவை.*

171 : 4. " பனிநி லாக்கதிர் பரப்பிய
முத்தவெண் மணலால்
பனிவ ரைக்கொடி திருவுரு
பாற்பட வகுத்து
பனிம லர்த்தொடை சூடியும்
பரவியும் நோற்றுப்
பனிஇ றப்பினில் படர்புனல்
ஆடுவான் படர்ந்தார்."

(பனி வரைக்கொடி - பார்வதி தேவி; தொடை - மாலை.)

*- பாகவதம்.*

171 : 5. " மாதர்கொள் மாதர் எல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை நாள்முன் ஈரைந்து
ஆகிய தினங்கள் தம்மில்
மேதகு மனைகள் தோறும்
அழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப்
புனற்றடம் ஆடல் செய்வார்."

(மாதர் - அழகு; திங்கள் - மாதம்; ஈரைந்து - பத்து; தடம் - பொய்கை.)

*- பாகவதம்.*

172 : 6. "ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி."

(ஆர்த்த - கட்டிய; தீயாடும் - அனல் ஏந்தி ஆடும்; குவலயம் - உலகம்; கரந்தும் - ஒடுக்கியும்)

*- திருவாசகம்.*

172 : 7. " ஊர்திரை வேலை
உலாவும் உயர்மலைக்
கூர்தருவேல் வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்

கார்தரு சோலைக்
　　கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே
　　போதியோ பூம்பாவாய்."

(வேலை - கடல்; கபாலீச்சரம் - மயிலாப்பூர்க் கோயில்.)

*- திருஞானசம்பந்தர் தேவாரம்.*

172 : 8. "எங்கள் பெருமான்
　　உனக்குஒன்று உரைப்போம்கேள்
எங்கை உனக்கல்லாது
　　எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண்
　　மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே
　　எமக்குஎம்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு
　　எமக்கேலோர் எம்பாவாய்."

*- திருவாசகம்.*

173 : 9. "சிற்றம் சிறுகாலே
　　வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே
　　போற்றும் பொருள்கேளாய்
இற்றைப் பறைகொள்வான்
　　அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ்
　　பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்
　　உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநாம் காமங்கள்
　　மாற்றேலோர் எம்பாவாய்."

*- திருப்பாவை.*

## 31. திருநெல்வேலி

176 : 1. "திங்கள்ஒன் றாகச் சிறையிருந் தோம்இச்
சிறையகற்றி
எங்கள்தம் பால்இரங் காததென்னோ? இசை
நான்மறையின்
சங்கமும் கீதத் தமிழ்ப்பாட லும்சத்த
சாகரம்போல்
பொங்குதென் போரைப் புனிதா ! கருணைப்
புராதனனே !"

- *குழைக்காதர் திருப்பணி மாலை.*

188 : 2. "வாரா திருந்தால் இனிநானுன்
வடிவேல் விழிக்கு மையெழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகமிடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்
பேரா தரத்தி னொடுபழக்கம்
பேசேன் சிறிதும் முகம்பாரேன்
பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்
பிரிய முடன்ஒக் கலையில்வைத்துத்
தேரார் வீதி வளங்காட்டேன்;
செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழு மணித்தொட் டிலில்ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
தவழுங் குழந்தாய் வருகவே !
சாலிப் பதிவாழ் காந்திமதித்
தாயே வருக ! வருகவே !"

- *காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்.*

## 32. திருக்குற்றாலம்

180 : 1. "செல்வ மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும் பீனுங் குற்றாலம்
வில்லி னொல்க மும்மதி லெய்து வினைபோக
நல்கு நம்பா னன்னகர் போலுந் நமரங்காள் !"

- *திருஞானசம்பந்தர் தேவாரம்.*

181 : 2. " ஏந்து திணிதிண்டோ ளிராவணனை மால்வரைக்கீ
ழடர வூன்றிச்
சாந்தமென் நீறணிந்த சைவ ரிடம்போலுஞ்
சாரற் சாரல்
பூந்த ணறுவேங்கைக் கொத்திறுத்து மத்தகத்திற்
பொலிய வேந்திக்
கூந்தற் பிடியுங் களிறு முடன்வணங்குங்
குறும்ப லாவே."

*- திருக்குறும்பலா.*

## 33. தென்காசி

183 : 1. " பொன்காசை மெய்யென்று தேடிப்
புதைக்கும்இப் பூதலத்துத்
தென்காசி கண்ட பெருமாள்
பராக்ரமத் தென்னவனே."

(கண்ட - உண்டாக்கிய)

*- தென்காசிக் கோயிற் கல்வெட்டு.*

183 : 2. " தாதுகு சோலை தோறும்
சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே."

*- கம்பராமாயணம்.*

185 : 3. " கோதற்ற பத்தி அறுபத்து
மூவர்தம் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்
தோசெம்பொ னம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி
லோவிசுவ நாதன்இரு

பாதத்தி லோசென்று புக்கான்
பராக்ரம பாண்டியனே."

(சிலம்பு - மலை.)

- *தென்காசிக் கோயிற் கல்வெட்டு.*

185 : 4. "சேலே றியவயல் தென்காசி
ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்ததிங்கு என்செயல்
அல்ல அதனைஇன்னம்
மேலே விரிவுசெய் தேபுரப்
பார்அடி வீழ்ந்து அவர்தம்
பாலேவல் செய்து பணிவன்
பராக்ரம பாண்டியனே."

(சேல் - மீன்)

- *தென்காசிக் கோயிற் கல்வெட்டு.*

189 : 5. "கறங்குதிரை பெருங்கடல்சூழ்
அவனிபுரந்து இகல்கடந்து
கலியை மாற்றி
மறம்திகழ இலங்கிழைவேல்
வரதுங்க ராமன்இயல்
மதுரைச் சங்கம்
சிறந்தஅறு காற்பீடம்
தனில்பிரமோத் தரகாண்டம்
தென்சொல் ஆக்கி
அறந்தழைக்கும் கவிஞர்செவிக்கு
ஆரமுத மாகஅரங்
கேற்றி னானே."

(அவனி - உலகம்; இகல் - பகை; மறம் - வீரம்.)

- *பெருந்தொகை.*

191 : 6. "நல்லார்தம் இதயமலர் தனில்வளர், சுப்
பிரமணிய நல்லோய்! நீதான்

கல்லாத நூலிலை,நீ காணாத
பொருளிலை,பல் கவிஞர் நின்மேல்
சொல்லாத பாவிலை,நிற் றுதியாத
மன்னர்இலை, தூய நின்கண்
இல்லாத குணமிலை,ஆ யிரம்நாஆ
னாலும்உன்சீர் இயம்பற் பாற்றோ !"

*- தனிப்பாடல் : வேதநாயகம் பிள்ளை.*

## 34. பாவநாசம்

194 : 1. "தாயென்றும் மனைவி என்றும்
தந்தைதான் என்றும் காதல்
பேயென்றும் வினைசூழ்ந்து என்னைப்
பிடித்தது பிடிப டாமல்
போயென்று வருவது உன்முன்
போதுவாய் எனஎப் போதுன்
வாயென்ற குமுதப் போது
மலருமோ உலக மாதே."

(போதுவாய் - வருவாயாக.)

*- தனிப்பாடல்.*

## 35. ஆழ்வார் திருநகரி

197 : 1. "செங்கனி வாயெங்க ளாயர் தேவுஅத்
திருவடி திருவடி மேல்பொருநல்
சங்கணி துறைவன் வண்தென் குருகூர்
வன்சட கோபன்சொல் லாயிரத்துள்
மங்கைய ராய்ச்சியர் ஆய்ந்த மாலை
அவனொடும் பிரிவதற்கு இரங்கித்தையல்
அங்கவன் பசுநிரை மேய்ப்பொ ழிப்பான்
உரைத்தன இவையும்பத்து அவற்றின்
சார்வே."

*- திருவாய்மொழி.*

## 36. செப்பறை

203 : 1. "செப்பறைப் பதியில்
வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி
கருதுவட நூற்கடல்
தபோதனர் புகழும்
சைவாதி ராசன்
உபய பதங்களை
உண்மையொடு பணிவாம்."

(தபோதனர் - முனிவர்; உபய பதங்களை - அடிகள் இரண்டையும்)

- இலக்கணக் கொத்து.

203 : 2. "இரத்தினம் போலும்
புவியோர் புகழ இராசவல்லி
புரத்தினில் மேவிய
பாபவி நாச புரவலன்தன்
வரத்தினில் வந்திடும்
மன்னவன் முத்துசு வாமிவள்ளல்
கரத்தினை நோக்கி
மிகநாணும் வானுள்ள கற்பகமே."

(புவி - உலகம்; புரவலன் - இரட்சகன்)

*- அழகிய சொக்கநாதர் தனிப்பாடல்.*

204 : 3. "எங்கள்முத்து சாமிமன்னா இங்கே ஒருவன்மிரு
தங்கமதை ஓயாமல் தட்டினான் - அங்கங்கே
கூடிநின்ற பெண்கள்எருக் கொள்வதற்குக்
கூடையெடுத்து
ஓடிவந்தார் நீபார்த்தா யோ"

*- அழகிய சொக்கநாதர் தனிப்பாடல்.*

205 : 4. "நட்டமுண் டோமுத்துச் சாமியைப்
பாடுமின் நாவலர்காள் !

இட்டம்வைத் தால்,கலி தீர்ந்திடு
மேமுன்னம் ஏதும்புகல்
முட்டிக் கயவரைப் பாடிய
காயித மூட்டைகளைப்
பட்டம தாய்க்கட்டி விட்டாலும்
வேடிக்கை பார்ப்பவர்க்கே.”

*-அழகிய சொக்கநாதர் தனிப்பாடல்.*

## 37. முக்கூடல்

205 : 1. “பொருனையும் திருநதியின்
இருகரையும் இருபூவும்
பூஞ்சாலி விளையவே
கூவாய் குயிலே !
பெருவளம் தருநாடு
திங்கள்மும் மாரியும்
பெய்யமழை வேண்டியே
கூவாய் குயிலே !”

*- முக்கூடற்பள்ளு.*

205 : 2. “ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்று தேகுறி - மலை
யாளமின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே

நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக்
காற்ற டிக்குதே - கேணி
நீர்ப்படுசொ றித்தவளை
கூப்பி டுகுதே

சேற்றுநண்டு சேற்றில்வளை
ஏற்ற டைக்குதே - கேணி
தேடியொரு கோடிவானம்
பாடி ஆடுதே

போற்றுதிரு மால்அழகர்க்
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வமே"

- முக்கூடற்பள்ளு.

207 : 3. "உழுத உழவைக்கண்டு களித்தான் - பள்ளர்
உள்ள பேரையெல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்
தொளியில் விதைகளெல்லாம்
தெளித்தான்."

"வளர்ந்த நாற்றுமுகம் கண்டான்
அளந்திடா மகிழ்ச்சி கொண்டான்."

- முக்கூடற்பள்ளு.

208 : 4. "உத்தர பாக மான
சித்திர நதியும் தென்பால்
ஓடும் பொருனையுடன்
கூடும் போதே

அத்தனை காலமும் தொட்டு
இத்தனை காலமுங் கண்டு
அடியடி வாழையாய்நான்
குடியில் வந்தேன்."

- முக்கூடற்பள்ளு.

208 : 5. "வழக்கிட்டு நான் வந்தேனோ
மருதூர்ப்பள்ளி - பள்ளன்
மாமன்மகள் என்றென்னை
மறித்துக் கொண்டான்."

- முக்கூடற்பள்ளு.

208 : 6. "உழக்கில் கிழக்கு மேற்கோ
முக்கூ டற்பள்ளி - மறித்து
உன்னைக் கொண்டான்
என்னைக் கண்டுஎன்
ஊரிலே வந்தான்."

- முக்கூடற்பள்ளு.

209 : 7. "சொன்னால் என்ன நீயும்பொறு
நானும் பொறுத்தேன் - கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி
வாழ்ந்தி ருக்கலாம்.

பன்ன கத்தில் ஆடியமுக்
கூடல் அழகர் - திருப்
பாதமலர் வாழ்த்திஆடிப்
பாடு வோமே."

*- முக்கூடற்பள்ளு.*

## 38. கொற்கை மாநகரம்

210 : 1. "மலயத்து ஓங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றல்."

*- சிலப்பதிகாரம்.*

211 : 2. "வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து; - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்
றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து."

*- ஔவையார்.*

## 39. காயல் மாநகரம்

218 : 1. "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்."

*- பட்டினப்பாலை.*

## 40. கயத்தாறு

224 : 1. "ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி துமுடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே."

*- சுந்தரர் தேவாரம்.*

# V. நாஞ்சில் நாடு

## 41. கோட்டாறு

229 : 1. "பண்ணை பெருத்த பழநாடு - சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிரும்நாடு
மண்ணையும் பொன்னாக மாற்றும்நாடு - கவி
வாணர் புகழும் தமிழ்நாடு."

*- தேசிக விநாயகம் பிள்ளை.*

## 42. பூதப்பாண்டி

233 : 1. "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் - திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோறு
எல்லா உலகும் பெறும்."

(வழுதுணங்காய் - கத்தரிக்காய்; வாட்டு - பொரியல்;
பரிவு - அன்பு.)

*- ஔவையார்.*

# VI. சேர நாடு

## 43. முசிரி

236 : 1. "கள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி."

- *அகநானூறு.*

237 : 2. "மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்
மன்னும் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழார்
பயிலும் இயல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்
களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும்
குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்."

(சே - காளை, இடப வாகனம்)

- *பெரிய புராணம்.*

238 : 3. "தலைக்குத் தலைமாலை அணிந்ததென்னே
சடைமேல் கங்கைவெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும் புலித்தோல்கொண்டு
அசைத்ததென்னே
அதன்மேல் கதநாகம்கச் சார்த்ததென்னே
மலைக்கு நிகர்ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழங்கிவலம் புரிகொண்டு
அலைக்கும் கடலங்கரை மேல்மகோதை
அணியார் பொழில்அஞ்சைக் களத்தப்பனே."

- *சுந்தரர் தேவாரம்*

---

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.